# பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்

முனைவர் சுடலி தியாகராாசன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பண்பாட்டுப் பார்வையில்
# திருமந்திரம்

முனைவர் சுடலி தியாகராசன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பேரா. முனைவர் கு. பகவதி அவர்கள்)
வரிசை எண் : 1

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | paṇpāṭṭu pārvayil tirumantiram |
| Author | : | Dr. Sudali Thiagarajan<br>Associate Professor<br>Department of Tamil<br>Pachaiyappa's Colleg<br>Chennai-600 030 |
| General Editor | : | Dr. K. Bagavathi<br>Professor<br>Department of Sociology, Art and Culture<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 646 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 200 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 70/- (Rupees Seventy Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | Cultural study |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் படிநிலைகளை விளக்கி முறையே ஒன்பதாவது படிநிலையான தந்திரம்வரை விளக்கி அமைகிற சைவசித்தாந்த அடிப்படைகளை விளக்கும் நூலாகத் திருமந்திரம் விளங்குகிறது. 3000 பாடல்கள் என திருமந்திரத்தில் பதிவு உள்ளது.

தோத்திரம், சாத்திரம் போன்றவற்றை விளக்கும் நூல் மட்டுமல்லாது மானுட வாழ்வியலில் சமய நெறிமுறைகளை விளக்கும் நூலாகவும் திருமந்திரம் அமைந்திருக்கிறது. காரைக்காலம்மையாரின் படைப்பு நூல்களில் சைவ நெறிமுறை காணப்படினும் திருமந்திரத்திற்கு முன்னும் பின்னும் தோன்றிய அனைத்துச் சைவசன்மார்க்க நூல்களுக்கு முன்னோடியாக அமைகின்றது. திருமந்திரத்திற்குப் பின்னர் தோன்றிய நூல்களாக மெய்கண்ட சாத்திரங்கள் விளங்குகின்றன.

வாழ்க்கை வாழும் விதங்களைப் பண்பாடு என்கிறோம். அன்பைப் பொழிந்து வாழும் வாழ்க்கையே ஆன்மிக வாழ்க்கை, ஆன்மிகப் பண்பாட்டு (சமயப் பண்பாடு) வாழ்க்கை என வழிகாட்டும் கருவியாகத் திருமந்திரம் விளங்குகிறது. உண்ணுதல், உறவாடுதல், உடற்பயிற்சி கொள்ளுதல், நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல், இறைவழிபாட்டு நெறிமுறைகளை மேற்கொள்ளுதல் போன்ற முறைகளைத் தெளிவுற எடுத்துச் சொல்லும் பாடல்களைக் கொண்டுள்ளது திருமந்திரம்.

சமயப் பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் என்ற நோக்கில் விளக்கங்களைப் பெற்றுள்ளது இந்த நூல். பழந்தமிழ் இலக்கியமான புறநானூற்றுப் பாடல்களில் காணலாகும் ‘உண்டாலம்ம இவ்வுலகம்’ எனும் சிறப்பு மிக்க பாடல் மற்றும் ‘ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்பெண்டிரும் பிணியுடையீரும் பேணித் தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் . . . .’ என்பதான புறநானூற்றுப் பாடல் கருத்துக்களுள் கூறப்படுவனவற்றைத் தொட்டுத் திருமூலர் பாடல்களில் சமயப்

பண்பாடு எவ்விதம் அமைந்துள்ளது, தன்னுயிர் பிற உயிர்கள் பற்றிய கருத்துக்கள் எவ்வாறு முன்வைக்கப்படுகின்றன என்பனவற்றை விளக்குகிறது. மக்களை எல்லா நிலைகளிலும் எல்லா விதங்களிலும் பக்குவப்படுத்திச் சீர்ப்படுத்துவதே சமயங்களின் தலையாய நோக்கம் என முன்வைத்துச் சமயப் பண்பாட்டினை விளக்கும் நூலாக இந்த நூல் சிறப்புற அமைகிறது.

அகம், புறம், தனிமனிதன், சமுதாயம் எனும் நிலைகளில் சமயப் பண்பாட்டினைத் திருமூலரின் திருமந்திரத்தின் வழி நின்று விளக்கியுள்ள சிறப்பு வாய்ந்த நூல் இதுவாகும்.

**அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்**
**உப்பெனப்பேர் பெற்று உருச்செய்த அவ்வுரு**
**அப்பினில் கூடிய தொன்றாகு மாறுபோல்**
**செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே**

என்ற இப்பாடல் போன்று, இலக்கியச் செறிவு, சிந்தாந்தச் செறிவு, சைவநெறிமரபு, சைவசித்தாந்த நெறி எனப் பலப்பல சிந்தனைகளை வெளிப்படுத்தும் பாடல்கள் பல அமைந்த திருமந்திரத்தைச் சேக்கிழார் முதல் பல சித்தர்களும் குருவாகப் பாவித்துச் சிறப்பிக்கின்றனர்.

**கன்றலும் கருதலும் கருமஞ் செய்தலும்**
**தின்றலும் சுவைத்தலும் தீமைசெய்தலும்**
**பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்**
**என்றிவை இறைவன்பால் இயற்கை அல்லவே**

என்று மானுட இயல்புகளை அளந்து பாடலில் தந்துள்ள பொருட் சுவை சமயப்பண்பாட்டுச் செறிவுக்கான வழிமுறைகள் எனப் பலநிலைகளில் பயில்வோரைப் பொருள் கொள்ள வைக்கிறது.

திருமந்திரம் வெளிப்படுத்தும் பண்பாடுகளில் இன்றைய தேவைகள் குறித்து விரிவாகத் திருமூலரின் பாடல்கள் வழிநின்று விளக்கியுள்ள நூல் இது. பேராசியர் முனைவர் சுடலி தியாகராஜன் அவர்களது சமயப் பண்பாட்டு ஆய்வு எனும் புதிய கருத்தியலில் பலரும் பயணித்து ஆய்வுகள் நிகழ்த்திடப் புதுச்சால் ஓட்டியுள்ளார். இலக்கிய ஆய்வுக்கு இந்நூல் புதுவரவாக அமையும். தமிழன்னையின் அணி நலனுக்கு இந்நூல் ஒரு தனி அழகு ஊட்டவல்லது. நூலாசிரியருக்கு எம் பாராட்டுக்கள்.

இவ்வறக்கட்டளையை நிறுவியவரும், பொறுப்பாளருமான இந்நிறுவனப் பேராசிரியர் முனைவர் கு. பகவதி அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி பா.கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# நன்றியுரை

திருமந்திரம் என்றவுடன் அது ஒரு சமயம் சார்ந்த தோத்திர, சாத்திர நூல். மந்திரம், யந்திரம், தந்திரம் போன்ற எளிதில் புரிந்து கொள்ள இயலாத சமயத் தத்துவங்களை மட்டுமே கூறுவது என்ற எண்ணம் பலருக்கு எழலாம். ஆனால், திருமந்திரத்தின் அடிவேராகவும், முதல் தந்திரத்தில் முழுவதும் வலியுறுத்துவதாகவும், எஞ்சியுள்ள எட்டுத் தந்திரங்களில் வாய்ப்பேற்படும் இடங்களில் எல்லாம் அறிவுறுத்துவதாகவும் உள்ளது தனி மனித ஆன்ம ஒழுக்கமே. சமுதாய வாழ்வியல், சமய இறையியல் இரண்டிற்கும் அடித்தளமாக, இன்றியமையாத் தேவையாக உள்ள பண்பாட்டு நெறிகளே தனிமனித ஆன்ம ஒழுக்கம். வரையறுக்கப்பட்ட ஒழுகலாறுகளுடைய பண்பட்ட சமுதாயத்தை உருவாக்கி, மனித வாழ்க்கையைப் பொருளுள்ளதாக, ஒளியுடையதாகச் சீரமைக்க அகம் சார்ந்த, புறம் சார்ந்த, சமயம் சார்ந்த ஒழுங்கு முறைகள் எவ்வாறு சிறக்க வேண்டும் என்பதைத் திருமூலர் திருமந்திரத்தில் பதிவு செய்துள்ளதை விளக்கும் அறக்கட்டளைச் சொற்பொழிவே இந்நூல்.

இச்சொற்பொழிவு நிகழ்த்த, அனுமதியளித்து நூலாகவும் வெளியிட்டு உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பேரா. முனைவர் கரு.அழ. குணசேகரன் அவர்களுக்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் பேராசிரியர் கு. பகவதி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கூடலி தியாகராசன்**

## ஆசிரியரைப் பற்றி



சென்னை, பச்சையப்பன் கல்லூரியில், தமிழ்த்துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றுபவர்.

சைவசித்தாந்தம், வைணவம், காந்திய சிந்தனைகள், ஓலைச் சுவடியியல், கணிப் பொறியியல் ஆகியவற்றில் பட்டயம் பெற்றுள்ளார். பெரியபுராணத்தில் புராணமரபுக் கதைகள் பற்றிய ஆய்வுக்கு முனைவர் பட்டம் பெற்றவர்.

தமிழில் தரப்படுத்தப்பட்ட குறிமுறை, கற்றல் கற்பித்தலில் கணினியின் பங்கு, சமயநூல்களைக் கணினியின் வழி கற்பித்தல் போன்ற கட்டுரைகளையும், சமயம் சார்ந்த பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். 36 கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். சமுதாய மேம்பாடு, சுயமேம்பாடு தொடர்பான 21 பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்றவர். பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.

சித்தாந்த இலக்கியங்கள், சித்தர் இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டு ஆய்வு செய்து வருபவர்.

# உள்ளே

| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | நன்றியுரை | |
| | ஆசிரியரைப் பற்றி | |
| | முன்னுரை | |
| 1. | திருமந்திரம் | 3 |
| 2. | பண்பாடு | 24 |
| 3. | அகம் சார்ந்த பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 34 |
| 4. | புறம் சார்ந்த பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 63 |
| 5. | சமயம் சார்ந்த பண்பாட்டு நோக்கில் திருமந்திரம் | 79 |
| | 1. அகம் சார்ந்த சமயப் பண்பாடு | 83 |
| | 2. புறம் சார்ந்த சமயப் பண்பாட்டுச் செய்திகள் | 117 |
| 6. | திருமந்திரம் வெளிப்படுத்தும் பண்பாடுகளின் இன்றைய தேவை | 181 |
| | முடிவுரை | 193 |

# முன்னுரை

திருமந்திரம் என்றவுடன், அது ஒரு சாத்திர நூல்; இறையியல் நெறிகளைக் கூறுவது; மந்திரம், யந்திரம், தந்திரம் போன்ற எளிதில் விளங்கிக் கொள்ள முடியாத தத்துவங்களைக் கூறுவது என்ற எண்ணம் பொதுவாக நிலவுகிறது. ஆனால், இந் நூல் வாழ்க்கைக்குத் தேவையான தனிமனித அறங்களின் அடிப்படையில் மலரும் அன்பு, கருணை, உயிர் இரக்கம் போன்றவற்றை வலியுறுத்தும் நிலையில் பண்பாட்டின் அடிப்படையிலான வாழ்வியலைக் கூறும் நூல் என்பது ஆழ்ந்து சிந்திப்பின் புலனாகும்.

அன்பும், ஆண்டவனும் ஒன்று என்று உணர்த்தும் நூல் இது. பண்பட்ட ஒழுக்கம் மேலோங்க மேலோங்க இறையுணர்வு தானே வரும் என்பதால் பொய்ப் பொருள்களுக்காக ஒழுக்கமற்ற அவல வாழ்க்கை வாழாதீர்கள். மெய்ப்பொருளை உணர்ந்த உண்மை வாழ்க்கை, பொருளுடைய வாழ்க்கை வாழுங்கள் என்று அறிவுறுத்தும் நூல் இது. பண்பால், உடம்பால், உள்ளத்தால் அமையும் வாழ்க்கை அமைப்புகளைக் கூறும் நூல். முறையான உணவு, நல்ல பழக்கம், உடற்பயிற்சி, புலனடக்கம், வழிபாட்டு நெறிகள் போன்றவற்றை முறையாகக் கூறும் நூலாகவும் இது அமைகிறது. ஒழுக்கம் சார்ந்த அகப் பண்பாடும், உணவு, உடை உறையுள் போன்ற உலகப் பொருள்கள் சார்ந்த புறப் பண்பாடும், படிப்படியாக உணரப் பெறும் சமயப் பண்பாடும் திருமந்திரத்தில் விளக்கப்படுகின்றன. இதற்கேற்ற வகையில் இதன் உட்பிரிவுகளாகிய தந்திரங்கள் அமைந்துள்ளன.

முதல் நான்கு தந்திரங்கள், உள்ளும் புறமும் மனிதன் தன்னைத் தூய்மையாக்கும் வழிமுறைகளை வகுத்துள்ளன. ஐந்தாவது, ஆறாவது தந்திரங்கள் சைவசித்தாந்த உண்மைகள், அவற்றைப் பின்பற்றுவோர் பெறும் நிலைகளைக் கூறுகின்றன.

இறுதியில் ஞானம்பெறும் நிலைகள், ஞானம் பெற்றவர்களின் நிலை, உடம்பின் பாகுபாட்டுப் பேதங்கள், பத்தியுடைமை, முத்தியுடைமை, முத்தி பெற்றோர் நிலை போன்றவற்றை விளக்குகின்றது. இந்நிலையில் "பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்" என்பது,

1. திருமந்திரம்
2. பண்பாடு
3. அகம் சார்ந்த பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்
4. புறம் சார்ந்த பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்
5. திருமந்திரத்தில் சமயம் சார்ந்த பண்பாட்டுச் செய்திகள்
    1. அகம்சார்ந்த சமயப் பண்பாடு
    2. புறம் சார்ந்த சமயப் பண்பாடு
6. திருமந்திரம் வெளிப்படுத்தும் பண்பாடுகளின் இன்றைய தேவை
    1. தனிமனிதனுக்கான தேவை
    2. இறையியலுக்கான தேவை
    3. சமுதாயத்துக்கான தேவை

என ஆறு பிரிவுகளில் அமைகிறது.

# 1. திருமந்திரம்

திருமந்திரம் என்ற நூல், நிறைமொழி மாந்தராகிய திருமூலர் மொழிந்த மறைமொழி. திருமுறை ஆசிரியர், சைவசித்தாந்தி, சித்தர் என்ற சிறப்புகளோடு வாழ்வியல் நெறிவகுத்தவர் என்ற சிறப்பையும் திருமூலர் பெறுகின்றார். பத்தாம் திருமுறையாக உள்ள திருமந்திரம், தோத்திர நூல், சாத்திர நூல், வாழ்வியல் நூல் என்ற மூன்று நிலைகளில் வைத்துப் போற்றப்படுகின்றது.

"நம்பிரான் திருமூலர்" என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தரராலும்,

"என் உச்சி அடிமன்ன வைத்தபிரான் மூலன்" என்று திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பியாலும் போற்றப்படும் திருமூலரின் அருளை வேண்டும் தாயுமானவர், "சக்கரவர்த்தி தவராசயோகி எனும் மிக்க திருமூலன் அருள் மேவுநாள் எந்நாளோ" என்கிறார்.

திருமூலரைப் போற்றும் சேக்கிழார்,

**நந்தி அருள்பெற்ற நான்மறையோகிகள் ஒருவர் [1]**

**எண் நிறைந்த உணர்வுடையோர் [2]**

**பெருகு ஆர்வச் செற்றமுதல் தடிந்தவர் [3]**

**நலம் சிறந்த ஞானயோகக் கிரியா சரியைஎலாம் மலர்ந்த மொழித் திருமூலர் [4]**

**உள் உணர்வை ஞானம் முதலிய ஒருநான்கு உண்மை தெள்ளு தீந்தமிழால் கூறும் திருமூலர் [5]**

**அணிமாதிவரும் சித்தி பெற்றுடையார் [6]**

**அருள் புரியும் தவமுனிவர் [7]**

**சைவநெறி மெய்யுணர்ந்தோர் [8]**

**பொங்கு தவத்தோர் [9]**

**முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச் சிந்தையர் [10]**

என்று பெரிய புராணத்தில் சிறப்பிக்கின்றார்.

திருமூலரின் வரலாற்றினை அறிய, நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதி, சுந்தரரின் திருத்தொண்டத் தொகை, சேக்கிழாரின் பெரியபுராணம், உமாபதி சிவாச்சாரியாரின் திருத்தொண்டர் புராண சாரம் ஆகியவை துணை செய்கின்றன.

திருமந்திரத்தில் தற்சிறப்புப் பாயிரத்தில் மாணாக்கர் களுக்குத் திருமூலர் கூறுவதாக அமைந்து உள்ள "திருமூலர் தம் வரலாறு கூறுதல்" என்னும் பகுதியில், கயிலையிலிருந்து வந்த முனிவர், மூலனின் உடலில் புகுந்து, திருவாவடுதுறையில் தவநிலையில் இருந்து திருமந்திரம் அருளினார் என்ற செய்தி உள்ளது.

திருமூலரின் காலம் பற்றி வேறுபட்ட பல கருத்துகள் உள. கி.பி. 1, கி.பி. 5, கி.பி. 7 என்று கூறுவார் உளர். கி.மு. 6000 முதல் கி.மு. 100 வரை 5900 ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும் கூறுவர்.[11] கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்பது அண்மைக்கால, தற்கால ஆய்வாளர் பலருக்கும் ஒப்ப முடிந்த கொள்கை என்ற கருத்தும் உள்ளது.[12] துடிசைக்கிழார், தம் உரைநடையில் திருமூலரின் சொற்களைத் திருவள்ளுவர் கையாண்டதாகக் கூறுகிறார்.

பல ஆயிரம் ஆண்டுகள் வாழும் கலை அறிந்தவர் திருமூலர் என்ற கருத்தும் உள்ளது.

**நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்**
**வாட்டம் இல்லை மனைக்கும் அழிவில்லை** [13]

**காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்**
**கூற்றை உதைக்கும் குறி அதுவாமே** [14]

**ஈராறுகால் கொண்டு எழுந்த புரவியைப்**
**பேராமல் கட்டிப் பெரிதுண வல்லீரேல்**
**நீராயிரமும் நிலம் ஆயிரத்தாண்டும்**
**பேராதுகாயம்பிரான் நந்தி ஆணை** [15]

என்னும் பாடல்கள் வழி, திருமூலர் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம். எனவே, தலைச்சங்கக் காலத்தவராக இருக்கலாம் என்றும் கூறுவர். [16]

மேலும்,

**இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி** [17]

**ஒப்பில் ஒரு கோடியுகம் இருந்தேனே** [18]

என்று திருமூலரே தம் வரலாற்றில் கூறுகிறார்.

திருமூலர் நிலவுலகுக்கு வந்த காரணம், ஆகமத்தைத் தமிழில் படைத்து அளிக்கவே என்பர். இதனை,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே [19]

மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே [20]

அந்திமதிபுனை அரனடிநாள் தொறுஞ்
சிந்தை செய்து ஆகமஞ் செப்பலுற்றேனே [21]

என்ற திருமூலர் வாக்காலும்,

தண்ணில வார் சடையார் தாம் தந்த ஆகமப்பொருளை
மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்ப [22]

என்ற சேக்கிழார் வாக்காலும் அறியலாம்.

திருமந்திரத்தின் அளவு என்று 3000 பாடல்களைக் கூறுவர். இதனை,

மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்து அறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவரன்றே [23]

மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்
மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே [24]

தந்திரம் ஒன்பது சார்பு மூவாயிரம்
சுந்தரன் ஆகமச் சொல் மொழிந் தானே [25]

என்ற பாயிரப் பாடல்களாலும்,

ஊன் உடம்பில் பிறவிவிடம் தீர்ந்து உலகத்தோர் உய்ய
ஞான முதல் நான்கு மலர் நற்றிரு மந்திரமாலை
பான்மை முறை ஓராண்டுக்கு ஒன்றாகப் பரம்பொருளாம்
ஏன எயிறு அணிந்தாரை ஒன்று அவன்தான் என எடுத்து [26]

முன்னிய அப்பொருள் மாலைத் தமிழ் மூவாயிரஞ் சாத்தி
மன்னிய மூவாயிரத்தாண்டு இப்புவி மேல் மகிழ்ந்து இருந்து [27]

என்ற சேக்கிழார் பாடல்களாலும் அறியலாம்.
மேலும்,

பாடல் எண்ணிக்கை மூவாயிரம் என்றும்,[28] 3047 பாடல்கள் என்றும்,[29] 8000 பாடல்கள் என்றும்,[30] 3100 பாடல்கள் என்றும், 3108 பாடல்கள் என்றும் [31] வேறுபட்ட கருத்துகளும் உள்ளன.

திருமந்திரத்தில் உள்ள 3047 பாடல்களில் 49 பாடல்கள் இருமுறை வந்தவை. அவற்றுள்ளும் 440 பாடல்கள் இடைச் செருகல். ஆக, திருமூலர் வாக்குகளாக 2558 பாடல்களே கிடைத்துள்ளன என்று சுப. அண்ணாமலை அவர்கள் கூறுகிறார்.[32]

திருப்பனந்தாள் காசி மடத்தின் பதிப்பில் 3047 பாடல்களுடன், நூல் இறுதியில், அதிகமாக உரை நூல்களில் காணப்படும் பாடல்கள் 47 மற்றும் ஏட்டுப்பிரதிகளில் அதிகமாக உள்ள 14 பாடல்களுடன் சேர்த்து 3108 பாடல்கள் தொடர் எண்ணிக்கையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பில், 36 பாடல்களைத் தனியே தொகுத்துப் பிற நூல்களிலும், உரைகளிலும் காணப்படும் திருமந்திரச் செய்யுள்கள் என்று தலைப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம் 3000 பாடல்களைக் கூறி, முதலில் சிறப்புப் பாயிரம் 7 பாடல்கள், இறுதி வாழ்த்து ஒன்று ஆக, 8 பாடல்களைக் குறிப்பிடுகின்றது. வள்ளலார், உபதேசக் குறிப்பில் திருமந்திரம் எண்ணாயிரம் என்று கூறியுள்ளது, அக்கால வழக்கு. திருமந்திரம் அச்சுவடிவம் பெறாது ஏட்டுச் சுவடிகளாக இருந்த காலத்தில் ஏற்பட்ட வழக்கு. இதனை உபசார வழக்காகக் கொள்ளலாம் என்று ஊரன் அடிகளார் கூறுகிறார்.

திருமூலர், தம் வாக்கால் குறிப்பிட்டுள்ளது 3000 பாடல்களே.

**மூலன் உரை செய்த மூவாயிரந் தமிழ்** [33]

என்று இரண்டு இடங்களிலும்,

**முத்தி முடிவிது மூவாயிரத்திலே** [34]

**தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்**
**சுந்தர ஆகமச்சொல் மொழிந்தானே** [35]

என்றும் திருமூலர், திருமந்திரத்தில் 3000 பாடல்கள் என்று குறிப்பிடுகின்றார்.

**முன்னிய அப்பொருள்மாலைத் தமிழ் மூவாயிரம் சாத்தி** [36]

என்று பெரியபுராணத்தில் சேக்கிழாரும் குறிப்பிடுகின்றார்.

மூலனுரை செய்த மூவாயிரந்தமிழ், முந்நூறு மந்திரம், முப்பது உபதேசம் என்ற குறிப்பு வந்துள்ள திருமந்திரப் பாடலைக் கொண்டு மூன்றும் தனித்தனியான நூல்கள் என்று கூறுவாரும் உளர். ஆனால் இது ஏற்புடைத்து அன்று. ஏனெனில் முதல்தந்திரம் தொடங்கும் பொழுது30 பாடல்களை உடைய உபதேசம் என்ற பகுதியைக் கொண்டு தொடங்குகிறது. அப்பகுதியே உபதேசம். மேலும், திருமந்திர மாலை முந்நூறு என்ற கர்மசித்திகளைக் கூறும், திருமூலரின் நடையிலும், கருத்துச் செம்மையிலும், உயர்விலும் தாழ்ந்த, பிற்காலத்தில் திருமூலரின் பெயரால் எழுதப்பட்ட நூலை, முந்நூறு மந்திரம் என்று கூறும் வழக்கு எழுந்து இருக்கலாம் என்ற கருத்து உள்ளது. [37]

திருமந்திரத்தில், விநாயகர், முருகன் போன்ற தெய்வங்களைப் பற்றிய குறிப்பு இல்லை. எனவே,

**ஐந்து கரத்தனை . . . . .**

என்று தொடங்கும் விநாயகர் காப்பு, திருமூலர் எழுதியிருக்க முடியாது எனலாம்.

**ஒன்றவன் தானே. . . .**

என்று தொடங்கும் பாடலில் இருந்துதான் திருமந்திரம் தொடங்குகின்றது என்பதை,

**ஏன எயிறு அணிந்தாரை ஒன்றவன்தான் என எடுத்து**

என்ற பெரியபுராணப் பாடல் உறுதி செய்கிறது. [38]

பின்வந்தோரால், விநாயகர் காப்புச் செய்யுள் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

பாடல்களின் எண்ணிக்கை வேறுபாட்டிற்கான காரணங்களை, வெள்ளை வாரணனார் அவர்கள் தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

1. சிலபாடல்கள், பொருள் இயல்பு பற்றி இருமுறை, மும்முறை இடம் பெறல்.
2. சில பாடல்கள் பாட பேதங்களால் திரிந்து வேறாக எழுதப் பெறல்.
3. பிற்காலத்தோரால் இடைச் செருகல்களாகச் சேர்க்கப் பெறல்.

போன்ற காரணங்களால், பாடல் எண்ணிக்கையில் வேறுபாடு ஏற்பட்டிருக்கலாம் என்ற கருத்து உள்ளது என்பதை விளக்குகிறார். [39]

திருமந்திரப் பதிப்புகள் பல உள. அவற்றை ஊரன் அடிகளார் அவர்கள் தம் நூலினுள் குறிப்பிட்டு இருக்கின்றார்.[40]

## திருமந்திர நூலின் பல்வேறு பதிப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | திரு.வி.க. பதிப்பு | 1909 |
| 2. | மா.வே. விசுவநாதபிள்ளை குறிப்புரை | 1912 |
| 3. | ரா. சுப்பிரமணியக் கவிராயர், 100 பாடல்களுக்கு உரை, தமிழ்ச் சங்கம், மதுரை. | 1913 |
| 4. | துடிசைக்கிழார் குறிப்புரை, கழக வெளியீடு | 1942 |
| 5. | சமாஜப் பதிப்பு | 1933 |
| 6. | திருவாவடுதுறை ஆதீன வெளியீடு | 1954 |
| 7. | திருப்பனந்தாள் காசிமட வெளியீடு | 1956 |
| 8. | இராமநாதபிள்ளை உரை, கழக வெளியீடு | 1957 |
| 9. | தண்டபாணி தேசிகர் உரை (கடைசி பகுதி-மீனாட்சி சுந்தரம் பிள்ளை உரை) திருவாவடுதுறை ஆதீன வெளியீடு | 1958 |
| 10. | வரதராஜபிள்ளை உரை, 3 பகுதி | 1971<br>1972<br>1974 |
| 11. | அருணைவடிவேல் முதலியார் உரை, 3 பகுதிகள் விரிவான உரை, தருமபுர ஆதீன வெளியீடு | 1974<br>1984<br>1995 |
| 12. | நாராயண வேலுப்பிள்ளை உரை. வர்த்தமானன் பதிப்பகம், 3 பகுதி | 1994 |
| 13. | சுப. அண்ணாமலை, மூல பாட ஆய்வுப்பதிப்பு | 1997 |
| 14. | திருமந்திரத்தில் சைவ சமயக்கலைச்சொல் விளக்கம் அ.மா. பரிமணம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் | 2002 |

திருமூலர் பெயரால், சில வாத நூல்களும், வைத்திய நூல்களும், கரும சித்தி நூல்களும் திருமூலருக்குப் பின் எழுந்தன. அவை, திருமந்திரத்தோடு தொடர்பு உடையவை. திருமூலரால் எழுதப்பெற்றவை என்ற நம்பிக்கையும் மக்களிடையே உள்ளது.

இதனால், திருமந்திரத்தில் கூறப்பெறாத மருத்துவக் குறிப்புகளைத் திருமந்திரத்தில் திருமூலர் கூறுவதாக நம்புவோரும் உளர். திருமந்திரம் அச்சுக்கு வராமல், ஓலைச் சுவடியாக இருந்த காலத்தில் எழுந்த பிற நூல்கள், பிற்காலத்தில் பெயர் மயக்கத்தால் திருமூலர் எழுதியவை என்ற குழப்பத்தை ஏற்படுத்துகிறது எனலாம்.

### திருமந்திரத்தின் அமைப்பு

பாயிரம் தவிர, ஒன்பது தந்திரங்களை உடையது இந்நூல். பாயிரத்தில் அமைந்துள்ள தலைப்புகள், பதிப்புகள் தோறும் வேறுபடுகின்றன. பாயிரத்தில் உள்ள சில தலைப்புகள் முதல் தந்திரத்தில் உள்ளன. முதல் தந்திரத்தில் உள்ளவை சில பாயிரத்தில் உள்ளன.

தந்திரம் என்பது ஆகமம் என்பர்.[41] ஒன்பது ஆகமங்களின் கருத்துகளும் திருமந்திரத்தில் ஒன்பது தந்திரங்களாக உள்ளன.

திருமூலர், திருமந்திரத்தில் எவ்வெவற்றைக் கூறுகிறார் என்பதை அவரே,

**நேயத்தை ஞானத்தை ஞாதுருவத்தினை**
**மாயத்தைமாமாயை தன்னில் வரும்பரை**
**ஆயத்தை அச்சிவன்தன்னை அகோசர**
**வீயத்தை முற்றும் விளக்கி யிட்டேனே**[42]

என்று கூறுகிறார்.

அறியப்படும் பொருள், அறிவு, அறிவோன் மற்றும் உணர்வுமெய், உடல்மெய், உணர்த்து மெய், பரைத் தொகுதி, சிவன் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன என்பது இப்பாடலால் பெறப்படுகின்றது. இவை, உடல், உலகு, இறையருள், உயிர், அறிவு என்பவையே. இவை, சுட்டறிவு, சிற்றறிவு, முற்றறிவு என்பன. உடல் மெய் 24 தத்துவங்களையும், உணர்வுமெய் 7 தத்துவங்களையும், உணர்த்துமெய் 5 தத்துவங்களையும் கொண்ட நிலையில், புறம், அகம், சமயம் என்ற நிலைகளே திருமந்திரத்தில் விளக்கப்பட்டுள்ளன. இவற்றையே பண்பாடு என்ற பொருளில் அகப்பண்பாடு, புறப்பண்பாடு, சமயப் பண்பாடு எனலாம்.

இவ்வுலக வாழ்க்கை நிலையானதல்ல. யாக்கை, செல்வம், இளமை, உயிர் போன்றவை நிலையானவை அல்ல. நிலையான உண்மைப்பொருள் ஒன்று மட்டுமே. அதுவே மெய்ப் பொருளாம் இறைவன். அவனோடு ஒன்றுதலாகிய முத்தி பெற்றுப் பிறவியறுத்தலே உயிர்களின் குறிக்கோள். அக்குறிக்கோளை அடைய தனிமனித ஒழுக்கமாகிய ஆன்ம ஒழுக்கம் தேவை. ஆன்ம

ஒழுக்கம் என்பது ஆன்ம நேயம் போன்று வெளிப்பகட்டின்றி ஆன்மாவால் உண்மையாக, தன்னிச்சையாக உள்ளிருந்து கிளர்ந்து எழும் உணர்வின் அடிப்படையிலானது. பிறருக்காக, பொருளுக்காக, புகழுக்காகப்போடும் வேடமல்ல ஆன்ம ஒழுக்கம். பண்பட்ட உள்ளத்திலிருந்து இயல்பாக வெளிப்படும் அக ஒழுக்கம் இது. அன்பு, கருணை எனும் உரத்தாலும், நீராலும் செழித்து வளர்வது. அனைத்துச் சமயங்களும் வலியுறுத்துவது. எனவே, திருமூலரும் முதலில் வலியுறுத்துவது தனிமனித ஒழுக்கத்தையே. அடுத்து, அவற்றைப் பொறுமையாகக் கையாள, சரியை, கிரியை, யோக, ஞான நிலையினரான ஓட, பாட, தேட, கூடவல்லவராம் பெரியாரைத் துணையாகக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் நிலையில் பொறையுடைமையை அடுத்துப் பெரியாரைத் துணைக்கோடலை அமைத்துள்ளார்.

பெரியோர்கள், சான்றோர்கள் ஆகிய அருளாளர்களின் அறிவுரைகளையும், அறவுரைகளையும் கேட்டல் வேண்டும். அவை, எவை என்று உணர்த்தும் நிலையில் ஒழுக்கம் சார்ந்த அறவுரைகள் மற்றும் மந்திரம், யந்திரம், தந்திரம், வழிபடும் முறைகள், சிவ தவ குருவேடமுறைகள், அடியார் பெருமை போன்றவற்றைக் கூறி, அவற்றை அட்டாங்கயோக நிலையில், பொறை நிலையோடு நினைந்து தியானம் செய்ய வேண்டும் என்கிறார். இதனால், ஒன்பதாம் தந்திரத்தில் கூறப்பட்டுள்ள சிவபோக இன்பத்தை அடையலாம் என்று கூறும் அமைப்பில் தந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒழுக்கத்தால் பண்படுகிறபொழுது சிந்தை தெளிவடையும். அத்தெளி நிலையில் வழிபாட்டு நெறிகளைப்பின்பற்றி இறையியலைப் பற்றிச் சிந்திக்கின்ற பொழுது மலர்தலும் கூம்பலுமற்ற அசைவறுமதி ஏற்படும். அப்பொழுது ஞானம் சிறக்கும். அப்பொழுது கிரியை நிலைகள் தானாக நீங்கும். மோன சமாதி பெறலாம். இந்தப் படிப்படியான வளர்ச்சி நிலையின் அடிப்படையிலேயே திருமந்திரத்தைத் திருமூலர் அமைத்துள்ளார்.

ஆன்மாக்களின் பாசங்களைப் போக்கி முத்தி தருவது ஆகமம். வேதங்களின் விளக்கங்களே ஆகமங்கள். ஒவ்வொரு தெய்வ வழிபாட்டிற்கும் உரிய முத்திரைகளும், வழிபாட்டுமுறைகளும் தந்திரம் என்று வழங்கப்பட்டன. வழிபடுகின்றவனை உயர்நிலைக்கு அழைத்துச் செல்வது மந்திரம்.

**நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப** [43]

என்கிறது தொல்காப்பியம்.

இவ்வாறு, சிறந்த அமைப்பும் சிறப்பும் கொண்டுள்ள திருமந்திரத்தை,

**தேவர் குறளும்திருநான்மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவாசகம் என்று உணர்**

என்று கூறி ஔவையார், வேதத்துக்குச் சமமாகப் போற்றுகின்றார். ஆக,

1. தமிழில் ஆகமப் பொருளை மந்திரங்களாகப் படைத்துள்ளார் திருமூலர்.
2. அவர் காலம் பற்றிய பல வேறுபட்ட கருத்துகள் உள. (கி.மு. 6000 முதல் கி.மு. 100 முடிய வாழ்ந்தார் என்றும், கி.பி. 1, கி.பி. 5, கி.பி. 7ஆம் நூற்றாண்டினர் என்றும் வேறுபட்ட கருத்துகள் உள)
3. திருமூலர், அவர்தம் நூலுக்கு இட்ட பெயர், திருமந்திரமாலை. வடமொழி வேதங்கள், சமண, பௌத்தம் பற்றிய குறிப்புகள் திருமந்திரத்தில் இல்லை.
4. வழிபாட்டு நெறிகளுக்கும், மெய்யுணர்தலுக்கும் அடிப்படைத் தேவை தனிமனித ஒழுக்கமே. அவற்றுள்ளும் இன்றியமையாததாக அன்பு உள்ளது. அன்பு நெறியே கடவுள்நெறி என்று அன்பு நெறியை வலியுறுத்துகிறார் திருமூலர்.
5. அக்கால சமய நெறிகள், சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், மந்திரம், யந்திரம், தந்திரம் போன்றவைகளை விளக்குவதோடு, சித்தர் நெறிகளையும், சித்தர் இயல்புகளையும் திறம்பட வகுத்துரைக்கிறார். சித்தாந்த சைவத்தைக் கூறுவதோடு சித்தர் சைவத்தையும் கூறுகிறார்.
6. திருமந்திரத்தின் அமைப்பு, படிப்படியான வழிபாட்டு நெறிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற அமைப்பு முறையில் அமைந்து இறுதியில் உள்ள ஒன்பதாவது தந்திரம், முடிவுரை போன்று சாயுச்சிய பரமுத்தியை விளக்கி முடிப்பதாக உள்ளது.

தந்திர அமைப்பு, ஞானம் பெறும் படிநிலைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது எனலாம்.

7. திருமந்திரத்தின் பாடல் எண்ணிக்கையில் மாறுபட்ட கருத்துகள் உள. 3000 என்ற கருத்து, திருமூலர் பாடல்களில் உள்ளதால், பெரும்பான்மையினர் ஏற்கின்றனர்.

8. திருமந்திரத்துக்குப்பின் தோன்றிய பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களுக்குத் திருமந்திரமே மூலநூல்.

9. திருமந்திரம், தோத்திரம், சாத்திரம் போன்றவைகளை விளக்கும் சமய நூலாக மட்டுமன்றி வாழ்வியலை விளக்கும் சிறந்த வாழ்வியல் நூலாகவும் உள்ளது.

10. திருமூலருக்கு முன்பு உள்ள நூல்களில் பதிவு செய்யாத பல கருத்துகளைத் திருமூலர், திருமந்திரத்தில் பதிவு செய்துள்ளார். அவை,

    1. புராணங்களின் உட்பொருள்விளக்கம்.
    2. அட்டாங்கயோக விளக்கம்
    3. சக்கர அமைப்பு
    4. மந்திரம், தந்திரம், யந்திரம் பற்றிய விளக்கங்கள்
    5. நான்கு நெறிகள், நிலை, மார்க்கம் பற்றிய விளக்கங்கள்.

       (சரியை, கிரியை, யோகம், ஞானம். சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், சகமார்க்கம், சன்மார்க்கம், சத்புத்ரமார்க்கம், தாச மார்க்கம்.)
    6. சூன்ய சம்பாஷணை என்ற வெட்டவெளிப் பேச்சை இறுதியில் முடிவுரையாக அமைத்துள்ளமை.
    7. நமசிவாய மந்திரப் பகுப்பு.
    8. கூத்துத்தரிசனம் பற்றிய விளக்கம்.
    9. சித்தாந்தம் என்ற சொல்லாட்சி
    10. கலிவிருத்தப்பாவைப் பயன்படுத்தல்
    11. இழிவு என்று கருதிய உடலைப் பாதுகாத்து முத்திக்குக் கருவியாக்கல்
    12. கருவின் உற்பத்தி முறை
    13. திருநீறு, உருத்திராக்கம் போன்ற சிவச்சின்னங்கள் அணிதலை விளக்கல்
    14. அடியார் பெருமை, குருபூசை, சமாதி போன்றவற்றின் விளக்கங்கள்
    15. 36 தத்துவங்கள்பற்றிய விளக்கங்கள் போன்றவை. மேலும்,

சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என்ற நான்கு வகையான சைவங்களைத் திருமூலருக்கு முன்பும் பின்பும் யாரும் குறிப்பிடவில்லை.

இத்தகு அரிய செய்திகள் அடங்கிய நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. திருமந்திரத்தின் தந்திரங்கள் ஒன்பது மற்றும் அவற்றின் உட்பிரிவுகள், பாடல்களாகிய மந்திரங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை அறியும் நிலையில் திருமந்திரத்தின் கழகப் பதிப்பின் அடிப்படையில் 3000 பாடல்கள் என்ற நிலையில் வரிசைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு பதிப்புகளில் சிற்சில மாறுபாடுகள், பாடல்களின் எண்ணிக்கையிலும், முதல் தந்திரம் மற்றும் பாயிரங்களுக்கிடையே உட்தலைப்புகளின் கலப்பிலும் இருக்கும். மிகப்பெரிய வேறுபாடுகள் இல்லை.

பாடல்கள் மந்திரங்கள்என்ற பெயர் பெற்றுள்ளன. திருமூலர் என்ற பெயரில் உள்ள மந்திரம், மருத்துவம், கருமசித்தி நூல்களில் உள்ள பாடல்கள் திருமந்திரத்தில் அடங்கா. திருமந்திரத்தின் உள்ளுறை என்று இங்கு அட்டவணையாகக் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகள் மட்டுமே திருமந்திரத்தில் உள்ளன.

## திருமந்திரத்தின் உள்ளுறை

### பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் 1-156 மந்திரங்கள்

### குருமடவரலாறு

### திருமந்திரத்தொகைச் சிறப்பு

பொதுப்பாயிரம்

1. கடவுள் வாழ்த்து-50 மந்திரங்கள்
2. மும்மூர்த்திகளின் முறைமை-10 மந்திரங்கள்
3. வேதச் சிறப்பு -7 மந்திரங்கள்
4. ஆகமச் சிறப்பு - 7 மந்திரங்கள்
5. அந்தணர் ஒழுக்கம் - 10 மந்திரங்கள்
6. ஆகுதிவேட்டல் - 10 மந்திரங்கள்
7. அரசாட்சி முறை - 10 மந்திரங்கள்
8. வானச்சிறப்பு - 2 மந்திரங்கள்
9. அறஞ் செய்வான்திறம்- 10 மந்திரங்கள்
10. அறஞ்செய்யான் திறம் - 10 மந்திரங்கள்
11. அவையடக்கம் - 2 மந்திரங்கள்

**சிறப்புப் பாயிரம்**

1. குருபரம்பரை - 6 மந்திரங்கள்
2. திருமூலர்தம் வரலாறு கூறுதல் - 22 மந்திரங்கள்

பாயிரப் பாடல்களும் முதல் தந்திரப் பாடல்களும் சில பதிப்புகளில் தலைப்புகளடிப்படையில் மாறி மாறி அமைந்திருக்கும். இந்த அட்டவணை, கழகப்பதிப்பின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

## முதல் தந்திரம் (காரணாகமம்)

## (157-322 = 166 மந்திரங்கள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | உபதேசம் | - | 30 மந்திரங்கள் |
| 2. | யாக்கை நிலையாமை | - | 25 மந்திரங்கள் |
| 3. | செல்வம் நிலையாமை | - | 9 மந்திரங்கள் |
| 4. | இளமை நிலையாமை | - | 8 மந்திரங்கள் |
| 5. | உயிர் நிலையாமை | - | 10 மந்திரங்கள் |
| 6. | கொல்லாமை | - | 3 மந்திரங்கள் |
| 7. | புலால் மறுத்தல் | - | 2 மந்திரங்கள் |
| 8. | பிறன்மனை நயவாமை | - | 3 மந்திரங்கள் |
| 9. | மகளிர் இழிவு | - | 5 மந்திரங்கள் |
| 10. | நல்குரவு | - | 5 மந்திரங்கள் |
| 11. | அன்புடைமை | - | 10 மந்திரங்கள் |
| 12. | அன்பு செய்வாரை அறியும் சிவன் | - | 10 மந்திரங்கள் |
| 13. | கல்வி | - | 10 மந்திரங்கள் |
| 14. | கேள்வி கேட்டமைதல் | - | 10 மந்திரங்கள் |
| 15. | கல்லாமை | - | 10 மந்திரங்கள் |
| 16. | நடுவு நிலைமை | - | 4 மந்திரங்கள் |
| 17. | கள்ளுண்ணாமை | - | 12 மந்திரங்கள் |

## இரண்டாம் தந்திரம் (காமிகாகமம்)

## 323 முதல் 530 முடிய 208 மந்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அகத்தியம் | - | 2 மந்திரங்கள் |
| 2. | பதிவலியில் வீரட்டம் எட்டு | - | 8 மந்திரங்கள் |

3. இலிங்க புராணம் - 6 மந்திரங்கள்
4. தக்கன் கேள்வி - 9 மந்திரங்கள்
5. பிரளயம் - 5 மந்திரங்கள்
6. சக்கரப்பேறு - 4 மந்திரங்கள்
7. எலும்பும் கபாலமும் - 1 மந்திரங்கள்
8. அடிமுடி தேடல் - 10 மந்திரங்கள்
9. சர்வ சிருஷ்டி (படைப்பு) - 30 மந்திரங்கள்
10. திதி (காப்பு) - 9 மந்திரங்கள்
11. சங்காரம் (அழிப்பு) - 10 மந்திரங்கள்
12. திரோபவம் (மறைப்பு) - 9 மந்திரங்கள்
13. அநுக்கிரகம் (அருளல்) - 10 மந்திரங்கள்
14. கர்ப்பக்கிரியை (கரு உற்பத்தி) - 39 மந்திரங்கள்
15. மூவகைச் சீவவர்க்கம் - 9 மந்திரங்கள்
16. பாத்திரம் - 4 மந்திரங்கள்
17. அபாத்திரம் - 4 மந்திரங்கள்
18. தீர்த்தம் - 6 மந்திரங்கள்
19. திருக்கோயிலிழிவு - 5 மந்திரங்கள்
20. அதோமுகத்தரிசனம் - 6 மந்திரங்கள்
21. சிவநிந்தை - 4 மந்திரங்கள்
22. குருநிந்தை - 7 மந்திரங்கள்
23. மயேசுர நிந்தை - 2 மந்திரங்கள்
24. பொறையுடைமை - 3 மந்திரங்கள்
25. பெரியாரைத் துணைக்கோடல் - 6 மந்திரங்கள்

## மூன்றாம் தந்திரம் (வீராகமம்)

## 531 - 863 = 333 மந்திரங்கள்

1. அட்டாங்கயோகம் (அகத்தவம் எட்டு) - 4 மந்திரங்கள்
2. இயமம் (தீதகற்றல்) - 2 மந்திரங்கள்
3. நியமம் (நன்றாற்றல்) - 3 மந்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 4. | ஆதனம் (இருக்கை) | - | 6 மந்திரங்கள் |
| 5. | பிராணாயாமம் (மூச்சு, வளிநிலை) | - | 13 மந்திரங்கள் |
| 6. | பிரத்தியாகாரம் (தொகைநிலை) | - | 9 மந்திரங்கள் |
| 7. | தாரணை (பொறைநிலை) | - | 1 மந்திரங்கள் |
| 8. | தியானம் (நீளநினைதல்) | - | 20 மந்திரங்கள் |
| 9. | சமாதி (ஒன்றாதல்) | - | 14 மந்திரங்கள் |
| 10. | அட்டாங்க யோகப்பேறு | - | 8 மந்திரங்கள் |
| 11. | அட்டாமாசித்தி (எண்பெரும்பேறு) | - | 72 மந்திரங்கள் |
| 12. | கலைநிலை | - | 12 மந்திரங்கள் |
| 13. | சரீரசித்தி உபாயம் | - | 16 மந்திரங்கள் |
| 14. | காலசக்கரம் | - | 30 மந்திரங்கள் |
| 15. | ஆயுள் பரிட்சை | - | 20 மந்திரங்கள் |
| 16. | வாரசரம் | - | 7 மந்திரங்கள் |
| 17. | வாரசூலம் | - | 2 மந்திரங்கள் |
| 18. | கேசரியோகம் | - | 26 மந்திரங்கள் |
| 19. | பரியங்க யோகம் | - | 20 மந்திரங்கள் |
| 20. | அமுரிதாரணை | - | 6 மந்திரங்கள் |
| 21. | சந்திர யோகம் | - | 33 மந்திரங்கள் |
| | | | ----- |
| | | | 333 மந்திரங்கள் |

**நான்காம் தந்திரம் (சித்தாகமம்)**

**864 - 1393 = 530 மந்திரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அசபை (பேசா எழுத்து) | - | 30 மந்திரங்கள் |
| 2. | திருவம்பலச்சக்கரம் | - | 85 மந்திரங்கள் |
| 3. | அருச்சனை | - | 12 மந்திரங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 4. | நவகுண்டம் | - | 30 மந்திரங்கள் |
| 5. | சத்திபேதம்- திரிபுரை சக்கரம் | - | 30 மந்திரங்கள் |
| 6. | வயிரவி மந்திரம் | - | 50 மந்திரங்கள் |
| 7. | பூரண சத்தி | - | 30 மந்திரங்கள் |
| 8. | ஆதார ஆதேயம் | - | 100மந்திரங்கள் |
| 9. | ஏரொளிச்சக்கரம் | - | 36 மந்திரங்கள் |
| 10. | வயிரவச்சக்கரம் | - | 6 மந்திரங்கள் |
| 11. | சாம்பவிமண்டலச் சக்கரம் | - | 9 மந்திரங்கள் |
| 12. | புவனாபதி சக்கரம் | - | 12 மந்திரங்கள் |
| 13. | நவாக்கரி சக்கரம் | - | 100 மந்திரங்கள் |
| | | | ----- |
| | | | 530 மந்திரங்கள் |

## ஐந்தாம் தந்திரம் (வாதுளாகமம்)

## 1394 - 1547 = 154 மந்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சுத்தசைவம் | - | 4 மந்திரங்கள் |
| 2. | அசுத்த சைவம் | - | 4 மந்திரங்கள் |
| 3. | மார்க்க சைவம் | - | 10 மந்திரங்கள் |
| 4. | கடுஞ்சுத்தசைவம் | - | 5 மந்திரங்கள் |
| 5. | சரியை | - | 7 மந்திரங்கள் |
| 6. | கிரியை | - | 6 மந்திரங்கள் |
| 7. | யோகம் | - | 10 மந்திரங்கள் |
| 8. | ஞானம் | - | 10 மந்திரங்கள் |
| 9. | சன்மார்க்கம் | - | 11 மந்திரங்கள் |
| 10. | சகமார்க்கம் | - | 7 மந்திரங்கள் |
| 11. | சற்புத்திரமார்க்கம் | - | 7 மந்திரங்கள் |
| 12. | தாசமார்க்கம் | - | 6 மந்திரங்கள் |
| 13. | சாலோகம் | - | 2 மந்திரங்கள் |
| 14. | சாமீபம் | - | 1 மந்திரங்கள் |
| 15. | சாரூபம் | - | 2 மந்திரங்கள் |
| 16. | சாயுச்சியம் | - | 2 மந்திரங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 17. | சத்திநிபாதம் | - | 15 மந்திரங்கள் |
| 18. | புறச்சமயதூஷணம் | - | 23 மந்திரங்கள் |
| 19. | நிராகாரம் | - | 7 மந்திரங்கள் |
| 20. | உட்சமயம் | - | 16 மந்திரங்கள் |
| | | | ----- |
| | | | 154மந்திரங்கள் |

## ஆறாம் தந்திரம் (வியாமளாகமம்)

## 1548 - 1675 = 128 மந்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவகுருதரிசனம் | - | 16 மந்திரங்கள் |
| 2. | திருவடிப்பேறு | - | 15 மந்திரங்கள் |
| 3. | ஞாதுருஞானஞேயம் | - | 9 மந்திரங்கள் |
| 4. | துறவு | - | 10 மந்திரங்கள் |
| 5. | தவம் | - | 8 மந்திரங்கள் |
| 6. | தவதூடணம் | - | 12 மந்திரங்கள் |
| 7. | அருளுடைமையின் ஞானம்வருதல் | - | 9 மந்திரங்கள் |
| 8. | அவவேடம் | - | 6 மந்திரங்கள் |
| 9. | தவவேடம் | - | 4 மந்திரங்கள் |
| 10. | திருநீறு | - | 3 மந்திரங்கள் |
| 11. | ஞானவேடம் | - | 8 மந்திரங்கள் |
| 12. | சிவவேடம் | - | 4 மந்திரங்கள் |
| 13. | அபக்குவன் | - | 10 மந்திரங்கள் |
| 14. | பக்குவன் | - | 14 மந்திரங்கள் |
| | | | ----- |
| | | | 128 மந்திரங்கள் |

## ஏழாம் தந்திரம் (காலோத்த ராகமம்)

## 1676 - 2082 = 407 மந்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆறாதாரம் | - | 7 மந்திரங்கள் |
| 2. | அண்டலிங்கம் | - | 13 மந்திரங்கள் |
| 3. | பிண்டலிங்கம் | - | 4 மந்திரங்கள் |
| 4. | சதாசிவலிங்கம் | - | 23 மந்திரங்கள் |
| 5. | ஆத்மலிங்கம் | - | 10 மந்திரங்கள் |
| 6. | ஞானலிங்கம் | - | 9 மந்திரங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 7. | சிவலிங்கம் | - | 5 மந்திரங்கள் |
| 8. | சம்பிரதாயம் | - | 14 மந்திரங்கள் |
| 9. | திருவருள்வைப்பு | - | 22 மந்திரங்கள் |
| 10. | அருளொளி | - | 9 மந்திரங்கள் |
| 11. | சிவபூசை | - | 21 மந்திரங்கள் |
| 12. | குருபூசை | - | 8 மந்திரங்கள் |
| 13. | மகேசுவர பூசை | - | 10 மந்திரங்கள் |
| 14. | அடியார் பெருமை | - | 16 மந்திரங்கள் |
| 15. | போசன விதி | - | 2 மந்திரங்கள் |
| 16. | பிட்சா விதி | - | 6 மந்திரங்கள் |
| 17. | முத்திரை பேதம் | - | 10 மந்திரங்கள் |
| 18. | பூரண குகைநெறிச் சமாதி | - | 8 மந்திரங்கள் |
| 19. | சமாதிக்கிரியை | - | 13 மந்திரங்கள் |
| 20. | விந்துற்பனம் | - | 14 மந்திரங்கள் |
| 21. | விந்து சயம்-போக சரவோட்டம் | - | 38 மந்திரங்கள் |
| 22. | ஆதித்த நிலை - அண்டாதித்தன் | - | 10 மந்திரங்கள் |
| 23. | பிண்டாதித்தன் | - | 3 மந்திரங்கள் |
| 24. | மனவாதித்தன் | - | 5 மந்திரங்கள் |
| 25. | ஞானாதித்தன் | - | 8 மந்திரங்கள் |
| 26. | சிவாதித்தன் | - | 4 மந்திரங்கள் |
| 27. | பசுவிலக்கணம்- பிராணன் | - | 2 மந்திரங்கள் |
| 28. | புருடன் | - | 4 மந்திரங்கள் |
| 29. | சீவன் | - | 3 மந்திரங்கள் |
| 30. | பசு | - | 2 மந்திரங்கள் |
| 31. | போதன் | - | 6 மந்திரங்கள் |
| 32. | ஐந்திந்திரியம் அடக்கும் அருமை | - | 8 மந்திரங்கள் |
| 33. | ஐந்திந்திரியம்- அடக்கும் முறைமை | - | 3 மந்திரங்கள் |
| 34. | அசற்குருநெறி | - | 5 மந்திரங்கள் |
| 35. | சற்குருநெறி | - | 18 மந்திரங்கள் |
| 36. | கூடா ஒழுக்கம் | - | 17 மந்திரங்கள் |
| 37. | கேடுகண்டிரங்கல் | - | 18 மந்திரங்கள் |
| 38. | இதோபதேசம் | - | 19 மந்திரங்கள் |
| | | | ----- |
| | | | 407 மந்திரங்கள் |

## எட்டாந் தந்திரம் (சுப்பிராகமம்)

## 2082 - 2600 = 518 மந்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | உடலிற் பஞ்சபேதம் | - | 17 மந்திரங்கள் |
| 2. | உடல்விடல் | - | 3 மந்திரங்கள் |
| 3. | அவத்தைபேதம் | - | 25 மந்திரங்கள் |
| 4. | மத்தியசாக்ராவத்தை | - | 16 மந்திரங்கள் |
| 5. | அத்துவாக்கள் | - | 3 மந்திரங்கள் |
| 6. | சுத்தநனவாதி பருவம் | - | 40 மந்திரங்கள் |
| 7. | கேவலசகலசுத்தம் | - | 43 மந்திரங்கள் |
| 8. | பராவத்தை | - | 27 மந்திரங்கள் |
| 9. | முக்குணநிர்க்குணம் | - | 1 மந்திரங்கள் |
| 10. | அண்டாதி பேதம் | - | 2 மந்திரங்கள் |
| 11. | பதினொராராந்தானமும் அவத்தையெனல் | - | 3 மந்திரங்கள் |
| 12. | கலவு செலவு | - | 2 மந்திரங்கள் |
| 13. | நின்மலாவத்தை | - | 50 மந்திரங்கள் |
| 14. | அறிவுதயம் | - | 14 மந்திரங்கள் |
| 15. | ஆறந்தம் | - | 37 மந்திரங்கள் |
| 16. | பதிபசுபாசம் வேறின்மை | - | 20 மந்திரங்கள் |
| 17. | அடிதலையறியும் திறம் கூறல் | - | 10 மந்திரங்கள் |
| 18. | முக்குற்றம் | - | 2 மந்திரங்கள் |
| 19. | முப்பதம் | - | 8 மந்திரங்கள் |
| 20. | முப்பரம் | - | 7 மந்திரங்கள் |
| 21. | பரலட்சணம் | - | 14 மந்திரங்கள் |
| 22. | முத்துரியம் | - | 8 மந்திரங்கள் |
| 23. | மும்முத்தி | - | 4 மந்திரங்கள் |
| 24. | முச்சொரூபம் | - | 7 மந்திரங்கள் |
| 25. | முக்கரணம் | - | 3 மந்திரங்கள் |
| 26. | முச்சூனியதொந்தத்தசி | - | 7 மந்திரங்கள் |
| 27. | முப்பாழ் | - | 6 மந்திரங்கள் |
| 28. | காரியகாரணவுபாதி | - | 4 மந்திரங்கள் |
| 29. | உபசாந்தம் | - | 6 மந்திரங்கள் |
| 30. | புறங்கூறாமை | - | 15 மந்திரங்கள் |
| 31. | அஷ்டதளகமல முக்குணஅவத்தை | - | 10 மந்திரங்கள் |
| 32. | நவாவத்தை-நவாபிமானி | - | 9 மந்திரங்கள் |
| 33. | சுத்தாசுத்தம் | - | 11 மந்திரங்கள் |

| | | |
|---|---|---|
| 34. மோட்ச நிந்தை | - | 7 மந்திரங்கள் |
| 35. இலக்கணாத்திரயம் | - | 2 மந்திரங்கள் |
| 36. தத்துவமசிவாக்கியம் | - | 16 மந்திரங்கள் |
| 37. விசுவக்கிராசம் | - | 8 மந்திரங்கள் |
| 38. வாய்மை | - | 14 மந்திரங்கள் |
| 39. ஞானிசெயல் | - | 4 மந்திரங்கள் |
| 40. அவாவறுத்தல் | - | 9 மந்திரங்கள் |
| 41. பத்தியுடைமை | - | 10 மந்திரங்கள் |
| 42. முத்தியுடைமை | - | 2 மந்திரங்கள் |
| 43. சோதனை | - | 12 மந்திரங்கள் |
| | | ----- |
| | | 518 மந்திரங்கள் |

## ஒன்பதாம் தந்திரம் (மகுடாகமம்)

## 2601 - 3000 = 400 மந்திரங்கள்

| | | |
|---|---|---|
| 1. குருமட தரிசனம் | - | 7 மந்திரங்கள் |
| 2. ஞானகுரு தரிசனம் | - | 18 மந்திரங்கள் |
| 3. பிரணவசமாதி | - | 6 மந்திரங்கள் |
| 4. ஒளி | - | 17 மந்திரங்கள் |
| 5. தூலபஞ்சாக்கரம் | - | 10 மந்திரங்கள் |
| 6. சூக்கும பஞ்சாக்கரம் | - | 10 மந்திரங்கள் |
| 7. அதிசூக்கும பஞ்சாக்கரம் | - | 5 மந்திரங்கள் |
| 8. திருக்கூத்துத்தரிசனம் | - | 85 மந்திரங்கள் |
| 9. ஆகாசப் பேறு | - | 9 மந்திரங்கள் |
| 10. ஞானோதயம் | - | 14 மந்திரங்கள் |
| 11. சத்திய ஞானானந்தம் | - | 9 மந்திரங்கள் |
| 12. சொரூப உதயம் | - | 12 மந்திரங்கள் |
| 13. ஊழ் | - | 6 மந்திரங்கள் |
| 14. சிவதரிசனம் | - | 3 மந்திரங்கள் |
| 15. சிவசொரூப தரிசனம் | - | 9 மந்திரங்கள் |
| 16. முத்திபேதம்- கரும நிருவாணம் | - | 5 மந்திரங்கள் |
| 17. சூன்யசம்பாஷணை | - | 70 மந்திரங்கள் |
| 18. மோனசமாதி | - | 18 மந்திரங்கள் |

| | | |
|---|---|---|
| 19. வரையுரைமாட்சி | - | 3 மந்திரங்கள் |
| 20. அணைந்தோர்தன்மை | - | 23 மந்திரங்கள் |
| 21. தோத்திரம் | - | 42 மந்திரங்கள் |
| 22. சர்வவியாபி | - | 19 மந்திரங்கள் |
| | | ----- |
| | | 400 மந்திரங்கள் |

## குறிப்புகள்

1. பெரியபுராணம், 3564.
2. பெரியபுராணம், 3586.
3. பெரியபுராணம், 3587.
4. பெரியபுராணம், 3591.
5. பெரியபுராணம், 3863.
6. பெரியபுராணம், 3565.
7. பெரியபுராணம், 3576.
8. பெரியபுராணம், 3579.
9. பெரியபுராணம், 3581.
10. பெரியபுராணம், 3585.
11. இராமநாதபிள்ளை, ப. திருமந்திரம் மூவாயிரம், கழகப்பதிப்பு, ப.70.
12. ஊரன் அடிகள், திருமூலரும் வள்ளலாரும், ப.1.
13. திருமந்திரம், மூன்றாம் தந்திரம், தியானம், பாடல்-584.
14. திருமந்திரம், மூன்றாம் தந்திரம், பிரணாயாமம், பாடல்-553.
15. திருமந்திரம், கலைநிலை, பாடல்-702.
16. பாலூர் கண்ணப்ப முதலியார், தமிழ் மந்திரம், 1983, ப.39.
17. திருமந்திரம், தற்சிறப்புப்பாயிரம், திருமூலர் தம் வரலாறு கூறல், பாடல்-142.
18. மேலது, பாடல்-136.
19. மேலது, பாடல்-152.
20. மேலது, பாடல்-138.
21. திருமந்திரம், தற்சிறப்புப் பாயிரம், திருமூலர் தம் வரலாறு கூறல், 135.
22. பெரியபுராணம், பாடல்-3586.

23. திருமந்திரம், சிறப்புப்பாயிரம், திருமந்திரத் தொகைச் சிறப்பு, பாடல்-1.
24. மேலது, பாடல்-2.
25. திருமந்திரம், சிறப்புப்பாயிரம், குருமடவரலாறு, பாடல்-1.
26. பெரியபுராணம், திருமூலநாயனார் புராணம், பாடல்-3589.
27. மேலது, பாடல்-3590.
28. திருமந்திரம், கழகப்பதிப்பு.
29. திருமந்திரம், சமாஜப்பதிப்பிலும், திருவாவடுதுறை ஆதினப் பதிப்பிலும், பழனியப்பா பிரதர்ஸ், ஜி.வரதராஜன்உரையிலும்.
30. இராமலிங்கர், உபதேசக் குறிப்பு.
31. திருப்பனந்தாள் காசி மடத்தின் பதிப்பு, ஸ்ரீ வைகுண்டம்.
32. சுப. அண்ணாமலை, திருமந்திர மூலபாட ஆய்வுப் பதிப்பு.
33. திருமந்திரம், சிறப்புப்பாயிரம், திருமந்திரத் தொகைச் சிறப்பு-1,2.
34. திருமந்திரம், மேலது, பாடல்-3.
35. திருமந்திரம், சிறப்புப் பாயிரம், குருமடவரலாறு, பாடல்-1.
36. பெரியபுராணம், திருமூலநயனார் புராணம், பாடல்-3590.
37. ஊரன் அடிகளார், திருமூலரும், வள்ளலாரும், சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், 2005, ப.30.
38. பெரியபுராணம், திருமூலநாயனார் புராணம், பாடல்-3589.
39. வெள்ளைவாரணனார், 'பன்னிரு திருமுறை வரலாறு', இரண்டாம் பகுதி, ப.548.
40. ஊரன் அடிகள், 'திருமூலரும் வள்ளலாரும்', சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், ப.168-174.
41. பாலூர் கண்ணப்ப முதலியார், 'தமிழ்மந்திரம்', ப-56.
42. திருமந்திரம், தற்சிறப்புப்பாயிரம், திருமூலர் தம் வரலாறு கூறல், பாடல்-154.
43. தொல்காப்பியம், செய்யுளியல்-171.

# உ. பண்பாடு

அரசியல், கலை, பொருளாதார, சமுதாய, நாகரிக வளர்ச்சியைப் பண்பாடு என்றனர். ஆனால் இன்று, மனிதனின் நல்லொழுக்கத்தினை மட்டுமே குறிப்பதாகப் பண்பாடு என்ற சொல் விளங்குகிறது எனலாம். அதாவது, இன்று பண்பாடு என்பது சிறப்பாக, நல்லொழுக்கத்தோடு கூடிய மனித நேயத்தையும், உலகத்தோடு ஒட்ட ஒழுகலையும், பாடறிந்து ஒழுகுதலையும் குறிப்பிடுகின்றது.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்று விளக்கம் தருகிறது கலித்தொகை.[1] பண்பால் உலகம் நிலைத்துள்ளது. இல்லையேல் மண்ணுள் புதைந்து மாய்ந்து விடும் என்கிறார் திருவள்ளுவர்.

**பண்புடையார் பட்டுண்டு உலகம்அது இன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன் [2]**

என்பது திருவள்ளுவர் வாக்கு.

தனக்கென வாழாது, பிறர்க்காக வாழ்கின்றவர்களாலேயே இவ்வுலகம் நிலைத்து உள்ளது என்று நம்பினர். இதனைப் புறநானூறு,

**உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
**துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவதஞ்சிப்**
**புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
**அன்ன மாட்சி யனையராகித்**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மையானே [3]**

என்று கூறுகின்றது. சினந்து போர் செய்யும் போர்க்களத்திலும், அறத்தை நிலைநாட்டிய பண்பாடு உடையோர் தமிழர் என்பதைப் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது.

ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடி விடுதும்நும் அரண்சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை..... [4]

என்பதே அப்புறநானூற்றுப் பாடல்.

எல்லோருடனும் எளிமை, இனிமையோடு பழகல் வேண்டும். அன்புடைமையே பண்பைத் தரும். பண்புடையார் மட்டுமே மக்களாகக் கருதப்படுவர். பிறருக்கு நல்லவைகளை விரும்பிச் செய்யும் பண்புடையோரை இவ்வுலகம் பாராட்டும். பகைவருடனும் பண்போடு நடப்பது சிறப்பு. மனிதப் பண்பு இல்லாவிட்டால், எத்தகைய அறிவு பெற்றும் பயனில்லை. பிறரிடம் அன்புடனும், பண்புடனும், இன்முகத்துடனும் பழகத் தெரியாதவர்களுக்குப் பகல் பொழுதும் இருள் சூழ்ந்தது போல் இருக்கும் என்று பண்பாடு பற்றிய கருத்து நிலவுகிறது.

நிலத்தைப் பண்படுத்துவது போல, மனித மனத்தைப் பண்படுத்தி வாழ்வது பண்பாடு என்ற நம்பிக்கை உள்ளது. ஒழுக்கக் குலைவு ஏற்பட்டால், அங்கே பண்பாடு சீரழிந்து விட்டதாகக் கருதப்படுகிறது. நல்லொழுக்கத்தோடு கூடிய பண்பட்டவாழ்வால் தனி மனிதனின் உள்ளமும், சமுதாயமும், அமைதியும் இன்பமும் பெற, சான்றோர்கள் நூல்களின் வாயிலாக அறிவுறுத்தியுள்ளார்கள். மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது பண்பாடு.

ஒரு நாட்டின் வரலாறு, பண்பாட்டு வரலாறாகவும், நாகரிக வரலாறாகவும் அமைகிறது. எனவே, பண்படுதல் என்பதோடு அன்பு, அழகு, ஆற்றல், சிறப்பு, ஒற்றுமை, கலையார்வம் உள்ள இன்பமும் அமைதியும் தவழும் வாழ்க்கை முறை வரலாறுகளையும் பண்பாடு எனலாம்.

பண்பாடு என்பது, மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினன் என்ற நிலைமையில் அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், நீதிகள், பழக்க வழக்கங்கள், ஆற்றல்கள் முதலியவை பற்றிப் பெற்ற ஒருவித் வாழ்க்கை முறையாகும் [5] என்று கூறுகின்றார் டெய்லர் என்ற சிந்தனையாளர்.

“குறிப்பிட்ட நாடு, இடம் போன்றவற்றைச் சேர்ந்த மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மதம், மொழி, கலைகள், சிந்தனை வெளிப்பாடு, வாழ்க்கையுடன் தொடர்பு

கொண்டு இருக்கும் பொருள்கள் போன்றவற்றின் மொத்தமே பண்பாடு" என்று க்ரியாவின் தற்காலத் தமிழகராதி கூறுகிறது. [6]

தமிழர்தம் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கோயில்கள், பாறை ஓவியங்கள் மூலமும், இலக்கியங்கள் வாயிலாகவும், பண்டைத் தமிழர் தம் அரசியல், சமூக, சமயப்பண்பாட்டை அறிய முடிகிறது.

"பிறரிடத்தில் அல்லது பலர் முன்னிலையில் ஒருவர் நடந்து கொள்ள வேண்டிய முறையாகிக் கலாச்சாரமும் (culture) குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் வாழும் மக்களின் சமூக வாழ்க்கைமுறை வளர்ச்சி மாற்றங்களாகிய நாகரிகமும் (civilization) பண்பாகப் பேசுதல் அல்லது நடந்து கொள்ளுதல் குறித்து ஏற்பட்டிருக்கும் நியதிகளும் நடை, உடை, பாவனை, உணவு போன்றவற்றில் நவீன காலத்துப் பழக்க வழக்கங்களுக்குப் பொருந்தி வருவதும் பண்பாடாகக் கருதப்படுகிறது" என்றும் க்ரியாவின் தமிழகராதி கூறுகிறது.

பண்பு என்ற சொல்லின் அடிப்படையில் உண்டாக்கப்பட்டது பண்பாடு. பண்படுதல் என்ற பொருள்படுவது. பண்பாடு என்பது பொதுவாக நாகரிகத்தில் அடங்கியது. காலப் போக்கில் மக்கள் தம் வளர்ச்சியின் மனநல ஆக்கமே பண்பாடாகப் பெயர் பெறுகிறது. மனநல ஆக்கத்திற்கு அறிவு மட்டும் இருந்தால் போதாது. ஒரு பக்கம் அறிவால் மதிநலம் பெறும்போது, மற்றொரு பக்கம், ஒவ்வொருவரின் மனமும் படிப்படியாக அன்பால் நிறைந்து ஒளிர வேண்டும். மனநலம் நன்கு அமைகின்ற நிலையில், வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டிய தடம் புலப்படும். அந்நிலையில் தூய்மை தவழ ஒவ்வொருவரின் சிந்தையும், சொல்லும், செயலும் சிறப்பாக அமைய வாய்ப்பு ஏற்படும். இத்தகைய மனநலம், இனநலத்துக்கும் நாட்டு நலத்துக்கும் வழி கோலும்.

எனவே, தனிதனிதன் மனத்தைப் பொறுத்தே நடத்தையும் அந்தநடத்தையைப் பொறுத்தே நாட்டுப் பண்பாட்டின் வளர்ச்சிக் கூறுகளும் அமைகின்றன என்பர். [8]

எனவே, பண்பாடு சிறக்க முதலில் தனிமனித ஒழுக்கம் அடிப்படைத் தேவையாகிறது. பண்பாடு என்பது பண்புடையோர் வாழும் சமுதாயத்தில்தான் இருக்க முடியும்.

அறத்திலும், நேர்மையிலும், அருளியலிலும் வளரும் பண்பட்ட நாகரிகத்திற்கு என்றும் மதிப்பும், உயர்வும் நிலைத்த தன்மையும் உண்டு.

காட்டு விலங்காக இருந்த மனிதனை வீட்டு விலங்காகச் செய்வதே நாகரிகத்தின் சாதனை என்கிறார் நீட்சே என்ற அறிஞர்.

மக்களுடைய புறத்தோற்ற வளர்ச்சிக் கூறுகளையும், செம்மையையும் குறிப்பது நாகரிகம். பண்பாடாவது மக்களுடைய அகவுணர்வின் செம்மையைக் குறிப்பது.

பண்பாடு என்பதை அகப்பண்பாடு, புறப்பண்பாடு என்று இரண்டு வகையாகப் பகுக்கலாம். உணவு, உடை உறையுள் முதலியவைகளின் அடிப்படையில் அமைவது புறப்பண்பாடு. இஃது ஒரு வகையில் இன்றைய நாகரிகத்தில் அடங்கும். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, மெய்யுணர்வு, தெய்வ நம்பிக்கை, அருள், புலனடக்கம், நன்றி, சீலம் முதலியவை அடிப்படையில் உணரப்படுவது அகப்பண்பாடு என்பர். [9]

பண்பாடுகளுக்கிடையில் ஏற்படும் வேறுபாடு புறத்தில் அதிகமாக இருந்தாலும், அன்பு, அருள், மனித நேயம் பேன்ற அகப்பண்புகளில் மிகுதியாக வேறுபாடு இருக்காது.

ஆதி மனிதன், ஒழுங்கு, கட்டுப்பாடு கொண்டு வாழத் தொடங்கியபோது நாகரிகம் தோன்றியது. நாகரிக வாழ்விலும் அகவாழ்வும், புறவாழ்வும் உள்ளன. மக்களின் அகவாழ்வு, புறவாழ்வு இரண்டிலும் பண்பாட்டுக் கூறுகள் அடங்கி உள்ளன. நாகரிகம் என்ற சொல்லுக்குக் குஜராத்தி மொழியில் நல்ல நடத்தை என்கிறார் மகாத்மா காந்தி.[10] உண்மையான நாகரிகத்தின் சின்னம், அறிவியல் வளர்ச்சியோ, மக்களின் நடை, உடை, பாவனைகளோ அல்ல. மக்களின் ஒழுக்கமும், நேர்மையுமே ஒரு பெரிய நாட்டின் நாகரிகத்தை எடுத்துக்காட்டக் கூடிய சின்னங்களாகும் என்கிறார் எமர்சன் என்ற அமெரிக்கச் சிந்தனையாளர்.

மனிதனுக்கு வயது அதிகமாக ஆக, பலவிதமான இன்ப துன்ப நிகழ்வுகளை வாழ்வில் அறிந்து உணர்ந்து செல்வதன் மூலம் அவன் பண்படுகிறான். பண்படும் வேகம் அவனது குடும்பம், சுற்றுப்புறம், சமுதாயம், வளரும் சூழல் இவற்றைப் பொறுத்து மந்தமாகவோ, வேகமாகவோ, அதிவேகமாகவோ அமையும். சான்றாக, ஒரு குடும்பத்தில் பிறந்த எல்லோரும் ஒரே வகையான பண்பினை உடையவராக இல்லாமையைக் கூறலாம்.

மனிதர்கள், பிறவியிலேயே தெய்வ ஆற்றல்களோடு பிறப்பதில்லை. தவறுவது மனித இயல்பு. ஆசை, பாசங்களுக்கு ஆட்பட்டுத் தவறும் இயல்புடையவனே மனிதன். ஆனால் அவற்றினின்றும் விடுபட்டுத் தெளிந்த சிந்தையுடன் செயல்பட்டுவெற்றி பெறும் ஆற்றல் உடையவன் மனிதன். வாய்ப்புக் கிடைத்தால் எல்லோரும் பண்பற்ற செயலைச் செய்யும் மனநிலையைப் பெற்று, நீதிக்குப் புறம்பானவற்றைச் செய்ய மனம் அலைபாயும். தீயொழுக்கச் செயலைச் செய்யும் புலனீர்ப்புக்கு

மனம் ஆளாகும். இதில் சிக்குவதும், விடுபடுவதும் அவரவரின் ஆன்ம உறுதியைப் பொறுத்தது.

தண்டனைக்குப் பயந்தும், பேர்கெட்டு விடும் என்ற பயத்தாலுமே பண்பற்ற செயலைச் செய்யத் தயங்குவர் சிலர். அமெரிக்க நகரம் ஒன்றில், திடீரென்று மின்தடை ஏற்பட, நேர்மையாகத் தோன்றிய பகட்டு உடையணிந்த பலரும் கடைகளில் புகுந்து கிடைத்ததையெல்லாம் சுருட்டி மிருகங்கள் போல் நடந்தார்கள் என்று சுவாமி பஜனானந்தர் கூறுகிறார்." இதை மாற்ற உள்ளம் பண்படவேண்டும்.

உள்ளம் பண்படல் என்பது ஒரே நாளில் நிகழாது. அதற்கு, ஒழுக்கத்தில் பயிற்சியும் பழக்கமும் வேண்டும். பழகப் பழக, அவ்வொழுக்கம் பண்பாகமாறும். இதற்கு உயர்ந்த குறிக்கோள் வாழ்வு வாழவேண்டும்.

அறத்தால் அன்பு விளையும். அன்பினால் அருள் விளையும். அருளால், நற்பண்பும் இறையணுக்கமும் கிடைக்கும்.

"பண்பாடு மனத்தை விரிவடையச்செய்வதும் ஆத்மாவை விளக்கஞ் செய்வதுமாக இருத்தலின் பண்பாட்டுக் கூறுகள் இவ்வுலகத்தில் பொருள் பற்றிய போக்கிலும் ஆன்மீகம் அல்லது அருளியல் பற்றிய நோக்கிலுமாக இருவகையில் ஆழ்ந்து சிந்திக்கப்படுகின்றன" என்கிறார் வைத்தியலிங்கம் அவர்கள். [12]

மதம் என்பது மக்களின் மன நலத்திற்காகவும் சமுதாய நலத்திற்காகவும், உலகமேம்பாட்டிற்காகவும், ஆன்ம நல மேம்பாட்டிற்காகவும் தோன்றிய ஒருவகைப் பண்பாட்டு அமைப்பு. நாகரிகத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும், மத நம்பிக்கையும் ஆன்ம நல விழிப்பும் பிடிப்பும் அடிப்படை. ஒரு நாகரிகத்தின்நடை அதன் மதப் புலப்பாட்டில் உள்ளது என்று ஆர்னால்டு டாயின்பி என்பவர் கூறுகிறார். [13]

உலகச் சமயங்கள் அனைத்தும் மக்களின் புற ஒழுக்கத்திற்கும், ஆன்ம நல ஒழுக்கத்திற்கும் வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. புற ஒழுக்கத்தைப் பேணி, அக ஒழுக்கத்தால் தன்னைப் பண்படுத்துவதற்கு உதவுவனவே சமய நெறிகள்.

மக்களை எல்லா நிலைகளிலும் எல்லா விதங்களிலும் பக்குவப்படுத்திச் சீர்ப்படுத்துவதே சமயம். இச்சமய உணர்வால், சோம்பலும் பொறாமையும், சபலமும், காழ்ப்பும் பிற தீமைகளும் தவிர்க்கப்படும். ஊக்கமும், கடமையும், தூய்மையும், நோன்பும் தியானமும் நிலை கொள்ளும். மேலும், அதனால் ஒழுக்க வாழ்வியல் அமையும் என்றும் சமய நெறியாளர்கள் நம்புகின்றனர்.

அந்த நம்பிக்கைக்கு உகந்த நெறியில், சமயப் பண்பாட்டில் மக்கள் மனம், மொழி, செயல் தூய்மையுடன் இயங்கினால் உலகம் வாழும் என்று செ. வைத்தியலிங்கம் அவர்கள் கூறுகிறார். [14]

எல்லா நிலைகளிலும் பக்குவப்படுத்தி, மனிதனின் உள்ளத்தை உயர்த்துவதே சமயம். உலகமும், மனிதனும் அழிவன என்பதை உறுதியாக உணர்த்தி, போட்டி, பொறாமை, வஞ்சகம், கயவு, சூது இவைகளுடன் அலைந்து திரிந்து அழியும் மக்களை அழியா நிலைக்கு அழைத்துச் செல்வது சமயம். துன்ப வாழ்வையும் இன்பமாக உணர வைப்பதோடு, மலர்தலும் கூம்பலுமற்ற வளர்ச்சி நிலைக்கும் வழி வகுப்பது சமயம். நல்வினை செய்ய அறிவுறுத்துவதோடு, அனைத்து உயிர்களின் மீதும் அன்பு செலுத்தக் கற்றுக் கொடுப்பது சமயம். சுயநலமின்றி மனதை விரிவடையச் செய்து எல்லாப் பொருள்களிலும், உயிர்களிலும் தன்னையும், இறைவனையும் காணும் பண்பாட்டு நிலைக்கு உயர்த்துவது சமயம். எனவே, சமயம், ஒரு மனிதனின் உள்ளொளி பெருகவும், உலகம் ஒழுங்குறவும் உறுதுணையாய் இருப்பது. இவற்றையெல்லாம் நோக்கும் பொழுது, அகப்பண்பாடு, புறப்பண்பாடு, சமயப் பண்பாடு போன்றவைகளைப் பற்றி ஓரளவு அறியலாம்.

1. நல்ல ஒழுக்கங்களால், மனதைப் பண்படுத்தித் தானும் பிறரும் அன்பும், அருளும், அமைதியும் நிறைந்து வாழ்வதே பண்பாடு.

2. பண்பாடு என்ற சொல், எல்லாத் துறைகளின் வளர்ச்சி வரலாறுகளாகிய நாகரிகங்களைக் குறிப்பதாக வழங்கி வந்து இன்று ஒழுக்கத்தையே சிறப்பாகக் குறிக்கிறது.

3. பண்பாடு, அகப் பண்பாடு, புறப்பண்பாடு என்று இருவகைப்படும். உணவு, உடை, உறையுள் போன்றவைகளின் அடிப்படையில் அமைவது புறப்பண்பாடு. அன்பு, அருள், வாய்மை, நீதி, ஒழுக்கம், சமய நம்பிக்கை போன்று உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு அமைவது அகப்பண்பாடு. பண்பாடு, மனதை விரிவடையச் செய்வது.

4. சமயப் பண்பாடு, அகப் பண்பாட்டுக்குள் அடங்கும் என்றாலும் இந்தியப்பண்பாடு, ஆன்மீகத்தில் கிளைத்து, வளர்ச்சியுற்று உலகோர் போற்றும் வகையில் அமைந்துள்ளது. மேலும், ஒழுக்கம் சார்ந்த தனி மனிதப் பண்புகளாகிய பிற அகப்பண்பாடுகளால் படிப்படியாகப் பண்படுத்தப்பட்டு மெய்யுணர்தலைப் பெறுவது சமயம் என்பதால் சமயப்பண்பாடு தனியிடம் பெறுகிறது.

5. பண்பாடு என்பது நிலவியல், சூழ்நிலை, நாடு, சமுதாயம், பழக்க வழக்கங்களுக்கேற்ப மாறுபடும். மேலும், சூழ்நிலையும், வளரும் முறையும் ஒரு மனிதனின் பண்பாட்டை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. மனம், மொழி, செயல் ஆகியவற்றில் தூய்மையுடன் இருக்க வேண்டியது சமயப்பண்பாடு.

6. பண்பட்ட உள்ளத்தில்தான் இறைவனைக் காணமுடியும் என்று இறையுணர்வோடு பண்பாடு இணைத்துக் கூறப்பட்டது.

7. உலகம் நிலை பெறுவதற்கும், காலந்தவறாது மழைபெய்யவும், இயற்கைச் சீற்றம் நிகழாமல் இருக்கவும், இயற்கை பொய்க்காமல் இருக்கவும், விளைச்சல் பெருகவும், கொடிய நோய்களும் தீவினைகளும் பெருகாமல் இருக்கவும், ஒழுக்கத்தோடு கூடிய பண்பாடுதான் காரணம் என்ற நம்பிக்கை உள்ளது. எனவேதான், பண்பாட்டுச் சிதைவிற்காக மக்கள் அஞ்சினர்.

8. வழிபாட்டிற்கும், பக்தி நெறிகளுக்கும் அடிப்படை, பண்பாடு என்ற நம்பிக்கை மக்களிடையே வேரூன்றி இருப்பதால் சமய நம்பிக்கையே பண்பாட்டை வளர்ப்பதாகவும் உள்ளது எனலாம்.

9. புறவாழ்க்கையின் ஒழுங்கையும், பண்படுதலையும் குறிப்பது நாகரிகம். அகவுணர்வின் செம்மை, ஒழுங்கு பண்படுதலைக் குறிப்பது பண்பாடு என்று பண்பாட்டை வரையறுக்கலாம்.

10. புறவாழ்க்கையில் பண்படுதல் புறப்பண்பாடு. அகவுணர்வுகளில் பண்படுதல் அகப்பண்பாடு.

11. புறப்பண்பாடுகளில் நாட்டுக்கு நாடு மாறுபாடு இருந்தாலும் அகப்பண்பாட்டில் மிகுதியான மாறுபாடு இருக்காது.

12. தனிமனிதனின் ஒழுக்கத்தைப் பொறுத்தே நாட்டுப் பண்பாடும் அமையும். எனவே, தனிமனித ஒழுக்கமே பண்பாட்டின் அடிப்படைத் தேவையாகிறது.

13. வயது ஏற ஏற வாழ்க்கையில் ஏற்படும் அனுபவமும் ஒருவனைப் படிப்படியாகப் பண்பட வைக்கிறது. எல்லோரும் ஒரேவகையான பக்குவத்தையும், மனநிலையையும், பண்பாட்டு உணர்வுகளையும் பெறுவதில்லை. மனிதனுக்கு மனிதன், பண்பாட்டின் புரிதல், வளர்ச்சி, மாறுதல், பண்படுதல் போன்றவற்றின் வேகம் மாறுபடும்.

14. பலர் முன்னிலையில் ஒருவன் எவ்வாறு நாகரிகத்துடனும், பண்பாட்டுடனும் நடந்து கொள்கிறானோ, அவ்வாறே அவன் தனியாக இருக்கும் பொழுதும் நடந்து கொள்ள வேண்டும். அதுவே உண்மையாக, உள்ளத்தால் பண்பட்ட ஒழுங்குமுறை. இதற்கு மனசாட்சியுடன் கூடியசுயகட்டுப்பாடு தேவை. இக் கட்டுப்பாடு, உறுதியும், வைராக்கியமும் பெற, சிலருக்கு அச்சத்தினடிப்படையில் அறிவுறுத்தவேண்டிய நிலை உள்ளது. இதனால், நிலையாமை குறித்த செய்திகள் சமய நூல்களிலும், அறநூல்களிலும் இன்றியமையா முதலிடத்தைப் பெறுகின்றன.

15. கண்ணெதிரே மனிதன் கண்டு உணரும் நிலையாமைகளை எடுத்துக்கூறி அறிவுறுத்தி நிலைத்த பொருளாகிய மெய்ப் பொருளையோ அல்லது உண்மையையோ விளக்கி அந்த மெய்ப்பொருளைச் சார்வதே வாழ்வின் முடிந்த முடிவு என்று வலியுறுத்தும் பொழுது சமய நம்பிக்கை ஏற்படுகிறது.

சமயத்தை நம்பாதவர்கள் உண்மையை அல்லது மனச் சாட்சியை நம்பி மதிக்கும் பொழுது அங்கு நெறியின் ஒழுங்குபடுத்தப்பட்ட பண்பாட்டு வாழ்க்கை நெறி உருவாகிறது.

16. பெரும்பாலானோர், சமயத்தின் அடிப்படையில் கடவுளை நம்பி, அதன் வாயிலாக உண்மைப் பொருளை உணரும் தகுதியையும் பக்குவத்தையும் பெற, சமய நூல்கள் வலியுறுத்தும் வழிபாட்டு நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்றவைகளையும், பிற மார்க்கங்கள், தத்துவ நிலைகள் போன்றவைகளையும் பின்பற்றுகின்றனர்.

17. அடிப்படையான கிரியை நெறிகளைக் கடந்தபின் யோகநிலையையும், அதனைத் தொடர்ந்து முத்தி நிலையினையும் பெறுவர். அப்பொழுது கிரியை முதலான அடிப்படை நிலைகள், கடந்து வந்த நிலைகளாகித் தேவையற்றவையாகின்றன.

18. சமயவுணர்வால் வளர்ந்து பண்பட்டதே சமயப் பண்பாடு. இது ஆன்ம நலத்துக்கு மட்டுமன்றிப் புற வாழ்க்கையின் பண்பட்ட ஒழுங்குமுறை நாகரிகத்துக்கும் வழிகாட்டுவதாகவே உள்ளது.

19. மனிதன் தன் பொறிபுலன்களைச் செம்மையும், தூய்மையும், கட்டுப்பாடும் உடையவைகளாக்கி, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை போன்ற நற்பண்புகளோடு கூடிய வாழ்க்கை வாழக் கற்றுக் கொடுத்து உயர்த்துவதே சமயத்தின்

நோக்கம். இவற்றிற்கு மாறுபட்டவை உண்மைச் சமயமல்ல. மனம், மொழி மெய்களால் பண்பட்ட வாழ்வை வலியுறுத்துவதே உண்மைச் சமயம்.

இத்தகு தூய புற, அகவாழ்வு வாழ்ந்து, மெய்ப் பொருளை உணர்ந்து, பரம் பொருளோடு கலந்து அசைவிலா ஆனந்தம் பெற வலியுறுத்தி வழிகாட்டும் புறப்பண்பாட்டு, அகப்பண்பாட்டு, சமயப் பண்பாட்டு நூல் திருமந்திரம் எனலாம்.

புறமும் அகமும் பண்படுகின்ற பொழுது இரண்டும் ஒன்றிய சமயப் பண்பாடு முகிழ்க்கின்றது. புறப்பண்பாடு, அகப்பண்பாடு ஆகிய இரண்டினாலும் வளர்த்துப் பாதுகாக்கப்பட்டுக் காயாகிக் கனிந்து இன்பத்தில் திளைக்கச்செய்வதே சமயப்பண்பாடு.

இத்தகு சமயப் பண்பாட்டை விளக்க, அடிப்படையான அகப்புறப் பண்பாடுகளை முதலில் வலியுறுத்திப் படிப்படியாகச் சமயப் பண்பாட்டை உணர வைக்கும் நிலையில் திருமந்திரம் அமைக்கப் பட்டுள்ளது.

அகவுணர்வுகளும், சிந்தனைகளும், புறச் செயல்களும், வாழ்வியல் முறைகளும் பக்குவப்பட்டுப் பண்படுகின்ற நிலையில் சிந்தித்தலுக்குப்பின் உண்டாகும் தெளிதல் ஏற்படும். இந்தத் தெளிந்த நிலையில்தான் ஆழ்பொருள்களையும், தத்துவ நுட்பங்களையும் உணர்ந்து தெளிந்து, நினைக்குந் தோறும் சிந்திக்குந் தோறும் அனைத்தெலும்பும் உள்நெக ஆனந்ததேன் சொரியும் திகட்டா இன்பத்தில் திளைக்க முடியும்.

இதனால், பக்குவப்பட்டவர் உணர்ந்து கடைப்பிடிக்கும் நிலையில் மறைபொருளாக, ஆழ்பொருளாக, உட்பொருளாகத் தத்துவப் பொருள்கள் புதைந்துள்ள பாடல்கள் பல திருமந்திரத்தில் உள. திருமூலர், அகம் சார்ந்த பண்பாடாகிய தனிமனித ஒழுக்கங்களை முதல் தந்திரத்திலும், பொறையுடைமை, பெரியாரைத்துணைக் கோடலை இரண்டாம் தந்திரத்திலும் கூறியுள்ளார்.

மூன்றாம் தந்திரத்தில் இயமம், நியமம் என்ற இரண்டு அறங்களைஅட்டாங்க யோகத்தின் முதலில் கூறியுள்ளார்.

கூடாஒழுக்கம், கேடுகண்டிரங்கல் இரண்டினையும் ஏழாந் தந்திரத்திலும், புறங்கூறாமை, வாய்மை என்பனவற்றை எட்டாந் தந்திரத்திலும் கூறியுள்ளார்.

ஊழ் பற்றி ஒன்பதாம் தந்திரத்தில் கூறியுள்ளார். இவற்றுள், பெரும்பான்மையான தனிமனித அகப் பண்பாடுகள், முதல் தந்திரத்தில் தான் கூறப்பட்டுள்ளன.

இவ்வொழுக்கங்கள் அனைத்தும் கடைப்பிடிக்கப்பட்டு, அப்படியே அனைத்தும் இறையியலுக்கு மடை மாற்றம் செய்யப்பட வேண்டும். எனவே முதலில் உலகியலைக் கூறிப் பின் இறையியலைக் கூறுகிறார் திருமூலர். திருமந்திரத்தில் அகம், புறம் சார்ந்த பண்பாடுகளை விடமிக அதிகமாகச் சமயம் சார்ந்த பண்பாடுகளே விளக்கப்பட்டுள்ளன.

## குறிப்புகள்


1. கலித்தொகை, 111.
2. திருக்குறள், 996.
3. புறநானூறு, 182.
4. மேலது, பாடல் 9.
5. வைத்தியலிங்கன், செ. 'தமிழ்ப்பண்பாட்டு வரலாறு, முதல் பாகம், ப.5. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
6. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, ப.887.
7. மேலது, ப.810.
8. வைத்தியலிங்கன், செ. 'தமிழ்ப்பண்பாட்டு வரலாறு-1', ப.1.
9. வைத்தியலிங்கன், செ. 'தமிழ்ப்பண்பாட்டு வரலாறு-1, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ப.11, 1996.
10. மேலது, ப.8.
11. சுவாமி பஜனானந்தர், 'விவேகானந்தரின் நல்வழிச் சிந்தனைகள்', ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, ப.3.
12. வைத்தியலிங்கம், செ. 'தமிழ்ப் பண்பாட்டு வரலாறு-1, ப.3.
13. மேலது, ப.3
14. வைத்தியலிங்கன், செ. 'தமிழ்ப்பண்பாட்டு வரலாறு-2, மேலது, ப.4.

# 3. அகம் சார்ந்த பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்

உணவு, உடை, உறையுள், புறவாழ்க்கை முறைகள், சமுதாய அமைப்பு, உலகியல் சார்ந்த பழக்கவழக்கங்கள் போன்ற மனிதனின் உடல், சுற்றுப்புறம், சமுதாயம் தொடர்பான நெறிமுறைகளையும், மரபுகளையும் புறப் பண்பாடாகக் கொண்டு ஆராயலாம். மனிதனின் அகத்தின்கண் எழும் பண்புகளான அன்பு, அருள், இரக்கம், கருணை, பரிவு, பாசம், நேசம், காதல் போன்ற அகவுணர்வின் அடிப்படையில் எழும் அறம், அறம்சார்ந்த நீதி, நேர்மை, ஒழுக்கம் போன்ற தனி மனித ஆன்ம ஒழுக்கங்கள் அகப் பண்பாடுகள். 'திருமந்திரம்' என்ற நூல், சமயம் சார்ந்த தோத்திரம் மட்டுமல்லாது சாத்திரமாகவும் அமைந்துள்ள நூல். எனவே சமயம் சார்ந்த பண்பாடும் இந்நூலினுள் எவ்வாறு இழையோடி உள்ளது என்பதைத் தனியாக ஆராய்வதும் இன்றியமையாததாக உள்ளது. சமயம் சார்ந்த பண்பாட்டினையும், அகம் சார்ந்த சமயப்பண்பாடு, புறம் சார்ந்த சமயப் பண்பாடு என்ற இருநிலைகளில் பகுத்து ஆராயலாம்.

சமய ஒழுக்கங்களுள் உள்ளத்தால் உணர்ந்து பக்குவப்படத்தக்க சமய நெறிகளை அகம் சார்ந்த சமயப் பண்பாடாகவும், பதிபசு பாசவிளக்கம், முத்தி அடைவதற்கான நெறிமுறைகள், சமயம் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் போன்றவைகளைப் புறம் சார்ந்த சமயப் பண்பாடாகவும் கொள்ளலாம்.

இவைகளைக் கொண்டு இக்காலச் சமுதாயத்திற்கு ஏற்ற நெறிமுறைகள் திருமந்திரத்தில் உள்ளனவா என்றும் ஆராயலாம்.

இந்நிலையில், திருமந்திரம் முழுமையும் விரவிக் கிடக்கும் செய்திகளுள், தனிமனித ஒழுக்கம் சார்ந்த பண்பாட்டுச் செய்திகளே அகம் சார்ந்த பண்பாட்டுச் செய்திகளாகக் கொள்ளப்படுகின்றன. அகம் சார்ந்த பண்பாடு அடிப்படையில் பகுத்தாராய்ந்தால்,

யாக்கை, செல்வம், இளமை, உயிர் போன்றவைகளின் நிலையாமை, கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன் மனை நயவாமை, மகளிர் இழிவு, நல்குரவு, அறஞ்செய்வான் திறம், அறஞ்செய்யான்திறம், அன்புடைமை, கள்ளுண்ணாமை,

பொறையுடைமை, இயமம், நியமம் என்று சொல்லப்படுகின்ற நல்லனவற்றையே செய்தல், தீயன செய்யாது ஒழுகுதல், கூடா ஒழுக்கம், புறங்கூறாமை, வாய்மை, அவா அறுத்தல், ஊழ் போன்ற தனிமனித அக ஒழுக்கங்கள் திருமந்திரத்தில் வலியுறுத்தப்படுகின்றன என்பதை அறியலாம்.

அகவுணர்வுகள், ஒரு மனிதனின் மன உணர்வுகளையும், சிறந்த சிந்தனைகளையும் ஒழுங்கு செய்து பண்படுத்திச் செம்மையாக்கினால் அதனைச் சிறந்த அகப்பண்பாடு எனலாம்.

அகப்பண்பாடே சமுதாயத்தில் மனிதன் அமைதி, இன்பம் நல்லொழுக்கங்களுடன், பொருள் பொதிந்த தூய வாழ்வு வாழ இன்றியமையாத் தேவையாக உள்ளது. அத்துடன், மனிதனின் மனம் இறையருளைப் பெறவும், இறை நெறியில் செம்மையாகச் செல்லவும் அகப்பண்பாடே அடிப்படையாக அமைகிறது. பண்பில்லா இடத்தில் உண்மையான பக்தி இருப்பது கடினம். எனவே, வாழ்வியலும், இறையியலும், அகப்பண்பாடாகிய தனிமனித ஒழுக்கத்தைப் பொறுத்தே பெரும்பாலும் சிறப்புற முடியும். அதனால்தான் செம்மையான வாழ்வியலை வலியுறுத்தும் நூல்களும், ஆன்ம இன்பத்திற்கான வழி பாட்டினை வலியுறுத்தும் நூல்களும் முதலில் அறிவுறுத்துவது அகம் சார்ந்த பண்பாடாகிய தனி மனித ஒழுக்கங்களையே.

திருமூலரும், திருவள்ளுவரும் முதலில் நிலையாமையைக் கூறியதை அடுத்தே அறத்தை வலியுறுத்துகின்றனர். எல்லாச் சீவர்களும் ஞானம் பெற முதலில் தகுதி பெற வேண்டும். தகுதி பெறுவதற்குத் தான் யார் என்பதை உணர வேண்டும். தான் யார் என்பதை உணர, உடல் வேறு உயிர் வேறு என்ற அறிவைப் பெற வேண்டும். இவ்வுலகமும், இவ்வுலகில் உள்ள அனைத்துப் பொருள்களும் ஆக்கப்பட்டவை. தோற்றம் உண்டேல் கண்டிப்பாக மரணம் உண்டு. அழியா மெய்ப்பொருள் இறைவனே. ஆன்மாவும் அழியாதது. நிலைத்த பொருளை அடைய பண்பட்ட தூய உள்ளம் தேவை. கிடைத்தற்கரிய மானுடப் பிறவியை, உண்டு, உடுத்து, உறங்கி வீழ்நாள்களாகக் கழித்து, மண்ணோடு மண்ணாக மட்கி அழியும் விலங்கு வாழ்க்கை வாழ்ந்தால், அதுபொருளற்ற, குறிக்கோளற்ற வாழ்க்கையாகி விடும். பொருளுள்ள, தனக்கும் பிறருக்கும் பயன்படும் உயர்ந்த வாழ்க்கை வாழ்தலே மனித வாழ்க்கை. இந்த நிலையை அடைய அடிப்படையானவை, அன்பு, அருள், நண்பு என்பனவைகளோடு கூடிய அகப் பண்புகளே. எனவே, இத்தகு நிலையைப் படிப்படியாக அடைய, அகப்பண்பாடுகளைப் பெற உள்ளத்தால் பயிற்சி பெற வேண்டும். இதற்கு முதலில் சாத்வீகக் குணம் பெற வேண்டும்.

இயற்கைச்சூழல், காலம், மக்களின் மனநிலை, மரபு இவற்றிற்கேற்ப ஒவ்வொரு நாட்டிற்கும் பண்பாட்டுக் கூறுகள் வேறுபடலாம். ஆனால், உணர்வு சார்ந்த அகப்பண்பாடுகள் பெரிதும் மாறுவதில்லை. அன்பு, மனித நேயம், ஒழுக்கம், விருந்தோம்பல் போன்றவை எல்லா நாடுகளிலும் அடிப்படை அறங்களாக உள்ளன.

அறநெறிகளின்படி வாழ்தலாகிய பண்பாட்டினைப்பெறப் புலன்களைத்தன் வசமாக ஆளும் புலனடக்கம் இன்றியமையாதது. புலன்களைஅறிவு தலைமை தாங்கி ஆள வேண்டும்.

உடல் இன்பத்திற்காக அலையும் நிலையில் மனதை உடல் போக்கில் அலைய விடக்கூடாது. மனம், மனிதனை அடிமையாக்கித் தன் போக்கில் அலைய விடக் கூடாது. மனம், மனிதனை அடிமையாக்கித் தன்போக்கில் ஆட்டி வைக்கவிடக் கூடாது.

**சென்ற இடத்தால் செலவிடாதுதீது ஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு** [1]

என்கிறார் திருவள்ளுவர்.

மனம்போன போக்கெல்லாம் போகக்கூடாது. அறிவால் ஆட்சி செலுத்த வேண்டும். நல்லன, தீயனவற்றை அறிவைக் கொண்டு தெளிந்தபின், அறிவின் கட்டளைப்படி மனம் இயங்க வேண்டும். உடல், ஒத்துழைக்க வேண்டும். புலன்கள்மனிதனுக்குக் குற்றேவல் செய்ய வேண்டும். இத் தெளிவு பெற்றவர்கள், பிறப்பால் உயர்வு தாழ்வு கருதமாட்டார்கள். புகழுக்காகவும், பதவிக்காகவும், பொருளுக்காகவும் அலைய மாட்டார்கள். பொன், பெருள் போக இன்பங்கள் எல்லாம், உடம்பு, மனம் என்ற கருவிகளை ஒட்டியவைகளே. இவை, உயிர் என்ற ஆன்மாவுக்கு இல்லை. ஆன்ம நிலையில் ஒருமைப்பாடு ஒன்றே மனிதன் நெஞ்சில் நிற்கும். இதனால், எல்லா உயிர்களும் இறைவன் இருப்பிடமாக ஒப்புரவுக் காட்சி நல்கும். அன்பால் வையம் தளிர்க்கும்.

**நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை**
**நோக்க நோக்கக் களியாட்டம்**

என்று பாரதியார் உணர்ந்த நிலையைப் பெறலாம்.

உறவுகளும், உணர்வுகளும், பொருள்களின் தொடர்பும், உடம்பின் தன்மையும் நாளுக்கு நாள் மாறுமே தவிர நிலைத்துநிற்பதில்லை. நாளாக ஆக மாறிவருவன ஒருநாள் மறைந்தே விடும். இதனால்தான் சான்றோர்கள் நிலையாமை பற்றி அச்ச மூட்டும் வகையில் அறிவுறுத்தினர். உடலும், உலகமும்

நிலையற்றவை. நிலைத்த செயலைச் செய்யுங்கள். அன்பு, அறம் இரண்டின் அடிப்படையில் நிலைத்த பண்பாட்டுடன் கூடிய வாழ்வு வாழ்வதே பொருளுள்ள வாழ்வு என்று வலியுறுத்தினர். இதனால் உலகம் முழுவதும் உள்ள உயிர்கள் கடவுளின் குடும்பமாகக் காட்சி தரும்.

நிலையாமையை உணர்த்துவது வாழ்க்கையை வெறுப்பதற்கல்ல. நிலைபேறானவற்றை உணரவே. இதை உணர்த்தவே திருமூலர், முதலில் நிலையாமையை விளக்கி அறிவுறுத்துகிறார் தம் திருமந்திரத்தில். முதலில், மனம் அறநெறியை நம்ப வேண்டும். பண்பட்ட வாழ்வால் அமைதி கிட்டும். ஒருவரோடு ஒருவர் உள்ளம் கலந்து பழக முடியும். அன்பும், அறமும் முத்திக்குரிய வழிமட்டுமல்ல. உலகில் வாழ்வாங்கு வாழவும்மிகவும் தேவை. எனவே, பண்பாடு மிக மிகத் தேவை என்பதை உணர வேண்டும்.

ஆசைகளையும், அல்லல்களையும் பெருக்கா வாழ்வு வேண்டும். புலன்களின் மயக்கத்திற்கு ஆட்பட்டுப் புலனின்ப நுகர்ச்சி மட்டுமே நோக்காகக் கெண்டு அலைந்தால் துன்பமே இறுதியில் கிட்டும்.

இதற்கு முதலில், அறநெறியோடு கூடிய பண்பட்ட வாழ்வின் சிறப்பினையும், நிலைபேற்றினையும், பிறவற்றின் நிலையாமையையும் உணர வேண்டும். பண்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கான மனவலிமையைப்பெற முயற்சி செய்ய வேண்டும். தீயவைகளைச் செய்ய மனவலிமை தேவையே இல்லை. ஆனால், தீயன செய்யாமல் இருக்கவே மனவலிமை மிக மிகத் தேவை. அறிவைக் கொண்டு மனதைத் திருத்தினால் முழுவெற்றி பெறலாம்.

எந்தச் சூழ்நிலையிலும், எப்படிப்பட்ட உடம்பினுள்ளும் இருந்தாலும், ஒருவர் விடாமல் முயன்றால், விருப்பப்படி அறிவைக் கொண்டு மனதை நேர்மையான வழியில் செலுத்த முடியும். தன்னலமற்ற தியாகத்தோடு, அன்பு நிரம்பிய மனத்தையும் கண்டபடி அலையாத அமைதி நிரம்பிய மனத்தையும், சோம்பலை நீக்கி விடா முயற்சியில் நிலைபேறு கொண்ட மனத்தையும் பெற்று இம்மையிலும், மறுமையிலும் நிலைத்த அசைவிலா ஆனந்தத்தைப் பெற வேண்டுமானால், அறநெறிகளை நம்பி, அவைகளைப் பின்பற்றி வாழும் பண்பட்ட வாழ்வியலை வகுத்துக் கொள்ள படிப்படியாகப் பயில வேண்டும். பயிற்சியே நாளடைவில் பழக்கமாகும். பழக்கமே நாளடைவில் ஒருவனின் பண்பாகவே மாறிவிடும்.

இத்தகு பண்பட்ட வாழ்வு, உலகியல் வாழ்விற்கும், இறையியல் வாழ்விற்கும் இன்றியமையாதது. உலகியலில், ஒருவன் திருந்திய ஒழுக்கங்களோடு கூடிய அறநெறிகளைப் பின்பற்றிப் பண்புடன் வாழும் பொழுது நாளடைவில் அந்நிலை இறையியலுக்கு மடை மாற்றம் செய்யப்படும். இத்தகு பண்பட்ட நிலையைத்தான் திருமூலர் அறிவுறுத்துகின்றார்.

அறிந்ததைக் கொண்டு அறியாத உயர்நிலைக்கு அழைத்துச் செல்லும் பயிற்சி நிலையே பண்பட்ட வாழ்வியல். இதனைவலியுறுத்தி நெறிப்படுத்தும் நிறை ஞானியர், பார்வை விலங்குகளாக இருந்து பண்படுத்திக் குறிக்கோள் வாழ்வு வாழ, பண்பாட்டு நெறிகளை, யாம் பெற்ற இன்பம் இவ்வுலகும் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் அருங்கொடைகளாக மனித குலத்துக்கு அளித்து உள்ளார்கள். அத்தகு நிறைஞானியே திருமூலர்.

திருமூலர், திருமந்திரத்தில் இறை உண்மையைக் கூறி, நிலையாமையைக் கூறி, அறநெறிகளை வகுத்து, அவற்றின் வழியாகச் சிறந்த வாழ்வியலைப் பெற்று அதன் மடைமாற்றமாக ஞான வாழ்வு பெறலாம் என்று கூறியுள்ளார். மேலும், ஞானவாழ்வு பெற்றோர் நிலை எவ்வாறு இருக்கும் என்பதையும் திருமந்திரத்தில் படிப்படியான வளர்ச்சி நிலைகளில் கூறிச்செல்கிறார்.

மக்களை எல்லா நிலைகளிலும், எல்லா விதங்களிலும் பக்குவப்படுத்திச் சீர்ப்படுத்துவதே சமயம். இதனால் சோம்பல், பொறாமை, சபலம், காழ்ப்பு, பிற தீமைகள்தவிர்க்கப்படும். ஊக்கமும், கடமையும், தியானமும் நிலை கொள்ளும். ஒழுக்க வாழ்வியல் அமையும்.

இழுக்கிலா அறங்கள் என்று பல அறங்களைக் குறிப்பிடும் சிவஞான சித்தியார்,

**ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்**
**உபசாரம் உறவு சீலம்**
**வழுக்கிலாத் தவம் தானங்கள்**
**வந்தித்தல் வணங்கல் வாய்மை**
**அழுக்கிலாத துறவு அடக்கம்**
**அறிவொடு அர்ச்சித்தல் ஆதி**
**இழுக்கிலா அறங்கள் ஆனால்**
**இரங்குவான் பணி அறங்கள்** [2]

என்று கூறுகின்றது. இதில் கூறப்பட்டுள்ள அனைத்து அறங்களும் திருமூலர் வலியுறுத்தியவையே. மேலும் திருமூலரும், திருவள்ளுவரும் ஒன்றாக வலியுறுத்தும் ஆன்ம ஒழுக்கம் அடிப்படையிலான அறங்கள் பலஉள. அவற்றை, இருவரும்

கூறியுள்ள ஒரே தலைப்புகளால் ஆன செய்திகளால் அறியலாம். அவை,

| | | |
|---|---|---|
| அவாஅறுத்தல் | கடவுள்வாழ்த்து | தவம் |
| அருளுடைமை | கல்வி | துறவு |
| அன்புடைமை | கல்லாமை | தானச்சிறப்பு |
| ஊழ் | கள்ளுண்ணாமை | நடுவு நிலைமை |
| | கூடா ஒழுக்கம் | நிலையாமை |
| | கொல்லாமை | |
| | கேள்வி | |
| | பிறன் மனை நயவாமை | |
| | புலால் மறுத்தல் | |
| | புறங்கூறாமை | |
| | பெரியாரைத் துணைக்கோடல் | |
| | பொறையுடைமை | |
| | வாய்மை | |
| | வான் சிறப்பு | |

எனும் அறங்கள்.

தனிமனிதனின் வாழ்வியலுக்கும், இறையியலுக்கும் இன்றியமையா ஆன்ம-ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்தும் அறநூல் திருக்குறள் என்பதால், திருமந்திரம் வலியுறுத்தும் அறங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு ஒரே தலைப்புகளில் இருவரும் கூறியுள்ளவை அனைத்துமே அகம் சார்ந்த பண்பாட்டைத் தழுவிய தனிமனித ஒழுக்கங்களே என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து வாழ்வியலுக்கும், இறையியலுக்கும் அடிப்படையாக, இன்றியமையாதவைகளாக இருப்பவை, அறப்பண்போடு கூடிய தனிமனித ஒழுக்கங்களே என்பது தெளிவாகப் புலனாகின்றது. திருமூலர் குறிப்பிடும் அறவொழுக்கங்களோடு கூடிய அகப்பண்புகளை ஆழ்ந்து விரிவாக நோக்கினால் அவற்றின் இன்றியமையமையை உணரலாம். திருமூலர், முதன்முதலாக உணர்த்தும் அகம் சார்ந்த அறப் பண்பு, நிலையாமை என்பது.

*நிலையாமை*

நிலையாமையைப் பற்றிய அச்சத்தையும், உள்ள உணர்வையும் உணர்த்தியபின் நிலைத்த அறநெறிகளை உணர்த்தவே முதலில் நிலையாமையைக் கூறுகிறார் திருமூலர்.

முதல் தந்திரத்தில் இரண்டாவது தலைப்பாக, யாக்கை நிலையாமையினையும், மூன்றாவது தலைப்பாகச் செல்வம் நிலையாமையினையும், நான்காவது தலைப்பாக இளமை நிலையாமையினையும், ஐந்தாவது தலைப்பாக உயிர் நிலையாமையினையும் கூறுகிறார் திருமூலர். திருவள்ளுவர், அறத்துப்பாலில்துறவறவியலில் 34ஆவது அதிகாரமாக நிலையாமை என்ற ஒரு அதிகாரத்தை மட்டும் கூறியுள்ளார். செல்வம், உயிர், உடல் நிலையாமைகளை அதற்குள்ளேயே கூறியுள்ளார்.

**உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு [3]**

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல் [4]**

**நாள் என ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும்**
**வாள் அது உணர்வார்ப் பெறின் [5]**

என்று கூறுகிறார் திருவள்ளுவர். திருமூலர், மாயையாகிய மண்ணால் செய்யப்பட்ட உடம்பு, ஒளியுடலாக மாற்றப் பெற்றால், நீண்ட நாள் நிலைபெறும். இல்லையெனில், பச்சைமண்பாண்டம் மழையினால் மண்ணாகக் கரைவது போல் அழிந்துவிடும். உயிர் சென்றபின் மக்களும், மனைவியும் உடன்வர மாட்டார்கள். செய்தஅறங்களும், வினைகளும் மட்டுமே உடன்வரும் என்கின்றார். மேலும், நொடிப் பொழுதில் உயிர்நீங்கும். சுற்றத்தவரும் நொடிப்பொழுதில் ஆளையே மறந்துவிடுவர் என்பதை,

**ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்**
**சூரையங்காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே [6]**

என்று குறிப்பிடுகிறார் திருமூலர்.

பத்து மாதங்கள் கருவிலிருந்து வளர்ந்து வெளிவந்த உடம்பு 12 ஆண்டுகளில் உலக இன்ப நுகர்வுக்குரிய பக்குவம் பெறும்.பின் 70 ஆண்டுகளில் மடியும் நிலையைப் பெறும்.நிலைத்ததல்ல உடம்பு என்பதை,

**முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்**
**இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்**
**பட்டது பார்மணம் பன்னிரண்டாண்டினில்**
**கெட்டது எழுபதில் கேடறியீரே [7]**

என்று கூறி விளக்கும் திருமூலர், உயிர் உடலை விட்டுச் சென்றபின் மீண்டும் உடம்பினுள் புகமுடியாது. அது சுடுகாட்டில் காக்கைக்குப் பலியாகும் என்று அஞ்சும் வகையில் எடுத்துரைக்கின்றார்.

கூத்தனாகிய உயிர்போனபின் இவ்வுடம்பாகிய கூட்டை, யார் பாராட்டினால் என்ன? பழித்தால் என்ன? உணர்வு இருக்காது என்பதை,

**காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்**
**பால்துளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்**
**தோல்பையுள் நின்று தொழிலறச் செய்து ஊட்டும்**
**கூத்தன் புறப்பட்டுப்போன இக்கூட்டையே** [8]

என்று குறிப்பிடுகின்றார்.

அரச போகத்தில் வாழ்ந்தாலும் இறுதியில் சுடுகாட்டிற்குத்தான் செல்ல வேண்டும். ஒரு நொடியில் எதிர்பாரா நிலையில் உடம்பைவிட்டு உயிர் நீங்கக் கூடியது என்பதை,

**அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக் கொடியா ரொடு மந்தணங் கொண்டார்**
**இடப்பக்கமே இறை நொந்தது என்றார்**
**கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே** [9]

என்று விளக்குகிறார் திருமூலர்.

உயிர் நீங்கிய உடம்பு வரையோட்டுக்கும் ஆகாது என்பதை,

**வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றுங்**
**குளத்தின் மண் கொண்டு குயவன் வனைந்தான்**
**குடமுடைந்தால் அவை ஓடென்று வைப்பர்**
**உடலுடைந்தால் இறைப் போதும் வையாரே** [10]

என்று கூறுகிறார்.

எனவே, யாக்கை நிலையாமையை அறிந்தும், உலக மயக்கம் நீங்காமல் உடம்பினுள் உள்ள உயிருள் கலந்த ஒளியாம் இறைவனை உணர்ந்து அருளுடைய செயல்கள் செய்து தூல உடலை ஒளியாக மாற்றல் வேண்டும். உயிர் நீங்கினால் உடம்பு பயனற்றது. சுழுமுனையில், பிராணனைச் செலுத்தி நிலைக்கச் செய்து, அழியும் உடம்பை வைத்து, அழியா இன்பம் பெற அறிவுறுத்துகிறார் திருமூலர்.

எல்லோரும் உடம்பின் இழிவையும், நிலையாமையினையும் கூறி வெறுத்து ஒதுக்குவர். நாலடியார் போன்ற நீதி நூல்களில் உடம்பின் இழிவு பேசப்படுகிறது. திருமூலர்தான், முதன் முதலாக

அழியும் உடம்பை வைத்து ஒளிபெற உடம்பை உரிய வகையில் இயக்குமாறு கூறுகிறார்.

புறச்செல்வம் அழியும். நிலையில்லாதது. தீமை செய்யும். பயன்படாமல் போகும். காலத்தால் குறையும். கூட்டிலிருந்து விரட்டப்பட்டுத் தேனீ, தேனை இழப்பதுபோல் உயிரானது பிரிந்ததும் உடல் புறச் செல்வத்தை இழக்கும். செல்வத்தைக் கவர்பவன், செல்வம் உடையவனையும் அழிப்பான். ஆற்று வெள்ளம் நிலையில்லாததுபோல் செல்வமும் நிலை இல்லாதது. சந்திரன் தேய்ந்துஅழிவது போல் செல்வமும் அழியும். மனிதனோடு பொருந்திவரும் நிழலே அவனுக்கு உதவாது. அவ்வாறிருக்க, அவனைச் சாராது வேறாக இருக்கும் பொருட் செல்வம் எப்பொழுதும் பயன்படாமையோடு தீமையும் செய்யும் என்பதை உணர வேண்டும். எனவே, ஆற்றில் கவிழும் கலம் போன்று நிலையில்லாத செல்வத்தை விட்டு உற்ற இடத்து உறுதுணையாம் இறைவனாம் செல்வத்தைப் பற்றுமாறு வேண்டுகிறார். இளமையும் நிலைத்ததல்ல. இளங்கன்று முதுமை அடைவது போலும், சூரியன் மறைவது போலும் நிலையாமை உடையது இளமை. முதுமை, காஞ்சிரங்காய் போன்று கசப்பானது. பாலன், இளையன், முதியவன் என்று பருவ காலங்கள் மாறி அழியும். உறங்குவதும் விழிப்பதும் நித்தம் நிகழும் பிறப்பு இறப்பு. இவ்வாறு வாழ்நாள் குறைந்து கொண்டேவர சூரியனும் சந்திரனும் வாழ்நாளை உள்ளும் புறமும் நின்று அளந்து வருகிறார்கள். ஐந்து இந்திரியங்களும் பையில் போட்ட ஊசி போன்று உடம்பில் இருந்து, பின் காகம் பறந்து சென்று இழிந்தனவற்றைப் பற்றி வருவது போல், வெளியே சுற்றித் திரிந்து தீயனவற்றைப்பற்றி அழிகின்றன. இதை உணர்ந்து இந்திரியே வயப்படாமல் மேலாம் ஒளி பெறவேண்டும் என்பதை,

**பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்**
**பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்**
**பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டால்**
**பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே "**

என்று விளக்குகிறார் திருமூலர்.

மேலும், உயிர் உடம்பில் நிலையுடன் நிற்பதல்ல. பட்டாடை கிழியும். தளிரும் மலரும் சருகாகும். இவைபோல், உயிர் உடம்பைப் பிரியும். உடம்பினுள் உயிர் இருப்பதைத் தீ நெறிச் செல்பவர் அறிய முடியாது. உடம்பினுள் உயிரும், இறைவனும் இருக்கின்றனர். ஆனால் அதனை உயிர் அறிவதில்லை. மாயையாகிய மண்ணிலிருந்து வந்த உடம்பு மீண்டும் மாயையில் ஒடுங்கும். எனவே உயிர் நிலையாமையை அறிந்து அறவாழ்வு வாழ வேண்டும்.

**அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்**
**வெவ்வியனாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்**
**செவ்வியனாகிச் சிறந்துண்ணும்போது ஒரு**
**தவ்விக் கொடு உண்மின் தலைப்பட்ட போதே** [12]

என்று கூறிப் பிறர் பொருளைக் கவர எண்ணாதீர். செம்மையுடைய வாழ்வு வாழுங்கள். உண்ணும்போது வருவோர்க்கு ஓர் அகப்பை உணவு கொடுத்துப்பின் உண்ணுங்கள் என்பதை வலியுறுத்துகிறார் திருமூலர்.

### கொல்லாமை

பிறஉயிர்களைக் கொல்லக் கூடாது. இறைவனின் பூசைக்குஉரிய மலரே கொல்லாமை என்ற மலர். சிவகுருபூசைக்கும் சிறப்பான மலர் கொல்லாமை. கொலை செய்வோர் நரகத்தில் வீழ்வர் என்று முதல் தந்திரத்தில் ஆறாவது தலைப்பாகிய கொல்லாமையில் இரண்டு பாடல்களைக் (மந்திரங்களை) கூறுகின்றார் திருமூலர்.

கொல், குத்துஎன்று சினந்து கூறிக் கொலை செய்வோர் நரகத்தில் வீழ்த்தப்படுவர் என்பதை,

**கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**
**வல்லடிக்காரர் வலிக்கயிற்றால் கட்டிச்**
**செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை**
**நிலவிடும் என்று நிறுத்துவர் தாமே** [13]

என்றுகூறி விளக்குகிறார் திருமூலர்.

கொல்லாமை என்பது ஒரு தவம். அனைத்துப் பாவச் செயல்களுக்குரிய பயன்களையும் ஒரு சேரக் கொடுக்கக் கூடியது கொல்லுதல். தன்னுயிர் நீங்கும் நிலை வந்தாலும், பிற உயிரைக் கொல்லக் கூடாது. கெல்லாமையைக் கைக் கொள்பவனைக் கூற்றுச் சென்று அழிக்காது என்பனவற்றைத் திருவள்ளுவர் கூறுகிறார்.

### புலால் மறுத்தல்

முதல் தந்திரத்தில் ஏழாவது தலைப்பில் இரண்டு மந்திரங்களை உடையதாகப் புலால் மறுத்தல் அமைந்துள்ளது. கொலை செய்து, புலால் உண்பவரை எமதூதர், நரகத்தில் மல்லாக்கத் தள்ளித் துன்புறுத்துவர் என்கிறார் திருமூலர். மேலும்,

**கொலையே களவுகட் காமம்பொய் கூறல்**
**மலையான பாதகமாம் அவைநீக்கித்**

**தலையாஞ் சிவனடி சார்ந்து இன்பஞ் சார்ந்தோர்க்கு**
**இலையாம் இவை ஞானானந்தத்து இருத்தலே** [14]

என்று கூறி, கொலை போன்ற பாவம் செய்யாதவர்கள் துன்பமின்றி இன்பமுடன் இருப்பர் என்கிறார்.

தன்ஊனைப் பெருக்க, பிற உயிர்களின் ஊனைத் தின்பவனிடம் அருள் இருக்காது. மயக்கமற்ற தெளிந்த அறிவு உடையவர்கள் புலால் உண்ணமாட்டார்கள். புலால் உண்பவரை நரகம் விழுங்கும். பின்வெளியே விடாது. ஆயிரம் யாகங்கள் செய்வதைவிட ஒருயிரையும் கொன்று தின்னாமையாகிய யாகமே சிறந்தது. கொல்லாது புலால் உண்ணாது இருப்பவர்களை உலக உயிர்கள் தொழும் என்கிறார் திருவள்ளுவர்.

**பிறன்மனை நயவாமை**

முதல் தந்திரத்தில், மூன்று மந்திரங்களைக் கொண்டது பிறன்மனை நயவாமை.

**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக்கு இடருற்றவாறு** [15]

இருப்பது போன்றது, பிறர் மனைவியை விரும்பும் அறியாமை என்கிறார் திருமூலர். மேலும்,

**திருத்தி வளர்த்ததோர் தேமாங்கனியை**
**அருத்தமென்று எண்ணி அறையில் புதைத்துப்**
**பொருத்தமிலாத புளிமாங் கொம்பேறிக்**
**கருத்தறியாதவர் காலற்றவாறே** [16]

என்று கூறித் தன்மனைவியைப் புறக்கணித்து, அழகில்லாத பிறன் மனையாளை விரும்பித் துன்பம் அடைந்து உயிர் துறப்பது, காமமயக்கத்தால், புளியமரமேறிப் பயன்பெறாது கீழே வீழ்ந்து காலொடிவது போன்றது என்கிறார். தானும் கெடுவதோடு பிறரையும் கெடுக்கும் தன்மை இது என்பது புலனாகின்றது.

திருவள்ளுவர், பிறனில் விழையாமை என்று இதனைக்குறிப்பிட்டு, இத்தகையோர் அறவாழ்வினர் அல்லர். பேதையர். நடைப்பிணம் போன்றோர். அழியாப்பழிபெறுவர். இவர்களைவிட்டுப் பகை, பாவம், அச்சம் பழிநான்கும் நீங்கவே நீங்காது என்று கூறுகிறார்.

**மகளிர் இழிவு**

பொது மகளிரின் இழிநிலை பற்றி ஐந்து மந்திரங்களில் அமைந்த பகுதி இது. எட்டிக்காய் குலைகுலையாகப் பழுத்தாலும்

உண்ண இயலாது. எனவே புறத்தோற்றத்தால் ஏமாறக்கூடாது. கனவுபோல் தோன்றிமறையக் கூடியது மகளிர் இன்பம். நீர்ச்சுழிக்குள் சித்ரவதைப் போன்றது காமச்சுழலில் சிக்குவது. பொது மகளிர், உதவியவரை மறந்து, பொருளுடையவர் பக்கமே செல்வர். புறத்தில் கரும்புச்சாறு போன்றும், அகத்தில் வேம்பு போன்றும் இருப்பது பொது மகளிர் உறவு. இதனால் அழிவு ஏற்படும் என்கிறார் திருமூலர்.

திருவள்ளுவர், பொருட்பாலில் வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தில் பொது மகளிரால் வரும் இழிவு பற்றிக் குறிப்பிடுகிறார். பொருட் பெண்டீர் இழிவாகத் திருமூலர் காலத்தில் கருதப்பட்டிருக்கின்றனர்.

## நல்குரவு

வறுமையுடையோர்க்கு உலக வாழ்க்கை துன்பத்தையே தரும். சுற்றத்தார் விலக்குவர். யாரும் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ளமாட்டார்கள். மகிழ்ந்து பேசவும் மாட்டார்கள் என்று கூறுகிறார் திருமூலர். உழைப்பை நாடாது, உழைக்காது நல்குரவு அடைந்தோர், முற்றும் கிழிந்து உடுத்த இயலாப் புடவை போன்றோர். மதிப்பற்றவராகி அழிவர் என்கிறார் திருமூலர். எனவே சோம்பி, முயற்சிஇன்றி இருந்து நல்குரவை வரவழைக்காதீர் என்பது அறவுரையாக இங்கு கூறப்பெறுகின்றது. வறுமையுடையோரைச் சுற்றத்தார் உட்பட அனைவரும் விலக்கும் நிலையையும், உழைக்காது சோம்பி இருப்போரே நல்குரவு அடைவர் என்பதையும் கூறி, உழைப்பின் உயர்வை விளக்குகிறார் திருமூலர். திருவள்ளுவர், வறுமை, இழிவுதரும் சொற்களைப் பேசும்படி மனச் சோர்வை ஏற்படுத்தும். அவர்களது பேச்சு, பிறரால் கவனிக்கப்படாது. ஈன்ற தாயாலும் உறவற்றவன்போல் நோக்கப்படுவான். நெருப்பினுள் கிடந்து உறங்கினாலும் வறுமையினிடையே உறங்குவது முடியாது என்கிறார்.

## அறஞ்செய்வான் திறம்

உயர்ந்தோர் தாழ்ந்தோர், உறவினர் பகைவர் என்று பாகுபாடு கருதாமல் அறம் செய்ய வேண்டும் என்று கூறும் திருமூலர், எல்லோராலும் உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவை உவகையுடன் பிறர்க்குக் கொடுக்க முடியும். இந்த அறத்தைச் செய்து அறச்செயலை வளர்த்துக் கொண்டு, கூற்றுவன் வருமுன் நல்லறஞ் செய்யுங்கள் என்கின்றார். இறையருளைப்பெற்றுப் பிறவியறுக்க உதவும் வழி அறம் என்கின்றார்.

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே [19]

என்று எல்லோரும் செய்வதற்குரிய எளிமையான அறமாக, உண்ணும்முன் இறைவனுக்குப் பச்சிலை கொண்டு வணங்குதல், பசுவுக்கு ஒரு வாயளவு புல் கொடுத்தல், பிறர்க்குச் சிறிதளவு உணவு கொடுத்தல் பிறரிடம் இனிமையாகப் பேசல் போன்ற பண்புகளைத் திருமூலர் வலியுறுத்துகிறார்.

திருவள்ளுவர், அறன்வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் நான்கும் மனதில் இல்லாமல் அகற்றுவதும், மனதில் மாசு இல்லாததுமாகியமன ஒழுக்கமே சிறந்தஅறம். இவற்றோடு புறத்தில் அறச்செயல்கள் செய்து அழியாத் துணையைத் தேட வேண்டும் என்கிறார்.

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற [20]

தான் பெற்றதை எல்லோர்க்கும் கொடுத்து மகிழ வேண்டும் என்ற அறவுணர்வை,

நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பின் கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீரயாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கும் என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைக்கிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே [21]

என்ற புறநானூற்றுப் பாடலும் சுட்டுகின்றது.

அறஞ்செய்யான்திறம்

நல்லறங்கள்செய்யாதவனுடைய இயல்பைக் கூறும் திருமூலர்,

எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ்செய்யாதவர் செல்வம்
வட்டி கொண்டு ஈட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப்பாதகர் பயனறியாரே [22]

என்ற மந்திரத்தின்வழி, நல்லறங்கள் செய்யாதவர்களுடைய செல்வம், எட்டிப்பழம் பழுத்தும் பயனில்லாதது போன்றது

என்கிறார். மேலும், அவர்கள்உடம்பு துன்பத்தின்கொள்கலன். சத்து நீங்கின சக்கை. இவர்கள் நரகத்தில் வீழ்ந்து துன்புறுவர். நோய்வாய்ப்பட்டு இறையருளைப் பெறமுடியாது, பிறப்பு இறப்பில் உழல்வர். அறஞ்செய்யாமை மனிதப் பண்பன்று. மிருகத்தனம் அது. அறிவில்லாதவர்களே அறம் செய்யாது கெடுவர் என்றும் திருமூலர் கூறுகின்றார்.

திருவள்ளுவர், ஒருவருக்கு ஆக்கத்தையும், சிறப்பையும், செல்வத்தையும் தருவது அறம் என்கிறார். வாய்ப்பேற்படும் பொழுது உடனே அறம் செய்து சிறந்த இன்பம் பெறுக என்று "அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில் வலியுறுத்துவதோடு ஒப்புரவறிதல் என்ற அதிகாரத்தில் ஒப்புரவுடன் அறஞ் செய்து உதவாதவர் செத்தாருக்குச் சமம் என்கின்றார்.

## அன்புடைமை

அன்பின் முதிர்ச்சியால் இறையாகிய அறிவு விளங்கும். அதாவது, சத்தியாகியஅன்பின் முதிர்வால் சிவமாகிய அறிவு விளங்கும். அன்பு வலையில் அகப்பட்டு, அருளும் இறைவனை ஏத்தினால் ஒளிபெருகச் செய்வான். அன்பில்லாதவர் இறைவனைஅடைய வழியறியாது வருந்துவர். கருணையுடைய இறைவனிடம்அன்பு பின்னிக் கிடக்க வேண்டும். உலகப் பொருளை விரும்புவதை விட்டு, மெய்ப்பொருளை விரும்ப வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் திருமூலர். மேலும், இறைவனுக்கு அன்போடு உருகிச் செய்யும் வழிபாடு சிறந்தது என்பதை,

**என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போல் கனலிற் பொரிய வறுப்பினும்**
**அன்போடுஉருகி அகங்குழைவார்க்கன்றி**
**என்போல் மணியினை எய்த ஒண்ணாதே** [23]

என்று விளக்குகிறார். அன்பே கடவுள் என்ற நிலையில் அனைத்துயிர்களிடமும் ஆண்டவனைக் காணும் மனநிலையைப் பெறவேண்டும். காணும் பொருளிலெல்லாம் தன்னையும் இறைவனையும் காணும் அன்பின் முதிர்வைப் பெற வேண்டும் என்று வலியுறுத்தும் நிலையில்,

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவதாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே** [24]

என்ற மந்திரத்தைக் கூறுகிறார் திருமூலர்.

திருமூலர் கூறும் இறையியல் அன்பு என்பது உலகியல் அன்பு, மடை மாற்றம் செய்யப்பட்டு இறைவனிடம் உருகிச் செய்யும் வழிபாடாக அமையவேண்டும் என்பதே.

மனிதன் அறிந்த சிற்றின்பம் போன்றது பேரின்பம். சிற்றின்பம், பேரின்பத்தின்பால் மடைமாற்றம் செய்யப்பட்டுச் சிதாகாயப் பெருவெளியை நாடல், உணர்தல், நாதத்தைத் தரிசித்தல், உடலுணர்வை நீக்கல், இன்பத்தில் நின்று அதுவேயாதல் என்பனவற்றைக் கூறுகிறார். மேலும், உயிர்கள், பொறிபுலன்களின் வழிச்செல்லாது அன்போடு சிந்தையில் சோதியை உணர வேண்டும். அன்பு செய்பவர்களுக்கு அருள்புரிவான் இறைவன் என்று,

**'அன்பு செய்வாரை அறிவான் சிவன்'**

என்ற தலைப்பில் திருமூலர் கூறுகின்றார்.

திருவள்ளுவர், அன்புடையோர்தம் உடலையும் பிறர்க்குக் கொடுக்கும் சிந்தையுடையோர். அன்பே இன்பம் தரும். அன்பில்லை என்றால் உயிர் வாழ்க்கை தழைக்காது. தளிர்க்காது. உயிரற்ற உடம்பு போன்றது அன்பில்லா வாழ்க்கை என்கிறார்.

**கள்ளுண்ணாமை**

சிவானந்தத் தேறலாகிய மதுவினை உண்ணாமையைக் கள்ளுண்ணாமை என்கிறார் திருமூலர்.

**மயங்கும் தியங்கும் கள் வாய்மை அழிக்கும்**
**இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி**
**முயங்கும் நயம் கொண்ட ஞானத்தை முந்தார்**
**இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே** [25]

கள் மயங்கச் செய்யும். உண்மையை அழிக்கும். சிற்றின்பம் நாடிப் பேரின்பம் இழக்கும்.

திருவள்ளுவர், பொருட்பாலில், கள்ளுண்ணாமையைக் கூறுகிறார். கள்ளுண்டைவர்களைச் சான்றோர் மதிக்க மாட்டார்கள். கள்ளுண்பவர் நாணத்தை இழப்பர். கள் குடிப்பவர் நஞ்சு உண்பவர்களாவர் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**பொறையுடைமை**

இரண்டாம் தந்திரத்தில் உள்ள இருபத்தைந்து தலைப்புகளில் இருபத்து நான்காவது தலைப்பாக அமைந்துள்ளது பொறையுடைமை. பொறை என்பது பொறுத்தல். தாங்கிக் கொள்ளுதல். பொறுமையுடன் இருத்தல். சகித்துக் கொள்ளுதல்.

**"மனத்தினை ஒரு வழி நிறுப்பது பொறைநிலை"** [26]

என்று, மனதைப் பொறுமையாக ஒருநிலைப்படுத்தி ஒன்றில் நிலை நிறுத்திக் குவிப்பதும் பொறைநிலையாகக் கொள்வர்.

பொறுமையைக் கையாள ஐந்து நிலைகள் உள்ளன. அவை,

1. ஏதேனும் காரணம் பற்றியோ அல்லது மடமையினாலோ தமக்கோ, பிறருக்கோ ஒருவர் கொடுக்கும் துன்பங்களை, இன்னல்களை, இழிசெயல்களைப் பொறுத்துக் கொள்ளுதல்.

2. விதியினாலோ, வினையினாலோ நம்வாழ்வில் நமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல்.

3. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல், கொலை, களவு, காமம், கள் போன்ற இழிந்த செயல்களைச் செய்ய புலன்கள்தூண்டுகின்ற பொழுது பொறுமையாகச் சிந்தித்து அவற்றை விலக்கி, நன்னெறியைப் பொறுமையாகக் கைக்கொள்ளல்.

4. நம்முடைய கடமைகளை, அன்றாட வேலைகளைப் பொறுமையாகப் பதறாமல் திருத்தமாகச் செய்து முடித்தல்.

5. இறையனுபவத்தைப்பெற, பெரியோர்கள், சான்றோர்கள், அருளாளர்கள், மகான்கள் கூறிய நெறிமுறைகளைப் பொறுமையாகக் கைக்கொண்டு ஞானம் பெறல்.

என்ற ஐந்து நிலைகளில் பொறுமை தேவைப்படுகின்றது. இவற்றுள் முதல் நான்கும் உலகியல் ஒழுக்கத்தையும் தனிமனித ஒழுக்கத்தையும் சார்ந்தவை. இறையனுபவம் பெறப் பின்பற்ற வேண்டிய மனதை ஒருவழிப்படுத்தலாகிய பொறைநிலை இறையியல் சார்ந்தது. உலகியல் சார்ந்த ஒழுக்க நிலையில் மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலுடைய பொறைநிலையைப் பெறலாம். இப்பக்கு வத்துக்கேற்ப உடலிலும், உள்ளத்திலும் பல இன்ப துன்பங்களை நுகரக் கொடுத்து இறைவன் பக்குவம் செய்வான். பக்குவப்படுத்தி அருள்செய்யும் அருளாளன் இறைவன் என்கிறார் திருமூலர். இதனை,

**வல்வகையாலும் மனையிலும் மன்றிலும்**
**பல்வகையாலும் பயிற்றிப் பதஞ்செய்யும்**
**கொல்லையினின்று குறிகொள்ளும் கூத்தனுக்கு**
**எல்லையிலாதஇலயம் உண்டாமே** [27]

என்ற மந்திரத்தால் அறியலாம்.

இரண்டாம் தந்திரத்தில், சிவ, குரு, மயேசுவர நிந்தை கூடாது என்பனவற்றைக் கூறியபின்பொறையுடைமையைக்கூறி அடுத்துப் பெரியாரைத் துணைக்கோடலைக் கூறி உடனே

மூன்றாவது தந்திரத்தில் முதலில் அட்டாங்க யோகத்தைக் கூறுகிறார்.

தனிமனித அறங்களைவலியுறுத்தும் முதல் தந்திரத்தில், பொறையுடைமையையும் பெரியாரைத் துணைக் கோடலையும் கூறாது இவ்விரண்டு ஒழுக்கங்களை மட்டும் இரண்டாவது தந்திரத்தில் கூறுகிறார். அடுத்து உடனேயே மூன்றாவது தந்திரத்தில் அட்டாங்கயோகம் பற்றிய யோக சாதனைகளைக் கூறுகிறார். இவற்றுள் முதலில் உள்ள இயமம், நியமம் என்பன, நல்லனவற்றையே செய்தல், தீயனசெய்யாது ஒழுகுதல் என்ற உள்ளத்தைத் தூய்மை செய்யும் அடிப்படையான தனிமனித ஒழுக்கப்பண்புகளை வலியுறுத்துவன உண்மையுணர்ந்து ஒடுங்க, மனம் பக்குவம் அடையவேண்டும். மனம், மூச்சுக்காற்றின் இயக்கத்தால், ஐம்புல வேடர்களைப் பற்றி உலகியலை நுகர்கின்றது. ஒன்றைவிட்டு மற்றொன்றிற்குத் தாவும் மனதை நிலைத்து நிலைபெறச் செய்ய இயமம், நியமம் போன்றவற்றையும் பழக வேண்டும். இதற்கு முதலில் பொறுமை தேவை. எனவே அட்டாங்க யோகத்தை அடுத்ததாகக் கூறுகிறார்.பொறையுடைமையில் திருமூலர்,

1. பொறுமையோடு மெய்ப்பொருளைஎண்ணி இருந்தால் அருட் கடலில் திளைக்கலாம்.

2. பொறுமையுடைய ஞானி, விண்மண் உலகில் மிகஉயர்ந்தவன் ஆவான்.

3. ஞானம் பெறப் பொறுமை வேண்டும். ஞானம் பெற்றால், கருவி கரணங்கள் ஞானியின்ஏவல் வழி நிற்கும்.

4. இறைவன், ஆன்மாக்களின் பக்குவத்துக்கு ஏற்ப அருள் புரிவான்.

எனவே, பக்குவம் பெற ஒழுக்க நெறியாம் அகம் பண்பட்டநிலையே அடிப்படை என்கிறார் திருமூலர்.

திருவள்ளுவர், அறத்துப்பால், இல்லறவியிலில் பதினாறாவது அதிகாரமாகப் பொறையுடைமையைக் கூறுகிறார். மனம், மொழி, மெய் மூன்றும் தீ நெறிக்கண் செல்லாது அடக்கும் அடக்கமுடைமை. இம்மூன்றும் அடங்கினார்க்கு அல்லாது இயலாத ஒழுக்கமுடைமை. ஒழுக்கம் உடையார் மாட்டே நிகழும் பிறனில் விழையாமையைக் கூறியபின், அனைத்து அறங்களுக்கும், ஒழுக்கங்களுக்கும் அடிப்படையான பொறையுடைமையைக் கூறுகிறார். இறுதியில் புகழ் என்ற அதிகாரத்தைக் கூறுகிறார். ஆக,

இல் வாழ்க்கை முதல் ஈகை ஈறாக உள்ள ஒழுக்கங்கள் புகழைத்தரும் என்பது பெறப்படுகிறது.

திருவள்ளுவர், ஒறுத்தல் கூடாது. பொறுத்தலோடு மறத்தலும் வேண்டும் என்பதை ஒன்பது குறள்களில் வலியுறுத்தி, தனித்து நிற்கும் ஒரே குறளாக

**நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை**
**போற்றி ஒழுகப் படும்** [28]

என்று கூறி, சால்புடைமை நீங்காது இருக்க வேண்டுமானால், பொறையுடைமையை அழியாமல் காக்க வேண்டும் என்கிறார்.

மனித மனத்தைத் தூய்மை செய்யும் அறத்தோடு இறைநெறியின்பால் செலுத்தும் அன்பையும் கொண்டு, இறைவனின் அருளமுதைப் பருகும் அறிவு நெறியைப் பற்ற வேண்டும் என்று திருமூலர் அறிவுறுத்துகின்றார்.

ஆக, ஒழுக்கத்தால் பக்குவப்பட்ட மனிதனே பொறுமையோடு அட்டாங்க யோகநிலையை அடைந்து, பின் ஞானத்தை அடைய முடியும். இதற்கு இருவகையான பொறுமைகளும் தேவை.

**பெரியாரைத் துணைக்கோடல்**

இரண்டாம் தந்திரத்தின் இறுதியில் உள்ள இப்பகுதி, பெரியவர்களுடைய துணை நன்னெறி உய்க்கும். நன்மை பயக்கும். உலகியல் வாழ்விலும், இறையியல் வாழ்விலும் பெரியவர்களுடைய துணை இன்றியமையாதது என்பதை விளக்குகின்றது.

தக்க சான்றோர்களாகிய பெரியவர்களுடன் பழகிப் பண்பட வேண்டும்.

**இழுக்கல் உழையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்** [29]

என்கிறார் திருவள்ளுவர்.

அறநெறிகளை அறிந்த பெரியோர்கள், தம் அனுபவத்தால் வரக்கூடிய இன்னல்களில் இருந்து காக்கும் ஆற்றல் உடையவர்கள். குற்றங்கள் கண்டால் இடித்துரைத்துத் திருத்துவார்கள். தலங்கள் தோறும் சென்று இறைத்தொண்டு புரியும் ஓட வல்லார், இறைவன் புகழ்பாடும் பாடவல்லார், யோகிகளாகிய தேடவல்லார் ஞானிகளாகிய கூடவல்லார் என்று நால்வரைக் குறிப்பிடுகின்றார் திருமூலர். இத்தகு பெரியார்களுடைய துணை நல்ல நெறிகளைக் காட்டுவதோடு பேரின்பத்தையும் தரும். ஞான விளக்கம் அளித்துப்பிறவி நீக்கத்தையும் தரும் என்கிறார் திருமூலர்.

நல்ல நெறிகளைப்பற்றி ஒழுகி, பிறருக்கும் ஒழுக்க மேம்பாடுகளை அறிவுறுத்தி, யான் எனது என்னும் செருக்கறுக்கும் பெரியோர்களுடன் கூடியிருந்து அவர்களின் துணையினைப் பெறல் பேரின்பமாகும் என்று கூறும் திருமூலர்,

**அறிவார் அமரர் தலைவனை நாடிச்**
**செறிவார் பெறுவர் சிவதத்துவத்தை**
**நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்**
**பெரியாருடன் கூடல் பேரின்பமாமே** [30]

என்று குறிப்பிடுகின்றார்.

திருவள்ளுவர், பொருட்பாலில், பெரியாரைப் பிழையாமை என்ற அதிகாரத்தில் பெரியோர் சொற்களைக் கேட்டு ஆராய்ந்து நடக்க வேண்டும் என்கின்றார். மேலும், அவர்களுக்குத் தீங்கு செய்வது எமனைக் கைகாட்டி அழைப்பது போன்றது என்கின்றார்.

## இயமம் நியமம்

தவநிலையைப் பயில்வதற்கு வேண்டிய வழிமுறைகளாகத் திருமூலர் கூறும் அட்டாங்க யோகத்தில் முதலில் இருப்பது இயமம். இரண்டாவது இருப்பது நியமம். இயமம் என்பது தீயனவற்றைச் செய்யாது ஒழுகுதல், நியமம் என்பது நல்லனவற்றையே செய்தல். இவற்றை, "தீதகற்றல்", "நன்றாற்றல்" என்பர். நல்லுழைப்பால் நல்லூதியம் பெறுதலைத் தொடர்ந்து செய்தல் வேண்டும்.

**கொல்லான் பொய்கூறான் களவிலன் எண்குணன்**
**நல்லான் அடக்கமுடையான் நடுச் செய்ய**
**வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்**
**இல்லான் நியமத்திடை நின்றானே** [31]

என்று இயம ஒழுக்கத்தில் நிற்பவர் பின்பற்றவேண்டிய அறங்களைக் கூறுகிறார் திருமூலர். தவிர்க்க வேண்டியனவற்றைக் கூறியும் நல்லறங்களை விளக்குகிறார்.

நியமம் என்ற நல்லனவற்றைச் செய்து ஒழுகும் வழி முறையில் பத்துக் குணங்களைப் பின்பற்றுமாறு கூறுகிறார் திருமூலர். அவை,

**தூய்மை அருள் ஊண் சுருக்கம் பொறை செவ்வை**
**வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை**
**காமம் களவு கொலை யெனக் காண்பவை**
**நேமி யீரைந்து நியமத்த னாமே** [32]

என்பன. இவ்வாறு அட்டாங்க யோகத்துக்கு அடிப்படையே ஒழுக்கநெறி என்பதைத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

### கூடா ஒழுக்கம்

ஏழாம் தந்திரத்தில் 36ஆவது தலைப்பாக உள்ளது இப்பகுதி. வஞ்சகச்செயல் கூடாது என்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது. கண்காணிப்பவன் எங்கும் நிறைந்து இருக்கின்றான் என்பதறிந்து கள்ளத்தை ஒழிக்க வேண்டும். உள்ளத்துள் உள்ளவனை வெளியே தேடித் திரிவதும் கூடா ஒழுக்கமே.பத்தியை வணிகமாக்கி உண்பதும், தத்துவங்கள் கடந்த நிலையை உணராமல் இருப்பதும் கூடா ஒழுக்கமே என்கின்றார் திருமூலர். மனதை அடக்கும் வலிமையின்றி, ஆற்றல் உடையதவவேடம் பூண்டு ஏமாற்றுவது, பசுத்தோல் போர்த்திய புலிபோன்றது. இத்தன்மை கொடிது. இழிது. புறவேடத்தால் பயனில்லை. புதரில் மறைந்திருந்து கண்ணி வைத்துப் பறவைகளைப் பிடிப்பது போன்றது என்கிறார் திருமூலர். திருமூலர் காலத்திலேயே போலியானதுறவியர் இருந்து பக்தியை வணிகமாக்கி இருந்திருக்கின்றனர் என்பது வெளிப்படுகின்றது. கூடாஒழுக்கம் என்ற இதே தலைப்பில் வள்ளுவர்,

வஞ்ச மனத்தில் பொருந்திய தீய ஒழுக்கத்தைப் பார்த்து உள்ளே கலந்துள்ள ஐம்பூதங்களும் எள்ளி நகைக்கும். புற வேடங்களால் மாட்சிமை உடையார் போன்று நடித்து, புனித நீராடி, மழித்தல் நீட்டலாகிய புறவேடமிட்டு வாழும் கொடியவர்களின் கூடா ஒழுக்கம், புதரில் மறைந்திருந்து பறவைகளை வேட்டை யாடுவது போன்றது என்கின்றார்.

### கேடுகண்டிரங்கல்

வாழ்நாளை வீணாக, அறியாமல் கழித்து வினையைச் சேர்க்கின்ற பாவிகள், எரியும் தீயில் அழிவது போல் அழிகின்றார்களே என்று பிறர் அடையும் அறியாமையால் வரும் துன்பத்திற்கு வருந்துகின்றார் திருமூலர்.

ஆர்வமனமும், அளவில்லா இளமையும், அன்பும் உள்ள பொழுதே உடம்பையும், மனதையும் நல்ல நெறியில் பழக்கிக் கொண்டு, அவற்றை இறையியலுக்கு மடைமாற்றம் செய்ய வேண்டும் என்கின்றார். இங்கு அடிப்படையாக வேண்டப்படுவது புலனடக்கத்தோடு கூடிய ஒழுக்கமே.

### புறங்கூறாமை

எட்டாம் தந்திரத்தில் உள்ளது புறங்கூறாமை. விருப்பு வெறுப்பற்ற நிலையை ஆன்மா பெற்றதைப் புறத்தே கூறாது இருத்தல். பெருமையை நினைக்காது அடங்கி இருக்க வேண்டும். அகப்பகைவர்களை வெல்வதே ஆண்மை. வீண் பெருமைகளைப் பேசித் திரிவதுகூடாது என்பதும் இதன்வழிப் பெறப்படுகின்றது. உபசாந்தம் பெற்ற ஆன்மா, பருந்தை ஆகாயத்தில் கண்ட பாம்பு

அடங்கி இருப்பதைப் போல் அடங்கி இருக்க வேண்டும் என்று கூறுகிறார் திருமூலர்.

உலகியலைப் பொறுத்தவரையில், ஒருவர் இல்லாத பொழுது, பொறாமையால் அவரைப் பற்றி இழிவாகப் பிறரிடம் பேசுதல் கூடாது. இதனால் நெருங்கிய உறவுகளையும் பிரித்து விடுவர் என்று புறங்கூறும் புல்லிய குணம் பற்றித் திருவள்ளுவர் கூறுகிறார்.

**வாய்மை**

பொய்ப்பொருள்களை அறிந்து அவற்றைப் பற்றாமல் மெய்ப்பொருளை அடைதலே வாய்மை என்ற தலைப்பில் திருமூலரால் அறிவுறுத்தப்படும் கருத்து. பொய்ப் பொருள்களையும், பொய்யாகிய உடல் பற்றையும் ஒழிக்க வேண்டும். ஆனால், பொய்ப் பொருளாம் உடம்பையே கருவியாகக் கொண்டு, சுழுமுனை திறந்தால் மெய்ப்பொருளை உணரலாம் என்கின்றார். ஐம்புலன்களின் பாசங்களை அறுக்கப் பயிற்சிமிகுதியாகப்பெற வேண்டும் என்கின்றார். ஐம்புலன்களின் பாசங்களை அறுக்க அகம், பண்படவேண்டும் அதற்கு அடிப்படை நல்லொழுக்கமே. வாய்மை என்பது பிற உயிர்களுக்குத் தீங்கு பயவாத சொற்களைக் கூறுதல். பொய்யற்ற உண்மையாகிய வாய்மை, மனஇருளைப் போக்கும் என்கின்றார் வள்ளுவர்.

**அவா அறுத்தல்**

எட்டாம் தந்திரத்தில் அவா அறுத்தல் உள்ளது. பொருள்களின் மீது செல்லும் அவாவினை நீக்குதல் வேண்டும். அவா என்பதே பிறப்பீனும் வித்து. ஆசையால் உயிர்க்குத்துன்பமே. ஆசையை விடவிட ஆனந்தம் பெருகும். ஆசையை விட்டவர்கள் உள்ளத்தால் இறைவனை உணரமுடியும். இறைவனோடும் ஆசை கொள்ள வேண்டாம் என்பதைத் திருமூலர்,

**ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்தமாமே** [33]

என்று கூறுகிறார்.

ஆசையை அறுப்பதே இன்பத்திற்கு வழி. ஆசையை விட்டு ஞானத்தைப் பற்றுதலே தம்மை உணர்தல்.

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்** [34]

என்கிறார் வள்ளுவர்.

**ஊழ்**

ஒன்பதாவது தந்திரத்தில் பதின் மூன்றாவது தலைப்பாக ஊழினைக் கூறுகிறார். ஊழ் என்பது தெய்வம்,நியதி, பால், விதி, வினை, உண்மை, முறை, பொறி என்றும் குறிக்கப்பெறுகின்றது. இறைவனால் விதிக்கப்படுவதால் விதி. இது, நல்வினை, தீவினை என்று இரண்டு வகைப்படும் இரண்டும் பிறவிக்கு ஏதுக்களே. இவற்றை ஆகூழ், போகூழ் என்றும் கூறுவர். ஒரு பொருளின் ஆக்க அழிவுகளுக்குத் துணைக் காரணம் என்பன காலம், இடம், கருவி, தொழில், முயற்சிபோன்றவை. ஆனால், முதற் காரணம் ஊழ் என்பர். ஊழ் என்பது, இருவினைப் பயன், செய்தவனையே சென்றடைதற்கேதுவாய நியதி. இது அறத்தோடு இயைபு உடையது. எனவே, திருமூலர், முதல் தந்திரத்தில் அறப்பண்புகளை வலியுறுத்தி இறுதியில் ஒன்பதாம் தந்திரத்தில் ஊழினைக் கூறுகிறார்.

திருவள்ளுவரும் நிலையாமை, பிற அறங்கள் போன்றவற்றை முதலில் கூறி, அறத்துப்பாலின் இறுதியில், ஊழியலில் 38ஆவது அதிகாரத்தில் ஊழினைக் கூறுகிறார். இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றனையும் அறத்தில்கூறி இன்பத்தையும் பொருளையும் பொருட்பாலில் கூறுகிறார். இரண்டிற்கும் முதற்காரணம் ஊழின்வலியே.துறவு (35) மெய்யுணர்தல் (36)அவாஅறுத்தல் (37) என்ற ஞான நிலைகளைக்கூறி, அடுத்து ஊழைக் கூறியுள்ளார். மேலும், தீவினையச்சம் (21) இடுக்கண் அழியாமை (63) ஆள்வினையுடைமை (62) என்ற அதிகாரங்களிலும் ஊழின் தன்மைகளைத் திருவள்ளுவர் கூறுகிறார்.

**அருமையுடைத் தென்று அசவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்** [35]

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்றுபவர்** [36]

**தெய்வத்தானாகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலிதரும்** [37]

**பொறியின் மையார்க்கும் பழியன்று அறிவறிந்து**
**ஆழ்வினை யின்மை பழி** [38]

என்று ஆள்வினையுடைமையில் திருவள்ளுவர், விதியென்று சோம்பி இருக்காமல் முயற்சியோடு வெல்ல முயல வேண்டும் என்கிறார். மேலும்,

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்பதில்** [39]

**இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**
**துன்பம் உறுதல் இலன்** [40]

**அடுக்கிவரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கண் படும்** [41]

என்று இடுக்கண் அழியாமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர், ஞானத்தால் மனங்கலங்காதவன், இடுக்கண் வந்தால் துன்புறுவதில்லை என்கிறார். மேலும், ஆகாமியம் (வருவினை) ஏறாமல் பார்த்துக்கொள்ளலாம் என்பதை,

**அருங்கேடன் என்பதறிக மருங்கு ஓடித்**
**தீவினை செய்யான் எனின்** [42]

என்ற குறளில் தெளிவுறுத்துகிறார். தீவினை செய்யாமல் இருந்தால் வினையினின்றும் தப்பலாம்.

தீவினை நிழல் போலப் பின்சென்று பயனைக் கொடுக்கும் என்பதைத் தீவினையச்சம் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர்,

**எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாதுபின் சென்று அடும்** [43]

**தன்னைத்தான் காதலனாயின் எனைத் தொன்றும்**
**துன்னற்க தீவினைப்பால்** [44]

**தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை**
**வீயாது அடி உரைந்தற்று** [45]

என்று குறிப்பிடுகிறார். ஆனால், ஊழ் என்ற தலைப்பில் மட்டும் ஊழினைப் பற்றி ஆறு பாடல்களைக் கூறுகிறார் திருமூலர்.

தத்துவஞானியர், மலர்தலும் கூம்பலுமற்ற அறிவுடையவர்கள் போன்றோர், வினைப் பயனுக்கு ஏற்றவாறு இன்ப துன்பங்கள் நிகழும் என்கின்றன. வினைப்பயன் நுகர்வில், இறைவனைச் சிந்தையில் நீங்காது எண்ணிக்கொண்டு இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் இன்ப துன்ப உணர்வுகள் தாக்குவதை உணரா நிலை ஏற்படும் என்றும் கூறுகின்றனர்.

**வானின்று இடிக்கிலென் மாகடல் பொங்கிலென்**
**கானின்று செந்தீக்கலந்துடல் வேகிலென்**
**தான் ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கில்என்**
**நானொன்றி நாதனை நாடுவன் நானே** [46]

என்பது திருமூலர் வாக்கு.

மேலும், இறைஞானம் பெற்றோர்க்கு உடல் அழிவு பற்றிய எண்ணமோ பதற்றமோ இருக்காது. இடுக்கண்பல வந்தாலும்

ஞானத்து உழவாகிய ஞானச்சாதனையைச் செய்து கொண்டே இருப்பர் என்கிறார் திருமூலர்.

***ஆனை துரக்கிலென் அம்பூடு அறுக்கில் என்***
***கானத்துஉழுவை கலந்து வளைக்கிலென்***
***ஏனைப் பதியினில் எம்பெருமான் வைத்த***
***ஞானத்து உழவினை நானுழுவேனே*** [47]

ஊழ் வினையிலிருந்து தப்ப முடியாது. அதுவிடாது தொடர்ந்து வந்து அதன் பயனை ஊட்டும். அவ்வாறெனின் ஊழ்வினையை வெல்ல முடியாதா? முடியுமா? முடியும் என்றால் எவ்வாறு? மதியாலா? அல்லது இறையருளாலா? அல்லது ஞானாக்கினி யாலா? முடியாது என்றால்,

***நாளென் செயும்வினைதான் என்செயும் எனை நாடிவந்த***
***கோளென்செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர் இரு***
***தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்***
***தோளும் கடம்பும் என்முன் வந்து தோன்றிடினே*** [48]

***சேல் பட்டழிந்தது செந்தூர் வயல்பொழில் செங்கடம்பின்***
***மால்பட்டழிந்தது பூங்கொடியார் மனம் மாமயிலோன்***
***வேல்பட்டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும் அவன்***
***கால் பட்டழிந்தது இங்கு என்தலைமேலயன்***
***கையெழுத்தே*** [49]

என்று, வினையழியும் என்று உறைப்புடன் கூறிய அருணகிரியார் வாக்கும்,

***பழவினைகள் பாறும் வண்ணம்***
***சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்*** [50]

என்ற மாணிக்கவாசகர் வாக்கும்,

***வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்***
***போய பிழையும் புகுதருவான் நின்றனவும்***
***தீயினில் தூசாகும்*** [51]

என்ற ஆண்டாள் வக்கும், சம்பந்தர் பாடிய கோளறு பதிகத்தின் வாக்குகளும், திருக்கடைக்காப்புத் தோறும் ஊழ்வினையை வெல்வதற்கு உரியவழிகளைச் சம்பந்தர்அருளிச்செய்த வாக்குகளும்,

***வானந்துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும்***
***தானந் துளங்கித் தலைதடுமாறி லென் தண் கடலும்***
***மீனம் படிலென் விரிசுடர் வீழில் என்வேலை நஞ்சுண்டு***
***ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே*** [52]

என்று கூறிய அப்பர் வாக்கும் பொய்யா?

வினை, அதன் பயனை ஊட்டியே தீரும். ஆனால், நல்வினைகளை முயற்சியுடன்செய்து, தீவினைப் பயனால் வரும் சோம்பலையும், துன்பங்களையும் களைய முற்படவேண்டும். ஒருகாலாக, இருகாலாக விலக்காமையின் பலகால் முயல்வார் பயன் எய்துவர். அவ்வாறெனில், ஞானத்தால் அதன் ஆற்றலைப் புறந்தள்ளும் நிலையைப்பெறலாம்.

'வினைதீர ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்'

என்பது சிவஞான சுவாமிகள் வாக்கு. இதையே திருமூலரும், ஞான வாளால் பிரமன் பிணித்த வல்வினைப் பிணிப்பை அறுத்து எறிவார்கள் என்று திருமந்திரத்தில் கூறுகிறார் ஆக,

1. ஞானியர்க்குப் பிராரர்த்தம் (நிகழ்வினை, நடப்பு வினை, நுகர்வினை) உடலூழாய்க் கழியும். உடலுக்குத் துன்பம் ஏற்பட்டாலும் உள்ளத்தையும் ஆன்மாவையும் தாக்க முடியாது. ஆகாமியம் (வருவினை) ஏறாது.

2. முத்தியில் ஆணவம்போன்று ஞானத்தின் முன் வினையின் ஆற்றல் செயல்பட முடியாது. (முத்தியில் ஆணவம் இருக்கும். ஆனால் தொழில்பட முடியாது. கதிரவன் முன் விளக்கொளி போல் எடுபடாது. உயிர், இறை ஒளியைச் சார்ந்து விடும்)

3. சஞ்சிதவினை (இருப்புவினை, தொகுப்புவினை) ஞானாக்கினியால் எரித்துக் கரித்து அழியும்.

4. வினை அதன் கடமையைச் செய்யும். தப்ப முடியாது. ஆனால், அதன் பலன்தாக்காமல் ஞானத்தால் பதுகாக்கலாம்.

5. மனமெனும் தோணிபற்றி, மதியெனும் கோலை ஊன்றி சினமெனும் சரக்கை ஏற்றிச் செறி கடல் செல்லும் போது, மதனெனும் பாறை தாக்கினால், உன்னை நினைக்கும் அறிவு வேண்டும் என்பதால் ஞானத்தால் ஊழைக் கழிக்கலாம் என்பது பெறப்படுகின்றது.

6. இதைத்தான் நம் முன்னோர், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவுறுத்திச் சென்று உள்ளனர். கணியன் பூங்குன்றன் வழங்கி உள்ள ஒரே ஒரு பாடலே அது.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோரன்ன**
**சாதலும் புதுவது அன்றே வாழ்தல்**
**இனிது என மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்**
**இன்னா தென்றலும் இலமே மின்னொடு**

**வானம் தண்துளி தலைஇ ஆனாது**
**கல் பொருது இரங்கும் மல்லற்பேர் யாற்று**
**நீர் வழிப்படூஉம்புணை போல் ஆருயிர்**
**முறைவழிப்படூஉம் என்பது திறவோர்**
**காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே** [53]

என்ற பாடல்.

எனவே, திருமூலர் பண்பட்ட ஒழுக்க நிலையில் பல கால் முயன்று பெற்ற ஞானத்தால் ஊழின் ஆற்றல் தாக்குவதைப் பொருட்படுத்தா உளநிலையைப் பெறலாம் என்கிறார். இத்தகு ஞானியர் நிலையை ஊழ் என்ற தலைப்பில் குறிப்பிடுகிறார். மேலும், அயமுறு அட்டாங்கம் என்று கூறுகிறார் திருமூலர்.

நல்வினை (அயம்) இருந்தால் எண்வகை யோக உறுப்புகளைக் கொண்ட யோக நெறி கிட்டும். இந்த நல்வினையை ஞானத்தால் பெறலாம் என்கிறார்.

எனவே, ஊழால் துவண்டு விடாமல் ஒழுக்க மேம்பாட்டுடன் பண்பட்டுவாழ அகம் சார்ந்த பண்பாட்டு நெறிகள் பலவற்றை, திருமந்திரத்தில் வலியுறுத்துகிறார் திருமூலர்.

ஒருசிலர், அறத்துக்கு மாறான செயல்களைச் செய்து இன்ப வாழ்க்கை வாழ்கின்றனர். அறத்தோடுகூடிய பண்பாட்டு வாழ்க்கை வாழ்பவருள் சிலர் வறுமையாலோ, நோயாலோ பிற அவலங்களாலோ துன்புறுவது ஏன்? என்ற எண்ணம் பலருக்கு வருவதுண்டு. எனவே, பண்பாட்டுடன் கூடிய நல்லொழுக்கங்களால் பண்படும் பண்பாடு தேவையா? என்ற எண்ணம் எழும்பும். அடுத்து, ஊழைவெல்ல முடியாது. ஊழ் வினையின்படி நடப்பவை நடந்தே தீரும். எனவே, நாம் எப்படியும் கட்டுப்பாடற்று வாழலாம் என்ற எண்ணமும் எழலாம். இந்நிலை எப்பொழுதும் நிலையாக நடப்பவையல்ல. இவை விதிவிலக்குகளே. முன்னோர்கள், வாழ்ந்து பார்த்து ஆராய்ந்து கூறியவைகளே அறநெறிகள். எல்லோரும் வாழ்ந்து பார்த்த பின்தான் நம்புவோம் என்று கூறினால், வாழ்நாள் போதாது. அறநெறிகளை நம்பாமல் மனம் கலங்கித் தடுமாறக் கூடாது.

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பைத் தரும்** [54]

என்கிறார் திருவள்ளுவர்.

எனவே, அன்பு நெறியோடு கூடிய பண்பாட்டின் சிறப்பையும் ஆற்றலையும் நம்பவேண்டும். இதில் சோர்வு கூடாது. இதனால் தன்னலம் குறையும். அன்பின் வழியது உயிர்நிலை. மனிதர்க்கு மனிதர் வேற்றுமை இல்லை என்ற மனித சமத்துவம் உண்டாகும். தீங்கில்லா இன்பம் பெறலாம்.

''உலகில் மக்களின் நாகரிக உயிரோட்டமாகிய பண்பாட்டின் ஒரு சிறப்புக் கூறாகத் தோன்றி உலக நாட்டத்தைப் பெற்றுள்ளது மதம். மதம் அன்பினால் முகிழ்த்து, அறிவியலால் பக்குவமாகி, அருளால் கனிந்து, நாட்டு நலத்துக்குப் பயன் நல்க வல்லது. தத்துவத்தாலும், சடங்காலும் அனுட்டானத்தாலும் உணரப்படும் அதன் பெருமையைவிட அது வலியுறுத்தும் மக்கட்பண்பெனும் உயிரிரக்கத்தாலும் தொண்டாலுமே அதன் பெருமை சிறக்கிறது. இது, வரலாற்று அனுபவ உண்மையாகும். இதற்குநாடு, இனம், மொழி, சாதிவரையறை இல்லை" என்கிறார் பண்பாட்டு ஆய்வாளர் செ. வைத்தியலிங்கன். [55]

நல்ல ஒழுக்கத்தோடு கூடிய பண்பட்ட வாழ்வு மட்டுமே போதும். இறை வழிபாடு இறை உணர்வு தேவையில்லை. கண்ணால் காண முடியாத இறைவனை நம்ப முடியாது என்று சிலர் கூறலாம். வெறும் ஒழுக்கம் மட்டும் இருந்தால் சோதனை வரும் பொழுது மனிதன் ஒழுக்க நிலையிலிருந்து தவறிவிடுவான். தனக்குமேல் ஒருவலிய ஆற்றல் இல்லையென்றால் வழுவும் சூழல் வந்தால் மனம் போனபோக்கில் கட்டுப்பாடிழந்து முறையற்று வாழத் தொடங்கி விடுவான். தன்செயல்களுக்கு ஏதாவது காரணம் கூறி நியாயப்படுத்த முயல்வான். இறை நம்பிக்கை இல்லாத ஒழுக்கக் கல்வி சிறக்காது. ஒழுக்கம் மட்டுமே இருந்தால் அருள் அங்கே நிலைக்காது ஏனெனில் கடவுளே அருள். கண்ணில்லாக் குதிரையில் பயணம் செய்வது போன்றது கடவுள் உணர்வு இல்லா ஒழுக்கம். இறை உணர்ச்சி இருந்தால் தனிமையிலும் தவறு செய்ய அஞ்சுவான். மனிதன், எத்தகைய சட்டங்களில் இருந்து வேண்டுமானாலும் தப்பிக்கலாம். ஆனால் இறை நீதியிலிருந்து ஒருபோதும் தப்ப முடியாது என்ற எண்ணம் வலுப்பெற வேண்டும்.

ஒரு மனிதன் தோல்வி அடையும் பொழுது ஆறுதல் பெற இறைநம்பிக்கை தேவை. இல்லையெனில், விலங்காக மாறி அடாத செயல்களைச் செய்யத் துணிந்து அழிவினை ஏற்படுத்துவான். அமைதித் தத்துவம் எதுவாக இருந்தாலும் இறுதியில் சமயத்தைச் சார்ந்தே அது அமைக்கப்படும்.

தனிமனிதன் பண்பட்டால் சமுதாயம் பண்படும். இதனால் உலகு பண்படும். அமைதியைப்பற்றிப் பேசுபவர்கள், இறை

நம்பிக்கையற்றவர்களாக இருந்தாலும் சமயத் தத்துவங்களை எடுத்துக் காட்டுவார்கள். ஆனால், சமயப் போர்வையில் அரசியலும், பொருளாதாரமும், அதிகார வெறியும், புகழ்போதையும், பொருள் போகமும் நடந்தால் அழிவும் துன்பமும் நிம்மதி இன்மையுமே ஏற்படும்.

எனவே, உலக வாழ்வியலுக்கும், இறையியலுக்கும் அடிப்படை, தனிமனித ஒழுக்கங்களாகின்ற அகம் சார்ந்தபண்பாடுகளே என்பதால், சமயம் சார்ந்த தோத்திர சாத்திர நூலாகத் திருமந்திரம் இருந்தாலும் முதல் தந்திரம் முழுவதும் தனிமனித ஒழுக்கங்களையே அறிவுறுத்துகின்றது.

## குறிப்புகள்


1. திருக்குறள், 422.
2. சிவஞானசித்தியார், 113.
3. திருக்குறள், 339.
4. திருக்குறள், 333.
5. திருக்குறள், 334.
6. திருமந்திரம், 189, யாக்கை நிலையாமை
7. திருமந்திரம், 207, யாக்கை நிலையாமை
8. திருமந்திரம், 211, யக்கை நிலையாமை
9. திருமந்திரம், 192, யக்கை நிலையாமை
10. திருமந்திரம், 202, யக்கை நிலையாமை
11. திருமந்திரம், 2153, அவத்தைபேதம்.
12. திருமூலர், திருமந்திரம், 238, உயிர் நிலையாமை.
13. திருமூலர், திருமந்திரம், 240, கொல்லாமை.
14. திருமூலர், திருமந்திரம், 241, கொல்லாமை
15. திருமூலர், திருமந்திரம், 244, பிறன்மனை நயவாமை.
16. திருமூலர், திருமந்திரம், 245, பிறன்மனை நயவாமை.
17. மணிமேகலை, ௭-௭-௬, துயிலெழுப்பிய காதை
18. திருமந்திரம், 107, அறம்செய்வான் திறம்.
19. திருமந்திரம், 109, அறஞ்செய்வான் திறம்
20. திருக்குறள், 34
21. புறநானூறு, 163.
22. திருமூலர், திருமந்திரம், 117, அறஞ்செய்யான் திறம்.
23. திருமூலர், திருமந்திரம், 259, அன்புடைமை

24. திருமூலர், திருமந்திரம், 257, அன்புடைமை
25. திருமந்திரம், 317, கள்ளுண்ணாமை.
26. தொல்காப்பியம், வாகைதானே நூற்பாஉரை.
27. திருமந்திரம், 524, பொறையுடைமை.
28. திருக்குறள், 154.
29. திருக்குறள், 415.
30. திருமூலர் திருமந்திரம், பெரியாரைத் துணைக்கோடல், 527.
31. திருமூலர் திருமந்திரம், இயமம், 536.
32. திருமூலர் திருமந்திரம், நியமம், 538.
33. திருமூலர் திருமந்திரம், 2570 அவாவறுத்தல்
34. திருக்குறள், 341.
35. திருக்குறள், 611
36. திருக்குறள், 620
37. திருக்குறள், 619
38. திருக்குறள், 618
39. திருக்குறள், 621
40. திருக்குறள், 628
41. திருக்குறள், 625
42. திருக்குறள், 210
43. திருக்குறள், 207
44. திருக்குறள், 209
45. திருக்குறள், 208
46. திருமூலர் திருமந்திரம், ஊழ் 2806.
47. திருமூலர் திருமந்திரம், ஊழ், 2807.
48. கந்தரலங்காரம், 36
49. கந்தரலங்காரம், 41
50. திருவாசகம், அச்சோ பதிகம்-1
51. திருப்பாவை-5
52. திருநாவுக்கரசர்-4-112-8 (5215)
53. புறநானூறு-182.
54. திருக்குறள்-138.
55. செ. வைத்தியலிங்கன், 'தமிழ்ப் பண்பாட்டு வரலாறு-2', அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, ப.6.

# 4. புறம் சார்ந்த பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்

உணவு, உடை, உறையுள், உடல், உலகு, சுற்றுப்புறம், இயற்கை, கலைகள், புறநாகரிகம் போன்றவைகளில், வரையறுக்கப்பட்ட பண்பட்ட ஒழுங்கு முறையே புறம் சார்ந்த பண்பாடாக இருந்தாலும், அவற்றிற்கும் அகம் சார்ந்த பண்பாடே அடிவேராக உள்ளது.

புறஒழுங்கு, தூய்மை, போன்றவற்றிற்கு அகத் தூய்மையே ஆணிவேர்.

புறப்பண்பாட்டின் புறவளர்ச்சி, செழுமை, புறஒழுங்கு போன்றவற்றின் மேம்பாட்டுக்கு உயிரூட்டி உரம் சேர்ப்பதாக வெளியே தெரியாத அகப்பண்பாடு அமைந்து புறப்பண்பாட்டை ஓங்கிவளரச் செய்கிறது.

இந்நிலையில், அகப் பண்பாட்டை முதலில் வலியுறுத்தும் திருமந்திரத்தில், புறம் சார்ந்த பண்பாட்டை வலியுறுத்துவனவாக முதலில், அரசனுக்குக் குற்றமாகக் கருதப்படுபவை மற்றும், அக்கினியாகிய ஆகுதிகாரியம் போன்றவை கூறப்பட்டுள்ளன. அடுத்து, அந்தணர் ஒழுக்கம், வானச் சிறப்பு, தானச் சிறப்பு போன்றவையும் கல்வி, கேள்விகேட்டமைதல், கல்லாமை போன்றவைகளும் கூறப்பட்டுள்ளன.

அந்தணர், அரசர் போன்றோரின் செயல்முறை ஒழுங்கு திருமந்திரத்தில் வரையறுக்கப்படுவதால், இவை, புறம் சார்ந்த பண்பாட்டில் விளக்கப்படுகின்றன.

*அரசாட்சிமுறை*

ஒருநாட்டில், மக்கள் அன்பு, ஒழுக்கம், ஒப்புரவு, நீதி இவற்றிற்குட்பட்டு வாழவேண்டும். இல்லையேல், அரசன் அவர்களை நன்னெறியில் செலுத்தித் தானும் நெறியின் நீங்காது வாழவேண்டும். நாட்டையும் மக்களையும் காப்பது அரசன் கடமை.

அறிவற்ற அரசன் காலனுக்கு ஒப்பாவான். அரசன், தானும் நன்னெறியில் வாழ்ந்து நாட்டு மக்களையும் நன்னெறியைக் கடைப்பிடிக்கச் செய்யவேண்டும். தவவேடம்பூண்டு, ஒழுக்க

நெறியில் நில்லாது மறைந்து ஒழுகும் அவ வேடத்தவரை அரசன் தண்டித்து உண்மை நெறியில் செலுத்த வேண்டும். பசுக்கள், பாவையர், இல்லறத்தார், துறவறத்தார் ஆகியோரை அரசன் காக்க வேண்டும். கள்குடியரைத் தண்டிக்க வேண்டும். அறம் செய்ய வேண்டும் என்று அரசனுக்குரிய கடமைகளைத் திருமூலர் கூறுகிறார். திருவள்ளுவர்,

**முறைகோடி மன்னவன் செய்யின் உரைகோடி**
**ஒவ்வாதுவானம் பெயல் [1]**

என்று அரசனின் கடமையைக் கூறுகிறார்.

திருமூலர், உலகம், வான் மழையை நோக்கி வாழ்வது போல் ,அரசனுடைய நீதி வழுவா ஆட்சியை எதிர் நோக்கி மக்கள் வாழ்வர். எனவே, அரசன், நடுவுநிலைமையுடன் அறநூல் வல்லவர்களுடன் கூடிச் சிந்தித்து அரசாட்சி நடத்த வேண்டும். என்கின்றார்.

திருவள்ளுவரும் செங்கோன்மை (55) கொடுங்கோன்மை (56) என்றஅதிகாரங்களை அமைத்து அரசர்களுக்குரிய ஒழுக்கங்களை வரையறுக்கிறார்.

வேதங்களுக்கும், அறத்திற்கும், மக்களின் மகிழ்ச்சிக்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் அரசனே அடிப்படை. மன்னன் செங்கோல் கோடாது அரசாட்சி செய்தால்தான் நாட்டின் விளைச்சலும், செழுமையும் பாதுகாக்கப்படும். மன்னன், மக்கள் குறைகளைச் செவிமடுத்துக் கேட்கவேண்டும். கொலை, கொள்ளை, களவு, கள்போன்றகொடிய செயல்களைச் செய்யும் கொடியவர்களைத் தண்டிக்கவும் வேண்டும். நீதியை நிலைநாட்டுவதே அரசன் கடமை.

**ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்**
**காவலன் காவான் எனின் [2]**

என்கிறார் திருவள்ளுவர்.

அறத்தினின்று வழுவிய அரசனை விட அறத்தினின்றும் வழுவா காலன் மிகநல்லவன் என்பதை,

**கல்லா அரசனும் காலனும் நேர் ஒப்பர்**
**கல்லா அரசனில் காலன் மிக நல்லன்**
**கல்லா அரசன்அறம் ஓரான் கொல் என்பான்**
**நல்லாரைக் காலன் நணுக நில்லானே [3]**

என்று கூறுகிறார் திருமூலர். அரசனுக்குப் போர் வெறி, மண்ணாசை கூடாது. அவ்வாறு ஆசை கொள்வது, விளைவு

அறியாது பாயும் புலிபோன்றது. மக்கள் மனதைப் பண்படுத்துவதற்குரிய சமய நெறியில் தானும் வாழ்ந்து மக்களையும் அதன்பால் செலுத்துவது அரசன் கடமை என்கிறார் திருமூலர். இதனால், அரசனின் கடமை, ஒழுக்கம், பண்பு ஆகியவை வரையறுக்கப்படுகின்றன.

**அந்தணர் ஒழுக்கம்**

அந்தணர், பார்ப்பனர், வேதியர், பிராமணர், மறையோர் என்றெல்லாம் அழைக்கப்படும் இருபிறப்பாளர் யார்? அவர்கள் எத்தகு ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று கூறும் திருமூலர், ஒழுக்கத்தினடிப்படையிலேயே இப்பெயர்களைப் பெறுவதாகக் கூறுகிறார்.

வேதம் ஓதுதல், ஓதுவித்தல், யாகம்புரிதல், யாகம் புரியுமாறு செய்வித்தல், கொடுத்தல், பெறுதல் ஆகிய 6 தொழில்களையும் செம்மை நெறி வழுவாது கடைப்பிடிப்பதோடு, மூன்று காலங்களிலும் செய்யும் வழிபாடுபோன்ற செயல்களை வழுவாது செய்ய வேண்டும். மேலும் தவம், வேதமந்திரங்கள் ஓதல், வேதங்கள் வரையறுக்கும் சடங்குகளைச் செய்தல் போன்றவற்றைச் செய்ய வேண்டும். இத்தகுபண்புகள் உடையோரே செந்தண்மை உடைய அந்தணர் என்ற சிறப்பைப் பெறுவர்.

ஐந்தெழுத்து மந்திரமாகிய பஞ்சாட்சரம் ஓதுவதோடு முத்தி யளிக்கும் ஓம் என்ற பிரணவப் பொருளை நன்கு உணர்ந்து ஓதி, குரு உபதேசம் பெற்று, அதன்படி மந்திரம் ஓதித் தியானம் செய்யும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். முத்தி நெறிகளுள் ஒன்றாகிய கிரியைத் தொண்டு செய்து இறையருளையும், தூய்மையையும் பெற்றவர்களே பார்ப்பார் என்ற பெயர் பெறுவர்.

**பெருநெறியான பிரணவம் ஓர்ந்து**
**குருநெறியாம் உரைகூடி நால் வேதத்**
**திருநெறியான கிரியை இருந்து**
**சொரூபம தானோர்துகளில் பார்ப்பாரே** [4]

என்பது திருமூலர்வாக்கு.

இத்தகு தூயராம் பார்ப்பார், வேதியர் என்ற பெயரை எவ்வாறு பெறுகின்றனர் என்பதை,

**வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்**
**வேதாந்தம் கேட்டும்தம் வேட்கை ஒழிந்திலர்**
**வேதாந்தம் ஆவது வேட்கை ஒழிந்திடும்**
**வேதாந்தம் கேட்டவர் வேட்கை விட்டாரே** [5]

என்ற மந்திரத்தின்வழி விளக்குகிறார்.

வேதத்தின் முடிந்த பொருளை உணர்த்தும் வேதாந்தத்தைக் கேட்பதோடு மட்டுமன்றிக்கேட்டு உணர்ந்து அதன்படி ஒழுகும் அந்தணரே வேதியர் என்ற பெயரைப் பெறுவர். வேதாந்தம் கேட்பதே ஆசையை ஒழித்து ஞானம் பெறுவதற்கே. வேதாந்தம் ஆசை அற்றஇடத்தைத் தெளிவுறுத்துவது. எனவே வேதாந்தம் கற்றும் ஆசையை அகற்றி ஞானம் பெறாமல் இருந்தால், அவர்கள் வேதியரல்லர். வேதாந்தம் கேட்டும், கொலை, புலை, வேள்வி செய்வோர் வேதியரல்லர் என்கிறார் திருமூலர்.

பூணூல் அணிந்து குடுமி வைப்பதாகிய புறத்தோற்றம் மட்டுமே பிராமணத்தன்மையல்ல. வேதாந்த அறிவோடு, உண்மை ஞானமும் பெற்றுப் பிரமத்தை உணர்ந்தவரே பிராம்மணர் என்பதைத் திருமூலர்,

**நூலும் சிகையும் நுவலில் பிரமமோ**
**நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்**
**நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்**
**நூலுடை அந்தணர் காணும் நுவலிலே** [6]

என்று உணர்த்துகிறார். வேதாந்த உணர்வும் முப்பொருள் உண்மையாகிய திருவடி வுணர்வுமே குடுமியும், பஞ்சாலாகிய பூணூலும். இவற்றின் அக அடையாளம், நீங்காத உயிர் ஒழுக்கம். இத்திருவடியுணர்வாம், பிரம்மத்தை அறியும் உணர்வு உடையவரே பிராம்மணர்.

சத்தியம் இன்றி, சிறந்த ஞானம் இன்றி, புலன் ஈர்ப்பால், மனதைக் கண்டபடி அலையவிட்டு ஒழுக்கமும், ஒடுக்கமும் இன்றி, உண்மைப் பொருளாம் பரம் பொருளை அறியும் ஞானமின்றி மயங்கித் திரியும் மூடர் பிராம்மணர் ஆகார் என்பதை,

**சத்தியம் இன்றித் தனி ஞானம் தான் இன்றி**
**ஒத்த விடையம் விட்டோரும் உணர்வின்றிப்**
**பத்தியும் இன்றிப் பரன் உண்மை இன்றிப்**
**வித்தேறும் மூடர் பிராமணர் தாம் அன்றே**

என்ற மந்திரத்தின் வழி விளக்குகின்றார் திருமூலர். முற்றுணர்வாயிருப்பது இறையடியாம் திருவடி. சுட்டுணர்வாலும், சிற்றுணவர்வாலும் உணர்வு பெறும் சித்தும், மலஇருள் மூடி ஒன்றும் அறியாமல் இருளில் கிடக்கும் அசித்தும் ஆகிய உயிர், திருவடியாம் முற்றுணர்வைச் சார்ந்தால், ஒளி பெறும்.

இந்நிலையில் படிமுறைப் பயிற்சிகளாகிய சரியை, கிரியை போன்றவைகளும், சகமார்க்கம் சன்மாக்கம் போன்றவைகளும், துரிய நிலையாகிய பேருறக்க நிலையைப் பெற்றுத் தாமே, பகலில்

எரியும் விளக்கு போல் அடங்கிவிடும். இத்தகையோரே மறையோர். புறச் செயல்கள் அடங்கி, வாய்மை, தூய்மை விளங்க வாழ்வோரே அந்தணர்.

ஆக, அந்தணர் என்போர் ஒழுக்கத்தால் உயர்ந்தோர் என்கிறார் திருமூலர்.

அறவோரே அந்தணர் என்கிறார் திருவள்ளுவர்.

**அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டு ஒழுகலான்** [8]

என்று கூறும் திருவள்ளுவர், எல்லா உயிர்களிடமும் தண்ணளி கொண்டு ஒழுகுபவர் அந்தணர் என்று வலியுறுத்துகிறார்.

ஆக, தவ வாழ்க்கையும், பேரருளும், அறவுணர்வும் பூண்டு ஒழுகுவதோடு, மறைமொழியாகிய மந்திரங்களைக் கற்று அதன் பொருளுணர்ந்து அதன்படி வாழ்வோரே அந்தணர், பார்ப்பார், மறையோர், வேதியர், பிராம்மணர் என்றெல்லாம் பெயர் பெறுகின்ற இருபிறப்பாளர். இவர்கள், செயல்களாலும் ஒழுக்கத்தாலும் மட்டுமே இப்பெயர்களைப் பெறுகின்றனர்.

**வானச் சிறப்பு**

மழைநீர் உலகினைச் செழிக்கச் செய்யும். மழை இல்லையென்றால் பூவுலகில் ஒருயிரும் வாழ இயலாது. மழையின்றி மன்னுயிரில்லை. இத்தகு இன்றியமையாமழை, அரசன் மற்றும் மக்களுடைய ஒழுக்க நிலையோடு தொடர்பு படுத்தப்பட்டது. நாட்டில் தீநெறி பரவினால் மழை பெய்யாது. அரசன் கொடுங்கோலனாக இருந்தால் மழை பெய்யாது என்று நம்பினர். எனவேதான்,

**கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்**
**கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்**
**மாரிவறங்கூரின் மன்னுயிரில்லை**
**மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன்**
**தன்னுயிர் என்னும் தகுதியின்றாகும்** [17]

என்று மணிமேகலையில், அரசனது கோல் திரிந்தால் மழை பெய்யாது வறண்டு விடும் என்று கூறப்படுகின்றது. எனவே அமுதம் போன்றுவளம் தரும் மழை, புறஉலகுக்கு இன்பம் தருவது போல் மன மண்டலத்தில் அன்பினால் சிரசாகிய மலையில் வான்நீர் அருவி விளங்கி அசைவிலாத பேரின்பம் நல்கும். இதற்குமனமாசு நீங்க வேண்டும். அன்பும் அருளும் உள்ளத்துள்தழைக்க வேண்டும் என்கிறார் திருமூலர். திருவள்ளுவர், உலக உயிர்களுக்கு

உணவாகவும், உயிராகவும் விளங்கும் மழையின்றி உலகத்தில் தானம், தவம், பூசனை எதுவும் நடக்க இயலாது. கடலின் வளமும் மறையும். ஒழுக்கமுடன் வாழவும் முடியாது என்கிறார்.

**தானச் சிறப்பு**

பிறருக்கு இயன்றவரை வழங்குவது சிறப்புடையது என்று வலியுறுத்தும் திருமூலர்,

**ஆர்க்கும் இடுமின்அவரிவர் என்னன்மின்**
**பார்த்திருந்துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கையுடையீர் விரைந் தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணுங்காலம் அறிமினே** [18]

என்ற மந்திரத்தின் வழியாக, உயர்ந்தோர், தாழ்ந்தோர், வேண்டியவர் வேண்டாதவர் என்று பார்க்காமல் வருவோர்க்கெல்லாம் உணவளியுங்கள் என்று அறிவுறுத்துகின்றார்.

இல்லை என்னாது, பயன் கருதாது, ஈவதே நல்லநெறி. செல்வத்தைச் சேமிக்கும் இடம் ஈகை. பிறரின் பசிப்பிணி நீக்குவதே நலம் என்கிறார் வள்ளுவர். இதற்கு அருளோடு கூடிய சிந்தை வேண்டும். அகம், தூய அன்புள்ளதாக இருக்க வேண்டும்.

**கல்வி**

கல்வி என்ற பகுதியில், இறையனுபவக்கல்வி பற்றி வலியுறுத்தும் திருமூலரின் அறவுரைகளை வாழ்வியல் சார்ந்த அறவுரைகளாகவும் சிலவற்றை வகைப்படுத்தலாம்.

நூல்களை ஆழ்ந்து கசடறக்கற்க வேண்டும். கல்வி, நற்குண நற்செயல்களுக்குப் பயன்படவேண்டும். கல்வி அழிவில்லாத செல்வம். கற்றவர்முன் கல்லாதவர்களால் ஆற்றலுடன் பேச முடியாது. கல்லாதவர்கள், பண்படுத்தாத நிலம் போன்றும், களர் நிலம், மண்பொம்மை, விலங்கு போன்றும், உயிருடன் மட்டுமே இருப்பவர் போன்றும் கருதப்படுவர்.

உண்மையான கல்வியறிவுடையவர், தாம் பெற்ற அறிவைப் பிறருக்குக் கொடுப்பர். கல்வியால் புகழ், பண்பாடு உண்டாகும். கற்றோர் வழித்துணையாக நிற்பர். கற்றவர்கள் துணையால், இவ்வுலகில் அறங்களையும் இறையியலையும் தெரிந்து தெளியலாம்.

பிறருடைய ஞானக் கண்ணையும் விளங்கும்படிச் செய்பவர் கற்றறிந்தோர் என்பதை,

**கற்றறி வாளர் கருதிய காலத்துக்**
**கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு**

**கற்றறிவாளர் கருதி உரைசெய்யுங்**
**கற்றறி காட்டக் கயலுள் வாக்குமே** [9]

என்ற மந்திரத்தின் வழி விளங்கச் செய்கிறார் திருமூலர். திருமூலர், இறையனுபவக் கல்வியையே பெரிதும் வலியுறுத்துகிறார்.

திருமந்திரத்தில், கல்வி என்ற பகுதி இறையியல் கல்வியைக் குறித்தாலும், அடிப்படையான உலகியல் ஒழுக்கப்பண்புகளையும் சுட்டிச் செல்கிறது.

உண்மையான கல்வி என்பது உலகியலில் செம்மையான பண்புகளுடன் வாழ்தல் மட்டுமல்ல. உலகியலில் தெளிந்து, எல்லாவற்றுள்ளும் இறைவன் இருக்கின்றான் என்பதை உணர்ந்து நின்றால் அறம் செய்வதிலிருந்து தவறார். அருள் அறமாகி அறமே ஞான சாதனைக்கு இழுத்துச் செல்லும்.

எனவே, சமயம் சார்ந்த ஞான சாதனைக்கு உரிய கல்வியைப் பெரிதும் வலியுறுத்துவதாகத் திருமூலர் கூறும் கல்வி அமைந்திருந்தாலும் வாழ்வியலுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது.

**கல்லாமை**

கல்லாமை என்பது உலகியலைப் பொறுத்தவரை உலகியலையும், வாழ்வியலையும் அறியும் அறிவினைக் கல்லாமை என்றே பொருள்படும். ஆனால், இறையனுபவக் கல்வியைப் பொறுத்தவரை, ஒருவன் கற்றும் இறையனுபவம் பெறாமையைக் கல்லாமையில் திருமூலர் குறிப்பிடுகின்றார். உலகியல் கல்வியால் பெறும் படிப்படியான அறிவேஅருளாகி அறமாகி ஞான சாதனைக்கு வித்தாக அமையும். எனவேதான், தான தருமம் செய்து செம்மையாக வாழ்ந்து உயரும் கல்வியைக் கற்றுத் தெளிவதோடு விடாது அதன்படி நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் திருமூலர். மேலும், கல்லாராகிய கீழோர் கொடிய வினைத் துன்பத்தைப் பெறுவர் என்பதை,

**நில்லாது சீவன் நிலையன்று என எண்ணி**
**வல்லார் அறத்துந் தவத்துளும் ஆயினார்**
**கல்லா மனித்தர் கயவர் உலகினில்**
**பொல்லா வினைத்துயர்போகஞ் செய்வாரே** [10]

என்றும்,

**எல்லாவுயிர்க்கும் இறைவனே யாயினும்**
**கல்லாதார் நெஞ்சத்துக் காண வொண்ணாதே** [11]

என்றும் கூறி, கல்லாதவர் நெஞ்சத்தில் அவர்களால் இறைவனை உணரமுடியாது என்றும் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

கற்றிருந்தும், தன்னையும் பிறரையும் நன்னெறியில் செலுத்தத் தெரியாத மூடரை விட, கல்லாத மூடரே நல்லர் என்று கூறும் திருமூலர்,

**கல்லாத மூடரைக் காணவும் ஆகாது**
**கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன் அன்று**
**கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்**
**கல்லாத மூடர் கருத்தறி யாரே** [12]

என்ற மந்திரத்தில் அறிவுறுத்துகின்றார்.

கற்றும் பக்குவப்படாதவர் கல்லாதவரே. கல்லாதவர், உலகினை நிலையானது என்று கருதுவர். இதனால் வினைத்துயர்ப்பட்டு மயங்குவர். அறம் செய்யும் எண்ணம் இருக்காது. கல்லாதவர்களால் ஞான சாதனை செய்து பரம் பொருளை உணர முடியாது. ஞானசதனை செய்து, வென்றோரே கற்றறிந்தவர். கல்லாத மூடரது கூட்டுறவு ஆகாது. ஞானக்கல்வி அறிந்தவர்அன்பினில் நிற்போர். ஞான முற்றோரே பரம் பொருள் உள்நின்று நடத்துகின்றது என்பதை உணர்வர் என்று கல்லாமையால் ஏற்படும் குற்றங்களைக் கூறுகிறார் திருமூலர். இறையனுபவக் கல்வியால், பிறவியின் பயனை உணர்ந்து உலகியலில் செம்மையுடன் வாழ்ந்து அதன் அடிப்படையில் இறையனுபவம் பெற்று உண்மை அறிவை வளர்த்து ஞானியர் துணை கொண்டு, பெரும் பொருளாகிய இறைவனை உள்ளத்தில் உணரவேண்டும் என்கிறார் திருமூலர்.

**கேள்வி கேட்டமைதல்**

உலகோர்க்குத் தேவையான அறங்களையும், ஒழுக்கங்களையும் சான்றோர்களிடம் கேட்டுத் தெளிவதே கேள்வி கேட்டமைதல்.

மக்கள் மேற்கொள்ள வேண்டிய அறங்களைச் செந்தண்மை பூண்டு வாழும் அறவோரிடம் கேட்டுத் தெளிந்து, விலக்க வேண்டியவற்றை விலக்கி மனம் அடங்கி உலகியலிலும், இறையியலிலும் தெளிந்து உயர வேண்டும் என்பதை,

**அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்**
**மறங்கேட்டும் வானவர் மந்திரங்கேட்டும்**
**புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் -ஈசன்**
**திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே** [13]

என்று விளக்குகிறார் திருமூலர்.

இதற்கு மன உறுதி வேண்டும். எனவேதான் பொறையுடைமையாகிய மன உறுதியைக்கூறி அதனை அடுத்துப்

பெரியாரைத்துணைக் கோடலைத் திருமூலர் கூறுகின்றார். அருளாளர்கள் கூறும் அறவுரைகளைக் கேட்டுத் தெளிந்து, பின்பற்றல் வேண்டும் என்பது இன்றியமையாத் தேவை என்கிறார் திருமூலர்.

**கருஉற்பத்தி**

கரு, கருப்பையில் தோன்றி உண்டாகும் முறைகளைத் திருமூலர் இப்பகுதியில் குறிப்பிடுகின்றார். இது உடலியற்கூறு பற்றிய செய்திகள். எனவே, புறம்சார்ந்த ஒழுங்குமுறை, வளர்ச்சிமுறை, அறிவியல் சார்ந்த உடலியல் தொடர்பான செய்திகள் போன்ற காரணங்களால் புறம் சார்ந்த பண்பாடாகக் கரு உற்பத்தி இங்கு குறிப்பிடப்படுகின்றது.

சில பதிப்புகளில் கர்ப்பக்கிரியை என இத்தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. தலைப்பு மாறினாலும் பாடல்கள் ஒரே மாதிரி உள்ளன. அச்சுமாறிப் பிறத்தலாகிய பருவுடம்பு மாறுதலைக் கரு உற்பத்தியில் திருமூலர் கூறுகிறார்.

கருவில், உயிரின் உருவம் பத்து மாதங்கள் தங்கி வளர்கின்றது. அனைத்துக் கருவிகளும் கருவிலேயே அமைந்து விடுகின்றன தாய், தந்தையின் தன்மையைக் குழந்தை பெற்றிருக்கும். ஆண் உடம்பில் 25 தத்துவங்கள் உருவாகிப் பெண்ணின் கருப்பையில் புகுகின்றது. போகம் நிகழும் பொழுது சுக்கிலத்தைப் பாய்ச்சுவதற்கேற்ப குழந்தையின் அங்கம், உயரம், பால் போன்றவை அமையும். பெண்களுக்குச் செலுத்தும் வாயு இல்லை.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், மனம், புத்தி, அகங்காரம் ஆகியவையும், பிராணன், அபானன், உதானன், வியானன் சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆகிய 10 வாயுக்களும், விகாரங்கள் எட்டும், ஒன்பது துவாரங்களும், குண்டலினி ஆற்றல், பிராணன் போன்றவைகளும் கருவில் அமையும்.

சுக்கில சுரோணிதக் கலப்புக்கேற்ப குழந்தையின் இயல்பு அமையும்.

சுக்கில சுரோணிதக் கலப்பில் சுக்கில ஆற்றல் எதிர்த்துச் சென்றால் இறைவனைப் போன்ற குழந்தை உண்டாகும். சுரோணிதம் எதிர்த்தால் திருமாலைப் போன்றும், இரண்டும் சமமானால் பிரமனைப் போன்றும் குழந்தை உண்டாகும்.

அதாவது, தாமச, சத்துவ, இராசத குணம், கலப்பின் ஆற்றலுக் கேற்ப மாறுபடும். கருவிலேயே குணம் அமைகிறது.

## சுக்கிலம் பாயும் பொழுது

| | | |
|---|---|---|
| 1. | ஆண்பண்பு மிகுந்திருந்தால் (வலப்பக்கமாகிய சூரியகலையில் மூச்சுமிகுந்து சென்றால்) | ஆண் குழந்தை உண்டாகும் |
| 2. | பெண்பண்பு மிகுந்திருந்தால் (இடப்பக்கமாகிய சந்திர கலையில் மூச்சு மிகுந்து சென்றால்) | பெண் குழந்தை உண்டாகும் |
| 3. | ஆண், பெண் குணம் சமமானால் (இரண்டு மூக்கின் வழியாகவும் வரும் மூச்சு ஒத்திருந்தால்) | குழந்தை அலியாகும் |
| 4. | பிராண வாயுவோடு அபானன் என்ற மலக்காற்று எதிர்த்தால் சுக்கிலம் சிதையும் | இரட்டைக் குழந்தை உண்டாகும் |

சுக்கிலம் பாயும் வேகம் ஆணிடமிருந்து பிரிந்து,

| | |
|---|---|
| ஐம்பூதங்களிலும் பரந்து சென்றால் (5 விரற்கிடை ஓடி விழுந்தால்) | குழந்தையின் ஆயுள் 100 |
| நான்கு பூதங்களில் பரந்து சென்றால் (4 விரற்கிடை ஓடிவிழுந்தால்) | குழந்தையின் ஆயுள் 80 |

யோகமுறை யறிந்து கூடுவோர், வாயிவினைச் செலுத்தும் வேகம் அறிந்து, ஓடிவிழச் செய்வர்

**சுக்கிலத்தைச் செலுத்தும் வாயுவின் அளவு**

வாயுகுறைந்தால் - குழந்தை குட்டையாகும்

வாயு இளைத்தால் - குழந்தை முடமாகும்

வாயு தடைப்பட்டால் - குழந்தை கூனாகும்

பெண்களுக்குச் செலுத்தும் வாயுஇல்லை.

இதனை,

**பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்**
**பாய்கின்ற வாயு விளைக்கின் முடமாகும்**
**பாய்கின்ற வாயு நடுப்படில் கூனாகும்**
**பாய்கின்ற வாயுமாதர்க் கில்லைப்பார்க்கிலே** [14]

என்ற மந்திரம் விளக்குகிறது.

**குறையுடைய குழந்தை பிறக்க காரணம்**

மருவுங்கால் தாய்வயிற்றில்,

மலம் மிகுந்தால் - குழந்தை மந்த புத்தி ஆகும்

நீர்மிகுந்தால் - குழந்தை ஊமையாகும்

இரண்டும் மிகுந்தால் - குழந்தை குருடாகும்

எனவே, தூயராய் மருவுதல் வேண்டும்.

சேர்க்கையில் ஆண், பெண் இருவருக்கும் பிராண வாயு ஒத்து இயங்கினால் கருவுள் குழந்தை அழகாக அமையும்.

இருவருக்குமே பிராண வாயு தடுமாறினால் கரு உண்டாகும் வாய்ப்பு இல்லை.

பிராண இயக்கமும், சுக்கிலப் பாய்ச்சலும் சரியாகவும், சிறப்பாகவும் அமைந்தால் ஆணாகவோ, பெண்ணாகவோ வளர்ந்து, சூரியனின் பொன்னுருவைப் போன்று உருவத்தைப் பெறும்.

வடிவ மில்லாது உடம்பினுள் புகுந்த உயிர் வடிவமுற்றுப் பிறக்கும். இவ்வாறு கரு உற்பத்தி என்ற பகுதியில் கருஉற்பத்தியவதைமட்டும் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு மாதமும் கரு எவ்வெவ்வாறு வளர்கின்றது, எவ்வெவ் உறுப்புகளைப் பெற்று எவ்வாறு வளர்கிறது என்று திருமூலர் குறிப்பிடவில்லை.

## நால்வகைச் சைவம்

வீர சைவம், காஷ்மீரச் சைவம் நேபாளச் சைவம், பாசுபதசைவம், காபாலிக சைவம், காளமுக சைவம், மாவிரத சைவம், பைரவ சைவம், சித்தாந்த சைவம், சித்தர்சைவம் என்றெல்லாம் பலவகையாகச் சைவ சமயப் பிரிவுகளைக் கூறுவர். ஆனால்,

திருமூலர், சுத்த சைவம், அசுத்த சைவம் மார்க்க சைவம், கடுஞ் சுத்த சைவம் என்று நான்கு வகைச் சைவங்களைக் குறிப்பிடுகின்றார்.

கழகப் பதிப்பில் இராமநாத பிள்ளை உரையில் இயற்கைச் செந்நெறி என்று சுத்தசைவத்தையும, மீ இயற்கைச் செந்நெறி என்று அசுத்த சைவத்தையும், மெய்யுணர்வுச் செந்நெறி என்று மார்க்க சைவத்தையும், மெய்கண்டார் செந்நெறி என்று கடுஞ்சுத்த சைவத்தையும் கூறுகிறார்.

சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகளில் அதிக ஒற்றுமையுடைய சமயத்தவர் அகச்சமயத்தவர். அவர்கள் பாடாணவாத சைவர், பேதவாத சைவர், சிவசமவாத சைவர், சிவ சங்கிராந்தவாத சைவர், ஈசுவர அவிகார வாத சைவர், சிவாத்துவித சைவர் என்போர். இவர்கள்சைவசித்தாந்தியரோடுசிறு வேறுபாடும், அதிக ஒற்றுமையும் உடையவர்.

சைவ சித்தாந்தியரோடு அதிக வேற்றுமையுடையோர் அகப்புறச் சமயத்தவர், புறச் சமயத்தவர், புறப்புறச் சமயத்தவர் என்போர்.

பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய வாத சைவம் போன்ற சமயத்தோர் ஓரளவு வேற்றுமையுடைய அகப்புறச் சமயத்தோர். அடுத்து அதிக வேற்றுமையுடைய கருத்துடையோர், நியாயம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம், பாஞ்சராத்திரம் என்ற புறச் சமயத்தோர்.

மிகமிக அதிகமாக வேறுபட்ட கருத்துடையோர்கள் புறப்புறச் சமயத்தோர். இவர்கள், உலகாயதர், நால்வகைப் பௌத்தர், சமணர் என்போர்.

இத்தகு சமயப் பிரிவுகளே, இந்தியாவில் வழங்கி வந்துள்ளன. பலதிசைகளிலும் பல்வேறு நெறிமுறைகளையுடைய சைவங்களும் இருந்திருக்கின்றன. அவற்றுள் இன்றும் சில இருக்கின்றன. இவற்றையெல்லாம் அறிந்த திருமூலர், வேறுவகையில் நான்கு வேறுபட்ட சைவப் பிரிவுகளைக் கூறுகிறார். இந்நால் வகைச் சைவங்களைத் திருமூலர் மட்டுமே கூறுகிறார். வேறு யாரும் குறிப்பிடவில்லை. இந்நால்வகைஇன்று வழக்கில் இல்லை. திருமூலர் கூறும் நால் வகைச்சைவங்கள், சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என்பன. இவற்றைப் பற்றிக்கூறும் ஊரன் அடிகள்,

"இவற்றுள்ளும் அசுத்த சைவம், மார்க்க சைவம் இன்று உள்ளது. சுத்த சைவம் மிக அரிதாகப் பின்பற்றப்படுகிறது. கடுஞ்சுத்த சைவம் மிகமிக அரிதாகப் பின்பற்றப் படுகிறது. கடுஞ்சுத்த சைவம் இன்று காண்பது அரிதாக உள்ளது"

என்கிறார். [15]

திருமூலர் கூறும் நால்வகைச் சைவமும் சிவனிடமிருந்தே தோன்றுவன.

திருமூலர், வேதாந்த சித்தாந்த சமரசச் சைவர் என்பதோடு சித்தர் சைவத்தைப் போற்றும் சித்தர் நெறியினர் எனலாம்.

**சுத்த சைவம்**

விபூதி, உருத்திராக்கம், குண்டலம் போன்ற புறச் சின்னங்கள் அணிதல் போன்ற வேடப்பற்று விட்டு இறைவனை விரும்பி ஆடம்பரம், ஆசை, பாசம், ஆன்மஅறிவு போன்றவைகளைக் கெடும்படிச் செய்பவர் சுத்தசைவர் என்பதை,

> **வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேனி**
> **ஆடம்பரமின்றி ஆசாபாசஞ் செற்றுப்**
> **பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்**
> **சாடுஞ்சிவபோதகர் சுத்த சைவரே** [16]

என்ற மந்திரத்தின் வழி அறியலாம். சடங்குகளைக் கைக்கொள்ளாது, தன்னையும் தலைவனையும், மலங்களையும் அறிந்து, மலங்கள் நீங்கித் தலைவன்திருவடிச் சார்புபெறுதல் சுத்த சைவம் என்பதை,

> **சத்தும் அசத்தும் சதசத்தும் தான்கண்டு**
> **சித்தும் அசித்தும் சேர்வுறாமே நீத்தும்**
> **சுத்தம் அசுத்தமும் தோய்வுறாமே நின்று**
> **நித்தம் பரஞ் சுத்த சைவர்க்குநேயமே** [17]

என்ற மந்திரம் விளக்குகிறது.

மயக்கம் தரும் சிற்றுணர்வும், சுட்டுணர்வுமாகிய சித்தும், உணர்வு இல்லா அசித்தும் தம்பால் தோன்றாமல் உள்ளம் கடந்த சுத்தமாகியஉண்மைச் சைவருக்குச் சிவனே பரம் பொருள். சுத்த சைவர் சிவயோகத்தில் அழுந்தி இன்புறுவர்.

**அசுத்தசைவர்**

இவர்களை,

**ஒப்பில்லாச் சிறந்த சைவர்**

**தலைமை அழகு பெற்றவர்**

என்ற சிறப்புப் பெற்றவர்கள் எனலாம்.

திருநீறு, குண்டலங்கள், உருத்திராக்க மாலை போன்ற திருவேடங்களுடன் சரியை, கிரியை நெறியில் நிற்போர் அசுத்த சைவர். உடம்பினாலும், மனத்தினாலும் வழிபடுபவர்கள். இவர்கள் சைவ ஆகமங்களை ஓதிக்கொண்டும் இருப்பர். இதனை,

> **காதுப் பொனார்ந்த கடுக்கன் இரண்டு சேர்த்து**
> **ஓதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன்**
> **சோதனை செய்து உபதேச மார்க்கராய்**
> **ஓதியிருப்பார் ஒரு சைவராகுமே** [18]

என்ற மந்திரம் சுட்டுகின்றது. இவர்கள் ஒன்பது பேதமாக விளங்கும் பரத்தைத் தம்முள் காண்பவர் என்கிறார்.

**மார்க்க சைவர்**

சைவ மார்க்கத்தைக் கடைப்பிடித்துச் சிவபோகத்தில் திளைத்திருப்பவர். பிறப்பிறப்புத் தரும் துன்மார்க்க நெறியில் செல்லாது மல மற்றுத் திருவடியுணர்வாம் மெய்யுணர்வு பெறும் நிலையினர்.

சிந்தையைத் தெளிவித்து, சிவத்தைச் சிந்தையில் உணர்பவர் என்பதை,

**மாறாதஞான மதிப்பற மாயோகந்**
**தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்**
**பேறானபாவனை பேணி நெறிநிற்றல்**
**கூறாகு ஞானசரிதை குறிக்கிலே [19]**

என்ற மந்திரம் விளக்குகிறது.

**கடுஞ் சுத்தசைவர்**

திருக்கோலமின்றி, கருத்தால் இறைவனைப்பொருந்தி ஆசைபாசம் வென்று, மலங்களைஅழித்து மெய்யுணர்வு பெற்ற உண்மைச் சைவர் கடுஞ்சுத்த சைவர். தன்னை உணர்ந்து தலைவனை அடையும் செந்நெறியினர். ஐந்து அவத்தை நீங்கியவர்,

ஞானமே பெரிதெனக்கொண்டு, ஆசை, பாசம் அற்று ஞான நிலையில் கிரியைகளை விட்டு இருப்பர். சாயுச்சியம் பெறுவர்.

ஐந்து கோசங்கள், ஆறு ஆதாரங்கள்முதலான ஐந்து பிரிவான சிவ தத்துவங்கள், பாசங்கள் அனைத்தையும் ஒழித்துத் தன்னை அறிந்தவர்.

பதமுத்திகளை எண்ணாது பரமுத்தியை உணர்ந்து பிரணவப் பொருளான இறைவனை எண்ணி உலகத் தொடர்பை விட்டவர். இதனால் கிரியைகளையும் விட்டவர்.பிரணவ நெறி, சாயுச்சியம் சேர்க்கும் என்ற உறுதி உடையவர்.

அது நீ ஆகிறாய் என்ற பொருளுடையதத்துவமசி என்ற மகாவாக்கியப் பொருளுணர்ந்து தன்னையும் மெய்ப்பொருளையும் பிரித்தறிய முடியாப் பெருநிலை எய்தியவர்.

இந்நெறியில் நின்று ஐம்பொறிகளும் செயலற்று அடங்கி ஞான ஒளி, மேல் விளங்குவதை உணர்ந்து பதியோடு ஒன்றி சாயுச்சிய நிலை பெறுவர். திருமூலர்,

சாற்றரிதாகிய தத்துவஞ் சித்தித்தால்
ஆற்றரிதாகிய ஐந்தும் அடங்கிடும்
மேற்றிகழ் ஞானம் விளக்கொளியாய் நிற்கும்
பாற்பர சாயுச் சியமாகும் பதியே [20]

என்ற மந்திரத்தில், கடுஞ்சுத்த சைவர், ஐம்பொறிகள் அடங்கி, விளக்கொளி போல் ஞானம் பெற்றுப் பரசாயுச்சிய நிலை பெறுவர் என்பதைக் குறிப்பிடுகின்றார்.

சைவ நெறியினரே, பக்குவத்துக்கு ஏற்ப, வழிபடும் நிலைமாறுதலுக்கு ஏற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கினையும், மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்ற நான்கு நிலையில் கைக் கொள்வர். இதனடிப்படையில் பல்வேறு படிநிலைகள் அடிப்படையில், பல்வேறு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் நிலைக்கேற்ப, அவற்றைக் கைக்கொள்ளும் முறைக்கேற்ப நால்வகைச் சைவங்கள் அமைந்துள்ளன.

திருமந்திரம் சமயம் சார்ந்த நூல். பண்பாடு ஏன்ற நிலையில், சமயப் பண்பாடு என்பதுசமயங்களில் காணப்படும் ஒழுங்கு, நாகரிகம், வளர்ச்சி மாற்றங்கள் போன்றவைகளின் அடிப்படையில் அமையும். சமயம் சார்ந்த வழிபாட்டு முறைகள், விதிகள், கொள்கைகள் போன்றவை சமயங்களின் புறஒழுங்குகளை அதாவது சரியை கிரியை போன்றவைகளைக் கூறுவனவாக அமைந்து சமயம் சார்ந்த புறப்பண்பாடாக அமையும்.

ஆனால், உடலின் சூக்கும நிலைகளும், உள்ளத்தின் சூக்கும உணர்வுகளும் அவற்றை எழுப்பி உயர்நிலை அடையச் செய்யும் யோக, ஞான நிலைகளும் சமயம் சார்ந்த அகப்பண்பாடாக அமையும். ஆனால், நான்கு வகைச் சைவம் என்பது பொதுநிலையில், சமயத்தின் புறம் சார்ந்த பண்பாட்டு வளர்ச்சியின் ஒருகூறு என்ற நிலையில் புறம் சார்ந்த பண்பாட்டில் குறிப்பிடப்படுகின்றது.

கல்வி, கேள்வி கேட்டமைதல், கல்லாமை போன்றவைகளைச் சமயம் சார்ந்த நிலையில் பெரும்பான்மையாகத் திருமூலர் கூறியிருந்தாலும், சிறுபான்மையாக உலகியல் ஒழுக்கம் சார்ந்த நிலையிலும், இறையியலுக்கு மடைமாற்றம் செய்வதற்குரியதாகவும் கூறுகின்ற நிலையில், புறம் சார்ந்த பண்பாட்டில் குறிப்பிடலாம். மேலும் அந்தணர் ஒழுக்கம், அரசன் கடமை போன்றவைகள், சமயம் சிறக்கத் தேவையான செயல்பாடுகளின் அடிப்படையிலான புறம் சார்ந்த பண்பாடுகளாகத் -திருமூலரால் விளக்கப்பட்டுள்ளன.

திருமந்திரம், சமயச்சாத்திரமாகவும், தோத்திரமாகவும் இருப்பதால், சமயம் சார்ந்த பண்பாட்டுக் கருத்துகளைவிட மிகக் குறைந்த அளவில் ஆனால் அடிப்படையானவை என்ற நிலையில் புறம் சர்ந்த பண்பாட்டுக் கருத்துகள் திருமூலரால் விளக்கப்பட்டு உள்ளன.

## குறிப்புகள்

1. திருக்குறள், 559.
2. திருவள்ளுவர், திருக்குறள், 560.
3. திருமூலர் திருமந்திரம், 95, அரசாட்சி முறை.
4. திருமூலர், திருமந்திரம், 77 அந்தணர் ஒழுக்கம்.
5. திருமூலர், திருமந்திரம், 79 அந்தணர் ஒழுக்கம்
6. திருமூலர், திருமந்திரம், 80 அந்தணர் ஒழுக்கம்
7. திருமூலர், திருமந்திரம், 81 அந்தணர் ஒழுக்கம்
8. திருவள்ளுவர், திருக்குறள், 30.
9. திருமந்திரம், 278, கல்வி.
10. திருமூலர், திருமந்திரம், 301, கல்லாமை.
11. திருமூலர், திருமந்திரம், 299, கல்லாமை
12. திருமூலர், திருமந்திரம், 304, கல்லாமை
13. திருமூலர், திருமந்திரம், 287 கேள்வி கேட்டமைதல்
14. திருமூலர், திருமந்திரம், 464, கருஉற்பத்தி
15. ஊரன் அடிகள், 'திருமூலரும் வள்ளலாரும்', ப.38.
16. திருமூலர், திருமந்திரம், 1412, கடுஞ்சுத்தசைவம்.
17. திருமூலர், திருமந்திரம், சுத்தசைவம், 1395.
18. திருமூலர், திருமந்திரம், 1395, சுத்தசைவம்.
19. திருமூலர், திருமந்திரம், 1408, மார்க்க சைவம்.
20. திருமூலர், திருமந்திரம், 1416, கடுஞ்சுத்த சைவம்.

# 5. சமயம் சார்ந்த பண்பாட்டு நோக்கில் திருமந்திரம்

இறைவன்பால் கொள்ளும் அன்பின் மிக முதிர்ந்த நிலையில் ஏற்படுவது பக்தி. பக்தியுடன் செய்யப்படும் இறைவழிபாட்டு நிலையின் அகம் புறம் தொடர்பான உணர்வுகளையும், ஒழுங்குகளையும் நெறிப்படுத்தி வரையறுப்பது சமயநெறிகள். உள்ளம் பக்குவப்பட்ட நிலையில் பக்தி சிறக்கும். இது, அகத்து எழும் உணர்வுதான். என்றாலும், சமயம் சார்ந்த கடவுட் கொள்கைகளும், புறவழிபாட்டு நெறிகளும், அகம் சார்ந்த பண்பாட்டின் அடிப்படையிலும், புறம் சார்ந்த ஒழுங்குகளின் அடிப்படையிலும் அமைந்துள்ளன. எனவே, சூக்கும நிலையில் உணரும் வழிபாட்டு நிலைகளை, அகம்சார்ந்த சமயப்பண்பாடு என்றும், தூல நிலையில் செய்யும் வழிபாட்டு நெறிகள், கிரியைகள், யந்திரங்கள், உச்சரிக்கும் மந்திரங்கள் போன்றவைகளைப்புறம் சார்ந்த சமயப் பண்பாடு என்றும் கொள்ளலாம். புறம் சார்ந்த சமயக் கிரியைகளையும், மந்திரயந்திர வழிபாடுகளையும் அகம் ஒன்றா நிலையில் செய்யின் ஞானம் விளையாது.

திருமந்திரம், “உபதேசம் என்ற பகுதியை முதலாவதாகக் கொண்டு தொடங்குகின்றது. இப்பகுதி திருமந்திரத்திற்கு முன்னுரை போன்று உள்ளது. இதில் அந்தாதி அமைப்பில் அமைந்த 30 மந்திரங்கள் உள. குரு, சீடனுக்குக் கூறும் அறிவுரையாக உபதேசம் என்ற பகுதி அமைந்துள்ளது. ஓர், உயிர், பிறவி எடுப்பதன் நோக்கம் பிறவியறுக்கவே. மனிதப் பிறவியில் மட்டுமே பிறவா நிலை பெறுவதற்காக முயல முடியும். பிற உயிர்களுக்கு இல்லாச்சிறப்பு மனிதப்பிறவிக்கு மட்டுமே உண்டு. உடம்பு, மனம், அறிவு ஆகிய மூன்றும் பெற்றவன் மனிதன். உடல் தேவையைவிட, மனத்தேவையே மனிதனுக்கு அதிகம். மனம்தான் அதிக அவாவினால் அனைத்துப் புலன்களின் இன்பங்களையும் அளவுக்கதிகமாக, தேவைக்கதிகமாகச் சுவைக்கத் துடித்துப் பல வகைகளில் முயலத் தூண்டுகிறது. விலங்குகள் உண்ணல், உறங்கல் மட்டுமே செய்கின்றன. விலங்குகளுக்குச் சமய வாழ்வு இல்லை. பிறவா நிலையைப் பெறுவதற்கான அறிவும் முயற்சியும் மனிதனுக்கு மட்டுமே உண்டு. இதற்குரிய பக்குவம் பெற இறைவன் குருவாக வந்து துணைசெய்வான். முக்தி இன்பமே மனிதனின் இலக்கு.

இலக்கினை அடைய பலபடி நிலைகள் உள. மனிதருள்ளும் எல்லோருக்கும் ஒரேவகையில் பக்குவநிலை அமைவதில்லை.

உயிர்களின் மீது இறைவன் கருணை கொண்டு உயிர்களின் பக்குவத்துக்கேற்ப குருவாய் நிலவுலகில் தோன்றி ஆன்மாக்களுக்குத் திருவடி ஞானம் பதிப்பித்து உள்நின்று மனம் மெய்களை உருக்கிக் களிம்பாகிய பாசங்களைஅறுத்து இன்பம் அருளுவான். இதற்கு உயிர்கள் ஞானம் பெறவேண்டும். முதலில் அதற்குரிய தகுதி பெறவேண்டும். தகுதி பெறத்தடையாக இருப்பது உலகநாட்டமே. இதற்கு அருட்கண் விழிப்படைய வேண்டும். இதற்கு அன்பின் முதிர்வால், அருளோடு கூடிய பக்தியை வளர்த்து ஆணவத்தை ஒழித்தால் இறைவனின் பவழம் போல் திருவடியைப் பளிங்கு போன்ற சீவனில் பதிப்பான். பசுவினைப் பதி அணுகினால் பாசம் செயல்பட முடியாது. இதனைத் திருமூலர், உபதேசப் பகுதியில்,

**விண்ணின்றிழிந்து வினைக்கீடாய் மெய் கொண்டு**
**தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து**
**உண்ணின்று உருக்கியொர் ஒப்பிலா ஆனந்தக்**
**கண்ணின்று காட்டிக் களிம்பறுத்தானே [1]**

**களிம்பறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி**
**களிம்பறுத்தான் அருட்கண் விழிப் பித்துக்**
**களிம்பணு காத கதிரொளி காட்டிப்**
**பளிங்கிற் பவழம் பதித்தான் பதியே [2]**

என்று விளக்குகிறார்.

மூங்கிலினுள் தீ மறைந்துள்ளது போல் உடம்பினுள் உயிர்க்குயிராய் இருப்பவன் இறைவன். தாய், சேயின் அழுக்கை மாற்றுவதுபோல் உயிர்களின் அழுக்கை மாற்றுவான். குருவின் உபதேசத்தால் உந்தியில் உதிக்கும் சோதி, தத்துவமாகிய காட்டை அழிக்கும். குரு உபதேசத்தால் பாசம் நீங்கும்.

சீவனும் பாசமும், சூரிய காந்தக் கல்லும் பஞ்சும் போல்வன. சூரியனின் வெப்பம் இருந்தால்தான் சூரியகாந்தக் கல்லால் (சீவன்) பஞ்சைச்சுட்டு (மலம்) எரிக்கமுடியும். குரு உபதேசத்தால் ஆணவம், கன்மம்,மாயை, மாயேயம், திரோதாயி என்ற ஐம்மலப் பாசங்களை அறுத்து அருளுபவன் இறைவன்.

புலன் நுகர்வால் வழியறியாமல் வெள்ளத்தில் அகப்பட்டதுபோல் சீவன் மயங்கி நிற்கும் பொழுது குருபரன் தெளிவுகாட்டி அழைத்துச் செல்வான்.

யோகியர், உடம்புடன் கூடி இருந்தாலும் உலக நுகர்வு அற்று, விழிப்பு நிலையிலேயே துரிய நிலையடைந்து உடலின்

அறிவு, செயலின்றி இருப்பர். சித்தர்கள் இவ்வுலகிலேயே முத்தி நிலையில் இருப்பர்.

சித்தர்கள் தத்துவங்களை ஏணியாகக் கொண்டு, தத்துவங்களோடு கூடியிருந்தே முத்தி நிலையில் எல்லாவற்றையும் சிவனாகக் கண்டனர் என்பதை,

**முப்பதும் ஆறும் படி முத்தி ஏணியாய்**
**ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்குச்**
**செப்பரிய சிவங் கண்டுதான் தெளிந்து**
**அப்பரிசாக அமர்ந்திருந் தாரே** [3]

**சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்**
**சத்தமுஞ் சத்த முடிவுந் தம்முள் கொண்டோர்**
**நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர**
**முத்தர் தம் முத்தி முதல் முப்பத்தாறே** [4]

என்ற திருமூலர் வாக்கு விளக்குகின்றது. தத்துவங்களைக் கடந்து நாதாந்த நிலையில் பேரின்பம் அடைந்து சிரசின் மேல் திருக்கூத்தைக் காணும் பேறு பெற்று மவுனநிலை எய்தி, ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந்தடக்கி இருப்பர். உப்பின் உருவம் நீரில் கரைந்து கலந்து அடங்கியிருப்பது போலச் சீவனின் தூல சூக்கும உருவங்கள் பரம் பொருளினுள் அடங்கும். ஆகாயத்தில் அடங்கிய கடல் நீரில் உப்பு ஏறாதது போல் சீவனின் குணங்கள் இறைவியாபகத்தால் தூய்மை பெறும். சூரிய வெப்பத்தால் கடல் நீரின் உப்பு, காணும் பொருளாவது போல், ஆன்மாவில் வெப்ப ஆற்றல் உடல் சக்தியாக உருவாகி, உந்திக் கமல சூரியனைச் சிரசுக்கு ஏற்றும் பொழுது ஒளியுடல் பெறுகிறது என்பதனை, உபதேசப் பகுதியில் உள்ள,

**அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்**
**உப்பெனப் பேர் பெற்று உருச்செய்த அவ்வுரு**
**அப்பினில் கூடிய தொன்றாகு மாறு போல்**
**செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே** [5]

என்ற மந்திரத்தால் அறியலாம். பக்குவப்பட்ட உயிர்கள் இறைவனின் திருவடியில் அடங்கும். திருவடியே முத்திக்கு வழியும், புகலிடமும் ஆகும். இதற்குரிய தெளிவு குருநாதனால் உண்டாகும். புலன்களைத் தன் வசமாக்கி, ஆன்மாவை இறைவழி நிற்கச் செய்ய குருவின் உபதேசத்தின் படி அறிவால் ஒருமுகப்பட்டு ஒளி பெறலாம்.

**தானே புலன் ஐந்தும் தன் வசமாயிடுந்**
**தானே புலன் ஐந்தும் தன்வசம் போயிடும்**

தானே புலனைந்தும் தன்னில் மடை மாறும்
தானே தனித் தெம்பிரான் தனைச் சந்தித்தே [6]

என்று உலக போகம் நீக்கி இறை போகத்திற்கு மடைமாற்றம் செய்ய வேண்டும். அதற்கு குரு உபதேசம் வழி காட்டும். இதனால் சீவன் பிறவியறுக்கலாம். இதுவே உயிர்களின் இலக்கு என்பதைச் சுருக்கமாக முன்னுரை போல் 'உபதேசம்' என்ற பகுதியில் கூறிவிட்டு, இப்படி நிலைகளை, விரிவாக நூல் முழுமைக்கும் விரித்துரைக்கிறார் திருமூலர்.

இவ்வாறு விரித்துரைக்கும் பொழுது உலகம், உயிர், இறை, பாசம் போன்றவைகளையும் விளக்குகிறார். உலகம், பாசம் இவற்றை நீக்கி இறையை அடைய உயிர்கள் உள்ளும் புறமும் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும். பின், ஞானம் பெறும் பக்குவத்தால் பெறும் நற்பயன்கள் போன்றவைகளைக் கூறி முடிக்கிறார் திருமூலர். இந்நிலையில் திருமூலர் கூறும் செய்திகள் புறம் சார்ந்த சமயப் பண்பாடுகளாகவும், அகம் சார்ந்த சமயப் பண்பாடுகளாகவும் அமைகின்றன.

# 1. அகம் சார்ந்த சமயப் பண்பாடு

மெய்ப்பொருளை உணர்ந்து ஒன்றாதலுக்கான வழிமுறைகளையும், அவற்றிற்கான விளக்கங்களையும், புறம் சார்ந்த சமயப் பண்பாடாகக் கொண்ட நிலையில் அவற்றின் பயனாய் அடையும் முத்திநிலை உணர்வும், அதைச் சார்ந்த அகவுணர்வுகளாகிய மலபரிபாகம், இருவினையொப்பு, சத்திநிபாதம், முத்திவகைகள், தசகாரியம், முத்தி பெற்றோர் தன்மை, போன்றவைகளும் உணர்வு நிலைச் சார்ந்த சமயச் செய்திகள் என்பதால், இவற்றை அகம் சார்ந்த சமயப் பண்பாடாகக் கொள்ளலாம்.

இருள் நீக்கி, இன்ப ஆக்கத்திற்குக் கருவிகளாக, மணி, மந்திரம், மருந்து என்ற மூன்றனைக் கூறுவர். மணி என்பது லிங்கம், மந்திரம் என்பது திருவைந்தெழுத்து, மருந்து என்பது திருநீறு என்பர். இதில் மந்திரம் என்ற திருவைந்தெழுத்தும், 'ஓம்' என்ற ஓங்காரப் பிரணவமாகிய அசபையும், உச்சரிப்பவரின் சித்தத்தைச் சுத்தம் செய்து, திருவருளில் திளைக்கச் செய்யும் நுட்பம் உடையன. எனவே, இவற்றை உள்ளம் ஒன்றி ஓதுவார் அகத்தெழு மெய்யுணர்வைத் திருமூலர் உணர்த்துவதை நோக்க வேண்டும்.

**பஞ்சாக்கரம்**

இறைவனை அடைவதற்குரிய மந்திரம் பஞ்சாக்கரம். வேதாகமங்கள் முழுவதும் ஐம்பது எழுத்துகளில் அடங்கும். அவ்வெழுத்துக்கள் அனைத்தும் பஞ்சாக்கரத்துள் அடங்கும். அஞ்செழுத்து பிரணவத்துள் ஒடுங்கும்.

சொற் பிரபஞ்சமாகிய மந்திரம், பதம், வன்னம் மூன்றையும் "ஓம்" என்பதனுள் அடக்கலாம்.

**ஓம் (பிரணவம்)**

சமட்டிப் பிரணவம்
ஓம்

வியட்டிப் பிரணவம்
(ஐந்து கூறாக்கிக் கூறல்)
அகாரம் - அகங்காரத்தை இயக்கும் - நான்முகன்
உகாரம் - புத்தியை இயக்கும் - திருமால்
மகாரம் - மனத்தை இயக்கும் - உருத்திரன்
விந்து - சித்தத்தை இயக்கும் - மகேசுவரன்
நாதம் - புருடனை இயக்கும் - சதாசிவன்

ஐங்கூறுகளும் ஐந்து எழுத்துக்களால் உள்ளத்தில் உணர்வை ஏற்படுத்தும். இறைவனை அடையச் செய்வதும், திருவருள் ஆற்றலை விளக்குவதும் ஐந்தெழுத்து மந்திரம்.

| | |
|---|---|
| சி - சிவன் | சிவாய நம என்ற ஐந்தெழுத்தை |
| வ - சத்தி | அதன் பொருளை உணர்ந்து |
| ய - உயிர் | ஓதினால், செம்பில் களிம்பு போல் |
| ந - திரோதம் | ஆன்மாவின் ஆணவ அழுக்கு |
| ம - மூலமலமாம் ஆணவம் | நீக்கப் பெறும் |

சிவசிவ என்ற அதி சூக்கும பஞ்சாக்கரம் சித்தம் ஒருக்கும். துன்பங்கள் நீங்கும், திருவடிப் பேற்றினை நல்கும். எல்லா மறைகளுக்கும் முதல்வனாம் இறைவனின் பெயரும் பொருளுமாக 'சி' அமைந்துள்ளது. சிவாய நம என்று ஓதி சித்தத்தினைச் சிவனுக்கு உரியதாக்க வேண்டும். சித்தம் ஒருக்கும் நிலையான, சிவ சிவ என்று எண்ணிக் கொண்டிருந்தால், பேரின்பப் பெருவாழ்வு தரும்.

திருவைந்தெழுத்து, பிறப்பினுக்குரிய எழுத்தை அழிக்கும் படைக்கலம், என்பதைத் திருமூலர்.

**பழுத்தன ஐந்தும் பழமறையுள்ளே**
**விழித்தங் குறங்கும் வினை யறிவாரில்லை**
**எழுத்தறிவோ மென்று உரைப்பர்கள் ஏதர்**
**எழுத்தை யழுத்தும் எழுத்தறி யாரே** [7]

என்று குறிப்பிடுகிறார்.

பிறவிக் கடலைக் கடக்கும் அரிய கலமாக உள்ள பஞ்சாக்கரத்தை நான் சிவமாகிறேன் என்ற பொருள் படக் கூறினால் உடம்பு அருள்மயமாகும்.

ஐந்தெழுத்தை, "நான் சிவமாகிறேன்" என்னும் பொருள்பட ஓதினால் திருவருளோடும் சிவத்தோடும் ஒன்றாகலாம்.

திருமூலர், ஒன்பதாந் தந்திரத்தில், தூலபஞ்சாக்கரம் (பரிய ஐந்தெழுத்து) சூக்கும பஞ்சாக்கரம் (நுண்மை ஐந்தெழுத்து) அதிசூக்கும பஞ்சாக்கரம் (மீ நுண்மை ஐந்தெழுத்து) என்ற மூன்று தலைப்புகளில் திருவைந்தெழுத்தின் சிறப்புப் பற்றிக் கூறுகிறார். பஞ்சாக்கரம் உடம்பில் நிற்கும் முறை நமசிவாய என்ற தூல பஞ்சாக்கர நிலையாகிய கிரியை முறை. சிவன், அருளாற்றலோடு கூடி எல்லா இடங்களிலும் பொருள்களிலும் கலந்து ஐந்தொழில் ஆற்றுகிறான். தில்லையில் பஞ்சாக்கர வடிவில் நடனமாடுகிறான். உலகப் பற்றுடையவர் நமசிவாய என்று ஓதலாம். நாளடைவில் அதுவே சிவாய நம என்று ஓதும் பக்குவ நிலைக்கு இட்டுச் செல்லும்.

| | | |
|---|---|---|
| நமசிவாய | - | தூலபஞ்சாக்கரம் |
| சிவாயநம | - | சூக்கும பஞ்சாக்கரம் |
| சிவாய சிவ சிவ | - | அதிசூக்கும பஞ்சாக்கரம் |

என்று மூன்று நிலைகளில் திருமூலர் பஞ்சாக்கரத்தைக் கூறுகிறார்.

அதிசூக்கும பஞ்சாக்கரத்தைச் சித்தத்தில் ஒருநிலைப் படுத்திப் பலமுறை எண்ணினால் அச்சம் நீங்கி ஆனந்தம் உண்டாகும். சிவாய சிவ, சிவாய சிவ என்றும் இதைக் கூறுவர்.

சூக்கும பஞ்சாக்கரம் ஆன்மாவைச் சிவயோகத்திலும், அதிசூக்கும பஞ்சாக்கரம் ஆன்மாவைச் சிவபோகத்திலும் நிறுத்தும்.

**ஓதிய நம்மலம் எல்லாம் ஒழித்திட்டு அவ்**
**ஆதிதனை விட்டு இறையருள் சத்தியால்**
**தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்**
**ஓதுஞ் சிவாய மலமற்ற உண்மையே [8]**

என்ற மந்திரத்தில் நம என்ற மலங்கள் ஒழிந்து திருவருளாற்றலுடன் கூடி, சிவ என்ற சிறப்பு எழுத்துக்களை அமைக்கும் திருவருள் செறிவு உண்டாகும் என்று திருமூலர் கூறுகிறார்.

சிவய சிவ என்ற அதி சூக்கும பஞ்சாக்கரமே, யகாரம் அருளால் விழுங்கப் பெற்று சிவசிவ என்றாகும் என்று திருவாவடுதுறை ஆதின வெளியீடு. 2719 ஆம் பாடல் உரையில் உள்ளது. ஆக சிவய சிவ எனும் அதி சூக்கும பஞ்சாட்சரமே சிவசிவ என்றும் அமையும் எனலாம்.

சித்தர் நெறியில் காரண பஞ்சாக்கரம், மகாகாரண பஞ்சாக்கரம் என்றும் கூறப்படுகிறது. சிவ என்றும் சி என்றும் அழுந்தும் பஞ்சாக்கரத்தில், 'சி' என்ற முத்தி பஞ்சாக்கரத்தை நாயோட்டு மந்திரம் என்று திருமூலர் கூறுவதாகச் சில பதிப்புகளில் (கழகப் பதிப்பு) இப்பாடல் உள்ளது. சில பதிப்புகளில் இப்பாடல் இல்லை.

### சூன்ய சம்பாஷணை

ஞானப் பொருளைப் பக்குவப்பட்டவர்களுக்கு அறிவிக்கும் நிலையில், அவர்களை உள்முகமாகச் சிந்திக்கத் தூண்டி, நிட்டை கூடலுக்கு வழி வகுக்கும் திருமூலரின் திருமந்திரம் தத்துவ நுட்பங்கள் புதைந்துள்ள ஞானச் சுரங்கம்.

குறியீட்டு மொழி, மறைபொருள், புதைபொருள், ஆழ்பொருள் உட்பொருள்கூற்று, இரக்கமற்றமொழி, இரகசிய மொழி, இரட்டைமொழி, உறங்கும்மொழி, சந்திமொழி,

சந்தியாமொழி, சந்தபானஷ, சந்திபாஷை, கமுக்கமொழி, திரையிட்டமொழி, தலைகீழ்மொழி, மயக்கு மொழி, முரண்பாட்டு மொழி என்றெல்லாம் கூறப்படுகின்ற மறை பொருள் கூற்று என்பது, கூறவந்த கருத்தைப் புதைபொருளாகக் கூறி மேலோட்டமாகச் சாதாரண பொருளைக் கூறுவது. நம்முன்னோர்கள், ஞானியர், மகான்கள், ஞானப் பொருளை வெளிப்படையாகக் கூறாமல் மறைத்துக் கூறினர். வேதமரபினர், வைதிக மரபினர், சித்தமரபினர் அனைவரும் மறை பொருளாகக் கூறினர்.

திருமூலர், சூன்ய சம்பாஷணை என்று தனியாக அதுவும் திருமந்திரத்தின் இறுதியில், ஒன்பதாந்தந்திரத்தில் உள்ள 22 தலைப்புகளுள் 17 ஆவதாக 70 பாடல்களில் கூறியுள்ளார்.

திருமந்திரத்தின் சில பதிப்புகளில் சூன்யசம்பாஷணை என்ற தலைப்பும்,[9] சில பதிப்புகளில் மறைபொருள் கூற்று என்ற தலைப்பும் உள்ளது.[10] அதாவது ஞானப்பொருளை மறைவாகப் பேசுவது என்ற விளக்கம் சூன்ய சம்பாஷணை என்ற தலைப்புள்ள நூலில் உள்ளது. அவ்வாறெனில், சூன்யசம்பாஷணை மறைபொருளாகக் கூறுவது என்ற பொருளில் அமைக்கப் பட்டிருக்கின்றதா? அல்லது சூன்யத்தைப் பற்றிய பேச்சா? என்று ஆராய்தல் வேண்டும். இதற்கு முதலில் சூன்யம் என்றால் என்ன? மறைபொருள் கூற்று என்றால் என்ன? திருமந்திரத்தில் மறைபொருள் கூற்று உள்ளதா? அதை எங்கெல்லாம் திருமூலர் அமைத்து உள்ளார்? சூன்ய சம்பாஷணையை எங்கு அமைத்து உள்ளார்? சூன்ய சம்பாஷணையில் கூறப்படும் கருத்துகள் யாவை? ஒன்பதாந் தந்திர இறுதியில் சூன்ய சம்பாஷணையைக் கூறக் காரணம் என்ன? என்பனவற்றைப் பற்றிச் சிந்திக்கவேண்டும்.

**சூன்யம் என்றால் என்ன?**

சித்தர்கள் வெட்ட வெளி என்று குறிப்பிடும் சூன்யத்தின் மூன்று நிலைகள் முப்பாழ். பிரணவ மந்திரத்தை உச்சரிக்க, உச்சரிக்க முப்பாழில் நின்று தத்துவமசி (அது நீயே ஆகிறாய்) என்கிற மகா வாக்கிய நிலையை அடையலாம். அதாவது சீவன் சிவனாகிறது. எனவே, சூன்யம் என்பது எல்லையற்ற பரம் பொருள் வெளியைக் குறிக்கும். சூன்யம் என்பது எதுவும் இல்லாமையன்று. இது ஓர் அனுபவம்.

சூன்யத்தை யோக நிர்வாணம், ஞான நிர்வாணம், நிர்வாணம், நாதாந்த வெளி என்றெல்லாம் குறிப்பிடுவதோடு அகத்துள் ஆகாசம், அகவெளி, ஆகாசத்துள் ஆகாசம் இராப்பகல்

அற்ற இடம் (பிறப்பு இறப்பு அற்ற இடம்), காலக்கடுவெளி, கருவூரற்றவெளி, சரசமான வெளி, சும்மா, சிதாகாசம், சிவத்துள் ஆகாசம், சொல்லிறந்த தூவெளி, தூவெளி, தனிவெளி, பரவெளி, பாழ்வெளி, வெட்டவெளி, வெளிஅறிவுப் பெருவெளி, வெளியுள்வெளி, வேதாந்த வெளி, வீடுபேறு என்றும் கூறுவர். இருள் ஒழித்து ஒளிரும் இடம் இது.

**மறைபொருள் கூற்று என்றால் என்ன?**

வேதமரபினர், வைதிக மரபினர், சித்தர்கள் போன்றோர் சமயத்தத்துவங்களை வெளிப்படையாகக் கூறாமல், மறைபொருளாக, புதைபொருளாக, ஆழ்பொருளாக, உட்பொருளாகக் கூறுவர். காரணம், பக்குவப்பட்டவர்கள் மட்டுமே உணர்ந்து பின்பற்ற முடியும் என்பதால். திருமந்திரத்தில் பல இடங்களில் மறைபொருள் கூற்றாகப் பலபாடல்களைத் திருமூலர் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கூறியுள்ளார். சான்றாகச் சிலவற்றைக் கூறலாம்.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தில் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே** [11]

என்ற மந்திரத்தில், உலகப் பொருள் நாட்டம் இருந்தால் இறைவனின் அருளாற்றல் புலப்படுவதில்லை என்பதை மரத்தால் செய்யப்பட்ட யானையை வைத்து விளக்குகிறார்.

**மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள**
**வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்**
**நான்றவிம் முட்டை யிரண்டையும் கட்டியிட்டு**
**ஊன்றி யிருக்க உடம்பழி யாதே** [12]

மூன்று முடிச்சுகள் உடம்பில் உள. சந்திரகலை, சூரியகலை பாம்புபோல் உள்ளன. இடப்பால், வலப்பால் வழிச்செல்லும் மூச்சை அடக்கின் உடவழியாது. பன்னிரண்டு அங்குலம் ஓடுவது பிராணன். சந்திர சூரியனாகிய இரு கண்பார்வையினையும் மேல் நோக்கிச் செலுத்திப் பிரம்மரந்திரத்தை அடைந்து கேவல கும்பக நிலை அடைந்தால் பிராணவயத்தால் உடம்பு அழியாது என்கிறார்.

**சூன்ய சம்பாஷணை அமைந்துள்ள இடம்**

திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரத்தில் 17ஆவது தலைப்பாகச் சூன்ய சம்பாஷணை கூறப்பட்டுள்ளது. இதற்கடுத்து ஐந்து தலைப்புகள் உள்ளன. அவை, 'மோனசமாதி' (சகசநிட்டை

எனப்படும் மௌனத்தில் ஒடுங்கும் நிலை) 'வரையுரைமாட்சி' (ஆன்மா தன்னை உணர்ந்து சிவனோடு பொருந்தி இருக்கும் எல்லையற்ற பெருமை) 'அணைந்தோர் தன்மை' (மோனத்தில் பொருந்தியோர் இயல்பு) தோத்திரம் (இறைவனைப் புகழ்தல்) சர்வவியாபி (எங்கும் எல்லாவற்றிலும் நிறைந்து இருப்பவன்) என்பன. ஆக, படிப்படியான ஞான வளர்ச்சியைக் கூறி இறுதியில் ஞானத்தின் ஞானமாம் சாயுச்சிய பரமுத்தியைக் கூறுவதாகச் 'சூன்ய சம்பாஷணையைக் கூறி, அதன் விளைவுகளையும் சிறப்பையும் பின் ஐந்து தலைப்புகளில் கூறி முடிப்பதால், சூன்ய சம்பாஷணை திருமந்திரத்திற்கு முடிவுரை போன்று உள்ளது.

செய்யுள் என்பது எதுகை மோனை நயம் ஒன்றையே கருத்தில் கொண்டு அமைப்பது, நகைச் சுவைக்காக அமைப்பது, கருத்துக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து அமைப்பது, இரட்டுற மொழிதல், சிலேடை, இறைச்சி, உள்ளுறை, அணிநயங்கள் போன்றவைகளைக் கொண்டு அலங்காரமாக அமைப்பது போன்ற நிலைகளில் ஆசுகவி, மதுரகவி, சித்திர கவி, வித்தார கவி என்று வகைப்படுத்தப்படுகின்றது. சமயம் சார்ந்த பாடல்களில் அதிகமாக ஞானப் பொருளை மறைவாகப் பேசும் அமைப்பு உள்ளது.

**சூன்ய சம்பாஷணை வெட்ட வெளிப் பேச்சே**

சூன்ய சம்பாஷணையில் முதல் பாடலே வெளிப்படையாகப் பொருளைக் கூறுவதாக உள்ளது. மனித உடல் சூதாடும் பலகை போன்றது. ஐந்து இந்திரியங்கள் சூதாடும் கருவிகளாக இருந்து 51 அக்கரங்களை உடைய ஆதாரங்களில் பொருந்தி சீவன்செயல்படுவது, மாயச் சூதாக மறைவாக உள்ளது என்பதை,

**காயம் பலகை கவறைந்து கண்மூன்றாய்**
**ஆயம் பொருவதோர் ஐம்பத் தோரக்கரம்**
**ஏய பெருமான் இருந்து பொருகின்ற**
**மாயக் கவற்றின்மறைப்பறியேனே** [13]

என்ற முதல் மந்திரம் கூறுகிறது.

உடல், தத்துவங்களைப் பற்றியபோது, சீவன் உடலில் இருந்தால்தான் உடல் இயங்கும். சீவன், சிவத்தைப் பற்றினால், சூக்கும நிலையில் நாதாந்தம் உணரலாம். இரண்டும் கண்ணுக்குத் தெரியாத இயக்கமே. சீவன் செயல்படுவதும் அதனை இயக்கும் சிவன் செயல்படுவதும் மாயமாக உள்ளது. சூக்குமமாக ஆதாரங்கள் உள்ளன. இரண்டாவது பாடலும், இறைவனை அடையத்தடையாக மலங்களாகிய களைகள் உள்ளன. அவை அகன்றால்

இறைவிளங்கும் என்று வெளிப்படையாகவே கருத்தைக் கூறுகின்றதாக உள்ளது.

இறைவுணர்விற்குத் தடை, தளை, உலகப்பற்று முதலியன. இவற்றை நீக்கி ஞான ஒளிபெறக் காமாதி அறு பகைகளைக் கடிய வேண்டும். மனம் அறிவில் அடங்க நல்ல எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். மனம் புறம் போகக் கூடாது. உலக இன்பமாம் எட்டிப் பழத்தை நாடாது இறையாம் கனியை நாட வேண்டும். சிற்றின்பத்தை நாடக்கூடாது. இந்திரிய வழிச் செல்லக்கூடாது. மலமாம் புல், புதர்கள் சித்தத்தை மறைக்காமல் தூய்மை படுத்தினால் இறை ஒளி விளங்கும். உடலில் கலந்துள்ள இறைவனை உணர்ந்து ஒளி நிலை பெறத் தீமை, புகை, வஞ்சனை போன்றவைகள், பொருந்தாமல் நீக்கிச் சமன் செய்ய முயல வேண்டும் என்பதை 70 பாடல்களுள் 12 பாடல்கள் கூறுகின்றன. இவை, வெளிப்படையாகச் சகஸ்ரதளத்தை அடைவதைக் குறிப்பிடாவிட்டாலும், அதற்கு அடிப்படையானவைகளைக் குறிப்பாகச் சுட்டுகின்றன. 45ஆவது பாடல் ஞானத்தால் இறைவனை உணரலாம் என்று கூறுகிறது. அப்பாடல்,

**கயலொன்று கண்டவர் கண்டே இருப்பர்**
**முயலொன்று கண்டவர் மூவரும் உய்வர்**
**பறையொன்று பூசல் பிடிப்பா னொருவன்**
**மறையொன்று கண்ட துருவம் பொன் ஆமே** [14]

என்று அமைந்துள்ளது.

உலக இன்பமாம் கயல்மீனைக் காண்பவர் பிறவிக்கு மீண்டும், மீண்டும் உட்படுவர். சிவமாகிய முயலை அடைய விரும்பி சரியை, கிரியை, யோக நெறிகளில் படிப்படியாக முயலுகின்றவர் படிப்படியான பக்குவ நிலையினைப் பெற்று ஞானத்தால் இறைவனை அடைவர் என்று குறிப்பிட்டுள்ள திருமூலர், 14 பாடல்களைத் தவிர மீதம் உள்ள 56 பாடல்களில் சகஸ்ரதளத்தை அடைந்து பேரின்பம் பெறவேண்டும் என்பதை வெளிப்படையாக வலியுறுத்துகிறார்.

மறைபொருளாகக் கூறுவது மட்டும் திருமூலரின் நோக்கமாக இருந்தால், திருமந்திரத்தில் பல இடங்களில் பரவலாகக் கூறியுள்ளது போல் இப்பாடல்களையும் பரவலாகக் கூறி இருப்பார். தனியாக 70 பாடல்களைக் கூற வேண்டியதில்லை. மேலும், இந்த 70 பாடல்களில் 56 பாடல்களாகியபெரும் பான்மையான பாடல்கள்வெட்டவெளியைப் பற்றியே வெளிப்படையாகப் பேசுகின்றன. மேலும், திருமந்திரத்தின் முடிவுரை போன்ற இப்பகுதியில் உயிர்களின் குறிக்கோளாகிய வெட்ட வெளி

அடைதலைக் குறிப்பிடுவது இன்றியமையாதது. இதை அடைவதற்கான வழிமுறைகளை முன் உள்ள பகுதிகளில் கூறிவிட்டு, அவற்றின் பயனை இறுதியில் கூறியுள்ளார்.

எனவே சூன்ய சம்பாஷணை மறைபொருளாகக் கூறுவதற்காக அமைக்கப்படவில்லை. சூன்யமாகிய வெட்ட வெளியைப் பற்றிப் பேசுவதாக அமைந்துள்ளது எனலாம். திருமந்திரத்தின் நோக்கம் முற்றுப்பெறும் முடிவுரையாக உள்ளது. எனவே, மறைபொருள் கூற்று என்று தலைப்புக் கொடுப்பதைவிட, சூன்யசம்பாஷணை (வெட்ட வெளி பற்றிய பேச்சு. சூன்யம் பற்றிய உரையாடல்) என்று தலைப்புக் கொடுப்பதே பொருத்தமானது எனலாம். சகஸ்ரதளம் அடைவதை வலியுறுத்தும் நிலையில் உள்ளசூன்ய சம்பாஷணை பாடல்களுள் ஒரு சிலவற்றை நோக்கலாம்.

ஆன்ம ஞானம் பெற, வைராக்கியத்தோடு, ஞானசாதனையும் இன்றியமையாது வேண்டப்படும் என்பதை,

**மூங்கில் முளையில் எழுந்ததோர் வேம்புண்டு**
**வேம்பினில் சார்ந்து கிடந்த பனையிலோர்**
**பாம்புண்டு பாம்பைத் துரத்தித் தின்பார் இன்றி**
**வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே** [15]

என்று, மனமாகிய மூங்கில் முளையினின்று தோன்றிய வைராக்கியமாகிய வேம்பு உண்டு. அவ்வைராக்கியமாகிய வேம்பில் பொருந்தி இருந்த முதுகந்தண்டாகிய பனைமரத்தில் குண்டலினியாகிய பாம்பு உள்ளது. கீழே சுருண்டு கிடக்கும் குண்டலினியாகிய பாம்பை மேலே செலுத்தி அமுதம் உண்பாரின்றி வைராக்கியமாகிய வேம்பு பயன் தராது கெட்டுவிடும் என்று திருமூலர் கூறுகிறார்.

மலையாம் சிரசில் ஒளியாம் மழை பெய்ய, சீவனாம் மான்குட்டி, சிரசின் மேல் துள்ள, சகஸ்ரதளமாம் குலையிலிருந்து இறையாம் கனி உதிர, கொல்லன்உலைக்கள இரும்புபோல் ஒளியாய் விளங்கும் என்பதை,

**மலைமேல் மழை பெய்ய மான்கன்று துள்ளக்**
**குலைமேல் இருந்த கொழுங்கனிவீழ**
**உலைமேல் இருந்த உறுப்பெனக் கொல்லன்**
**முலைமேல் அமிர்தம் பொழிய வைத்தானே** [16]

என்ற மந்திரம் குறிப்பிடுகின்றது.

மூச்சை உள்ளிழுத்து வெளிவிடலாகிய உழவினைச் செய்ய இரண்டு கடாக்களாகிய இரேசகம், பூரகம் என்பவை உள்ளன.

இரண்டினையும் மேய்த்து நடத்த உயிர் ஒன்றுள்ளது. அவ்வுயிர் இரண்டு மூச்சினையும் இருத்திப் பிடித்தால் கும்பகமாகும். இரண்டும் ஒன்றாகி மேலேற ஒளி பெறலாம் என்கிறார் திருமூலர்.

இரண்டு கடாவுண்டு இவ்வூரி னுள்ளே
இரண்டு கடவுக்கும் ஒன்றே தொழும்பன்
இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கில்
இரண்டு கடாவும் ஒரு கடா வாமே [17]

பிரணவத் தோணி ஏறிச் சிரசின்மேல் சென்று இருள் கொடுத்து ஒளி பெறுதலாகிய வாணிபம் செய்து இனிய கனியாம் சந்திரமண்டல ஒளியில் ஆனந்தம் பெறுவான் சீவன் என்பதை,

தோணி யொன்றேறித் தொடர்ந்து கடல் புக்கு
வாணிபஞ் செய்து வழங்கி வளர்மகன்
நீலிக்கிறையுமே நெஞ்சின் நிலை தளர்ந்து
ஆலிப்பழம் போல் அளிக்கின்ற அப்பே [18]

என்று கூறுகிறார்.

இவ்வாறு, சூன்யத்தை உணர்ந்து வெட்ட வெளியை அடைய வேண்டும் என்பதை 56 மந்திரங்களில் சூன்ய சம்பாஷணையில் வெளிப்படையாகத் திருமூலர் கூறுகிறார்.

### குறியீடுகளின் பயன்பாடு

பெயர், ஊர், மந்திரங்கள், புராணங்கள், வழிபாட்டு நெறிகள், போன்றவைகள், குறியீடுகளின்வழி, அதாவது பரிபாஷைகளின்வழி மறைவாகக் கருத்துகளைக் கூறும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. இவை, எழுத்து, சொல், பொருள், தொடர் என்ற அமைப்பில் குறியீடுகளாக உள்ளன. சான்றாக குரு, குமரன், குகன், சுப்பிரமணியர் போன்ற பெயர்களைக் கூறலாம்.

குரு = ஒளி (அஞ்ஞான இருளை ஒழித்து ஞானம் தருபவர்)

குமரன் = இருளைச் சாகடித்து மெய்ஞ்ஞான ஒளி தருபவன்.

குகன் = உள்ளமாகிய குகையில் ஒளியாய் இருப்பவன்

சுப்பிரமணியர் = விசுத்தியாகிய இருதய தானத்தில் இடது புறத்தில் 6 தலைநாடி உள்ளது. இது சுப்பிரமணியம். புருவ மத்தியில் பட்டையுள்ள ஒளியுடையமணி

மனோன்மணி = குண்டலினி சக்தி

நந்தி = சுழுமுனை, சுவாசம், கைலாயம், வைகுண்டம், பிரம்மலோகம் அனைத்தும் நம் அகத்து உள்ளேயே உள்ளவை.

அ = பிரம்மா, உ=மால், ம=சிவன், மூவரும் உறையும் இடம் உள்ளம். மேலும் புராணங்கள் குறியீட்டு விளக்கங்களாக அமைந்துள்ளமையைத் திருமந்திரம் இரண்டாம் தந்திரம் விளக்குகிறது. சான்றாக, முப்புரம் எரித்தல் என்பது மும்மலக்கோட்டையை அழித்தல், அறியாமையாகிய அந்தகாசுரனை, ஞானமாகிய சூலங்கொண்ட அழித்தல் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

புராணம் என்பது பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருப்பது. புரா=பழைமை, ந=புதுமை, இலக்கியங்களில், புராணக் கதைகள், வருணனையாகவும், சமயப்படிமக் கருத்தாகவும், இலக்கிய விளக்க உத்தியாகவும் பயன்படுகின்றன. ஆரியர் வருகைக்குமுன்பே புராணங்கள், தொன்மைப் பழங்கதை என்ற பெயரில் இருந்தன. புராணம் என்ற வடசொல் ஆட்சிமட்டும் ஆரியர் வருகைக்குப்பின் தமிழில் தோன்றியது.

தமிழ்ப் புராணங்களில், பெரும்பாலும் தெய்வத்தின் அருட் செயல்கள் கூறப்பட்டாலும் அவற்றின் அடிப்படையில் நீதிக் கருத்துகளும் தனிமனிதப் பண்புகளும் அறிவுறுத்தப் படுகின்றன. மனிதன், இறைநிலைக்கு உயர வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இத்தகு புராணங்களின் உட்பொருள் விளக்கங்களை இரண்டாந்தந்திரத்தின் முதல் எட்டுத் தலைப்புகளில் விளக்குகிறார் திருமூலர். அரியதத்துவங்களைக் குறியீடுகளாகக் கொடுத்துக் கருத்துகளைக் கூறுவனவாக அமைந்துள்ள புராணங்கள், இலக்கியங்களில் மட்டுமன்றிப் பேச்சு வழக்கிலும் கருத்தை எளிதில், முழு கனபரிமாணத்துடன் விளக்க உதவுகின்றன. இந்தியப் புராணங்கள், வழிபாட்டையும், மெய்ப்பொருளையும் விளக்கவே தோன்றியதால் கடவுள் பாடல்களில் அதிகமாகப் புராண மரபுக் கதைகள் உள்ளன.

16ஆம் நூற்றாண்டில் தமிழில் அதிகமாகப் புராணங்கள் தோன்றின. ஆனாலும், சங்க இலக்கியங்களிலிருந்தே இலக்கிய விளக்க உத்தியாகப் புராணக் குறிப்புகள் இன்றுவரை உள்ள இலக்கியங்கள் முடிய பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால், திருமூலர், இப்புராணங்களுக்குரிய நுண்பொருளைத் தனித்தனியான தலைப்புகளில் விளக்கி இருப்பது சிறப்புடையதாக உள்ளது.

திருமூலர், புராணங்களைப் பற்றிக் கூறுகின்ற இப்பகுதியில் சான்றோர்களின் வரலாறு பற்றிய புராணங்களாகிய காலம் தெரிந்த புராணங்கள் இல்லை. மேலும், ஒரு தலத்தோடு சார்த்திச் சொல்லப்படும் தல புராணங்களோடு தொடர்புடைய அட்டவீரட்ட செயல்களை விளக்கும் மூலப்பழம் புராணங்களாகிய

காலந் தெரியாத புராணங்களின் உட்பொருள் விளக்கங்களையே இப்பகுதியில் திருமூலர் விளக்குகிறார்.

இறைவனின் தோற்றம் அடிப்படையில் அமைந்த புராணங்கள், செயல் அடிப்படையில் அமைந்த புராணங்கள் என்ற இருவகைகளில் திருமந்திரம் குறிப்பிடும் புராணங்களுள் எலும்பும் கபாலமும் அணிந்த புராணக்கதை, உமையொருபாகன் என்பன மட்டும் தோற்றத்தின் அடிப்படையில் அமைந்த நிகழ்வாகிய புராணக்கதை. இவை தவிர,

அகத்தியரைப் பொதியமலைக்கு அனுப்பியது

அந்தகாசுரனை அழித்தது

பிரமன் சிரம் கொய்தது

சலந்தரனை அழித்தது

முப்புரம் எரித்தது

கயமுகாசுரனை அழித்தது

எமனை அழித்தது

மன்மதனை எரித்தது

சிவனைச் சத்தி வழிபட்டது

திருமாலுக்கு ஆழியும், நான்முகனுக்குவாளும் அளித்தது

இராவணனைக் காலால் அழுத்தியது

சண்டீசுவரனின் தந்தையின்கால் தடிந்தது

ஆலகாலவிடம் துரத்த ஓடிய தேவர்களுக்கு அருளியது

தக்கன் வேள்வி தகர்த்தது

திருமாலுக்குச் சக்கரம் அளித்தது

அடிமுடி அறியாமல் அரி அயன் தோற்றது

என்பனவான 17 புராணங்களும், செயல் அடிப்படையில் அமைந்த புராணங்கள். இவற்றுள்ளும்,

உமைக்கு அருளியது 2

பிறகடவுளர்க்கருளியது 4

தேவர்க்கருளியது 3

முனிவர்க்கருளியது 1

அரக்கர்க்கருளியது 7 என்ற வகையில்

17 புராணங்களும் அமைந்துள்ளன. இவை அனைத்தும் காலம் தெரியாத புராணங்களே.

## அகத்தியரைப் பொதிய மலைக்கு அனுப்பியது

அக்கினி சொரூபமாகிய நாதம் உடம்பில் உள்ளது. சீவர்கள், உலக இன்பத்திற்காகக் கீழ்நிலைப்பட்டுப் பிராணசக்தியை இழக்காமல், மூலாதார அக்கினியைச் சுழுமுனை வழியாக மேல் நோக்கிச் செலுத்திப் புருவ நடுவில் அழுந்திஇருக்கச் செய்தால், நடுவு நிற்காது சரியும் நிலை சமன் செய்யப்பட்டுச் சிரசில் உணர்வு ஏற்படும். இடகலை, பிங்கலையில் பிராணனைச் செலுத்திச் சரியாது, அகத்து இயமாகிய உடம்பில் விளங்கும் நாதம் சிரசில் முழுவதும் ஒளிமயமாகப் பரவ வேண்டும் என்ற உட்பொருளே இப்புராணத்துள் விளக்கப்படுகிறது இதனை,

**நடுவு நில்லாது இவ்வுலகஞ் சரிந்து**
**கெடுகின்றது எம்பெருமான் என்ன ஈசன்**
**நடுவுள அங்கி அகத்திய நீ போய்**
**முடுகிய வையத்து முன்னிர் என்றானே** [19]

என்று கூறுகிறார் திருமூலர்.

## அந்தகாசுரனை அழித்தது

சீவர்களின் கருத்தில் அந்தகன் (குருடன்) போன்ற அறியாமை அரக்கன் இருந்து இடர் செய்கின்றான். இறைவன், ஒளிவிடும் ஞானமாகிய சூலத்தால் அழிக்க வேண்டும். இவ்வாறு அழித்தான் என்று,

**கருத்துறை அந்தகன் தன் போல் அசுரன்**
**வரத்தின் உலகத்து உயிர்களை யெல்லாம்**
**வருத்தம் செய்தானென்று வானவர் வேண்டக்**
**குருத்துயர் சூலம்கைக் கொண்டு கொன்றானே** [20]

என்ற மந்திரத்தில் குறிப்பிடுகின்றார்.

## பிரமன் சிரம் கொய்தது

சுவாதிட்டானச் சக்கரத்தில் உள்ள பிரமன்ஆட்சியிலிருந்து, சீவர்களை மீட்டு, உலக இன்பம் பெறுவதை மாற்றி சிரசில் சிந்திக்கச் செய்தான் இறைவன். இதனால் உயிர்கள் திருவடியை மேலே சென்று உணரும். சிரசிலேயே இடைவிடாது சிந்திப்பதால் குருதி ஓட்டத்தின் ஆற்றல் கட்டுப்படுத்தப்பட்டுச் சீவன் பக்குவப்படும். உலக இன்பக்கவர்ச்சி நீங்கி ஞானம் கிட்டும். இதனைக் குருதியைக் கபாலத்தில் ஏற்றது என்ற புராணம் உணர்த்துகிறது.

எங்கும் பரந்தும் இருநிலந் தாங்கியும்
தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன் தலை முன்னற
அங்கு அச்சுதனை உதிரங்கொண்டானே [21]

சலந்தரனை அழித்தது

நீரின் ஆற்றலுடைய அபானன், கீழ் நோக்காது, யோகத்தால் மேலே செலுத்தப்பட்டு சகஸ்ரதளத்தில் ஒளிபெருகச் செய்து நிமிர்த்தி விரியச் செய்யுமாறு இறைவன் அருள் செய்வது என்பது இதன் தத்துவ விளக்கம்.

எங்கும் கலந்தும் என் உள்ளத்தெழுகின்ற
அங்க முதல்வன் அருமறை யோதிபால்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித்து ஆழிசெய்தானே [22]

முப்புரம் எரித்தது

ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களை அழித்தது முப்புரத்தகனமாகும். இரும்பு ஆணவத்தையும், வெள்ளி மாயகாரியத்தையும், பொன் என்பது கன்மத்தையும் குறிப்பன. அன்பு, அறிவு, ஆற்றல் என்ற பண்புகளையே மலங்கள் மறைத்தன.

கயமுகாசுரனை அழித்தது

யாகத்தில் தோன்றிய யானை போன்ற இருளைக் கிழித்து வெளிப்பட்ட ஒளியாம் இறைவன் முன், பிற ஒளிகள் செயலிழக்கும்.

புற வேள்வியில் அக்னி வளர்ப்பதுபோல் அகத்தில் உள்ள அக்னியைச் சிரசின்மேல் ஏற்றி சிவ ஒளியை உணரலாம் என்பதே இதன் உட்பொருள்.

முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர னாவ தறிகிலர்
சக்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயின் உள்ளெழுந்தன்று கொலையே [23]

எமனை அழித்தது

மூலக்கனலைச் சுழுமுனை வழியாக மேல் எழுப்பினால் சகஸ்ரதளத்தில் அழியாது இருக்கலாம். இறப்பு இல்லை. காலனைக் கடக்க நிலைக்களமாக உள்ள இடம் சகஸ்ரதளமாகிய ஊர் என்பதை,

மூலத்துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்

**காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்**
**ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே** [24]

என்று திருமூலர் கூறுகிறார்.

**மன்மதனை எரித்தது**

இறைவனோடு மனத்தைப் பொருத்திச் சிரசைத் தாண்டிச் சென்று பாசத்தைக் கீழ்ப்படுத்தி இறையருள் பெற காமனது செயலைக் கெடுக்க வேண்டும் என்பதே மன்மதனை எரித்தது.

**சிவனைச்சக்தி வழிபட்டது**

மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சத்தி சிவனின் திருவடியை அடைவேன் என்று உறுதியான தவத்தை மேற்கொண்டு வழிபட்டாள். கிரியா சத்தியாகிய குண்டலினியே சிற்சத்தியாக மாறிச் சிவனோடு சேர வழிபடுகிறாள் என்பதே இதன் பொருள்.

**திருமாலுக்கு ஆழியும் நான்முகனுக்கு வாளும் அளித்தது**

சுவாதிட்டானச் சக்கரத்தில் பிரமனும், மணிப்பூரகச் சக்கரத்தில் திருமாலும், மூலாதாரத்தைச் சுற்றி வந்து உருத்திரமூர்த்தியுடன் மேலே சகஸ்ரதளத்தில் பொருந்தி ஒளி பெற்றனர். மூவர்க்கும் சிவன் அருளினான். இதனை,

**ஆழிவலங்கொண்டு அயன்மால் இருவரும்**
**ஊழிவலஞ் செய்ய ஒண்சுடராதியும்**
**ஆழிகொடுத்தனன் அச்சுதற் கவ்வழி**
**வாழி பிரமற்கும்வாள் கொடுத்தானே** [25]

என்று விளக்குகிறார் திருமூலர்.

**இராவணனைக் காலால் அழுத்தியது**

ஞானேந்திரியங்கள் (5) கன்மேந்திரியங்கள் (5) எனும் பத்து இந்திரியங்களும், அவற்றால் உணரப்பெறும் புலன்கள் பத்தும் ஆகிய இருபது தோள்களும், காமம் முதலிய பத்து குணங்கள் ஆகிய பத்துத் தலைகளும் கொண்ட புருடனே இராவணன்.

புருடன் மணிப்பூரகத்தில் உலக அனுபவம் பெறுகிறான். இதிலிருந்து மீள இறைவன் அருள் செய்வான்.

**சண்டீசுவரனின் தந்தையின் கால் தடிந்தது**

சிவனாகிய சண்டி, தன் ஞானேந்திரியங்களைப் புலன்களில் செல்ல ஒட்டாது தடுத்ததால், மாயையாகிய உடம்பு அதனைத்

தடுக்க, அக்கினியை மேல் எழுப்பி இடகலை பிங்கலைகளைச் செயல்படாமல் தடுத்து ஒளிபெறுதல் என்பதே இதன் பொருள். இதனைத் திருமூலர்,

**உறுவது அறிதண்டி ஒண்மணல் கூட்டி**
**அறுவகை ஆன் ஐந்தும் ஆட்டத்தன் தாதை**
**செறுவகை செய்து சிதைப்ப முனிந்து**
**மறுமழுவால் வெட்டி மாலை பெற்றானே** [26]

என்று குறிப்பிடுகின்றார்.

### ஆலகாலத்திற்கு அஞ்சி ஓடிய தேவர்களுக்கருளியது

புறப்பொருள் நாட்டம் துன்பம் கொடுத்துத் துரத்தும் கருவிகரணங்கள் ஒடுங்கிமனம் ஒருமைப்பட்டால் மனம் இந்திரியம் வழிச் செல்லாது. எனவே ஒருமைப்பட்ட மனத்துடன் இறைவனை நாடினால் அருள் பெறலாம். துன்பமாம் நஞ்சு துரத்தாது.

### தக்கன் வேள்வி தகர்த்தது

உலக மயக்கால் பாசத்தில் அமிழ்ந்து ஆணவச் செருக்கால் செய்யும் செயலுக்கு வெற்றி கிட்டாது. செயலில் சிதைவு ஏற்படும். இறையருள் கிட்டாது. அன்பினால் ஆதிப்பிரானை அடைந்து அருள் பெறலாம்.

### திருமாலுக்கும் சக்திக்கும் உடம்பில் ஒருகூறு அளித்தது

சுழுமுனையின் வழி மணிப்பூரக உணர்வு, சகஸ்ரதளத்தை அடைந்து ஒளியை உயிர் உணரும். மணிப்பூரகத்தில்விளங்கும் திருமால், சிரசில் வந்து சதாசிவனாகிறான். சிவனின் அருளாற்றலே அனைத்துச் சக்கரங்களிலும் நின்று அவ்வவற்றின் உணர்வுகளைக் கொடுத்து மேலேறிச் சதாசிவனாகிறது. சிவன்தன், வியாபகச் சத்தியைப் பகிர்ந்தளித்தலே உடம்பில் ஒருபாகம் கொடுத்தது. இவ்வாறு, உமைக்கும் திருமாலுக்கும் உடம்பில் ஒருபாகம் அளித்ததாகப் புராணம் உள்ளது. இருவரும் சிவனது கூறாக அவனது ஆணையின் வழிநடப்பர்.

### திருமாலுக்குக் சக்கரமளித்தல்

சிவனின் ஆற்றலின் கூறாகச் சக்கரத்தை அருளினான். அந்தரச் சக்கரமாகிய சகஸ்ரதளத்தை, மணிப்பூரகத்தில் விளங்கும் திருமால் அடைந்து, சதாசிவனாகியதே இதன் உட்பொருள். மணிப்பூரக உணர்வு சகஸ்ரதளம் அடைவது இதன் பொருள்.

### அடிமுடி தேடியது

சோதிப்பிழம்பாம் இறைவனின் அடிமுடியை ஆணவம் உடையவர் உணரமுடியாது. அக்கினியைச் சுழுமுனை வழியாக

மேலேற்றும் பொழுது ஒளியாய் விளங்கி சிவவியாபகத்தில் பொருந்தினால் அவனை உணரலாம். சுவாதிட்டான, மணிப்பூரக நிலையில் சிவவியாபகத்தை உணர இயலாது. இருவரும் சதாசிவநிலையை மேலேறி அடைந்தால் உணரமுடியும்.

### எலும்பும் கபாலமும் அணிந்தது

பிரம்ம விஷ்ணுக்களின் எலும்புகளை அணிந்துள்ளான் என்பது, உயிர்கள் அழிந்தாலும் காரண சரீரம் தாங்கி சூக்குமமாய் உள்ளன. இறைவன் ஒருவனே அழியாதவன். அவன் எலும்பும், கபாலமும் தாங்காவிட்டால் அவை மண்ணோடு மண்ணாய் அழியும். அழியாது காரண மாயையாய் நின்று மீண்டும் ஏற்ற பிறவி எய்தும் என்பதனை,

**எலும்பும் கபாலமும் ஏந்தி எழுந்த**
**வலம்பன் மணிமுடி வானவ ராதி**
**எலும்புங் கபாலமும் ஏந்தில னாகில்**
**எலும்புங் கபாலமும் இற்றுமண் ணாமே** [27]

என்று குறிப்பிடுகிறார் திருமூலர். இப்புராணம் சிவனின் புறத்தோற்றத்தின் அடிப்படையில் அமைந்த புராணம்.

### அட்டவீரட்டத் தலங்களாகக் குறிக்கப்படுபவை

| | | |
|---|---|---|
| திருக்கண்டியூர் | - | பிரமன் சிரமம் கொய்தது |
| திருக்கோவலூர் | - | அந்தகாசுரனை வதம் செய்தது |
| திருவதிகை | - | திரிபுரம் எரித்தது |
| திருப்பரியலூர் | - | தக்கன் சிரம் கொய்தது |
| திருவிற்குடி | - | சலந்தராசுரனை அழித்தது |
| திருவழுவூர் | - | கயமுகாசுரனை அழித்தது |
| திருக்குறுக்கை | - | மன்மதனை எரித்தது |
| திருக்கடவூர் | - | காலனை உதைத்தது |

இவ்வாறு புராணங்களில் மட்டுமின்றித் தத்துவப் பொருள்களைக் குறியீடாக அமைப்பது சமய இலக்கியங்களிலும் பரவலாக உள்ளது. திருமூலர், மெய்யுணர்வு நிலையை, நமசிவாயப் பழம் தின்று கிடக்கும் நிலை என்கிறார்.

இதை,

**ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும்**
**ஒன்று கண்டீர் உலகுக்குயி ராவதும்**

***நன்று கண்டீர் இனிநமசி வாயப்பழம்***
***தின்று கண்டேற்கிது தித்தித்த வாறன்றே***[28]

என்ற மந்திரத்தின் வழி அறியலாம்.

***சக்கரங்கள்***

தந்திரம் என்பது யோகப்பயிற்சி. இதனைத் தந்திரயோகம் என்பர். யோகப்பயிற்சி, அதன்வழி உணரும் மெய்யுணர்வைக் குறிக்கும் நூல்களையும் குறித்தது. தந்திர நூல்கள் சக்கரங்கள், மந்திரங்கள், யந்திரங்கள், வழிபாட்டு முறைகள், போன்றவைகளைப் பற்றி விரிவாகக் கூறுவனவாகவும் விளங்கின. தந்திர நூல்களில் மந்திரங்கள், யந்திரம், ஞானம் பெறும் வழிமுறைகள் போன்றவை உள்ளன. வழிபாட்டு முறைச் சாத்திரங்களாகவும் தந்திரங்கள் இருந்தன. தந்திரங்கள் பலவகைப்பட்டவையாக இருந்தன.

ஒலி அதிர்வுகள்அந்தந்தச் சக்கரங்களில் மந்திரமாக அமைந்து, அதன் ஆற்றலால் பொறி புலன்கள் தூய்மை அடைகின்றன. இவ்வாறு ஆறு சக்கரங்களில் எழும் ஒலி ஓம் நமசிவாய. இவ்வொலியாகிய மந்திரம் அதிரும் உடம்பு மந்திர தேகம் என்றும், பிரணவ தேகம் என்றும் பெயர் பெறுகின்றது.

தெய்வத்தின் ஆற்றல்களைச் சிறிய கட்டங்களுள்அடக்கி வரைபடமாக்கி வழிபாடு செய்து உருவேற்றுவர். இவ்வரை படமே யந்திரம்.

திருமந்திரத்தின் ஒன்பது பெரும் பிரிவுகள் ஒன்பது தந்திரங்கள் என்றும், தந்திரங்களில் உள்ள பாடல்கள் மந்திரம் என்றும் பெயர் பெற்றுள்ளன. மேலும் திருமூலர், நான்காம் தந்திரத்தில் பல சக்கர அமைப்புகள் பற்றிக் கூறுகிறார். அவை, திருவம்பலச் சக்கரம், திரிபுரை சக்கரம், ஏரொளிச் சக்கரம், வயிரவி சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக்கரி சக்கரம் என்பன. புறத்தே பஞ்சாக்கரத்தை யந்திர உருவமாக வழிபடுவர். சக்கரப் பூசையால் அகத்தில் இறைவனை ஒன்பது வடிவில் உணரலாம்.

***திருவம்பலச் சக்கரம்***

எழுத்துக்கட்டங்கள் அமைந்த வடிவத்தில் அம்பலமாம் சிதாகாயத்தில் ஆனந்தக் கூத்தாடும் இறைவனைச் சத்தியோடு மந்திர வடிவாய் உணரும் கட்டங்களாக அமைந்த வடிவமே அம்பலச் சக்கரம். அதாவது, ஆனந்தக் கூத்தாடும் நிலையை வரைபடமாக விளக்குவதாக உள்ளது.

1. சதுர வடிவில் சக்கரம் இருக்கும்

2. சக்கரத்தின் நான்கு மூலைகளிலும் ஐந்து நடு இடங்களிலும் 'சி' அமையும்.

3. அப்பொழுது சி-9, வ-15, ய-24, ந-32,ம-40 ஆக 121 எழுத்துகள் இருக்கும்.

4. நவந்தரு பேதமாய் உடம்பில் ஒன்பது இடங்களில் சிவன் விளங்குவது புலனாகிறது (சி-9 இடங்கள்)

5. 12 கோடுகளைக் குறுக்கு நெடுக்காகச் சமமான கட்டங்களாக வைத்து வருகின்ற 121 கட்டங்களில் நடுவில் 'சி' என்ற எழுத்தைவைத்து அதைச் சூழ்ந்து வயநம என்ற எழுத்துகளைச் சூழ அடுத்தடுத்து வைக்க வேண்டும்.

இவ்வாறு திருவம்பலச் சக்கரம் அமையும். இச்சக்கரம் ஐந்தெழுத்தால் அடைக்கப்பட்டது. மேலும்,

செவி - ய - ஆகாயம் - ஓ - முகம் - ஞானதேகம் - சதாசிவன்
மூக்கு - வா - வாயு - எ -கண்டம் - பிரணவதேகம் மகேசுவரன்

கண் - சி- தீ - ஊ - இதயம் - ஒளித்தேகம் - ருத்திரன்

வாய் - ம - அப்பு - ஈ - நாபி - மருள்தேகம் - விஷ்ணு

மெய் - ந - நிலம் - ஆ - குறி - இருள் தேகம் - பிரம்மா

ஐந்தெழுத்தில் சூக்குமமாக இறைவன் எழுந்தருளி இருக்கிறான் என்ற அமைப்பில் 'நமசிவாய' அமைந்துள்ளது. பஞ்சாக்கரம் இறைவன் எழுந்தருளி இருக்கும் இடம்.

சிவாய நம என்று ஓதினால், நமசிவாய என்பது சுவாதிட்டானம், மூலாதாரம் வரி பிரமரந்திரம் செல்லும். ஐந்தெழுத்து வடிவாகிய இறைவன், திருவம்பலச் சக்கரத்தில் ஐந்தெழுத்தால் சூக்குமமாக அமைக்கப்பட்டுள்ளான்.

பஞ்சாக்கர வடிவினைப் பிரணவமாக உணர்ந்து ஒருமுகப் படுத்தி வணங்கினால், நாதமயமாக விளங்குவான்.

திருவம்பலச் சக்கரத்தில் 16 சூக்கும பஞ்சாக்கரம் உள்ளது. சக்கரத்தில் சிவம் நடுவிலும், சுற்றிலும் பொருந்தி இருப்பான் என்பதைத் திருமூலர்,

**இருந்த இவ்வட்டங்கள் ஈராறு இரேகை**
**இருந்த இரேகை மேல் ஈராறு இருத்தி**
**இருந்த மனைகளும் ஈராறு பத்து ஒன்று**
**இருந்த மனை ஒன்றில் எய்துவன் தானே** [29]

*தான் ஒன்றி வாழ்இடம் தன் எழுத்தேயாகும்*
*தான் ஒன்றும் அந்நான்கும் தன் பேர் எழுத்தாகும்*
*தான் ஒன்று நாற்கோணம் தன் ஐந்து எழுத்தாகும்*
*தான் ஒன்றிலே ஒன்றும் அவ்வரன் தானே* [30]

என்று குறிப்பிடுகின்றார்.

**வயிரவச் சக்கரம்**

அறுபத்து நான்கு சிவமூர்த்தங்களுள் 38ஆவது மூர்த்தம் வயிரவ மூர்த்தம். அந்தகாசுரனை அழிக்க இறைவன் வயிரவக் கோலம் கொண்டார். சட்டர் என்று குறிக்கப்படுபவர் வயிரவர். திருவம்பலச் சக்கரத்தில் கூறியபடி வயிரவச் சக்கரம் சிவசக்கரம் என்பது புலனாகிறது. சக்கரத்தின் மந்திரமாக விளங்குவது பஞ்சாக்கரம் என்பதை,

*அஞ்செழுத்தாலே அமர்ந்தனன் நந்தியும்*
*அஞ்செழுத்தாலே அமர்ந்த பஞ்சாக்கரம்*
*அஞ்செழுத்தாகிய அக்கர சக்கரம்*
*அஞ்செழுத்துள்ளே அமர்ந்திருந்தானே* [31]

என்ற மந்திரத்தால் அறியலாம்.

கோயில்களில் உள்ள, மூர்த்திகளின் சக்தி சக்கரங்களில் வடிவமைத்து எழுதப்பட்டு மூர்த்திக்கு அடியில் வைத்து மூர்த்தியை எழுப்புவர். இத்தகு வழிபாட்டு நிலையகச் சக்கரம் அமைந்து அருள் கொடுப்பதாய் இருக்கிறது. சக்கரத்தின் வழியாக அம்மூர்த்தியின் மந்திரங்களைக் கூறி வழிபாடு செய்வது மரபு.

பசுவின் பாலைக் கன்றின் வழியாகக் கறந்து கொள்வது போல, இறையருளைச் சக்கரங்களின் வழியாகப் பெறுவர் என்பதை,

*நின்றது சக்கரம் நீளும் புவியெலாம்*
*மன்றது வாய்நின்ற மாயநன் னாடனைக்*
*கன்றதுவாகக் கறந்தனன் நந்தியும்*
*குன்றிடை நின்றிடுங் கொள்கையனாமே* [32]

என்ற திருமூலர் வாக்கால் அறியலாம்.

**ஏரொளிச் சக்கரம்**

மூலதார அக்கினி எழுச்சியுற்று மேல் நோக்கிச் சென்று வியாபகமாகித் தன்னுள் அனைத்தையும் கொண்ட ஒளிநிலை ஏரொளி. இவ்வொளி சிரசில் நாதமாக எழுந்து நிறையும் பொழுது, அதன் நடுவில் இறைவன் விளங்குவான். மூலதர எழுத்துகளே

பிருதிவியிலிருந்து ஆகாயம் வரை வளாந்து. சிரசின் மேல் சக்கரமாய் அமையும். இதனை,

வன்னி யெழுத்தவை மாபலம் உள்ளன
வன்னி யெழுத்தவை வானுற ஓங்கின
வன்னி யெழுத்தவை மாபெருஞ் சக்கரம்
வன்னி யெழுத்திடு வாறது சொல்லுமே [33]

என்று குறிப்பிடுகிறார் திருமூலர்.

பிரணவம் விந்து நாதமாக, சக்கரமாக உடம்பில் அமையும். பிரணவத்தைச் சிந்தையில் ஒருமுகப்படுத்தி இருந்தினால் இறைவன் விளங்குவான். பிரணவச் சக்கரம் உயிர்களின் அஞ்ஞானத் தடையை நீக்கும். காமாதி அறுபகை நீங்கும்.

**சாம்பவி மண்டலச் சக்கரம்**

சாம்பவியாகிய சிவசக்தி, லிங்கத் திருமேனியில் விளங்குவதாக அமைக்கும் சக்கரம் சாம்பவி சக்கரம்.

20 வரைகள், நடுவில் லிங்கம். நாற் கோணங்களில் நந்நான்கு லிங்கம். நான்கு இடைவெளியில் நான்கு பூ.

ஆன்மா, 35 தத்துவங்களல்ல. நாதமும் விடுபட்டு நாதாந்தம் செல்லும் என்பதைக் குறிக்கும் வகையில் சக்கரம் அமைந்து இருக்கும். இதை வழிபட்டால் எல்லா நலமும் ஆனந்த வடிவும் பெறலாம்.

**புவனாபதி சக்கரம்**

புவனை என்ற பெயருடைய சக்திக்குரிய சக்கரம் இது. புவனைக்கு உரிய சக்கரமும் எழுத்துகளும் வழிபாடும் இதில் கூறப்பட்டுள்ளன. புவனேசுவரிக்குரிய 15 எழுத்துகள் புவனேசுவரிக்குரிய மந்திரமாகும். இம்மந்திரம் சிவனுக்குரிய வடிவம். இச்சக்கரம் அறு கோணமாக அமைக்கவேண்டும்.

**நவாக்கரி சக்கரம்**

ஒன்பது அட்சரங்களைக் கொண்ட தேவி மந்திரம் அமைந்த சக்கரம் இது. சக்கரங்களை வெள்ளி, பொன், செம்புத் தகடுகளில் அமைக்க வேண்டும்.

காயாம் பூவண்ணத்தாள் என நினைத்து நவாக்கரியை வழிபட்டால் இறைவனை அடையலாம். முகம் பொலிவு பெறும். திருவடி ஞானம் கிட்டும். உலகப்பற்று அகலும். வினை நீங்கும். பெருமை கிடைக்கும்.பெருமை தரும் சக்கரவழிபாடு செய்தால், எல்லாவற்றையும் அறியும் அறிவைப் பெறலாம். முக்குற்றம் நீங்கும்.

பெருமை பெருகும். சிரசின் மேல் சந்திர மண்டலம் விளங்கும். ஆறு ஆதாரங்களும் ஒன்றாகும். அகங்காரம் நீங்கி, பராசக்தியைப் பரமாகாயத்தில் காணலாம். குண்டலினி மேலேறி ஒளியில் பொருந்தி சகல சித்திகளைஅடையலாம் என்பதைத் திருமூலர்,

**பொற்கொடி யாளுடைப் பூசனை செய்திட**
**அக்களி யாகிய ஆங்காரம் போயிடும்**
**மற்கட மாகியமண்டலந்தன்னுளே**
**பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே** [34]

என்ற மந்திரத்தில் கூறுகிறார்.

மூன்றாந் தந்திரத்தில் 20ஆவது பகுதியாக அமுரி தாரணை என்ற பகுதியை அமைத்துள்ளார் திருமூலர். இதனைச் "சிவநீர் பருகல்" எனலாம். அமுரி என்பது வீரியத்தைக் குறிக்கும். வீரியத்தை வீணாக்காது அதை காம மோகத்திலிருந்து மடைமாற்றி பிரமரந்திரத்தில் உணர்வால் செலுத்தி பேரறிவு ஒளியில் விந்து நாதத்தைச் சிரசில் உணர்ந்து மெய்யுணர்வு பெற்று ஒளியாம் திருவருளில் ஒன்ற முடியும். இதை அமுது உண்டல் என்பர். இந்த அமுது மாகாயப்பால் எனும் மாங்காய்ப் பால், கபாலத்தேன், சிவநீர் என்றெல்லாம் பெயர் பெறுகிறது. இதனைக் குண்டலினியோகம், உச்சியில் தாகம் தீர்த்தல் என்பர்.

**உடலிற் கிடந்த உறுதிக் குடிநீர்க்**
**கடலிற் சிறுகிணற்று ஏற்றமிட்டால் ஒக்கும்**
**உடலில் ஒரு வழி ஒன்றுக் கிறைக்கில்**
**நடலைப் பாடதுயிர் நாடலுமாமே** [35]

**தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்**
**ஒளிதரும் ஓராண்டில் ஊனமொன்றில்லை**
**வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்குங்**
**களிதரும் காயம் கனகம தாம்** [36]

உப்பு நீருடை கடலுக்கருகில் நன்னீர் ஊற்று இருப்பதுபோல் சிறுநீர் இருப்பிடத்திற் கருகில் வீரியம் இருக்கும். இந்த அமுரியைக் கீழே விடாது, நீரை மேலேற்றுவது போல் உணர்வால், யோகம் செய்து மேலே செலுத்தி ஒளியாக்கினால், உயிரைப் பாதுகாக்கலாம். சிரசில் பாய்ச்சுவதால் தலை மயிர் கருநிறமாகும். உடம்பு பொன்போன்று ஒளிவிடும். இந்தச் சிவநீராகிய ஆனந்தத் தேனாகிய இன்பத்தை நுகர்தலே சாவாமருந்து. நாள்தோறும் மிளகளவு பருகி வந்தால், இந்நாரி மருந்தால் (திருவருள் மருந்து) உடலொளிபெறும்.

அமுரிதாரணையைத் தெய்வமருந்து, திருவருள் மருந்து, ஆதி மருந்து என்றும் கூறுவர் என்கிறார் திருமூலர்.

இதனைச் சிறுநீர் என்று சிலர் கூறுகின்றனர். சில நூல்களில் அமுரி என்பது சிறுநீர் என்ற குறிப்பு உள்ளது.[37] சித்தர்கள் போன்றோர் சிறுநீரின் சிறப்பினைக் கூறுகின்றார்கள் என்று ஒரு சிலர் கூறினாலும், திருமூலர், திருமந்திரத்தில் அமுரி தாரணை என்ற பகுதியில் குறிப்பிடுவது பிரமரந்திர அமுத நீரையே எனலாம். இங்கு சிறுநீர் என்று கொள்வது பொருந்தாது.

உவர்க்கடலில் சிறுகிணறு என்றதால் சிறுநீர் என்கின்றனர். சிறுநீர்ப் பைக்கு மிக அருகில் கீழ்ப்புறமாக விரைப்பை (பீஜகோசம், அண்டகோசம்-Testies) உள்ளது. ஆனால் சிறுநீர்க் கருகில் உள்ள வீரிய தானத்திலிருந்து கிணற்று நீரை மேலேற்றி நன்னீர் எடுப்பது போல் என்று கூறுவதால் அமுரியை மேலேற்றி ஒளிபெறச் செய்வது பெறப்படுகிறது.

மேலும், அமுரிதாரணைக்கு முன்னும், பின்னும் உள்ள தலைப்புகளில், யோகத்தால் பெறும் ஒளிநிலைகளையே கூறி இருப்பதால், அதன் தொடர்பாக, அமுரிதாரணையும் அமுரியை ஒளிமயமாக்கி உய்வு பெறுவதை அறிவுறுத்துவதாகவே கொள்ள வேண்டும். இதைத்தவிர்த்து, முதலிலும், இறுதியிலும் வரும் சிறுநீரை விடுத்து நடுவில் வரும் சிறுநீரை உட்கொள்ள வேண்டும் என்று கூறுவோர் கருத்து ஏற்புடைத்தன்று.

**கரையருகே நின்ற கானல் உவரி**
**வரைவரை என்பர் மதியிலா மாந்தார்**
**நுரைதிரை நீக்கி நுகரவல்லார்க்கு**
**நரை திரை மாறும் நமனும் அங்கு இல்லையே** [38]

என்ற திருமூலர் கூற்றில் நுரை திரை நீக்கி என்பது பக்குவப்படாத குழந்தை நிலையையும், முதுமை நிலையையும் நீக்கி இளமை உள்ள பொழுதிலேயே அமுரியை ஒளிமயமாக்க வேண்டும் என்பதே பெறப்படுகிறது.

உடம்பில் உணர்வால் மேலேறி சிரசை அடையும் பொழுது அந்நிகழ்வு சூக்குமமாக நடப்பதால் 'களவுகாயம் கலந்த இந்நீர்' என்று கூறப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நடைபெறும் பொழுது பஞ்சகல்பம் தேய்த்து முழுகலாம் என்பர்.

அமுரி தாரணை 20ஆவது தலைப்பு. இதற்குமுன் அட்டாங்கயோகம், அட்டமாசித்தி, கலைநிலை, சரீரசித்தி உபாயம், ஆயுள் பரீட்சை, கேசரியோகம், பரியங்கயோகம், போன்றவைகளைத் திருமூலர் கூறுகிறார்.

அமுரிதாரணையை அடுத்து சந்திரயோகம், என்ற பகுதி கூறப்பட்டுள்ளது.

சந்திரகலையென்பது உடம்பின் அகத்தில் சந்திரனில் சூரியனையும், அக்கினியையும் ஒடுங்கச் செய்தல். சிரசின் மேல் வளர்பிறை ஒளி பெற்றுத் திருவடியை அடைதல். மூலாதார அக்கினியைச் சூரிய மண்டலத்தைக் கடந்த சந்திரனை அடைந்து பிரணவம் உதிக்கச் செய்தல். இச்சந்திரனை யோகநிலையில் உணர்ந்தோர் எப்பொழுதும் அமுத கிரணத்தைப் பருகுவர்.

**பாம்பு மதியைத் தினலுறும் பாம்பினைத்**
**தீங்கு கதிரையுஞ் சோதித்து அனலுறும்**
**பாம்பு மதியும் பகை தீர்த்துடன் கொளீஇ**
**நீங்கல் கொடானே நெடுந்தகை யானே** [39]

என்பது திருமூலர் கூற்று.

பாம்பு என்பது குண்டலினி. குண்டலினி கீழேயே சுவாதிட்டானத்திலிருந்தால் சந்திரனை அடைய முடியாது. அடுத்துள்ள சூரியனையும் அடக்கும் எனவே, பாம்புப் பகைநீக்கிச் சிரசில் சந்திரனை அடையச் செய்யவேண்டும் என்ற கருத்து அமைகிறது.

இதேபோல், சிற்றின்ப போகத்தில் வீரியத்தை வீணாக்காமல், சந்திரமண்டலத்தில் பேரறிவு ஒளியில் விந்து நாதம் காணும் பரியங்க யோகத்தையும்,

மேல்நோக்கி உணர்வைச் சகஸ்ர தளமாகிய ஆகாயத்தில் செலுத்திச் சிங்கம்போல் மேல் நோக்கிப் பார்வையைக் கொண்டு பிராணசெயம் பெற்று அழிவில்லா நிலை பெறும் கேசரியோகத்தையும்,

நடுநாடியின் வழியாகச் சுவாசத்தை அமைத்து ஒளி உண்டாக்கும் பிராண இயக்க முறையாகிய வாரசரத்தையும்,

பிராணன் சுழுமுனையில் இயங்கத் தொடங்கினால், இடகலை பிங்கலைகள், சுழுமுனை நாடியில் ஒடுங்கமனமும் சுழுமுனையில் ஒடுங்கும் என்ற கலை நிலையையும்,

சிந்தையைச் சிவனை நோக்கிச் செலுத்தி உலகப் பொருள்களை நோக்கிச் செல்லாது மடைமாற்றி, மனமாசுகளை நீக்கி, சகஸ்ரதளத்தை மலர்த்தி ஒளி பெறச் செய்து, உடம்பில் உயிர் உள்ளபொழுதே உடம்பு பெற்றதன் பயனை அடைந்து ஞானம் பெற வழி கூறும் சரீர சித்தி உபாயத்தையும், கூறுவதோடு, அட்டாங்க யோகத்தால் அடையும் சித்தி நிலைகளையும், பிறயோக

நிலைகளையும் கூறுவதற்கிடையே அமுத தாரணையைத் திருமூலர் கூறுவதால் சிவநீராகிய அமுதாகத் திருவருள் நீரையே குறிப்பிடுகிறார். இங்கு சிறு நீரைக் குறிப்பிடவில்லை என்பதையுணரலாம்.

### எட்டும் இரண்டும்

எட்டும், இரண்டும் என்பது ஆறையும் நான்கையும் கூட்டி வருவது என்பதை மூடர்கள் அறியமாட்டார்கள். எட்டும் இரண்டும் இன்பம் தருவது. எட்டும் இரண்டும் என்பதுஅகரம் (8) உகரம் (2) என்பன, இரண்டும் சேர்ந்தால் 'ய' (10) 'ய' என்பது உயிரைக் குறிக்கும். சிவனின் திருவடியும் பத்து என்பதாகும்.

**கூடிய எட்டும் இரண்டுங் குவிந்தறி**
**நாடிய நந்தியை ஞானத்துள்ளே வைத்து**
**ஆடிய ஐவரும் அங்குற வாவர்கள்**
**தேடி அதனைத் தெளிந்தறியீரே** [40]

என்கிறார் திருமூலர் 'அ' மற்றும் 'உ' குறிப்பன.

| | |
|---|---|
| அ | உ |
| நாதம் | விந்து |
| உடல் | உயிர் |
| ஒலி | ஒளி |
| சத்தி | சிவம் |
| சூரியன் | சந்திரன் |
| சீவாத்மா | பரமாத்மா |
| வலக்கண் | இடக்கண் |

சந்திரனாகிய இடது கண்ணும், சூரியனாகிய வலதுகண்ணும், குண்டலினியால் கொண்டு வரப்பட்ட மூலத்தீயுடன் புருவ மத்தியில் சேர்ந்தால், சோதியாகச் சிவனை, மெய்ஞ்ஞானப் பொருளாக உணர்ந்தால் புலன்கள் சேட்டையற்று உறவாகும். பிறவியைக் கடக்கலாம். வெட்டவெளியில் இசைந்து இன்பத்தில் திளைக்கலாம்.

### அசபை

அசபை என்பது மந்திரம். பிரணவம். இப்பிரணவத்தை எல்லா உயிர்களும் தம்மை யறியாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அதாவது 'நான் அது' என்று எல்லா

உயிர்களும் மூச்சால் உருவேற்றிக் கொண்டிருக்கின்றன. பிரணவம் என்பது ஓங்காரம். இது, அ, உ, ம, விந்து, நாதம் என்ற ஐந்து அடங்கியது. மூச்சுக்காற்று வெளிவந்து உள் நுழையும் பொழுது பிரணவ ஒலி இயல்பாகிறது. 'ஓம்' என்ற பிரணவத்தில் ஐந்து கூறுகள் உள.

சாக்கிரம் - அ - அகங்காரம் - இயக்குபவர் நான்முகன் - உலககெலாம் பரவும்

சொப்பனம் - உ- புத்தி-திருமால்-உடம்பில் சிவசக்தியாய் நிற்கும்

சுழுத்தி-ம-மனம்-உருத்திரன்-ஒளிப்பொருள் தோன்றும். மாயையால் மயங்கும்

விந்து - சித்தம் - மகேசுவரன்

நாதம் - புருடன் - சதாசிவன்

பிரணவமே படைத்து, காத்து, அழிக்கும். மூன்றாவது நிலை கடந்த துரியத்தில் இன்பம் தருவது. சிற்றம்பலத்தில் சீவர்களுக்காக இறைவன் ஐவகைத் தாண்டவங்கள் செய்கிறான். தாண்டவத்தின் பயன் அருளல். சிவனே எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாக இருந்து அவற்றை இயக்குகிறான். ஐவகைத் தாண்டவமான எழுத்து, பிரணவம்.

| அற்புதத் தாண்டவம் | ஆனந்தத் தாண்டவம் | அனவரதத் தாண்டவம் | பிரளயத் தாண்டவம் | சங்காரத் தாண்டவம் |
|---|---|---|---|---|
| சீவர்களின் அறிவில் பொருந்துவது (சிருட்டி நடனம்) | சீவர்களுக்கு இன்பம் தருவது | சீவர்களின் இயக்கம் நடைபெறச் செய்வது | சீவர்களுக்கு நாள்தோறும் ஓய்வு (தூக்கம்) தருவது | சீவர்களுக்குப் பக்குவம் உண்டாக்கித் தன்பால் அணைப்பது |

தூலம் சூக்குமம் என்ற இருவகையாகப் பிரணவம் பிரிக்கப்படுகிறது. அ, உ, ம என்பது தூலம். இதில் விந்து நாதமாக உணரப்படும் பகுதி சூக்குமம்.

அகார உகாரம் - அதிதூலம் - இதுவைகரி வாக்கைக் குறிக்கும்

மகாரம் - தூலம் - இது மத்திமை வாக்கைக் குறிக்கும்

விந்து சூக்குமம் (பைசந்தி வாக்கைக் குறிக்கும்)

நாதம் - அதி சூக்குமம் (இது சூக்குமை வாக்கைக் குறிக்கும்)

இவ்வாறு பிரணவக்கலைகளாகிய அகாரம் முதலியன தூல, சூக்குமங்களின் குறியீடுகளாக உள்ளன.

'ஓம்' என்று கூறினால், சமட்டிப் பிரணவம். ஐந்து கூறாக்கிக் கூறினால் வியட்டிப்பிரணவம். இக் கூறுகள் பிரணவக்கலைகள் எனப்படும். பிரணவத்திலும், பஞ்சாக்கரத்திலும் சிவன் விளங்கும் முறையைக் கூறும் திருமூலர்,

**அகாரம் உயிரே உகாரம் பரமே**
**மகார மலமாய் வருமுப் பதத்தில்**
**சிகாரஞ் சிவமாய் வகாரம் வடிவமாய்**
**யகாரம் உயிரென்று அறையலு மாமே** [41]

என்று, அகாரம் உயிர், உகாரம் பரம், மகாரம் மலம் என்றும், பிரணவம் மூன்று பதங்களில் வரும் என்றும் கூறுகிறர்.

பஞ்சாக்கரத்தில் சிகாரம் சிவம், வகாரம் சத்தி, யகாரம் உயிர் என்றும் விளக்குகிறார்.

சிகாரம், சீவர்களை முத்திக்கு அழைத்துச் செல்லும் தோணி. இது விதியாகிய எழுத்தை மாற்றும் எழுத்து எனவே, எழுத்தை அழுத்தும் எழுத்து இது என்கிறார் திருமூலர். விதி மாற்றும் எழுத்து இது.

பிரணவத்தாலும், பஞ்சாக்கரத்தாலும் பெறுவது சகஸ்ரதளத்தில் உணரும் விந்து நாதம் என்பன.

பிரணவப் பொருளை உணர்ந்து மெய்ப்பொருளோடு ஒடுங்கி ஒன்றாகி இருத்தலே பிரணவ சாமதி என்று திருமூலர், பிரணவசமாதி என்ற தலைப்பில் ஒன்பதாந் தந்திரத்தில் கூறுகிறார். இதனை 'ஓங்காரத் தொடுக்கம்' என்பர்.

**தூலப் பிரணவஞ் சொரூபானந்தப் பேருரை**
**பாலித்த சூக்கும மேலைச் சொரூபப்பெண்**
**ஆலித்த முத்திரை ஆங்கு அதில் காரணம்**
**மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே** [42]

என்று திருமூலர், பிரணவத்தின் தூல சூக்குமத்தை உணர்வதே வேதாந்த நெறி என்கின்றார். இதன்வழி,

தூலப்பிரணவம் - தூல உடம்புக்கு ஆனந்தம்

சூக்குமப் பிரணவம் - சூக்கும உடம்புக்கு (மேலைச் சொரூபம்) ஆனந்தம்

காரணப்பிரணவம் - திருவருள் சத்தி பதியச் செய்தல்

மகாகாரணப் பிரணவம் - இது மேலைப் பிரணவம். வேதாந்த வீதியில் செலுத்தும்.

களிக்கும் நிலையில் செய்யும் செயல்களாகிய கிரியைகள் சூக்குமப் பிரணவத்துக்குக் காரணம். இது காரணப் பிரணவம்.

சூக்கும பிரணவத்தை அறிவது மேலைப் பிரணவமாகிய மகா காரணப் பிரணவம்.

ஓங்காரத்துள் உதிக்கும் ஒருமொழி 'ம' என்ற மௌனாட்சரமாகிய அர்த்த மாத்திரைப் பிரணவம். இது ஓம் என்ற பிரணவத்தின் முடிவில் உதிக்கும்.

ஓங்காரத்தை உணர்ந்தால் முத்தியும் சித்தியும் பெறலாம்.

இதனை,

**ஓமெனும் ஓங்காரத்துள்ளே ஒருமொழி**
**ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு**
**ஓமெனும் ஓங்காரத்துள்ளே பல பேதம்**
**ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே** [43]

என்று திருமூலர் குறிப்பிடுகின்றார்.

ஓங்காரமே ஐம்பூதங்களுக்கும், எல்லா உயிர்களுக்கும், வடிவமாகவும், காரணமாகவும் உள்ளது. ஓங்காரம் சீவபர சிவ ரூபமாக உள்ளது. ஓங்காரத்தின் இறுதியிலுள்ள நாதப்பிரம்மமாகிய அர்த்த மாத்திரைப் பிரணவம் சுகமானது, வியாபகமான பிரமமும் ஆகும்.

பிரணவ யோகம் பயிலும் சன்மார்க்க நெறியினர் யோகத்தில் ஞானமும், ஞானத்தில் கிரியையும், ஞானத்தில் யோகமும், ஞானநிலையில் அறிவின் அறிவாகிய ஞானத்தில் ஞானமும் பெற்றுத் திருவடிப் பேறு எய்துவர் என்பதை,

**சோடச மார்க்கமுஞ் சொல்லுஞ் சன்மார்க்கிகட்கு**
**ஆடிய ஈராறின் அந்தமும் ஈரேழிற்**
**கூடிய அந்தமும் கேதண்டமுங் கடந்து**
**ஏறியே ஞான ஞேயாந்தத்து இருக்கவே** [44]

என்ற மந்திரத்தால் அறியலாம்.

தூல உடம்புக்கு ஆனந்தம் நமசிவாய, சூக்கும உடம்புக்கு ஆனந்தம் சிவாயநம, நீங்காநிலையில் சித்தம் ஒருக்குவது சிவாயசிவசிவ, அருள் சத்தியைப் பதியவைப்பது சிவ, முத்தியளிப்பது சி, என்ற நிலையில், பஞ்சாக்கரம், காரண பஞ்சாக்கரம், மகாகாரண பஞ்சாக்கரம் என்ற நிலைகளைப் பெறுகின்றது. 'சி' என்பதே முக்திப்பஞ்சாக்கரமாகவும் அமைகிறது. இதனைத் திருமூலர் நாயோட்டு மந்திரம் என்கிறார்.

*நாயோட்டு மந்திரம் நான்மறை வேதம்*
*நாயோட்டு மந்திரம் நாதனிருப்பிடம்*
*நாயோட்டு மந்திரம் நாதாந்த சோதி*
*நாயோட்டு மந்திரம் நாமறியோ மன்றே* [45]

என்கிறார் திருமூலர். இப்பாடல், அனைத்துப் பதிப்புகளிலும் இல்லை. கழகப் பதிப்பில் உள்ளது. 'சிவயசிவ' என்னும் அதி சூக்கும பஞ்சாக்கரம், இருதலை மாணிக்கம் எனப்படுகிறது.

வேதங்களும் ஆகமங்களும் ஐம்பது எழுத்தோசையால் அடையும் பயனை விளக்குகின்றன. ஐம்பது எழுத்தோசையால் பெறக்கூடியதை நமசிவாய என்ற ஐந்தெழுத்தால் அடையலாம். ஐந்தெழுத்துப் பயனாம் அசைபையாகிய பிரணவத்துள் அடக்கம். ஓங்காரமே சிவபரசிவரூபம் என்பதால் 'ஓம்' என்பது மந்திரமாகவும், மந்திரப் பொருளாகவும் ஞானமும் ஞானத்தை அடையும் நெறியாகவும் உள்ளது என்பதை உணர்ந்து ஓதி உய்வு பெறலாம் என்று சித்திமுத்திக்கு வழி கூறுகிறார் திருமூலர்.

*போற்றுகின்றேன் புகழ்ந்தும் புகல் ஞானத்தைத்*
*தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி*
*சாற்றுகின்றேன் அறையோ சிவ யோகத்தை*
*ஏற்றுகின்றேன் நம்பிரான் ஓர் எழுத்தே* [46]

ஐந்தெழுத்துடன் 'ஓம்' என்ற மொழியை முதலில் வைத்து ஓதினால், பிரணவத் தலைவன் சுழுமுனையில் பொருந்தி மனத்தில் விளங்குவான்.

*நகார மகார சிகார நடுவாய்*
*வகாரம் இரண்டும் வளியுடன் கூடி*
*ஒகார முதற்கொண்டு ஒருகால் உரைக்க*
*மகார முதல்வன் மனத்தகத்தானே* [47]

இவ்வாறு மந்திரங்களின் வலிமையைத் திருமூலர், அசபை, பஞ்சாக்கரம், ஒளி, பிரணவ சமாதி, திருவம்பலச்சக்கரம், திருக்கூத்துத் தரிசனம் போன்ற பகுதிகளில் விளக்கியுள்ளார்.

**மோனசமாதி**

பிரணவத்தால் அடையும் மோனசமாதியாகிய ஒடுக்கநிலையில் சிவானுபவத்தில் திளைத்திருக்கும் சீவன், தண்ணீரில் உப்பு கலந்து பிரிக்க முடியாதவாறு இருப்பது போல் வேறின்றி ஒன்றாய்க் கலக்கும். அப்பொழுது "அசி" என்ற பதம் மகாவாக்கியத்தில் இருந்து அழிய 'தத்' 'துவம்' என்பன (சிவன், ஆன்மா) மட்டுமே கலந்திருக்கும்.

| | |
|---|---|
| சிவ = அது | தத் = அது |
| நம = நீயே | துவம் = நீயே |
| அய = ஆகிறாய் | அசி = ஆகிறாய் |

இதனைத் திருமூலர்,

அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரஞ் சேர்பரமும் விட்டுக்
கப்புறு சொற்பத மாளக் கலந்தமை
எப்படி யப்படி என்னுமவ் வாறே [48]

என்று குறிப்பிடுகின்றார்.

சிலமகா வாக்கியங்கள்

1. அறிவேபிரமம் - (துதிப்பாடல்கள்) ரிக்வேதம் -பிரக்ஞானம் பிரம்மம்
2. நான் பிரமமாக உள்ளேன் - (உரைநடை பாசுரம்) யஜுர் வேதம் -அஹம்பிரம் மாஸ்மி. வேள்வி முறை
3. நீ அதுவாக ஆகிறாய் - (இசைப்பாடல்)-தத்வமஸி சாமவேதம் ராஜநீதி போன்றவை
4. ஆத்மவே பிரம்மம் - (தர்மத்தின் அடையும் வழி - அதர்வண வேதம் - அயம் ஆத்மம் பிரம்மம்.

சிவனோடு பொருந்திய வரையறை இல்லாத. அதாவது எல்லையற்ற சிறப்பினை 'வரையுறை மாட்சி' என்ற தலைப்பில் திருமூலர் கூறுகிறார்.

அலையற்ற நீர்போல் தெளிந்த சிந்தை உடையவர்களுக்கு மறையாமல் வெளிப்பட்டருளும் இறைவனின் சொல்லிறந்து நிற்கும் தூய தன்மையை எடுத்துச் சொல்ல இயலாது. நுகரமட்டும் உரியதான எல்லையில்லா மெய்ப்பொருளின் வியாபகத்தின் கரை காணமுடியாது. இதனை,

உரையற்ற தொன்றை உரை செய்யும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரை காணலாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்று இருந்தான் புரிசடையோனே [49]

என்று விளக்குகிறார் திருமூலர்.

தந்நலம் இன்றிப் பிறருக்குத் தொண்டு செய்வது கர்மயோகம். ஒழுக்கத்தால் புலன்களையும், மனதையும் பண்படுத்துவது அட்டாங்கயோகம் அல்லது ராஜயோகம். ஆண்டவனிடமும் அனைத்து உயிர்களிடமும் பேரன்பு கொள்வது பக்தி யோகம். உடல்வேறு, ஆத்மா வேறு என்பதைத் திரிபற உணர்வது ஞானயோகம், இத்தகு ஞானத்தால் உடம்புறும் துன்பங்களுக்குத் தன்னை வருத்தாது மலர்தல் கூம்பலற்று இருக்கும் ஆன்ம ஞானம் மிக அரிதாகக் கிட்டுவது. இத்தகு ஞானம் வளர வளர, ஆன்ம அறிவை விட்டு மலங்கள் நீங்கும். இதனால் மல பரிபாகம் (மலம் திரிந்து பக்குவம் ஏற்படல்) ஏற்படும்.

மலபரிபாகத்தின் பயன் இருவினைஒப்பு. நல்வினை, தீவினைப்பயன்களில் விருப்பு வெறுப்பு இன்றி இரண்டு பயன்களையும் சமமாகத் கருதும் நிலையே இருவினை ஒப்பு. இருவினை ஒப்பின் பயன் சக்தி நிபாதம்.

உயிரின் அறிவு இச்சை செயல்கள் நீங்கி மலபரிபாகமும், இருவினை ஒப்பும் எய்திய ஆன்மாக்கள் மீது இறைவனின் அருளாற்றல் பதிவது சத்திநிபாதம்.

முத்தி என்பது, உயிர்கள் மீண்டும் பிறவா நிலையைப் பெறும் வீடு பேறு ஆகும். பாசத்தைவிட்டு இறைவனைப் பெற்றுப் பேரின்பத்தில் திளைப்பது. முத்தியில் ஆணவம் இருக்கும். ஆனால் செயல்படாது. இதற்கு ஒரே காரணம், ஆன்மா ஆண்டவனைச் சார்ந்துவிடும் ஞானம் பெற்றுச் சார்ந்துவிடுவதே.

முத்தி என்பது பதமுத்தி, அபரமுத்தி, பரமுத்தி, சீவன்முத்தி என நான்கு வகைப்படும்.

பதமுத்தி என்பது சாலோக, சாமீப, சாரூப நிலைகளை அடைவதே. இம்முத்தியில் இருக்கும் உயிர்கள் போக்கு வரவு உடையவர்களாக இருப்பதால் மீண்டும் பிறவி எடுக்க வாய்ப்பு உள்ளது.

சீவன்முத்தி என்பது உடம்போடு இருக்கும் நிலையிலேயே உடம்பைப் பற்றிய உணர்வின்றி இருப்பது. இதனால் இதுவும் பரமுத்தியே. திருமூலர், திருமந்திரத்தின் இறுதி நிலையில் ஒன்பதாவது தந்திரத்தில் வீடுபேற்றின் வகைகளைக் கூறுகிறார்.

ஓதிய முத்தியடைவே உயிர்பர
பேதமில் அச்சிவன் எய்தும் துரியமோடு
ஆதி சொரூபஞ் சொரூபத்த தாகவே
ஏதுமிலா நிருவாணம் பிறந்ததே [50]

என்று செயலறுகை யாகிய நிருவாணம் பற்றிக் குறிப்பிடுகிறார். பிரிப்பின்றி இறையும் உயிரும் ஒன்றி நிற்கும் நிலையில் ஆன்மா செயலற்றுச் சிவ சொரூபத்தில் அடங்கி இருத்தலே முத்தி என்கிறார். அணைந்தோர் தன்மை என்ற பகுதியில், சீவன்முத்தர் நிலையைக் கூறுகிறார்.

**அணைந்தோர் தன்மை**

பேரொளியில் பெருந்தி நிட்டைநிலையில் இறைவனை அணைந்த ஞானியரின் இயல்பைத் திருமூலர், அணைந்தோர் தன்மையில் கூறுகிறார். அவர்களுக்கு மலமில்லை, மாசில்லை, குலம், குணம், தந்நலம்,பகை இல்லை என்கிறார் அவர்களுக்கு. குரு, லிங்க, சங்கம (அடியார்) வழிபாடு தேவையில்லை. அவை, உறங்கினான் கைப்பொருள்வீழ்வது போல் தாமே நீங்கிவிடும். தத்துவஅறிவு தேவையில்லை. சிவானுபவத்தில் திளைத்து இருள் நீங்கி இன்பம் பெற்றவராவர். மரணபயம் இல்லை, பிறவி இல்லை. இவ்வாறு மனம் அடங்கிய நிலையில் பேச்சற்ற பெருநிலையை அடைவர் என்று திருமூலர் கூறுகிறார்.

**மனம் விரிந்து குவிந்தது மாதவ**
**மனம்விரிந்து குவிந்தது வாயு**
**மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்**
**மனம் விரிந்துரை மாண்டது முத்தியே** [51]

இப்பெருநிலை பெற்றவர், சிவமேயாம் தன்மை பெறுவர். ஞானியர்களுடன் பூவினுள் மணம் போலப் பொருந்தி விளங்குவான் இறைவன். இவர்களே சீவன் முக்தர் எனப்படுவர். இவர்கள், இறைவனிடம் அன்பு மீதூர்ந்து நிற்கும் நிலையைத் திருமூலர்,

**அன்புள்ளுருகி அழுவன் அரற்றுவன்**
**என்பும்உருக இராப்பகல் ஏத்துவன்**
**என்பொன் மணியை இறைவனை ஈசனைத்**
**தின்பன் கடிப்பன் திருத்துவன் றானே** [52]

இறைவனை மிக அணுக்கமாக நுகர்வேன் என்பதைக் குறிப்பதற்காக தின்பன், கடிப்பன் என்கிறார்.சிவ வியாபகத்தில் திளைத்திருப்பவர்கள் அணைந்தோர்.

**தசகாரியம்**

பொருள்களின் இயல்புகளை உணரும் நிலை வேறுபாடுகளின் அடிப்படையில் அறிவின்கண் நிகழும், நிலை வேறுபாடுகளாகிய ஞானச் செய்திகள் தசகாரியம் எனப் பெயர் பெறுகின்றன.

| | | |
|---|---|---|
| தத்துவரூபம் | - | 36 தத்துவங்களைவிளங்கிக் கொள்ளும் நிலையில் அறிதல். |
| தத்துவதரிசனம் | - | அறிந்ததைப் பற்றித் தன் அறிவில் வைத்துச் சிந்தித்தல். ஐயமும் இருக்கும். |
| தத்துவ சுத்தி | - | ஆன்மா வேறு. தத்துவங்களாகிய உடல் வேறு என்று துணிதல். |
| ஆன்ம ரூபம் | - | ஆன்மா, உடம்பு அல்ல என்பதை உணர்தலோடு ஆன்மாவைப் பற்றிய அறிவை உணர்ந்து கொள்ளுதல். |
| ஆன்ம தரிசனம் | - | ஆன்மாவைப்பற்றி அறிந்தவற்றை ஆராய்தல். |
| ஆன்ம சுத்தி | - | அனைத்தும் ஆண்டவன் செயல் என்று உணர்ந்து, யான் எனது என்னும் செருக்கு அற்று இருத்தல் |
| சிவரூபம் | - | இறைவனின் பொது இயல்பு, உண்மை இயல்புகளை அறிதல். |
| சிவதரிசனம் | - | இவற்றைத் தன்னறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்தல். |
| சிவயோகம் | - | சிவதரிசனத்தில் அடங்கித் தன் செயலற்றுச் சிவத்தில் ஒன்றல். |
| சிவபோகம் | - | ஆன்ம போதம் கெட்டு, சிவானந்தத்தை இடையறாது நுகர்தல். |

இந்தப் பத்தும் ஒன்று நிகழ்ந்தபின்தான் மற்றவை நிகழும் என்பதில்லை. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்ற நான்கும் ஞானத்தின் படிநிலைகள். இந்த நான்கிலும் தசகாரியங்கள் அடங்கும்.

தசகாரியத்துள் ரூபம் என்பன கேட்டலிலும், தரிசனம் என்பன சிந்தித்தலிலும், சுத்தி, யோகம்என்பனதெளிதலிலும், சிவபோதம் நிட்டை கூடலிலும் அடங்கும்.

திருமந்திரத்தில் ஞானச் செய்திகள் இந்தப் படிநிலைகளிலேயே விளக்கப்பட்டுள்ளன.

## குறிப்புகள்

1. திருமூலர் திருமந்திரம்-157, உபதேசம்.
2. மேலது 158-உபதேசம்.
3. திருமூலர் திருமந்திரம்-170, உபதேசம்.

4. திருமூலர் திருமந்திரம்-169, உபதேசம்.
5. மேலது 180, உபதேசம்.
6. மேலது 184, உபதேசம்.
7. திருமூலர் திருமந்திரம்-2673-அதிசூக்குமபஞ்சாக்கரம்.
8. மேலது, 2662, சூக்குமபஞ்சாக்கரம்.
9. திருமந்திரம்- G. வரதராஜன் உரை, பனியப்பாபிரதர், மூன்றாம் பாகம், ப.579.
10. திருமந்திரம் இராமநாத பிள்ளை உரை, கழக வெளியீ, இரண்டாம் பாகம், ப.1173.
11. திருமூலர் திருமந்திரம்-2251 (அவத்தைபேதம்).
12. மேலது 708, காயசித்தி உபாயம்.
13. மேலது 2826 (மறைபொருட் கூற்று)
14. மேலது 2869 (மறைபொருட் கூற்று)
15. மேலது 2847 (சூன்ய சம்பாஷணை)
16. மேலது 2842.
17. மேலது 2849.
18. மேலது 2874.
19. மேலது 323 (அகத்தியம்)
20. மேலது 325 (பதிவலியில் வீரட்டம் எட்டு)
21. மேலது 327.
22. மேலது 328.
23. மேலது 330.
24. மேலது 331.
25. மேலது 335 (இலிங்கபுராணம்)
26. மேலது 337.
27. மேலது 357 (எலும்பும் கபாலமும்.
28. மேலது 2922 (அணைந்தோர் தன்மை).
29. மேலது 894 (திருவம்பலச் சக்கரம்).
30. மேலது 895.
31. மேலது 914.
32. மேலது 928.
33. மேலது 1232 (ஏரொளிச் சக்கரம்).
34. மேலது 1388 (நவாக்கரி சக்கரம்).
35. மேலது 825 (அமுரிதாரணை).
36. மேலது 826.

37. பாலூர் கண்ணப்ப முதலியார், தமிழ் மந்திரம், ப.267.
38. திருமூலர் திருமந்திரம் 828 (அமுரிதாரணை).
39. மேலது 851 (சந்திர யோகம்).
40. மேலது 962 (திருவம்பலச் சக்கரம்).
41. மேலது 952 (திருவம்பலச் சக்கரம்).
42. மேலது 2626 (பிரணவ சமாதி).
43. மேலது 2627
44. மேலது 2631
45. மேலது 2672 (அதிசூக்கும பஞ்சாக்கரம்).
46. மேலது 864 (அசபை).
47. மேலது 953 (திருவம்பலச் சக்கரம்)
48. மேலது 2605 (மோனசமாதி).
49. மேலது 2915 (வரையுரை மாட்சி).
50. மேலது2821 (முத்திபேதம் - கரும நிருவாணம்).
51. மேலது 2939 (அணைந்தோர் தன்மை)
52. மேலது 2938.

# உ. புறம்சார்ந்த சமயப் பண்பாடு

இறைவனை ஞானக் கண்ணால் கண்டு, உணர்ந்து உறைப்புடன் இறையுணர்வில் பதிந்து கலந்து சீவன் சிவனாதலின் சிறப்புகளையும், வழிமுறைகளையும் மிக நுட்பமாக அறிவுறுத்தும் சமயத் தத்துவ விளக்கம் திருமந்திரம். இதனுள் முத்திக்குரிய அகவுணர்வுகளின் பண்படுதலும், புறமுயற்சி கொள்கைகளின் செயல்பாடுகளும் விளக்கங்களும் தெளிவுறுத்தப் பெறுகின்றன. இவற்றுள் பதி, பசு, பாசம் என்றால் என்ன? அவற்றின் தன்மைகள், பொது இலக்கணம், சிறப்பு இலக்கணம், முத்தி நிலை, முத்தி பெறுவதற்கான வழிமுறைகள், குரு, யோகியர் நிலை, சமயக் கொள்கைகள் போன்றவை பற்றிய செய்திகளைப் புறம் சார்ந்தவைகளாகக் கொள்ளலாம். இவற்றைப் பதி இயல், பசு இயல், பாச இயல், சாதன இயல், பயனியல் என்ற வகையில் நோக்கலாம்.

## பதி

பரப்பிரம்மம், இறைவன், கடவுள், தெய்வம், முதல்வன், கருத்தா, ஆண்டவன், பிரம்மம் என்றெல்லாம் கூறப் பெறும் அனைத்திற்கும் முழு முதற்காரணனே 'பதி' என்று அழைக்கப்படும் பொருள். 'பதி' என்றால், 'தலைவன்', 'காப்பவன்' என்று பொருள். பிற பொருள்கள் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் காரணமானவன் 'பதி'. எல்லாவற்றிலும் கலந்தும், கடந்தும், செலுத்துபவனாகவும் இருப்பதால் 'கடவுள்' என்ற பெயரைப் பெறும் 'பதி', பிரேரகம் (செலுத்துபவன்) என்றும் பெயர் பெறுகின்றான்.

இறைவன் உயிர்களோடு ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்பதைச் சுத்தாத்துவிதம் என்பர். இறைவனும் உயிரும் ஒன்றாய் நிற்பது 'அபேதம்' என்றும், வேறாய் நிற்பது 'பேதம்' என்றும், உடனாய் நிற்பது, 'பேதாபேதம்' என்றும் பெயர் பெறும். இறைவன், உயிரோடு மட்டுமன்றி மற்ற அறிவற்ற பொருள்களோடும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கின்றான். ஆனால் தன் அளவில் இறைவன் எவ்வித மாற்றமும் இல்லாதவன். 'அதுவதுவாய் நிற்றல்' என்ற நிலையில் அறிவற்ற, அறிவுடைப் பொருள்களை இயக்குகிறான். உயிர்களுக்கு உடனாய் நின்று உதவுவது 'காணும் உபகாரம்' என்றும், வேறாய் நின்று உதவுவது, 'காட்டும் உபகாரம்' என்றும் பெயர் பெறுகின்றன.

பதியின் எண் குணம் போன்ற உண்மை இயல்புகளாகிய சிறப்பு இயல்புகளே சொரூப இலக்கணம். இக்குணங்களைச் சச்சிதானந்தம் என்பர். சத்து என்பது ஒரே தன்மையினன் என்பதையும் சித்து என்பது முற்றுணர்வு உடையவன் என்பதையும் ஆனந்தம் என்பது நிறைவான பேரின்பம் உடையவன் என்பதையும் குறிக்கும். உயிர்களுக்குரிய முக்குணங்கள் இல்லாதவன் என்பதால் 'நிர்க்குணன், குணாதீதன்' என்றும் கூறுவர்.

இறைவனின் பொது இயல்பு (தடத்த இலக்கணம்) என்பது, பசுக்களாகிய உயிர்களுக்காகப் பல உருவம், பெயர் கொள்வது, ஐந்தொழில் ஆற்றுவது, உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருப்பது போன்றவை. இறைவன் கொள்ளும் உருவம், தொழில் முதலியன அறிவின் செயல். எனவே பதியின் உருவங்கள் சக்தியின் சரீரம். செயல்கள் சக்தியின் செயல்கள்.

பதி, மூவகையான வடிவங்களைக் கொள்கிறான் என்பதை ஞானலிங்கம் என்ற பகுதியில் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார் திருமூலர்.[1]

மூவகை வடிவங்கள்

| இலயநிலை | அதிகாரநிலை | போகநிலை |
|---|---|---|
| (அருவம் சக்திரூபம்) | (உருவம் புலனாவது) | (அருவுருவம் ஒளிவடிவு) |
| (சிவம், சத்தி, நாதம் விந்து எனும் நான்கு) | (மகேசுவர வடிவங்கள் 25) | (சதாசிவம் ஒன்று மட்டும்) புலனாகியும் புலனாகாமலும் இருப்பது. |
| (நிட்களம்) | (சகளம்) | (லிங்கம்) |
| (இலயம்) | (அதிகாரம்) | (சகள நிட்களம்) (போகம்) |

மூவகைத் திருமேனிகளும் ஐந்து நிலைகளாகக் கொள்ளப்படும். அவை, சக்தி பேதங்களால் ஆன சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், வித்தை என்பன. ஞானசக்தி தனித்து உள்ளநிலை சிவம் என்றும், கிரியா சக்தி தனித்து உள்ள நிலை சக்தி என்றும், இரண்டும் சமமாக இருந்தால் சதாசிவம் என்றும், ஞானம் குறைந்து, கிரியை மிகுந்து இருந்தால் ஈசுரம் என்றும், கிரியை குறைந்து ஞானம் மிகுந்துள்ள நிலை வித்தை என்றும் பெயர் பெறும். இச்சா சக்தியில் பேதம் இல்லை. இந்த ஐந்து நிலைகளில் இறைவன் நிற்கும் நிலைகளின் பெயரே அவன் இருக்கும் தத்துவங்களுக்கும் பெயராக உள்ள சுத்த தத்துவமாகிய சிவதத்துவம் ஐந்து ஆகும். ஐந்தொழில் செய்யும்

பொழுது, கருணையால் இச்சா சக்தி இறைவனுக்கு எப்பொழுதும் ஒரே தன்மையதாகவே இருக்கும்.

திருமூலர், இறைவனின் ஆற்றலாகிய சக்தியைக் கொண்டு ஐந்தொழில்களாகிய சிருஷ்டி (படைத்தல்), திதி (காத்தல்), சங்காரம் (அழித்தல்), திரோபவம் (மறைத்தல்), அனுக்கிரகம் (அருளல்) ஆகியவற்றைச் செய்யும் பதியின் அருளை அதே ஐந்து தலைப்புகளில் விரிவாக விளக்குகின்றார்.

ஐந்தொழில், தூல ஐந்தொழில், சூக்கும ஐந்தொழில், அதிசூக்கும ஐந்தொழில் என்று மூவகைப்படும்.

தூல ஐந்தொழில் - பேரூழிக்குப் பின் உலகை மாயையிலிருந்து படைத்து, காத்து, அழித்து, மறைத்து அருளல். இவை, சடப்பொருளில் நிகழ்வன.

சூக்கும ஐந்தொழில் - உயிர்கள் பிறப்புக்கு வருமுன் உள்ள கேவலத்தில் அதன் பிறப்புத் தகுதி அறிதல் படைத்தல். தகுதியில்லா தவைகளைக் கேவலத்தில் காத்தல், பிறப்புக்கு உட்படுத்திக் கேவலத் திலிருந்து அழித்தல், கேவலத்தில் மறைத்தல் சகலத்தில் பிறப்புக்கு உட்படுத்தி அருளல் போன்றவை. இவை இறைவன் தன்னிடத்தில் நடத்துவன.

அதிசூக்கும ஐந்தொழில் - பிறப்புக்கு வந்தபின் உயிர்களின் இயல்புக்கேற்ப அறிவித்தல் படைத்தல். அறிந்தவற்றுள் அழுத்தி, உயிரறிவைப் பிரித்து, மறைத்து, அனுபவிக்கச் செய்தல் முதலியன முறையே காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகும். இவை முழுவதும் உயிர்களிடத்து நிகழ்வன.

இம்மூவகை ஐந்தொழில்களுள் தூல ஐந்தொழில் சங்கார காலமுதல் மீண்டும் தோற்றுவிப்பது வரையிலும், சூக்கும ஐந்தொழில் உயிர்களின் கேவல நிலையிலும், அதிசூக்கும ஐந்தொழில் உயிர்களுக்குள்ள சகல நிலையிலும் நிகழ்வன.

மறைத்தல் என்பது தனியானது அல்ல. ஆன்மாக்கள் பாசத்தில் கட்டுண்ட நிலையில் தம்மையும் இறைவனையும்

அறியாது உலக மயக்கத்தில் கட்டுண்டு ஆழும். இவ்வாறு செய்வதே மறைத்தல்.

உயிர்களைப் பிறப்பிலிருந்து நீக்கி வீடு பெறச் செய்வது அருளல். மறைத்தலால் மலம் அழிந்து உயிர்கள் பக்குவமடைந்து வீடு பெறும். மறைத்தலைக் காத்தலுள்ளும், அருளலை அழித்தலுள்ளும் அடக்கலாம். இறைவன் தன் சக்தியால் அளவிலாப் பொருள்களில் நிறைந்து அளவிலாச் செயல்களைச் செய்தாலும் இறைவனும் சக்தியும் ஒன்றே. இருமுதல்கள் அல்ல. இரண்டு பொருளல்ல.

மறைத்தல் சக்தி
(திரோதான சக்தி. ஆதி சக்தி)

இச்சை ஞானம் கிரியை
(என்று மூன்றாகிப் பின்னர் படைத்தல் காத்தல்
என்று பலவாகும். இது உயிர்களின் பெத்த
நிலையில் உடனின்று உதவும்).

அருட்சக்தி
(முத்தி காலத்தில் அறிவை
விளங்கச் செய்து
பொருள்களை உணர்த்தும்)

சிவம் சக்தி என்ற பிரிக்க இயலாப் பேரொளி நிலை, சிருஷ்டிக்கு வரும் பொழுது பரன், பரை என்றாகிறது. பரம்பொருளே நவந்தரு திரு மேனிகள் கொண்டு சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசன், உருத்திரன், மால், அயன் ஆகி அந்தந்தச் சக்திகளுக்குரிய அருளை வழங்குகிறான். அவனே பிரம்ம விஷ்ணுக்களாக நின்று ஆக்கல், காத்தல், தொழில்களைச் செய்கிறான் என்பதை,

காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடுவுடலாய் நிற்கும்
பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்
ஆரணமாய் உலகாய் அமர்ந்தானே [2]

என்று விளக்கும் திருமூலர், மூவர் தொழிலையும் அறிபவனாகவும், உலகை உண்டாக்கிப் பயன்பெறச் செய்பவனாகவும், அண்ட பிண்டங்களைத் தோற்றுவித்து இயக்குபவனாகவும் எல்லாமாகவும் பரம்பொருள் இருக்கின்றான் என்றும் கூறுகிறார்.

பரம் பொருளாம் சதா சிவனே, குயவன் மட்பாண்டங்களை உருவாக்குவது போல், உலகினை மாயையிலிருந்து தோற்றுவித்துக் காப்பவன் என்று கூறும் திருமூலர்,

உற்று வனைவான் அவனே உலகினைப்
பெற்று வனைவான் அவனே பிறவியைச்

சுற்றிய சாலும் குடமுஞ் சிறு தூதை
மற்றும் அவனே வனைய வல்லானே [3]

என்ற மந்திரத்தில் விளக்குகிறார்.

உயிர்களுக்கு உடம்பு கொடுப்பதற்கு முன்பும் காத்த இறைவன், உடம்பினின்று உயிர் நீங்கிய பின்பும் காப்பவன் என்பதை,

தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் பிறிதில்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்த மவ்வழி
தாங்கி நின்றானும் அத் தாரணி தானே [4]

என்ற மந்திரம் விளக்குகிறது.

பரம்பொருளே உருத்திரனாய்ச் சங்காரம் செய்து உலகை உலையிலிட்ட அரிசி போல வெந்தொழியச் செய்வான். நித்த சங்காரமாகிய உறக்கமும் சங்காரமே. சுத்த சங்காரத்தில் சிவத்துள் ஒடுங்கல், மனம் முதலிய கரணங்கள் அடங்கியிருக்கும் படிச் செய்தல், கருவிகளினின்றும் நீங்கிப் பரனருளில் தோய்ந்து இருத்தல் கருவிகளினின்றும் நீங்கிப் பரனருளில் கூடாது இருத்தல் போன்றவைகளும் சங்காரமே என்பதை,

நித்த சங்காரமும் நீடிளைப் பாற்றலின்
வைத்த சங்காரமும் மன்னு மனாதியில்
சுத்த சங்காரமும் தோயாப் பரனருள்
வைத்த சங்காரமு நாலாம் உதிக்கிலே [5]

என்ற மந்திரத்தால் அறியலாம்.

சுத்த சங்காரத்தில் அனைத்தும் சிவத்துள் அடங்கும்.

திரோபவம் என்றால் மறைத்தல். இது அருட்செயல். ஆணவமலத்தின் ஆற்றலை அதிகமாக்கி மாயை, கன்மங்களால் உயிர்களுக்கு உலக இன்பத்தைத் தோற்றுவித்து உயிர்கள் மயங்கி இருக்குமாறு செய்தல். பக்குவம் பெறும் வரை மறைப்பினைச் செய்வான்.

பல பிறப்புகளில் பிறந்து பிறந்து உழன்றால் உயிர்களுக்கு ஆணவ மலப்பற்று, மெல்ல மெல்ல குறையும், இறைப்பற்று மிகும். அப்பொழுது உயிர்களுக்குத் தன்னைக் காட்டி அருளுவான் இறைவன். இதனை,

எட்டுத் திசையும் எறிகின்ற காற்றொடு
வட்டத் திரையனல் மாநிலம் ஆகாயம்

ஒட்டி உயிர்நிலை என்னும் இக்காயப்பை
கட்டி அவிழ்ப்பான் கண்ணுதல் காணுமே [6]

என்று குறிப்பிடுகின்றார் திருமூலர்.

ஆன்மாக்களின் அவத்தைகளாகிய 3 நிலைகளுக்கும். இறைவனது ஐந்து தொழில்களுக்கும் நேரடியான தொடர்பு உண்டு. இறைவனின் அழித்தல் தொழிலால் ஆன்மா, கேவலாவத்தையையும், படைத்தல், காத்தல், மறைத்தல் ஆகிய முத்தொழில்களால் சகலாவத்தையையும், அருளல் தொழிலால் சுத்தாவத்தையையும் அடைகின்றது.

பிறப்பு நிலையாகிய பெத்த நிலையிலும், முத்திநிலையிலும் ஆன்மாவை விட்டு நீங்காதது திருவருளாகும். பரம்பொருள், மலங்களைக் குருவாக வந்து போக்கி முத்தி அருளுவான். 36 தத்துவங்களைக் கடந்த பரம்பொருளே ஆன்மாக்களை 36 தத்துவங்களைக் கடக்கச் செய்து முத்தியருள முடியும். சூரிய ஒளி இல்லாமல் சூரிய காந்தக் கல்லில் அக்கினி தோன்றாது. அதுபோல் அருட்குரு இல்லாமல் ஆன்மாவில் ஞானம் தோன்றாது என்று திருமூலர் உபதேசத்தில் கூறுவதை உறுதி செய்வதாக, உமாபதி சிவத்தின்,

ஞானம் இவனொழிய நண்ணியிடும் நற்கல் அனல்
பானு ஒழியப் படின் [7]

என்ற திருவருட் பயன் கூற்று அமைந்துள்ளது.

திருமந்திரம் பாயிரத்தில் இறைவனின் இயல்புளைக் கூறும் திருமூலர் பரம்பொருள் ஒருவன். அவனும் அவன் அருளும் ஆகிய நிலையில் சக்தியோடு சேர்ந்து இரண்டாக உள்ளான். அரி, அயன், அரன் மூவருள்ளும் நிலை பெற்று இருக்கின்றான். அன்பு, அறிவு, ஆற்றல் என்ற மூன்றாகவும் உள்ளான். இச்சை, ஞானம், கிரியையாகவும் உள்ளான். நான்மறையாகவும். நான்கு புருடார்த்தங்களை உணர்ந்தவனாகவும் உலகைக் கடந்தும், காரணனாகவும், உயிராகவும், உலக வடிவாகவும் இருப்பவன். ஐம்புலன்களை வென்றவனாகவும், ஐந்தொழில் செய்பவனாகவும் இருப்பவன். ஆறு ஆதாரங்களாகவும் அவ்வாதாரங்களுக்குரிய தெய்வங்களாகவும், ஆறு அத்துவாக்களாகிய திருவடியைச் சேர்ப்பிக்கும் வழிமுறைகளாகவும் இருப்பதோடு, ஆறு ஆதாரங்களுக்கு மேலான ஏழாந்தானமான துவாத சாந்தப் பெருவெளியில் விளங்குபவன். ஏழுவகைப் பிறப்பிற்கும் அப்பாற்பட்டு உயிர்களுக்குப் பிறப்பினை நல்குபவன்.

மண், புனல், அனல், கால், வெளி, சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் அட்ட மூர்த்திகளாக இருப்பவன். எண் குணம் உடையவன் என்று,

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந்தான் உணர்ந்து எட்டே [8]

என்ற மந்திரத்தின் வழி விளக்குகிறார்.

அதோமுகத் தரிசனம் என்ற பகுதியில், சதாசிவ மூர்த்தியின் கீழ்நோக்கிய ஆறாவது முகத்தைத் தரிசித்தல் பற்றிக் கூறும் திருமூலர், அம்முகத்தின் கண்டம் கறுத்தது, வானவர் தானவர்களின் செருக்கோடு கூடிய குற்றத்தைப் பொறுத்ததால் ஏற்பட்ட கருமை என்கிறார். கண்டத்துக்குக் கீழுள்ள இருளை நோக்கிக் கீழே செல்லாமல் ஒளியை நோக்கி மேலே செலுத்தி இருளை மாற்றி ஒளியாக்க வேண்டும். இதுவே நஞ்சுண்ட தத்துவம் கூறப்படும் புராணக் கதையின் உருவகம் என்பர். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம். சத்தியோசாதம் என்ற ஐந்து முகங்கள் சதாசிவனுக்கு உள என்று ஆகமம் கூறுகின்றது. ஆறாவது முகமான அதோமுகம், ஞானியர்க்கு மட்டும் பரம்பொருளை உணரும் பொழுது இறைவனால் உணர்த்தப் படும். மற்றவர்களுக்குத் தெரியாது.

தலையிலிருந்து நூறு நாடிகள் கீழ் நோக்கிப் பாய்ந்து ஆறுபகைகளாகிய காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாற்சரியம் என்பனவற்றுள் செலுத்தும். அப்பொழுது அதைத்தடுத்து ஆறு ஆதாரங்களையும், மூலாதாரத்திலிருந்து எழும் சக்தி கடந்து மேல் நோக்கிச் சென்று ஒளிபெறச் செய்யும்.

அதோமுக மாமலராயது கேளும்
அதோமுகத் தாலொரு நூறாய் விரிந்து
அதோமுக மாகிய அந்தமில் சத்தி
அதோமுக மாகி அமர்ந்திருந் தானே [9]

என்று ஆருயிர்களைச் சிவத்துடன் கூட்டும் அதோமுகம் பற்றித் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

ஒளியாம் பரம் பொருளே, ஓம் என்ற பிரணவத்தின் பொருளாகவும், ஊழித் தலைவனாகவும், மாயையை இயக்குபவனாகவும் உள்ளான் என்பதை,

அதோமுகங் கீழண்ட மான புராணன்
அதோமுகத் தன்னொடும் எங்கு முயலுஞ்

சதோமுகத்து ஒண்மலர்க் கண்ணிப் பிரானும்
அதோமுகன் ஊழித் தலைவனு மாமே [10]

என்ற மந்திரத்தின் வழி யறியலாம்.

ஆதியாற்றலாகவும், பிரணவ சொரூபமானதாகவும் உள்ள அதோமுகம் ஆன்மாக்களின் வினைகளை அழித்து மலநீக்கம் பெறச் செய்யும். மேலும்,

| | | |
|---|---|---|
| ஈசானம் | - | விரும்பும் அனைத்தையும் கொடுக்கும் (நடுக்கம்) |
| அகோரம் | - | அனைத்துப் பாவங்களையும் அழிக்கும் (விளக்கம்) |
| வாமதேவம் | - | நிறைஞானம் கொடுக்கும் (ஆட்சி) |
| தத்புருஷம் | - | முத்தொழில்களுக்குக் காரணம் (தோற்றுவித்தல்) |
| சத்யோஜாதம் | - | அனைத்திற்கும் தலைமையாகவும், சாட்சியாகவும் இருப்பது. |
| அதோமுகம் | - | சீவர்கள் ஒளிபெற அருளும். |

என்று ஆறு முகங்களுக்கு விளக்கம் அமைகிறது.

**லிங்கம்**

எதிலிருந்து எல்லாம் ஒடுங்கி, மீண்டும் எதிலிருந்து அனைத்தும் மீளத் தோன்றி அருள் செய்கிறதோ அதுவே லிங்கம். லி = ஒடுக்கம். கம் = வருதல்.

கண்ணுக்குத் தெரியாத அருவநிலை, அகள நிலையாகிய லயநிலை (ஒடுங்கும்நிலை). இந்நிலையில் இறைவன் சத்தனாகத் தொழிற்படுகின்றான். அருவுருவ நிலையாகிய சகளஅகளநிலையாம், இறைவனின் போகநிலையில் இறைவன் சதாசிவன் என்று விளங்குகிறான். இந்நிலையில் உயிர், உலகங்களைப் படைத்துப் பக்குவமடைந்தோர்க்கு அருள் செய்கிறான்.

சகளம் என்பது கண்ணுக்குத் தெரிகின்ற உருவநிலையாகிய அதிகாரநிலை. இந்நிலையில் இறைவன் உயிர்களையும் உலகங்களையும் தோற்றுவித்துச் செயல்படச் செய்கிறான். இதனால்தான் உயிர்கள் மலநீக்கம் அடையும் பக்குவமடைகின்றன. அதாவது, சர்வ சிருஷ்டியும், சர்வ சங்காரமும் செய்பவன்.

இறைவனின் அருவுருவ நிலையாகிய லிங்கத்தில் சிவம் நாதமாகவும் (ஒலி) சத்தி விந்துவாகவும் (ஒளி) இருந்து தொழிற்படும்

பொழுது இச்சாசக்தியாகிய விழைவாற்றலும், ஞானசக்தியாகிய அறிவாற்றலும், கிரியா சக்தியாகிய செயலாற்றலும் விரிவடைந்து, சிவத்தின் ஞான, கிரியாசத்திகள் சமமாகக் கூடி, சுத்தமாயையில் பொருந்தி சதாசிவ மூர்த்தியாகும். இம்மூர்த்தம் சிவலிங்கமாக வழிபடப்படுகிறது.

திருமந்திரம் ஆறுவகையான லிங்கங்களைக் கூறுகின்றது. அவை, அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆன்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என்பன.

ஆனால் பிறர், ஆறு லிங்கங்கள், மூன்று வகையிலிருந்து தோன்றியதாகக் கூறுபவர்,

| இஷ்டலிங்கம் | | பிராணலிங்கம் | | பாவகலிங்கம் | |
|---|---|---|---|---|---|
| ஆசார லிங்கம் (கிரியா சக்தி ஒளி) | குரு லிங்கம் (ஞான சக்தி ஒளி) | சிவ லிங்கம் (இச்சா சக்தி ஒளி | சங்கம லிங்கம் (திரோதான ஒளி) | பிரசாத லிங்கம் (பராசக்தி ஒளி) | மகா லிங்கம் (பாவகலிங்க ஒளி) |

என்று வகைப்படுத்துவர். பஞ்சசக்தியின் இயக்கத்தால் நிகழ்வன. ஆறாவது அதோமுகம் பரமரகசியம். ஞானிகளுக்கு மட்டுமே உணர்த்தப்படும்.

திருமூலர் கூறியுள்ள சதாசிவ லிங்கம் என்ற பகுதியில் உள்ள மந்திரங்களின் வழியாகக் கீழ்க்காணும் செய்திகளை அறியலாம்.

| ஆசார லிங்கம் | குரு லிங்கம் | சிவ லிங்கம் | சங்கம லிங்கம் | பிரசாத லிங்கம் |
|---|---|---|---|---|
| மேற்கு | வடக்கு | தெற்கு | கிழக்கு | வடகிழக்கு |
| கன்ம சாதாக்கியம் | கர்த்திரு சாதாக்கியம் | மூர்த்தி சாதாக்கியம் | அமூர்த்த சாதாக்கியம் | சிவ ாதாக்கியம் |
| கிரியாசக்தி | ஞானசக்தி | இச்சாசக்தி | திரோதான | பராசக்தி சக்தி |
| சத்தியோஜாத முகம் | வாமதேவ முகம் | அகோர முகம் | தற்புருட முகம் | ஈசான முகம் |
| வெண்மை | செம்மை | கருமை | குங்குமநிறம் | படிகநிறம் |
| நிலம் | நீர் | அக்கினி | வாயு | ஆகாயம் |
| நாற்றம் | சுவை | ஒளி | ஊறு | ஓசை |
| மூக்கு | நாக்கு | கண் | தோல் | காது |

| ஆசார லிங்கம் | குரு லிங்கம் | சிவ லிங்கம் | சங்கம லிங்கம் | பிரசாத லிங்கம் |
|---|---|---|---|---|
| சாம வேதம் | அதர்வன வேதம் | யஜுர் வேதம் | ரிக் வேதம் | ----- |
| பாசுபதம் உதித்தது | மாவிரதம் உதித்தது | காளாமுகம் உதித்தது | சைவம் உதித்தது | வைரவம் உதித்தது |
| நிற்கும் விக்கிரகம் (உற்சவ விக்ரகம்) | இருக்கும் விக்கிரகம் | ஸ்தாபத விக்கிரகம் | வாகனத்தின் மேல் இருத்தல் | நடனம் செய்யும் விக்கிரகம் |
| தூபம் (அர்ச்சனை) | நைவேத்யம் | தீபம் | மலர் | மந்திரம் |
| தோன்றிய ஆகமங்கள் 5 (காமகிகம், யோகஜம், சிந்தியம், காரணம், ஆஜிதம்) | தோன்றிய ஆகமங்கள் 5 (தீப்தம், சூக்குமம், ஸகஸ்ரம், அம்சுமான், சுப்பிரபேதம்) | தோன்றிய ஆகமங்கள் 5 (விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம்) | தோன்றிய ஆகமங்கள் 5 (ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம்) | தோன்றிய ஆகமங்கள் 8 (புரோஷ்சிதம், இலவிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம்) |
| கௌசிக முனிவர்க்குக் கூறப்பட்டது. | காசிப முனிவர்க்குக் கூறப்பட்டது. | பரத்துவாச முனிவர்க்குக் கூறப்பட்டது. | கௌதம முனிவர்க்குக் கூறப்பட்டது | அகத்தியர்க்குக் கூறப்பட்டது. |

கீழ் நோக்கிய அதோமுகத்தில் இருந்து வாமமதம் உதித்தது. இதற்கு உற்சவ விக்கிரகம், சயனம் அல்லது உறக்க நிலை. கிரியை இல்லை. ஞானியர் என்பதால் மேற்கிரியை இல்லை. மேலும் ஓர் ஆலயத்தில் கூறப்படும் ஐந்து வகையான லிங்கங்கள்,

விமானம் - தூலலிங்கம்

கருப்பக்கிரகம் - சூக்குமலிங்கம்

பலிபீடம் - அதிசூக்கும லிங்கம்

கொடிமரம் - காரண லிங்கம்

மூலலிங்கம் - மகா காரண லிங்கம்

எனப்பெயர் பெறும் என்பதை.

தூய விமானமுந் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகு நற் சூக்குமம்
பாயபலி பீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரனிலை ஆய்ந்து கொள்வார் கட்கே "

என்று அண்டலிங்கம் என்ற பகுதியில் திருமூலர் கூறுகிறார்.

சுயம்பு லிங்கம் தானாகவே தோன்றியது. தேவர்களால் அமைக்கப்பட்டது தைவீகலிங்கம். மேலும் தேவரிஷகளால் அமைக்கப்பட்டது திவ்யம். மானுட ரிஷிகளால் அமைக்கப்பட்டது ஆருடம். அரசர்களால் அமைக்கப்பட்டது மானுடம். அரக்கர்களால் அமைக்கப்பட்டது ராட்சம். பாணாசுரனால் அமைக்கப்பட்டது பாணம் என்று வழங்கப்பட்டன. ஆனால் இவற்றினின்றும் வேறுபட்டன திருமூலர் கூறும் லிங்கங்கள்.

திருமூலர் கூறுகிற அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆத்துமலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என்பனவற்றை முறையே உலகசிவம், உடற்சிவம், உலகமுதற்சிவம், உயிர்ச்சிவம், உணர்வுச்சிவம், சிவகுரு என்று குறிப்பிடுகின்றார் கழகப் புலவர் இராமநாதபிள்ளை அவர்கள்.

இவை ஆறும், உலகு, உடல், உலகமுதல்வன், உயிர், உணர்வு, உணர்வருளும் சிவகுரு என்னும் ஆறனைக் குறிப்பன. இவை ஆறு பண்புகளை உடையன. அவை முறையே ஆக்கம், ஆண்மை, சீர்த்தி, திரு, மெய்யுணர்வு, உறுதி என்பன.

அண்டலிங்கம் (உலகத்தைக் குறிப்பது)

அண்டலிங்கம் என்பது உலகமே சிவனின் திருமேனி. இலிங்கம் என்பது குறி. சிவலிங்கமே எல்லாத் திசைகளும், கலைகளும், உலகங்களுமாம். சக்தி ஆற்றலாகப் பொருந்தியுள்ளாள். 64 கலைகளையுடைய பிரணவமும் இலிங்கமாகும். அருவத்துக்கும், உருவத்துக்கும் இடைப்பட்ட சதாசிவமாகிய இடைநிலை, என்றும் பிரியாத சக்தியின் ஆற்றலால் அறிவையும் குண்டலினியால் உருவையும் தோற்றுவிப்பான்.

போகம், முத்தி, புத்தி, சித்தி, சித்திக்குரிய வழிகள், தத்துவங்கள் 36, அத்துவாக்கள் 6, தத்துவங் கடந்த நிலை, அனைத்தையும் அருளுவது பரம்பொருளே.

மக்களால் செய்யப்பட்ட லிங்கத்திலிருந்தும், அண்டலிங்கமான இறைவன் அருள்செய்வான். அவன், சிதாகாயப் பெருவெளியாம் பரவெளியில் கலந்து பரந்து உள்ளான் என்பதை உணர்ந்து ஆன்மாவில் நிறுத்தி வழிபட்டால் ஆறு ஆதாரத் தாமரைகளிலும் குண்டலினி பொலிவுற்று விளங்குவாள் என்பதை,

தாபரத்து உள்நின்று அருள வல்லான் சிவன்
மாபரத்துண்மை வழிபடு வாரில்லை
மாபரத்துண்மை வழிபடு வாளர்க்கும்
பூவகத்துள் நின்ற பொற்கொடி யாகுமே [12]

என்ற மந்திரத்தில் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

மேலும், கோயிலின் விமானம், கருவறை, பலிபீடம் போன்றவைகளும் இலிங்கமாகும் என்று கூறிய திருமூலர், முத்து, மாணிக்கம், பவளம், மரக் கொம்பு, கல், திருநீறு, மரகதம், சிவாகமம், சாதம், அரிசி, பூ, மணல் ஆகியவற்றாலும் சிவலிங்கம் அமைக்கலாம் என்கிறார்.

மேலும் தயிர், நெய், பால், சாணம், செம்பு, அக்கினி, பாதரசம், நீர் (கலசத்துள் வைத்து), செங்கல், வில்வம், பொன் ஆகியவற்றையும் சிவலிங்கமாக அமைக்கலாம் என்கிறார்.

படிகலிங்கத்தை அந்தணரும், பொன் லிங்கத்தை மன்னரும், மரகத லிங்கத்தை வைசியரும், சூத்திரர் வாணலிங்கத்தையும் வழிபட வேண்டும் என்று நான்கு வர்ணத்தாரும் வழிபடுவதற்குரிய இலிங்கங்களைத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

மறையவர் அர்ச்சனை வண்படி கந்தான்
இறையவர் அர்ச்சனை யேய பொன்னாகுங்
குறைவிலா வசியர்க்குக் கோமள மாகுந்
துறையுடைச் சூத்திரர் தொல்வாண லிங்கமே [13]

*(1721 இப்பாடல் சில பதிப்புகளில் இல்லை. ஜி. வரதராஜன் உரையில் உள்ளது)*

அண்டலிங்கமாக வியாபகத்தன்மை பெற்றுள்ள இறைவன் ஐம்பூதங்கள் சூரியன், சந்திரன், ஆன்மா அனைத்திலும் கலந்துள்ளான். எனவே, உயிர்களின் உடம்பும் இறைவனது கோயிலே.

**பிண்டலிங்கம் (உடலைக் குறிப்பது)**

அதுவுணர்ந் தோனொரு தன்மையை நாடி
எதுவுணரா வகை நின்றனன் ஈசன்
புதுவுணர்வான புவனங்கள் எட்டும்
இதுவுணர்ந் தென்னுடல் கோயில் கொண்டானே [14]

என்று, சிவனின் திருவடி யுணர்வு, யான் எனது எனும் செருக்கு அற்ற பொழுது விளங்கும். அவன், 8 இடங்களில் விளங்குகிறான். ஐந்து பூதங்கள், ஞாயிறு, திங்கள், உயிர் ஆகிய 8 இடங்களில் நிறைந்துள்ளான். அம்முறையில் என் உடம்பினையும் கோயிலாகக் கொண்டுள்ளான் என்கிறார் திருமூலர்.

மனித உடம்பும் சிவலிங்கம். எனவே மக்கள் வடிவு திருச்சிற்றம்பலம். அதுவே, சதாசிவனின் அருட்பெருங்கூத்து.

மனித உடம்பாகிய லிங்கத்தில் ஐம்பூதத் தலைவர்களும் அவரவர் தொழிலைச் செய்ய உரியவகையில் இயக்குவிப்பான். (பிரமன் - மண்; விஷ்ணு - நீர்; உருத்திரன் - தீ; மகேசுரன் - காற்று; சதாசிவன் - ஆகாயம்)

இடகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, அலம்புடை, சிங்குவை, புருடன், சங்கினி, குகு ஆகிய பத்து நாடிகளையும் இடமாகக் கொண்டு இறைவன் அருள்புரிவான். புலன்களைத் தூய்மையாக்கித் தன்பின் வரச் செய்து இறைவனை வழிபட்டால், மனித உடலைக் கோவிலாகக் கொண்டு எழுந்தருளி வந்து ஏற்றுக் கொள்வான் என்பதை,

கோயில் கொண்டான் அடிகொல்லைப் பெருமறை
வாயில் கொண்டானடி நாடிகள் பத்துள
பூசை கொண்டான் புலனைந்தும் பிறகிட்டு
வாயில் கொண்டான் எங்கள் மாநந்தி தானே [15]

என்ற திருமூலரின் வாக்கால் அறியலாம்.

சதாசிவத்தை வணங்கி மனதின் அறிவையும் ஆற்றலையும் பெற்றால் மனிதன் சதாசிவம். உடம்பில் நிகழ்வதால் ஆக்கை திருக்கூத்து என்பதை,

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே [16]

என்ற மந்திரத்தால் அறியலாம்.

சதாசிவலிங்கம் (உலக முதலைக் குறிப்பது)

இது, உலகமுதல்வனாகிய லிங்கத்தைக் குறிக்கிறது. அயன், அரி, அரன், மகேசுவரன், சதாசிவன், இவர்களுக்கு மேல் விந்து, நாதம், ஆதார சக்தியாகிய குண்டலினி முடியும் இடம் ஆகிய அனைத்தும் பொதுவாக சதாசிவம் எனப்படும்.

சதாசிவமாகிய சக்தியினுள் ஐந்துகலைகள் இடம் பெறும். அச்சத்தி ஒளிமய மாகித் திக்கனைத்தையும் இயக்கி அருளும்.

ஒளியாக விளங்கும் சதாசிவம் சத்தி உருவே. மூலாதாரம் முதல் சிரசின் மேலும் ஒளியாக விளங்கும், சதாசிவ மூர்த்தியைச் சிரம் முதல் பாதம் வரை உணர்ந்து தியானித்தால் ஒளிமயமாகக் குண்டலினி விளங்கும். சகஸ்ரத்தின் மேல் சென்ற போது ஒன்பது

பேதமாய் உடலிலும் உயிரிலும் கலந்து விளங்குவது சதாசிவம். ஞானியர்க்கு உடலே சதாசிவமாய் விளங்கும். அகர உகரமாகிய சிவன் சத்தி சேர்ந்த நிலையே சதாசிவம்.

சதாசிவ லிங்கத்துக்குரிய பீடமாகிய அடிப்பாகம் ஓங்காரம். இலிங்கத்தின் கண்டம் மகாரம். இலிங்கத்தின் வட்டப் பகுதி உகாரம். இலிங்கத்தின் பாணம் அகாரமும், விந்து நாதமுமாகும் என்று கூறி லிங்கத் திருமேனி, பிரணவம் என்பதை,

இலிங்கநற் பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கநற் கண்டம் நிறையு மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையும் உகாரம்
இலிங்கம் அகாரம் நிறைவிந்து நாதமே [17]

என்று குறிப்பிடுகின்றார்.

பிரணவம் தொழிற்படும் போது கீழுள்ள நிலை கெட்டுச் சிரசின் மேல் வந்து அ, உ சேர்க்கையால் நாதமாக விளங்கும்.

ஆத்மலிங்கம் (உயிரைக் குறிப்பது)

ஆத்மாவாகிய உயிரே லிங்கமாதல். லிங்கம் சிவசக்தி வடிவம். அகர உகரமாகிய அருவமான ஆன்மாவிலும் பொருந்தி அண்டகோசமாய் அமைந்துள்ளது. நாதமும் விந்துவும் கலந்ததே ஆன்ம லிங்கம். ஆன்மாவாகிய சதாசிவ லிங்கத்துக்கு 36 தத்துவங்களே பீடம், கண்டம், பாணமாக அமைகின்றன.

சக்தி வடிவாகிய சிவலிங்கத்தின் பீடம் ஆவிநிலை. பீடத்தின் கழுத்துத் திருவடியுணர்வாகிய சிவஞானம். இலிங்கம் சிவமெய். ஆக, ஆன்ம தத்துவம் பீடம். வித்யாதத்துவம் கண்டம். சிவ தத்துவம் பாணம் என்பதை,

சத்திநற் பீடம் தகு நல்ல ஆன்மா
சத்திநற் கண்டம் தகுவித்தை தானாகும்
சத்திநல் லிங்கம் தகும்சிவ தத்துவம்
சத்திநல் லான்மாச் சதாசிவந் தானே [18]

(திருமூலர் திருமந்திரம் 1728) (ஆத்தும லிங்கம்)

என்ற மந்திரத்தால் அறியலாம். சிவசத்தி விளங்கும் இடம் ஆத்மாவின் மனமண்டலம். சிவன், ஆத்மாவின் உள்ளத்தில் விளங்கி, உள்ளத்தை இடமாகக் கொண்டு விளங்குவதால், ஆத்மாவே லிங்கமாகிறது.

ஞானலிங்கம் (உணர்வைக் குறிப்பது)

சிவசக்தி ஒன்றல் நிலையை உணர்தலே ஞானம். சாதனை செய்து ஞான லிங்கத்தை உணர வேண்டும். 25 மகேசுவர வடிவங்கள்

உருவம், இலிங்கத் திருமேனி அருவுருவம், அருவம் என்பது காணமுடியாதது. மூவகையான திருமேனிகளைக் கொள்ளும் இறைவன் குருவாகவும் வருவான்.

சதாசிவனுக்குக் கீழுள்ள பிரமன், விஷ்ணு, உருத்தின், மகேசுவரன் ஆகிய நான்கும் உருவம். விந்து, நாதம், சத்தி, சிவம் நான்கும் அருவம். நடுவில் உள்ள சதாசிவம் அருவுரு.

ஞானலிங்கம், ஒளியாக உலகமெங்கும் சூக்குமமாய் விரிந்து பரந்து இருக்கும். தத்துவங்களை விட்டு, சிவசக்தியாகிய சதாசிவ, பிரணவ சக்திகளின் கூட்டுறவை உணர்ந்தால் ஞானம் பெறலாம்.

ஞானலிங்கமான ஒளிநிலையை உணர்ந்தால் உலகெல்லாம் சூக்குமமாய் விளங்க சிந்தையுள் சிவம் விளங்கும்.

சிவலிங்கம் (உணர்வு அருளும் சிவகுருவைக் குறிப்பது)

பஞ்ச பூதங்களில் கலந்து, செறிந்து எல்லாமுமாக விளங்கும் இறைவனை ஒரு குறியில் வைத்து வழிபட ஐந்தெழுத்து ஓதி, சரியை, கிரியை, யோக நெறிகளில் நின்று உள்ளன்போடு உணர்ந்து உருக வேண்டும் அப்பொழுது அவன் அருள்புரிவான்.

நவந்தரு பேதங்களாகிய பிரம்மன் முதல் சிவன் ஈறாக உள்ள ஒன்பதும் சேர்ந்ததே சிவலிங்கம் என்பதை,

மலர்ந்த வயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரு ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சத்திசிவன் வடிவாகிப்
பலன்தரு லிங்கம் பராநந்தி யாமே [19]

என்ற மந்திரத்தால் அறியலாம்.

வீணாத்தண்டு ஊடே செல்லும் செம்மையான சோதியையே மனிதனிடம் உள்ள சிவலிங்கமாகப் பாவிக்க வேண்டும். மனத்தை, உடம்பின் ஆதார நிராதாரக் கலைகளில் நிறுத்தியும் நீக்கியும் பழகினால் சிவகதி விளையும்.

பொறி, புலன்கள் வழி அறிவைச் செலுத்தாது பரம்பொருளோடு ஒருமுகப்பட்டுப் பொருந்தி இன்புற்றால் இறைவன், தனது சத்தியைப் பதித்து அருளுவான். இதனால் மெய்யுணர்வு பெறலாம் என்ற உறுதி வேண்டும்.

தன்னுள் ஒடுக்கித் தோற்றுவித்தருளும் லிங்கமாக இருக்கும் இறைவன், ஞானியர் அறிவில் சிறந்து விளங்குவான். அறிவும், ஆற்றலுமாக எங்கும் கலந்து இருக்கும் பரம்பொருள் பாசம் நீக்கிப் பிறப்பறுத்து ஒளிவிளங்கச் செய்யும்.

உலக இருளை நீக்கும் ஞானாதித்தன், பிண்டமாகிய உடலிலும், வீணாத்தண்டில் பொருந்தி மேல் முகமாக எழுந்து அக இருளைப் போக்குவான். சிரசின்மேல் அமுதம் சுரக்கச் செய்வான். பரம்பொருளாகிய சூரியன் எங்கும், எதிலும் அண்ட பிண்டங்கள் அனைத்திலும் அணுவளவும் நீக்கமற பரந்து கலந்து இருந்தாலும் அனைத்தையும் கடந்தும் இருப்பவன். குறிப்பிட்ட இடங்களிலோ, பொருள்களிலோ அடக்கிவிடமுடியாது என்பதனை,

கடம்கடம் தோறும் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்
விடங்கொண்ட கண்டனும் மேவிய காயத்
தடங்கிட நின்றதும் அப்பரி சாமே [20]

என்ற மந்திரத்தில் கதிரவனின் ஒளியை உவமை கூறி விளக்குகிறார் திருமூலர்.

இறைவன் உயிர்களின் உடலில் மட்டுமன்றி பிராணனிலும் கலந்து இருப்பவன். உயிர்களைப் பிறவிக்குட்படுத்தி வினைகளை நுகரச் செய்து ஞானம் அளித்து வீட்டின்பம் அருளுபவன். உயிர்களின் அறியாமையை நீக்கித் தூய்மையாக்கித் தன்னுள் கலக்கச் செய்யவே ஐந்தொழில் ஆற்றுகிறான்.

இறைவனின் உருவத்திருமேனி போகவடிவம், யோக வடிவம், வேக வடிவம் என்று மூவகைப்படும். உலக இன்பம் வழங்கக் கொள்ளும் மணக்கோலம் - போக வடிவம். இறை இன்பம் வழங்கி ஞானம் நல்க கொள்ளும் ஆசிரியர் கோலம் - யோக வடிவம். துன்பத்தை நீக்கக் கொள்ளும் போர்க்கோலம் - வேக வடிவம். இவை அனைத்தும் மறைத்தல் தொழிலைச் செய்யும் வடிவம். இத்திருமேனிகளில் இறைவன் 'மகேசுவரன்' எனப்படுகிறான். மகேசுவரத் திருமேனிகள் 25. இவை, வெளிப்பட்டு விளங்குவது என்ற பொருளில் 'வியத்தலிங்கம்' எனப்படுகிறது.

சிவலிங்கம் மூன்று வகைப்படும். அவை, அவ்வியத்த லிங்கம், வியத்தா வியத்த லிங்கம், வியத்த லிங்கம் என்பன.

| அவ்வியத்த லிங்கம் | வியத்தா வியத்த லிங்கம் | வியத்த லிங்கம் |
|---|---|---|
| நிட்கள லிங்கம் (தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட சிவன் இவ் வடிவில் உள்ளான். இது பரநாதம், பரவிந்து எனப்படும்). | அருவுருவத் திருமேனி. (சிவன், இதில் நின்று அருளல் தொழிலைச் செய்கிறான்). | மகேசுவர வடிவங்கள் (இத் திரு மேனிகளைக் கொண்டே சிவனை வழிபட வேண்டும்). |

ஞானம் உடையார் அறிவில் பொருந்தும் இறைவன், குருவாக வந்து அருளைப் பதியச் செய்து சீவர்களை ஆனந்த மயமாக்குவான். சத்தியோடு கூடி ஐந்தொழில் புரியும் இறைவன் சீவர்களோடு நவந்தரு பேதமாகப் பொருந்தி அருளுவான். திருவருள், ஐம்மல இருளை நீக்கும் ஆற்றல் உடையது. குருவாக வந்து பாச ஞானத்தை நீக்கி, பதிஞானம் விளங்கச் செய்வான். சிவ ஒளியோடு சீவ ஒளியைக் கலக்கச் செய்து நிலைபெற அருள்வான்.

பெத்த நிலையிலும், முத்தி நிலையிலும் ஆன்மாவை விட்டு நீங்காத திருவருள், கண்ணால் காண முடியாதது. ஆன்மாக்களுள் நின்று நான்கு தொழில்களைச் செய்துவிட்டு, இறுதியான ஐந்தாவது தொழிலாம் அருளைச் செய்ய கண்ணுக்குப் புலனாகும் குருவடிவினைக் கொண்டு வரும். குருவருள்தான் ஆணவத்தைத் தீர்த்து அழிக்க வல்லது.

சீவர்களுடைய தகுதிக்கேற்பக் குருவாக வந்து முக்தி அருளும் அருட்தன்மையைத் திருமூலர், ஆறாம் தந்திரத்தில் 'சிவகுரு தரிசனம்' என்ற தலைப்பில் கூறுகிறார். இறைநெறியில் முக்தியடைய முயல்வாருக்குக் குருவாய் வந்து பக்குவப்படுத்தி மீட்பான் இறைவன். சீவர்கள், குருவின் அருளால் மயக்கம் நீங்கி, வைராக்கியம் பெற்று ஞானமும் முத்தியும் பெறுவர். சிவன், புறத்தில் குருவாய் வந்து அருள் செய்வதை 'சிவகுரு தரிசனத்தில்' கூறும் திருமூலர், சீவர்கள் தன்னுள்ளேயே தன் ஒளி மண்டலத்தில் ஞானகுருவை உணரும்படி எழுந்தருளி அருளுவான் என்பதை ஒன்பதாம் தந்திரத்தில், 'ஞான குரு தரிசனம்' என்ற பகுதியில் விளக்குகிறார்.

ஆறாம் தந்திரத்தில் கூறப்பட்டுள்ள சிவகுரு தரிசனத்தில், தன்னை உள்ளும் புறமும் தூய்மையாக்கிச் சரியை கிரியை நெறிகளில் நின்று முயன்று ஒளிநிலையை உணர முற்படும் சீவனுக்கு முன், சிவனே குருவாகத் தோன்றி உணர்த்தி பக்குவப்படுத்தி அருள்வதைக் கூறுகிறார் திருமூலர். ஆனால், ஏழு எட்டாம் தந்திரங்களில் படிப்படியான யோக நெறியின் விளக்கங்களையும், வழிபாட்டு நெறிகளையும் விளக்கிய பின், இறுதியில் பெறும் ஞானத்தைத் தன்னுடைய ஒளிமண்டலத்தின் உள்ளேயே காணும் பக்குவத்தைப் பெறும் இச் சீவர்களுக்கு ஞான குருவாய் உள்நின்று ஒளிசெய்து அருளுவான் என்பதை இறுதி தந்திரமாம் ஒன்பதாம் தந்திரத்தில் கூறுகிறார். எனவே ஒன்பதாம் தந்திரத்தில், ஞானகுருதரிசனம் என்ற தலைப்பில் தத்துவங்கள் ஒடுங்கிய, துரியங்கள் கடந்த நிலையில் அருள்செய்ய உள்நின்று ஒளிவிளக்கஞ் செய்வதைக் கூறுகிறார்.

இறைவன் குருநாதனாய், மானிடச் சட்டை தாங்கி வந்து, சீவர்களின் தகுதிக்கேற்ப, அறியாமையை நீக்கி, வேதாந்த ஞானமாகிய 'அது நீ ஆகிறாய்' என்ற உணர்வை ஊட்டி ஞானம் ஊட்டி ஈசனைக் காணச் செய்கிறான் என்பதை,

திருவாய சித்தியும் முத்தியும் சீர்மை
மருளா தருளும் மயக்கறும் வாய்மைப்
பொருளாய வேதாந்த போதமும் நாதன்
உருவா யருளாவிடில் ஓர ஒண்ணாதே [21]

என்று சிவகுரு தரிசனத்தில் கூறுகிறார் திருமூலர்.

உலக இன்பங்களில் பற்றுவிட்டுக் குருகாட்டிய வழியில் சோர்வின்றி முயன்று மும்மலங்களையும் நீக்கி, சீவனுள் சிவம் உறைவதை உணர்வோருக்கு. உள்நின்று உணர்த்திப் பேரின்பத்தில் திளைக்கச் செய்வான் என்பதைத் திருமூலர் ஞானகுரு தரிசனத்தில் கூறுகிறார்.

மேலும்,

துரியங்கள் மூன்றுங் கடந்தொளிர் சோதி
அரிய பரசிவம் யாவையுமாகி
விரிவு குவிவற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேச வொண்ணாதே [22]

என்று கூறி, முத்துரியங்கடந்த ஒளிர்சோதியாகிய பரம்பொருள் ஞானகுருவாய் உள்ஒளி செய்து சீவனுக்கு அருள் புரிவான் என்று ஞானகுரு தரிசனத்தில் விளக்கும் திருமூலரின் திருமந்திரத்தால் பரம்பொருள், உயிர்களின் பக்குவத்துக்கேற்ப இறைவனே வெளியே மானுட சட்டை தாங்கி வந்தும், அகத்து ஒளியாக நின்றும் உணர்த்தி அருள்வான் என்பதை அறியலாம்.

மேலும், அண்டத்தில் விளங்கும் சூரியனாகவும், பிண்டத்தில், மனமண்டலத்தில் விளங்கும் சூரியனாகவும், ஞானமாகவே உள்ள சூரியனாகவும் பரம் பொருளே விளங்குகின்றான் என்பதையும் ஏழாந்தந்திரத்தில் திருமூலர் விளக்குகின்றார்.

சீவ ஒளி, மூலக்கனலாகிய குண்டலினி மற்றும் சூரிய சந்திரன் ஆகியவற்றுடன் கலந்து ஒன்றானால் அண்டத்திலும், பிண்டத்திலும் காணமுடியும். சுவாதிட்டானத்தில் எழும், சூரியன், மேல் நோக்கிச் சென்று பரநாதமாகி ஞானசூரியனாகத் தோன்றும்.

ஞான சூரியனால் பாச இருளும், அறியாமை இருளும் அகத்திலிருந்து அழியும். அண்டத்தில் விளங்கும் ஆதித்தனைத் தன்னுள் கொண்ட பரம் பொருள் நடுநாடி வழியாகப் பரவி எழும் அகஞாயிறாகிய பிண்டாதித்தனிலும் கலந்துள்ளான் என்று

கூறுவதோடு, நடுநாடி வழியாகக் கலைகள் பொருந்தி செல்லும் பொழுது சிந்தை தெளிவாகி மனமண்டலத்தில் சூரியன் விளங்கி ஒளிபெறும் என்பதை,

சந்திரன் சூரியன் தான்வரிற் பூசனை
முந்திய பானுவில் இந்து வந்து ஏய்முறை
அந்த இரண்டும் உபய நிலத்தில்
சிந்தை தெளிந்தார் சிவமாயினார்களே [23]

என்று கூறுகிறார் திருமூலர்.

விந்து என்னும் தூமாயை, கீழ் நிலைவிந்து (பரவிந்து) மேல்நிலை விந்து (அபரவிந்து) எனவாகி, அபரவிந்துவிலிருந்து திருவருள் ஐந்து கலைகளாகி அவற்றினின்றும் உயிர்களைத் தூண்டித் தொழில்படுத்தும் பொழுது உயிர்களின் அகத்துத் தோன்றும் சூரியன் சிவசூரியன். சிவசூரியன்முன் அஞ்ஞான இருள் அகலும். சிவசூரியன், சூரியன், சந்திரன், பூமி, நீர், நெருப்பு, காற்று, விண், உயிர்கள் அனைத்திலும் பொருந்தி தொழிற்படுத்துபவன் என்று பதியின் இயல்புகளைத் திருமூலர் கூறுகின்றார். அண்டாதித்தன், பிண்டாதித்தன், மனவாதித்தன், ஞானாதித்தன், சிவாதித்தன் எனும் எங்கும் பரந்து கலந்து இயக்கும் பேரொளிப் பெரும் பொருளாம் பரம்பொருளின் ஒளியாற்றலைக் கூறிய திருமூலர், பேரொளியின் அசைவே அண்டங்கள் அனைத்தின் அசைவுக்கும் காரணம் என்கிறார். இவ்வொளி அசைவே திருக்கூத்து. இவ்வொளியில் திளைத்திருத்தலே திருக்கூத்துத் தரிசனம் என்கின்றார் திருமூலர். மேலும், இக்கூத்தால் ஐந்தொழில் நடக்கும். சிவன் ஐவகைக் கூத்து நடித்தருளுகிறான். அவை, சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்பன என்று கூறி ஒவ்வொன்றையும் தனித்தனியாக விளக்குகின்றார்.

சிவானந்தத்தை விளைவிக்கும் கூத்து, பிரணவத்தில் விளங்கும் கூத்து, சிரசின் மேல் பொன்னொளியில் விளங்கும் கூத்து, நெற்றிக்குநேரே விளங்கும் கூத்து, அசைவிலா ஆனந்தத்தை விளைவிக்கும் கூத்து என ஐவகைக் கூத்துகளை ஆடுபவன் சிவன் என்பதை.,

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற் பதமாம் அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறிவாரே [24]

என்ற மந்திரத்தால் அறியலாம்.

பண்டைய காலத்தில் ஆடற்கூத்து என்று வழங்கப்பட்டு வந்த கூத்து இடைக்காலத்தில் நாட்டியம் என்று வழங்கப்பட்டது. நின்று ஆடும் தாண்டவம் அடங்கியது நாட்டியம். சிவன் ஆடிய ஆடல்கள் தாண்டவச் சிறப்புக் கொண்டவை.

சிவன் எங்கும் நீக்கமற நிறைத்துள்ளான். சிவனின் திருவருள் தொழில்கள் அனைத்தையும் சிவசக்தியின் வாயிலாகவே செய்கிறான். நுண்ணறிவு அம்பலமாம், திருச்சிற்றம்பலத்தில் சிவசக்தி விளங்கி அருள் செய்வதால் எங்கும் சிதம்பரம் எங்கும் திருக்கூத்து எங்கும் சிவமாகவே இருப்பதால், எல்லா உலகங்கள், உயிர்கள், பொருள்களிலும் சிவனின் ஒளி அசைவாம் அருட்கூத்தே நிறைந்து பரவி இயக்குகின்றது என்பதை,

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசக்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமாய் இருந்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருள்தன் விளையாட்டதே [25]

என்ற மந்திரம் விளங்குகிறது.

சிவன் யாவற்றிலும் பொருந்தி இருந்து தனது ஆட்டத்தால் ஐந்தொழிலைத் தனது சக்தியைக் கொண்டு செய்கிறான்.

ஐந்தொழில்களைக் குறிப்பாகப் புலப்படுத்துவன ஏழுவகைத் தண்டவங்கள்.

| | | |
|---|---|---|
| காளிகா தாண்டவம் | - | படைப்புத் தொழிலை உணர்த்துவது. இது சண்ட தாண்டவம், முனி தாண்டவம் என்றும் பெயர் பெறும். |
| புஜங்கத்திராச தாண்டவம் | - | அரவத்தைக் குறித்த நடனம் ஆன்மாக்களுக்குப்படிப் பினையாக அமைவது |
| சந்தியா தாண்டவம் | - | காத்தல் தொழிலை உணர்த்தும் அடைக்கலம் வழங்க காத்திருப்பதாக அமைவது. |
| சங்கார தாண்டவம் | - | அழித்தல் தொழிலை உணர்த்தும். மார்க்கண்டேயன் பொருட்டு ஆடியது. |
| திரிபுரதாண்டவம் | - | அழித்தல், மறைத்தல் ஆகிய தொழில்களைக் குறிப்பது. மும்மலமே திரிபுரம். |

| | | |
|---|---|---|
| ஊர்த்துவ தாண்டவம் | - | முத்திக்கு வழிவகுக்கும் அருளல் தொழிலை உணர்த்தும். இது |
| அனுக்கிரகத் தாண்டவம் | - | உமை தோல்வியுற சிவன் வெற்றி பெற்று, உயிர்களுக்கு முக்தி அளிக்கும் வல்லமை சிவன் ஒருவனுக்கே உண்டு என உணர்த்தியது. |
| ஆனந்த தாண்டவம் | - | ஐந்தொழில்களையும் ஒருசேர உணர்த்தும் ஆடல் இது. |

சிவதாண்டவங்கள் அனைத்திலும் முதன்மைச் சிறப்பு உடையது ஆனந்த தாண்டவம். தில்லையில் சிறப்பாகவும், ஏனைய தலங்களில் பொதுவாகவும் அமைந்திருக்கும் இவ்வாடல் "நாதாந்த நடனம்" எனப்படும். இது பஞ்ச கிருத்திய நடனம். மதுரையில் ஆடிய ஞானசுந்தரத் தாண்டவம், திருவாலங்காட்டில் ஆடிய ஊர்த்துவ தாண்டவம், பூண்டியில் ஆடிய பிரமதாண்டவம், திருப்புத்தூரில் ஆடிய கவுரி தாண்டவம், திருவாரூரில் வீதிவிடங்கராக ஆடிய அஜபா தாண்டவம் போன்றவை சிறப்பான தாண்டவங்கள். அஜபா தாண்டவத்தில் மந்திரங்கள் வாய்விட்டு உச்சரிக்கப் படுவதில்லை.

இறைவன், திருவைந்தெழுத்தையே திருமேனியாகக் கொண்டு நடராஜ மூர்த்தத்தில் பேரறிவுப் பெருவெளியிலும், கனக சபையிலும், உயிர்களிடமும் நடனம்புரிகின்றான். இந்நடனத்தைத் தரிசித்தால் திருவருளால் முத்திகிட்டும். திருமூலர் திருக்கூத்துத் தரிசனம் என்ற பகுதியில் ஐவகைக் கூத்துகளால் உயிர்கள் திருவடிப் பேற்றை அடைந்து இன்புறும் என்கிறார்.

ஞானக்கூத்தாகிய சிவானந்தக் கூத்தால், வேதாகமங்களும், ஏழு அண்டங்களும், பஞ்ச பூதங்களும், புவனங்களும் தோற்றுவிக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்பட்டன என்பதை,

வேதங் களாட மிகு ஆகம மாடக்
கீதங் களாடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங் களாடப் புவன முழுதாட
நாதங் கொண்டாடினான் ஞானானந்தக் கூத்தே [26]

என்ற மந்திரம் கூறுகிறது.

சீவர்களாகிய பசுக்களின் அறியாமையைப் போக்க ஒன்பது வகையாகப் பொருந்தி, சுழுமுனையில் ஆடியும், பிரணவத்தில் ஆடியும் அழகிய சுந்தரக் கூத்தால், அண்டங்களைக் கடந்து உச்சியில் ஒளி வீசுகின்றான் இறைவன்.

நடராசப் பெருமானே, தத்துவங்களை அழித்து நின்று கொடுகொட்டியும், முப்புரங்களை எரித்து நின்று பாண்டரங்கமும், பிரமனது சிரசைக்கிள்ளியபின் கோடு என்ற கூத்தும் ஆடினான். மேலும் நாள்தோறும் அழிப்பினைச் செய்யும் சங்காரக் கூத்தையும், மேலும் எட்டு வகையான, ஐந்து வகையான, ஆறு வகையான நடனங்களையும் ஆடுபவன். தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தை அழிக்க ஆடிய தேவதாருவனம் என்ற கூத்தையும் ஆடினான். இவற்றோடு தில்லை வனத்தை அழிக்க ஆடிய தில்லைவனக் கூத்தும், ஆலங்காடாகிய மூலாதாரத்தில் ஆடிய வடமா வனக் கூத்தும் சிறப்புப் பெற்ற கூத்துகளாகும் என்பதைத் திருமூலர்,

கொடுகொட்டி பாண்டரங் கோடு சங்கார
நடமெட்டோடு ஐந்தாறுநாடியுள் நாடும்
திடமுற்றெழுந்தேவதாரு வாந்தில்லை
வடமுற்ற மாவன மன்னவன் தானே [27]

என்ற மந்திரத்தில் குறிப்பிடுகின்றார்.

சிரசின் மேல் விளங்கும் பொன்னம்பலத்தில் விளங்குவது பொற்பதிக் கூத்து. சீவர்களுள் கலந்து இருக்கும் சிவன், நவந்தரு பேதமாகக் கலந்து இருப்பான். திருவடி இன்பத்தில் திளைத்தவர்கள் சகஸ்ரதளத்துக்கு மேல் பொன்னொளியில் நடம் காண்பர். இந்நடம் கண்டால், மனம், புலன்கள்வழிச் செல்லாது அடங்கும். சிவன், சீவர்கள் உடம்பில் மூலாதாரத்திலிருந்து துவாதசாந்தம் வரை நடம் செய்வான். சகஸ்ரதள ஒளியில் பொன்போன்ற ஒளி விளங்கும் நிலையில் ஆடல் செய்வான். இவ்வொளி நடனத்தால் உயிர்களின் பஞ்சேந்திரிய அறிவு அழியும். மனம் புறம் செல்லாது ஆனந்தம் பெருகும்.

ஆறு ஆதாரங்களின் வழி மேலேறிய உணர்வும் ஒளியும் சேர்ந்து நெற்றிக்கு நேரே விளங்கும் பொன்னொளி அசைவே பொற்றில்லைக் கூத்து.

ஆறுமுகங்களோடு கூடிய சிவன், குருவடிவாகத் தோன்றித் திருவருள் புரிவதைச் சீவர்கள் அறிவதற்காகப் பொற்றில்லைக் கூத்து ஆடினான் என்று,

ஆறுமுகத்தில் அதிபதி நான் என்றுங்
கூறு சமயக் குருபரன் நான் என்றுந்
தேறினர் தெற்குத் திரு அம்பலத்துள்ளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்றான் [28]

என்ற மந்திரத்தில் திருமூலர் கூறுகிறார்.

அசைவில்லாத, திகட்டாத பேரானந்தம் தரும் அற்புதக் கூத்தைக் கண்டவர் களிப்படைவர். இக்களிப்பால், கண், நீர்த்துளி சிந்தும். நெஞ்சம் உருகும். உள்ளத்தில் அமுதூறும். புளியைக் கண்டவுடன் வாயில் எச்சில் ஊறுவது போல் இறைவனின் அற்புதக்கூத்தைக் கண்டவர்களுக்குக்களிப்பு உள்ளத்தில் ஊறும் என்பதைத் திருமூலர்,

புளி கண்டவர்க்குப் புனல் ஊறு மாபோல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாம்
துளிக்கும் அருட் கண்ணீர் சோர் நெஞ்சு உருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத்து அமுதூறும் உள்ளத்தே [29]

என்ற மந்திரத்தில் கூறுகிறார்.

செருக்கற்ற நற்றவத் தோரே திருக்கூத்துத் தரிசனம் பெறுவர். திருவைந்தெழுத்தை, உருவாகக் கொண்டு ஆடும் இறைவன் சிவாயநம என்ற சூக்குமபஞ்சாட்சரத்தை உணர்வாகக் கொண்ட உயிரிடம் ஆடுகிறான்.

| | | | |
|---|---|---|---|
| நகாரம் | - | இறைவன் திருவடி | |
| மகாரம் | - | இறைவன் உதரம் | இது,தூல பஞ்சாக்கரத்தைத் |
| சிகாரம் | - | இறைவன் தோள் | தனதுவடிவமாகக் கொண்டு |
| வாகாரம் | - | இறைவன் முகம் | புரியும், ஊனநடனம். |
| யகாரம் | - | இறைவன் முடி | |

ஆனால், சிவாயநம என்ற சூக்கும பஞ்சாட்சர நிலையில்,

| | | |
|---|---|---|
| கை (உடுக்கை ஏந்திய) | (சி) | படைப்புத்தொழில். |
| வீசுகரம் | (வா) | ஞானமயமான அருளல். |
| அபயகரம் | (ய) | காத்தல். |
| அனல்ஏந்தியகை | (ந) | அழித்தல் |
| ஊன்றிய பாதம் | (ம) | மறைத்தல் (திரோதம்) |
| திருவாசி | | ஓங்காரம் |
| தூக்கிய திருவடி | | அருளல் |

என்பனவற்றைக் குறிப்பதாக உள்ள தில்லைக் கூத்த பெருமானின் நடனத்தை உணர்ந்து தரிசித்தவர்கள் சிவானந்தம் பெறுவர். இதனைத் திருமூலர்,

மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன்கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாயநமவென வோதே [30]

என்ற மந்திரத்திலும்,

அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரன் உற்ற அணைப்பில் அமரும் திரோதாயி
அரன் அடி என்றும் அநுக்கிரகம்மே [31]

என்ற மந்திரத்திலும் கூறுகிறார்.

பஞ்சாக்கரத்தை இறைவனின் திருநடன உருவமாக எண்ணி ஓதினால் தத்துவங்கள் நீங்கிப் பேரானந்தம் பெறலாம். நாதாந்தத்தாலும், போதாந்தத்தாலும், வேதாந்தத்தாலும், சித்தாந்தத்தாலும் உணர்ந்து அடையத்தக்க நீ அது ஆகிறாய் என்ற மகாவாக்கியப் பொருளாகி இறையோடு ஒன்றலாம் என்பதைத் திருமூலர் திருக்கூத்துத் தரிசனத்தில் விரிவாக விளக்குகிறார். இதனால், பதியின் அருட்கூத்தினையும் அருளும் தன்மையினையும் உணரலாம்.

சிவானந்தம் விளைக்கும் சிவானந்தக் கூத்து, பிரணவத்தில் நடமிடும் சுந்தரக் கூத்து, சிரசில் உணரும் பொற்பதிக் கூத்து, நெற்றிக்கு நேரே உள்ள பொன்தில்லையில் ஆறு ஆதாரங்களின் ஒளி சேர்ந்த பொன்னொளியில் நடமிடும் பொற்றில்லைக் கூத்து, துவாதசாந்தத்தில், சிரசின் உச்சிமேல் ஒளியம்பலத்தில் அனுபவிக்கும் அற்புதக்கூத்து ஆகிய ஐந்துவகைக் கூத்தின் அசைவால் விளையும், இயக்கம், பேரின்பம் ஆகியவைகளை விரிவாகத் திருமந்திரத்தில் விளக்கியுள்ளார் திருமூலர்.

ஆக, பதியினுடைய பொது இலக்கணம், சிறப்பு இலக்கணங்களைத் திருமூலர் சிறப்பாக விளக்கியுள்ளார். பதியாம் மெய்ப்பொருளை உணர்ந்து ஒன்றித்திளைத்தலாகிய சாயுச்சிய பரமுத்தி பெறுவதையே பிறவியின் குறிக்கோளாகக் கொண்ட பசுக்களாகிய சீவர்களைப் பற்றியும் விளக்கமாகக் கூறுகிறார் திருமூலர்.

பசு

திருமூலர், உயிர்களின் பக்குவத்துக்கேற்ப உயிர்களைப் பிரிக்கும் நிலையில், மூவகைச் சீவவர்க்கம் என்ற தலைப்பில் வகைப்படுத்துகிறார். பின், பசு இலக்கணம் பற்றிக் கூறி, அவற்றின் உடலின் பஞ்ச பேதங்கள், அவத்தைகள், குற்றங்கள் போன்றவைகளையும், செய்யக்கூடியன, செய்யக்கூடாதன பற்றியும் கூறி விளக்குகிறார்.

பிராண இயக்கம் உடையது உயிர்.
பாசத்தால் கட்டப்பட்ட உயிர் பசு.

"பச்" என்றால் பந்தித்தல் அதாவது பாசங்களால் பந்திக்கப்பட்டது பசு.

ஆணவமல மறைப்பால், உயிரின் அறிவு விளங்காது அணுத்தன்மைப் படுவதால் உயிரை ஆன்மா என்பர்.

போகங்களை நுகர்விக்கும் புருடதத்துவத்தோடு கூடிய உயிர் புருடன்.

ஞானத்தை, அனுபவத்தில் கண்ட உயிர் போதன் (அறிஞன்)

பசு, அறிவுப்பொருள். ஆனால், தானாக அறியாமல், வேறொன்றின் துணையுடன் அறியும். படிப்படியாகவே அறியும். அறிதலிலும், போக்குவரவு உடையதாக இடைவிட்டு இடைவிட்டு அறிந்து மீளவும் அறியாமைக்குச் சென்று மீளும்.

இதனால், இறைவனைப் பற்ற முடியாத பாசங்கள் பசுவைப் பற்றுகிறது. ஆக, கருவி கரணங்களுடன் ஐந்து அவத்தை படுவதும், அறிவித்தால் மட்டுமே அறிவதும் பசுக்களுக்குப் பொது இயல்பு. சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடையது உயிர் என்பதே அதன் சிறப்பு இயல்பு. சத்தைச் சத்தால் அறியும் உயிர், அசத்தை அசத்தின்கண் நின்று அறியும். எனவே உயிர் சதசத்து என்ற பெயர் பெறுகிறது. உயிர் உடம்பல்ல. உயிர் அந்தக் கரணங்கள் அல்ல. தத்துவங்களும் பிராணவாயுவும் உயிரல்ல. சடப்பொருளல்ல உயிர். அறிவித்தால் அறியும் அறிவுடைய ஒரு பொருள் உயிர்.

இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா

என்பது மெய்கண்டார் வாக்கு.[32]

பசுவின் அறிவு பதியைப் போன்ற சுதந்திர அறிவு அல்ல. பரதந்திர அறிவு. பதியின் அறிவு முற்றறிவு, பேரறிவு, நுண்ணறிவு, சூக்குமசித்து என்று வழங்கப்பெறும். ஆனால் பசுவின் அறிவு, சிற்றறிவு, பருஅறிவு, தூலசித்து எனப்படும்.

### உயிர்களின் வகை

மூவகைச் சீவவர்க்கம் என்ற பகுதியில் உயிர்களின் மூவகைகள் பற்றிக் கூறுகிறார் திருமூலர். மூவகைச் சீவவர்க்கமும் பத்து வகையினர் என்பதை.,

விஞ்ஞானர் நால்வரும் மெய்ப் பிரளயா கலத்து
அஞ்ஞானர் மூவரும் தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரும் ஆகும் பதின்மராம்
விஞ்ஞானர் ஆதியர் வேற்றுமைதானே [33]

என்ற மந்திரத்தில் திருமூலர் கூறுகிறார்.

உயிர்கள், ஆணவமல மறைப்புக்கு உட்பட்டு இருக்கும் நிலையைக் கொண்டு பகுக்கப்பட்டுள்ளன. மூவகைப்பட்ட

ஆன்மாக்களிலும் ஆணவமலம் பல்வேறு வகைப்பட்டு நிகிழ்வதால் மூவகையாகப் பகுக்கப்பட்டு விரிக்கப்பட்டுள்ளன. மும்மலக் கட்டு உடையவர் சகலர். ஆணவம், கன்மம் என்ற இருமலக்கட்டு உடையவர் பிரளயாகலர். ஆணவமலக்கட்டு மட்டும் உடையவர் விஞ்ஞானகலர். இவர்களுள் விஞ்ஞானகலர் 4 வகையாகவும், பிரளயாகலர் 3 வகையாகவும், சகலர் 3 வகையாகவும் உள்ளனர்.

உயிர்களின் காரிய நிலைகள் ஐந்து உள்ளன. அவை, சாக்கிரம் (விழிப்பு) சொப்பனம் (கனவு) சுழுத்தி (உறக்கம்) துரியம் (பேருறக்கம்) துரியாதீதம் (உயிர்ப்படக்கம்) என்பன இவற்றை காரியாவத்தை என்பர்.

உயிர்களின் காரணநிலைகள் மூன்று உள்ளன. அவை கேவலநிலை, சகலநிலை, சுத்தநிலை என்பன. இவற்றையும் அவத்தை (நிலை) என்பர். இவற்றை, புலம்பு, புணர்வு, புரிவு என்றும் கூறுவர்.

உயிர், உணர்வு பெறும் நிலையே அவத்தை. இறைவன், மாயையிலிருந்து தத்துவங்களைத் தோற்றுவித்து உயிர்களுக்கு, ஐந்து சரீரங்கள், அறி கருவிகளாகிய ஞானேந்திரியங்கள், செயற்கருவிகளாகிய கன்மேந்திரியங்கள், அந்தக் கரணங்களாகிய உட்கருவிகள், சூக்கும உட்கருவிகள் ஆகியவற்றைப் பொருத்திச் செயல்படுத்தி, வினைகளை நுகரச் செய்து படிமுறையில் அறிவு வளர்ச்சி பெறச் செய்கிறான். இதனால், அறியாமையில் இருந்த உயிர் சிற்றறிவைப் பெற்றுப் பின் திருவருளின் கருணை உபகாரத்தால் பேரறிவைப் பெற்று, அந்தப் பேரறிவு மயமானபரம் பொருளில் அடங்கி நிற்கும் நிலையை அடைகின்றது. இவ்வாறு, உயிர்கள் படிமுறையில் அறிவு வளர்ச்சி பெறுவதே காரணாவத்தை காரியாவத்தை, சுத்தாவத்தை என்ற மூன்று பெரும் பிரிவுகளாகின்றன. அவை, கீழ் வருவன

| காரணாவத்தை 3 வகை | காரியாவத்தை 5 வகை | சுத்தாவத்தை |
|---|---|---|
| காரணகேவலம் | காரணநிலை ஒவ்வொன்றிலும் காரியநிலைகள் ஐந்து வகைப் படும் | இருவினை ஒப்பு, மலபரிபாகம் ஏற்பட்டு, முப்பொருள் உணர்ந்து அருள் பெறும் முறை. |
| காரணசகலம் | | |
| காரணசுத்தம் | 1. சாக்கிரம் | நின்மல சாக்கிரம் |
| | 2. சொப்பனம் | நின்மல சொப்பனம் |
| | | நின்மல சுழுத்தி |
| | 3. சுழுத்தி | நின்மல துரியம் |
| | 4. துரியம் | நின்மல துரியாதீதம் |
| | 5. துரியாதீதம் | (ஐந்தும் இலாடதானத்தில் நிகழும்) |

சாக்கிரம் முதலிய ஐந்தும் கீழாலவத்தை, மேலால் அவத்தை, மத்தியாலவத்தை என்று மூன்றுவகையில் நிகழும்

### கேவலநிலை - (தனிமை) (மறப்பு, இருள்நிலை)

ஆணவமலம் மட்டும் உள்ள நிலை இது. ஆன்மாவுக்கு அறிவு இச்சைச்செயல் இல்லை. உடம்பு இல்லை. உட்கருவிகளின் செயல்களாகிய மனம் இல்லை. வினை ஈட்டுவது இல்லை. இன்பதுன்ப நுகர்வு இல்லை. உடல், பொறி, கரணங்கள் இல்லை. அறியாமையே வடிவாய்க்கிடக்கும். உயிர் என்றநிலை மட்டும் உண்டு. இது, "தன் உண்மை" எனப்படும். உடம்பைக் கூட்டும் முன் உள்ள நிலை அனாதிகேவலம். (இருட்கேவலம்) அன்றாடம் வரும் கேவலம் நித்திய கேவலம். இதற்கு உரிய கருவிகள் முப்பத்தைந்து.

### சகலநிலை (நினைப்பு, மருள்நிலை)

கலை முதலிய தத்துவங்களோடு கூடிப் பிறவிக்கு உட்பட்டநிலை. மாயை, கன்மம் இதில் ஊட்டப்பெறுகிறது. இறைவன், அருளால் இரக்கமுற்று ஆணவத்தைச் சிறிது நீக்க, உடல், பொறி, கரணம் கொடுத்து ஏதாவதொருபிறப்பைக் கொடுக்கிறான். கலை, (மாயாகாரியம்) அறிவு இச்சைச் செயல்கள் உள. இதில், உயிர், பெரியபொருளை அறியாது. உலகப்பொருளையே பெரிதாக எண்ணிமயங்கும். சிற்றறிவு சிற்றிச்சை உடையது. மனோவாக்குக் காரியங்களால் வகைப்படுத்தப்படும்.

### சுத்தநிலை (அருள்நிலை)

இது, ஆணவம் மெலிந்த நிலை. சிறுபொருள் நாட்டம் மாறும். இறைவன், குருவாகி வந்து முப்பொருள் இயல்பை உணர்த்துவான். மெய்ப்பொருள் நாட்டம் உண்டாகும். மலங்கள் நீங்கும். இறை இன்பம் கிட்டும். கருவி கரணங்களை விட்டுத் தூயனாய் நிற்கும்நிலை. தத்துவங்களைவிட்டுப் பரவெளியில் கலந்திருக்கும் நிலை. சுத்தாவத்தைகள் உடம்பைப் பற்றி நிகழாது சீவ போதமாகிய ஆன்ம போதத்தைப் பற்றியும், சிவ போதமாகிய அருட்சத்தி பற்றியும் நிகழும். காரணசுத்தம் என்பது, உயிர், மும்மலங்களும் நீங்கி முத்திபெறும் நிலை. இந்நிலையில் நல்வினை தீவினைகளில் சமபுத்தி ஏற்பட்டு அழுந்தும். ஞானகுருவின் அருள் பெற்று மலம் நீங்கும். எட்டாந்தந்திரத்தில் அவத்தை பேதம் என்ற தலைப்பில் விரிவாக விளக்குகிறார் திருமூலர். மேலும்,

உயிர், உடம்பை எடுத்துவாழும் நிலையில், ஐந்து அவத்தை படும். இது காரியாவத்தை. இந்த அவத்தைகளை அடைந்து நிற்பதே உயிரின் தடத்த இலக்கணம் என்கிறார்.

உறங்கும் போது செயல்படாமல், விழித்து எழுந்ததும் தொழிற்படும் கருவிகளை உடையன உயிர்கள். இவை நித்தியகேவலம், நனவுநிலை (விழிப்பு) என்ற பெயர் பெறுவன. கருவி, கரணங்கள் தொழிற்படும் நிலையிலிருந்து, அவை தொழிற்படாமல் ஒடுங்கும் நிலை வரை ஐந்து நிலைகளைப் (அவத்தைகள்) பெறுகின்றன. அவை, கீழ்க்காணும் நிலையில் அமையும்

| | | | |
|---|---|---|---|
| சாக்கிரம் (நனவு நிலை) | - | 35 | கருவிகள் தொழில்படும் |
| சொப்பனம் (கனவு நிலை) | - | 25 | கருவிகள் தொழில்படும் |
| சுழுத்தி (உறக்கநிலை) | - | 3 | கருவிகள் தொழிற்படும் |
| துரியம் (பேருறக்கநிலை) | - | 2 | கருவிகள் தொழிற்படும் |
| துரியாதீதம் (உயிர்ப்படக்கநிலை) | - | 1 | கருவிதொழிற்படும் |

நெற்றியில் (இலாடத்தானம்) நனவு நிகழ்கிறது
கழுத்தில் (கண்டத்தானம்) கனவு நிகழ்கிறது
நெஞ்சில் (இதயத்தானம்) உறக்கம் நிகழ்கிறது
உந்தியில் (நாபித்தானம்) பேருறக்கம் நிகழ்கிறது
குதத்துக்கும் குறிக்கும் நடுவில் (மூலாதாரம்) உயிர்ப்படக்கம் நிகழ்கிறது

அவத்தைகள், சகலநிலையில், தத்துவதாத்துவீகக் கருவிகள் கூடுதல், பிரிதல் காரணமாக ஏற்படுவன. காரணஅவத்தை ஒவ்வொன்றிலும் காரிய அவத்தைகள் உள.

| | | |
|---|---|---|
| 1. கேவல சாக்கிரம் (புருவ நடுஇடம்) | - | 35 தத்துவங்கள் ஆன்மாவில் மந்தமாக இயங்கும் நிலை கருவிகள் குறையக் குறைய ஆன்மா இருளில்மூழ்கும். |
| 2. கேவல சொப்பனம் (கண்டம் இடம்) | - | ஞானேந்திரிய விடயம் ஐந்தும், கன்மேந்திரிய விடயமாகிய ஐந்தும் ஆகியபத்தும் நீங்கியநிலை. மற்ற 25ம் தொழிற்படும். |
| 3. கேவல சுழுத்தி (இதயம் இடம்) | | சத்தம் முதலிய ஐந்து, வசனம் முதலிய ஐந்து, சித்தம் தவிர பிற மூன்று அந்தக்கரணங்கள், பிராணன் தவிர பிற 9 வாயுக்கள் ஆகிய, 22 நீங்க, சித்தம், பிராணன், புருடன் எனும் 3 மட்டும் தொழில்படும். |

| | |
|---|---|
| 4. கேவல துரியம் (உந்தி இடம்) | சித்தம் நீங்கிய மற்ற இரண்டும் தொழில்படும் |
| 5. கேவல துரியரதீதம் (மூலாதாரம் இடம்) | புருடன் ஒன்றே நிற்கும் |

சகல சாக்கிரம் முதலிய ஐந்திற்கும் இடம் புருவநடு ஒன்றே. அதனால், ஐந்து மத்தியால் அவத்தை. சகலத்தில் மூன்று நிலைகள் உள. அவை,

சகலத்தில் கேவலம் - கீழால் அவத்தை (கீழ்நோக்கிய சாக்கிரம்)

சகலத்தில் சகலம் - மத்தியால் அவத்தை (கீழ், மேல் நோக்காதசாக்கிரம்)

சகலத்தில் சுத்தம் - மேலால் அவத்தை அல்லது யோகாவத்தை (மேல் நோக்கிய சாக்கிரம்) என்பன.

| கீழால் அவத்தை | மத்தியால் அவத்தை | மேலால் அவத்தை |
|---|---|---|
| கீழ்நோக்கிய சாக்கிரம். அறிவு குறைந்து கொண்டே வரும். புருவ நடுவிலிருந்து கீழ் நோக்கித் தொழிற்படும். இது சகலத்தில் கேவலம். அதாவது காரிய கேவலம். புருவநடு-சாக்கிரம் கண்டம்-சொப்பனம் இதயம் -சுழுத்தி நாபி-துரியம் மூலாதாரம்- துரியாதீதம் | கீழ், மேல் இரண்டும் நோக்காத சாக்கிரம். புருவநடுவில் நிகழும். இறுதியாகப் புருவநடுவை அடைந்த உயிர், அவ்விடத்திலேயே ஐந்து நிலை அடையும். இதில் எல்லாக் கருவிகளும் தொழிற்படும் மகாசகலம், காரியசகலம், சகலத்தில் சகலம் என்று இது பெயர் பெறும். | கீழிறங்கிய உயிர் அம்முறையே மேலேறி வருவது. இது, யோகாவத்தை எனப்படும். மேல் நோக்கிய சாக்கிரம் இது, விடயங்களை உணர்த்தும். இது சகலத்தில் சுத்தம். |

மத்தியாலவத்தை, சுத்த தத்துவம் கூடிக்குறைந்து செலுத்துவதால் ஆவது. இதிலும் ஐந்து அவத்தையுண்டு.

சாக்கிரத்தில் சாக்கிரம் - சுத்த தத்துவம் ஐந்தும் செலுத்துவதால் நிகழும்.

சாக்கிரத்தில் சொப்பனம் - சுத்ததத்துவத்தில் குண முதல் நான்கும் செலுத்துவதால் நிகழும்.

சாக்கிரத்தி சுழுத்தி - சுத்ததத்துவத்தில் முதல் மூன்றும் செலுத்துவதால் நிகழும்.

சாக்கிரத்தில் துரியம் - சுத்ததத்துவத்தில் முதல் இரண்டும் செலுத்துவதால் நிகழும்.

சாக்கிரத்தில் துரியாதீதம் - சுத்த தத்துவத்தில் முதல் ஒன்று மட்டும் செலுத்துவதால் நிகழும்.

ஆன்மா, இருவினை ஒப்பு, மலபரிபாகம் பெற்று ஞானாசிரியனால் ஞானம் பெற்று முப்பொருளை உணர்ந்து அருள் பெறும். சுத்தாவத்தையில் நின்மல சாக்கிரம் முதலிய ஐந்தும் இலாட தானத்தில் நிகழும். சுத்தாவத்தையில் சுழுத்தி என்பது இல்லை.

நின்மல சாக்கிரம் - அருளால் தன்னை அறிவது
நின்மல சொப்பனம் - அருளின் நின்று அருளைத் தரிசித்தல்
நின்மல சுழுத்தி - அருளே தானாகி நிற்றல்
நின்மல துரியம் - மலவாசனையின்றி ஆனந்த வெளி தோன்றுதல்
நின்மல துரியாதீதம் - பேரானந்தமே தானாய் நிற்றல்

ஆன்மா, கருவிகளை நீங்குதல் என்பது, கருவிகள் மெலிந்து சோர்வுறுதல் அல்ல. கருவிகள் மெலியா நிலையில், அவற்றால் மயங்காமல் சிவத்தை உணர்ந்து நிற்றல். தசகாரியம் பத்தில் ஐந்தவத்தை படும் நிலைகள்,

தத்துவரூபம்
தத்துவதரிசனம்
தத்துவசுத்தி
ஆன்மரூபம்
ஆன்மதரிசனம்
} இவை ஐந்தும் சுத்த சாக்கிரம்

ஆன்மசுத்தி
சிவரூபம்
} இவை இரண்டும் சொப்பனம்

சிவதரிசனம்
சிவயோகம்
} இவை இரண்டும் சுத்ததுரியம்

சிவபோகம் - துரியாதீதம்

என்பன. சுத்தாவத்தையில் சுழுத்தி இல்லை. இவ்வாறு, பல அவத்தை வேறுபாடுகளை அடைதல் ஆன்மாவிற்கு மலச்சார்பால் உண்டாகும். உயிர்களின் இச்சா ஞானக்கிரியைகள், ஆணவத்தால் மறைக்கப்பட்டுக் கேவலத்தில் அவை சிறிதும், தோன்றாமலும், சகலத்தில் சிறிதே விளங்கியும், சுத்தத்தில் முற்றும் விளங்கப் பெற்றும் நிற்கும். ஆனால், கேவலம் இருள் போலவும், சகலம் விளக்கு போலவும், சுத்தம், சூரியன் போலவும் உள்ளன. சுத்தம் ஒரே நிலையாய் இருப்பதால் இராப்பகல் அற்ற இடம்.

கேவலத்தில் அறிவின்றி இருந்த ஆன்மா இறைவனது திரோதான சக்தியால், சகலத்தில் வந்து சிற்றறிவுடையதாய்ப் பிறப்பு இறப்புகளில் உழன்று இருவினை ஒப்பு, மல பரிபாகம் வந்தபின் இறைவனது அருட்சக்தியால் ஞானம் பெற்றுப் பேரறிவுடையதாய்த் தனது இயற்கை வியாபகநிலை அடைந்து சிவத்தோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தில் திளைக்கும்.

ஆணவ மல மறைப்பின் அடிப்படையில் உயிர்களின் மூவகையான நிலைகளின் பத்து வகைகள். விஞ்ஞானகலர் நான்கு வகையினர், பிரளயாகலர் மூன்று வகையினர், சகலர் மூன்று வகையினர் என்பர். விஞ்ஞானகலர் மூவகையினர், சகலர் மூவகையினர் என்பதைத் திருமூலர்,

விஞ்ஞானர் கேவலத் தாரது விட்டவர்
தஞ்ஞானர் அட்ட வித்தேசராம் சார்ந்துளோர்
எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டு நின்றாரே [34]

என்றும்,

பெத்தத்த சித்தோடு பேண்முத்தச் சித்தது
ஒத்திட்டு இரண்டிடை யூடுற்றார் சித்துமாய்
மத்தது மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத்து அமிழ்ந்துக சகலத்து ளாரே [35]

என்றும் கூறுகிறார்.

## விஞ்ஞானகலர்

ஞானமுடையோன் நான்கு வகையினர் ( சீவன்முத்தர் உத்தமர், மத்திமர், அதமர்) சுத்தாத்துவாவில் வசிப்பவர். விந்து தத்துவத்தில் தோன்றிய தனு, கரணபுவன, போகங்களை உடையவர்.

ஆணவமலம் மெல்லிதாக இருக்கும்.
விஞ்ஞானகலர் அனைவரும் பரமுத்தி பெற்றவரல்லர்

1. தன்னலம் விட்டவர்.
2. ஆன்ம ஞானம் உடைய அட்ட வித்தியேசுவரர்.
3. உயர்ந்த ஞானமுடைய மந்திரே சுவரர்.
4. மெய்ஞ்ஞானர். ஆணவமல வாசனை விட்டவர். முத்தியில் சிவனை அடைவர் விஞ்ஞானகலரில், பக்குவம் குறைந்தவர் உடலுடன் கூடிய பொழுது சீவன்முத்தி அடையாது அடுத்த பிறவியில் சிவனை அடைவர். (முத்தியில் சிவமேயாவர்)

பிரளயாகலர்

இருமல பெத்தர். ஞானம் பெறுவோர். அஞ்ஞானர். மூவகையினர். (உத்தமர், மத்திமம், அதமர்) இரண்டு மலமுடையார் அஞ்ஞானர் மூவகையினர் இரண்டு பிறவிகளில், 108 உருத்திரர் பதமடைவர். பக்குவர் ஞானி யாவர்

1. சுத்த வித்தையில் நின்று அசுத்த மாயா புவனங்களையே காவல் செய்பவர்.
2. குணதத்துவத்தில் நின்று பிரகிருதி மாயா புவனங்களைக் காவல் செய்பவர்.
3. அபக்குவராய் இருக்கும் பெத்தர். இவர்களுள் பக்குவர்கள் பரமுத்தர், அபரமுத்தர் என இருவகைப்படுவர். எனவே, பிரளயாகலரில் பரமுத்தர், அபரமுத்தர், அபக்குவர் என மூவகையினர் உளர். (ஞானி ஆவர்)

சகலர்

உலக வாழ்வில் பொருந்தி அறியாமை உடையோர். அஞ்ஞானர் மூவகையினர் (உத்தமர், மத்திமர் அதமர்)

1. சிலர் சித்தாகிய சிவத்தைப் பேணும் ஞானம் பெறலாம்.
2. ஞானமும் கிரியையும் ஒத்துச் சதாசிவ நிலையைப் பற்றுவர். மும்மலம் கடந்து நிற்பர்.
3. பிறர் மும்மலம் நீக்காமல் சகலராய் இருப்பர் (சீவன் முத்தர், சாதகர், அபக்குவர்)

(சூக்கும உடம்பில் இருப்பவராவர்)

ஆன்மாக்களின் அறிவு, படிப்படியாக நிகழ்வதால் தூலமும், சூக்குமமாய் நிகழ்கிறது. இதனால் திருமூலர் பக்குவன், அபக்குவன் என்று ஆறாம் தந்திரத்தில் குறிப்பிடுகிறார். பக்குவான்மாக்கள், முத்தி அடைவதற்குரிய வழியை அறிவர். வேதாகமங்களைத் தக்க குருவிடம் கேட்டுத் தெளிவர். சிவனையும் சிவாலயங்களையும் வழிபடுவர். குருவைச் சிவமெனக் கொள்வர். உலகியல் பொருளை விரும்பார். மெய்ப்பொருளாம் பரம் பொருளை உணர்வர். சத்துவ குணத்தவராயிருப்பர். ஆன்மா பக்குவ நிலையில் இருக்கும் என்று கூறும் திருமூலர், இவ்வாறு இல்லாதோர் அபக்குவர் என்கின்றார்.

சாத்திகனாய்ப் பர தத்துவந்தான் உன்னி
ஆத்திக பேத நெறி தோற்ற மாகியே
ஆர்த்த பிறவியி னஞ்சி யறநெறி
சாத்தவல் லானவன் சற்சீடனாம்

என்று பக்குவனுக்குத் திருமூலர் இலக்கணம் கூறுகிறார்.[36]

சத்துவகுணம், தியானம், இறைநெறியைப் பின்பற்றல் பிறவியைப் பெற அஞ்சுதல், மேலான அற நெறியைக் கைக்கொள்பவனே பக்குவன் என்கிறார்.

பக்குவமில்லாதவன், ஞானகுருவைப் பெறாமல் கெடுவான் என்பதைத் திருமூலர்,

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழி விழுமாறே [37]

என்கிறார்.

மேலும், பக்குவம் இல்லாதவர் அறியாமையால் காம வழியை நாடுவதோடு, வினைப்பயன்களை மாற்றும் வழியை நாடவும் மாட்டார். இறைவனின் கருணையை அறியாமல், மனம் வாக்கு காயச் சுத்தி இல்லாமல் பஞ்சத்துரோகம் செய்வர். தவம் செய்யார். பவத்தில் பட்டு உழல்வர் என்று அபக்குவர் பற்றிக் கூறும் திருமூலர்,

கன்றலும் கருதலும் கருமஞ் செய்தலும்
தின்றலும் சுவைத்தலும் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை இறைபால் இயற்கை அல்லவே [38]

என்று அபக்குவர்களுக்குரிய இயல்புகளையும் கூறுகிறார்.

அவத்தை நிலைகளைக் கூறும் திருமூலர், துரியாதீத நிலையில் அகங்கார மற்று ஆன்மா ஒளிர்வதை,

ஊமை யெழுத்தோடு பேசும் எழுத்துறில்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே [39]

என்று கூறி, 'ம்' என்ற ஊமை எழுத்தாகிய, உச்சரிக்க இயலாத அர்த்தமாத்திரைப் பிரணவத்தோடு பேசும் எழுத்துகளாகிய அகார உகாரங்கள் பொருந்தினால் ஐந்து இந்திரியங்களும் ஆமையின் உறுப்புகள் ஓட்டினுள் அடங்குவது போல் அடங்கி, பிரணவத்தில் பொருந்தி ஆன்மா ஒளி பெற்று விளங்கும். அகங்காரம் அழியும் என்பதை விளக்குகிறார்.

மேலும், அவத்தை பேதம், கீழால் அவத்தை மத்திய சாக்கிராவத்தை ஆகிய பகுதிகளில் அவத்தைகளையும், அத்துவாக்கள் என்ற பகுதியில் அத்துவாக்களையும் எட்டாந்

தந்திரத்தில் விளக்குகிறார் திருமூலர். மேலும், சகல நிலையில் சுத்த சாக்கிரம் முதலிய ஐந்து நிலைகளைச் "சுத்த நனவாதி பருவம்" என்ற பகுதியிலும், கேவல சகல சுத்த நிலைகளைக் 'கேவல சகல சுத்தம்' என்ற பகுதியிலும் எட்டாந் தந்திரத்திலேயே விளக்குகிறார்.
உயிர், அவத்தைகளில் பொருந்தியிருக்கும் போதுள்ள குணங்களை முக்குண நிர்க்குணம் என்ற பகுதியில் ஒரேயொரு மந்திரத்தால் எட்டாந்தந்திரத்தில் விளக்குகிறார். அம்மந்திரத்திலும்,

சாத்திகம் எய்தும் நனவெனச் சாற்றுங்கால்
வாய்த்த இராசத மன்னுங் கனவென்ப
ஓய்த்திடுந் தாமதம் உற்ற சுழுத்தியாம்
மாய்த்திடு நிர்க்குண மாசில் துரியமே [40]

என்று கூறி, அவத்தைகளில் பொருந்திய உயிர்க்கு நனவில் சாத்துவிக குணமும், கனவில் இராசதகுணமும், சுழுத்தியில் கருவி கரணங்களைச் செயல்படாது ஓய்த்திடும் தாமத குணமும், துரியத்தில் இந்திரியங்களையும், அந்தக் கரணங்களையும் மாய்த்திடும் குற்றமற்ற நிலையும் பொருந்தும். யோகியர்க்கு அறிதுயில் நிலையில் கருவி கரணங்கள் அழியும் என்று விளக்குகிறார்.

மேலும், வித்தியாதத்துவம் ஏழும், அந்தக்கரணங்கள் நான்கும் ஆகப் பதினொன்றும் செயல்படாது நாதம் விளங்கச் செய்ய வேண்டும். கேவலாவத்தையில் கருவிகரணமின்றி இருந்த ஆன்மா, சகலத்தில் அவற்றுடன் கலந்து சாக்கிராதீதத்தில் அவற்றிலிருந்து செல்லுதலாகிய பிரிவைப் பெற்றுச் சுத்த நிலையைப் பெறும். ஆன்மா, தன்னை மறந்து சிவத்தைச் சார்ந்து மலவலி ஒடுங்கிய நின்மலாவத்தை நிலையில் சிவமாந்தன்மை பெறும். பிரணவதேகம் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு பெறும். ஞானமே வடிவமாக நாதாந்தம் பொருந்தி பரத்தன்மை பெறும் என்பனவற்றை "பதினொராந்தானமும் அவத்தையெனல்" "கலவுசெலவு" "நின்மலாவத்தை" ஆகிய பகுதிகளில் எட்டாந்தந்திரத்தில் திருமூலர் விளக்குகிறார்.

பசுவாகிய ஆன்மாவின் பொது இயல்பு, சிறப்பியல்பு என்ற நிலைகளில், பசுக்களின் வகை, அவத்தை நிலை ஆகியவைகளைத் திருமூலர் பல தலைப்புகளில் விளக்கியுள்ளார்.

பாசம்

உயிர்களைச் செயல்பட விடாது விலங்கிட்டுத் தடுத்து வைப்பது பாசமாகிய தளை. அறிவு, பாசத்தால் மறைக்கப்படுகிறது. அறிவைத் தடுப்பது ஆணவம் என்னும் பாசம். இது மூலமலம் உயிர்களுடனேயே தோன்றுவதால் சகசமலம்.

ஆணவம் (மூலமலம்)

| ஆவாரக சக்தி (மறைத்தலைச் செய்வது) | அதோநியமிகாசக்தி (கீழ்ப்படுத்தி வைப்பது) |
| --- | --- |
| ஆணவத்தின் உண்மை இயல்பாகிய சொரூப இலக்கணம் அறிவை மறைப்பது. பொருள்களின் இயல்பைத் தவறாக உணரச் செய்யும் அறியாமையால் அறிவைத் தடுப்பது ஆவாரகசக்தி. | ஆணவத்தின் தடத்த இலக்கணம் பிற பொருள்களோடு சேர்ந்து நின்று நிகழ்த்துவது. உணர்வை மறைத்து உயர்ந்ததில் வெறுப்பு தாழ்ந்ததில் விருப்பு ஏற்படுத்துவது. |

ஆணவம் அணுத்தன்மையைச் செய்வது. இன்பத்திற்குக் காரணமான அறிவை மறைத்துத் துன்பத்திற்குக் காரணமான அறியாமையைச் செய்வது. அக இருளாகிய ஆணவம் இல்லாவிட்டால் துன்பம் இல்லை. " இருளின்றேல் துன்பென்" [41]

ஆணவமலம் தன்னையும் பிற பொருளையும் மறைக்கும். யாருடைய கண்ணுக்கும் புலனாகாது. இருளைப் பார்க்கலாம் ஆனால் ஆணவ இருளைப் பார்க்க முடியாது.

ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்.
இருபொருளும் காட்டாது இது [42]

என்கிறார் உமாபதி சிவாச்சாரியார்.

ஆணவம் அறிவையே மறைப்பதால் அது இருப்பதை அறியமுடியாது. மாயை, கன்மங்கள் உயிரின் அறிவை விளக்கும் பொருள்கள். எனவே அறியாமையைச் செய்வது ஆணவமே. அறியாமையை அறிவு போலக் காட்டுவது ஆணவம்.

மயக்கம் தருவது மாயையின் இயல்பல்ல. ஆணவத்தோடு கூடி நிற்பதால் ஆணவத்தின் காரியத்தால் வருவது. ஆணவம் சடம். உயிரை வந்து சேர முடியாது. ஆனால், அநாதியே அழுக்காக உயிருடன் சேர்ந்து இருப்பது. இரண்டு நிலைகளில் ஆணவம் உயிரின் அறிவை மயக்கும். அவை,

1. ஆன்மா பிறப்புக்கு உட்படாத கேவலநிலையில் நின்று மறைப்பது.
2. உயிர் பிறப்புக்கு உட்பட்டுப் பல பிறவிகள் எடுக்கும் சகல நிலையில் மறைப்பது.

கேவலநிலையில் ஆன்மாவின் அறிவை முழுவதும் மறைக்கும். சகல நிலையில், ஆணவம்தான் அறிவை மறைக்கிறது என்பதை ஆன்மா அறிவது இல்லை. யான், எனது என்னும் செருக்கை விளைவிப்பது ஆணவம். ஆணவமலம் ஆன்மாவின் குணமல்ல குற்றம். ஆணவமலம் இல்லையென்றால் உயிர்க்குப் பிறவித்துன்பமே இல்லை. உலகமே இல்லை.

கருப்பையில், ஆணவ மலத்தால் மறைப்புக்கு உட்பட்டுத் துரியாதீத நிலையில் இருந்த உயிர், அசுத்த மாயையிலிருந்து வித்தியாதத்துவம் சேர்க்கப்பட்டுத் துரிய நிலையைப் பெறும். துரிய நிலையிலிருந்து சுழுத்தி, சொப்பனம், சாக்கிரம் என்ற மூன்று நிலைகளைப் பெறும் நிலையில் வினைப் பயன்கள் பூட்டப் பெற்றுப் பிறவியைப் பெறுகிறது. எண் சாண் அளவுடையதாகிய உடம்பைப் பெறுகிறது என்பதை திருமூலர்,

சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிரமத்தே தோன்றும் அவ்வியோனியும்
புக்கிடும் எண் விரல் புறப்பட்டு நால் விரல்
அக்கரம் எட்டும் எண் சாண் அது ஆகுமே [43]

என்றருளியுள்ளார்.

நீகாரம், பசுத்துவம், மலம், அஞ்சனம், மூலம், மாவிருதி, அவித்தை என்ற பல பெயர்கள் ஆணவமலத்திற்கு உள.

பிடித்ததை விடாமை, மோகத்தால் மிகையாகச் சொல்லல், இடையறாக் கோபம், அளவுக்கதிகமான அறியாமை, கொலைத் தொழில் நினைவு, எப்பொழுதும் துக்கம், யான் எனது எனும் பற்று மிகுதல், பொறாமை பகைமைகளை விடாது பற்றல் என்ற குணங்களைக் கொண்டுள்ள ஆணவத்தின் எண் குணங்கள் முறையே விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலையஞர், மதம், நகை, விராய் என்பன.

உயிர்கள், ஆணவமலத்தால் மறைக்கப்பட்டிருப்பதால் அம்மறைப்பை நீக்கும் பொருட்டே, தனு கரண புவன போகங்களைப் படைத்தான் என்பதைத் திருமூலர்,

அப்பரிசு எண்பத்து நான்கு நூறாயிரம்
மெய்ப்பரிசு எய்தி விரிந்துயிராய் நிற்கும்
பொய்ப்பரிசு எய்திப் புகலும் மனிதர்கட்கு
இப்பரிசே இருள் மூடிநின் றானே [44]

என்ற திருமந்திரப் பாடலில் தெளிவுறுத்துகிறார்.

பிரமனாதி ஐவரும் ஆணவமலம் முற்றிலும் நீங்காதவர் என்பதை,

ஆணவச் சத்தியும் ஆம் அதில் ஐவரும்
காரியகாரண ஈசர் நடை முறை

பேணிய ஐந்தொழிலால் விந்துவில் பிறந்து
ஆணவம் நீங்காதவர் எனலாகுமே

எனும் திருமந்திரத்தால் அறியலாம்.[45]

ஆணவ நீக்கம் பெறும் வரை மாயையும் கன்மமும் உயிர்களுக்குத் தேவை. ஆணவம் உமியினையும், கன்மம் முளையினையும், மாயை தவிட்டினையும் போன்றவை. ஆருயிர் அரிசியைப் போன்றது. ஆகையால், சூழ்ந்துள்ள பாசம் நீக்கித் திருவடிப் பெருமையைப் பேணுவாயாக என்பதை,

ஆணவ மாயையுங் கன்மமும் ஆம்மலம்
காணும் முளைக்குத் தவிடு உமி ஆன்மாவுந்
தாணுவை ஒவ்வாமல் தண்டுலமாய் நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே [46]

என்ற திருமந்திரத்தில் விளக்குகிறார் திருமூலர்.

கன்மமலம் (வினை) - தொழில், செயல் என்று பெயர் பெறும் கன்ம மலம், மாயையின் அசைவு. இதன் பற்றுக் கோடு மாயை. மாயையைப் பற்றி நிற்கும் இதன் இரு நிலைகள், காரணநிலை, காரிய நிலை என்பன.

| காரணநிலை ( மூலகன்மம்) | காரியநிலை ( கன்மம்) (வெளிப்பட்டு நிகழும் நிலை) |
|---|---|
| செயல் நிகழாத பொழுதும் இது நிகழும். இது பொருளின் கண்ணே உள்ள நிலை. இதில் நன்மை தீமை என்ற பாகுபாடு இல்லை. | நன்மை தீமை வேறுபாடு உண்டு. எனவே இருவினை நாசோற் பத்தி உடையது. பிரவாக நித்தம் என்றும் பெயர் பெறும் ( நீரோட்டம் போல் இடையறாது வருவது) |

கன்மத்தின் வழி, உயிர்களுக்கு மாயையும் உண்டாகிறது. ஏனெனில் மாயையாகிய கருவியைக் கொண்டே கன்மம் நிகழும்.

கன்மமும் மாயையும் வித்தும் மரமும் போல் ஒன்று மற்றொன்றின் காரணமாயும், காரியமாயும் வரும். உடம்பு இல்லாது உயிர் ஒன்றும் செய்ய இயலாது. உடம்பே மாயை. மனம், வாக்கு, காயத்தினால் நல்வினை, தீவினை இரண்டும் செய்ய முடியும்.

இறைவன், கருணையால் எல்லா உயிர்களுக்கும் மாயையிலிருந்து நுண்ணுடலைக் கொடுக்கிறான். நுண்ணுடலின் அந்தக் காரணங்கள், உயிர்களின் இச்சா சக்திக்கேற்ப விருப்பு வெறுப்புகளை உருவாக்குவதால், வினையாகி அதற்கேற்ப உயிர்கள் பல்வேறு உடல்களைப் பெறுகின்றன. இதனால் உடலும், வினையும் ஒன்றுக்கொன்று காரணமாகின்றன.

ஆக, ஆணவத்தால் ஏற்படும் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப உயிர்களுக்குக் கன்மத்தைப் பற்றுதலின் முனைப்பு ஏற்பட மூல கன்மத்தைக் காரணமாயையோடு உயிர்களுக்கு இறைவன் சேர்க்கிறான். இதனால் மாயையிலிருந்து காரண, கஞ்சுக, குண, சூக்கும சரீரங்கள் உண்டாகின்றன. இவற்றைப் பெற்ற உயிர்கள் அதனதன் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப பலவகைப்பட்ட செயல்கள் செய்யும். இதனால் வினையும், பிறப்பும், மாறி மாறி விளையும். ஆனால் ஆணவமலமே சகச மலமாகிய அநாதி. மாயை, கன்மங்கள் வந்து போகும் ஆகந்து மலங்கள். ஆணவம், இறைவனின் இச்சை இல்லாமல் வருவது. ஆனால் மாயை, கன்மங்கள், ஆணவத்தை மாற்ற இறைவன் செயலால் தொழிற்படுபவை. எனவே ஆணவம் நேர்பகை. கன்மம் என்பது வழிப்பகை. கன்மத்தோடு தொடர்புற்று வருவதால் மாயை என்பது தொடர்புப்பகை. இவை முறையே பிரதிபந்தம், அனுபந்தம், சம்பந்தம் என்ற பெயர்களைப் பெறுவன.

**அநாதியே உள்ளகன்மம் மூலகன்மம்**
**கன்மம்**

- **மூலகன்மம்**
  **காரண கன்மம்**
- **காரிய கன்மம்**
  - **நல்வினை** **( புண்ணியம்)**
  - **தீவினை** **( பாவம்)**

**காரியகன்மத்தின் நிலைகள்**

- **தூலம்**
  **உடலால் செய்வது (வெளிப்படை.)**
- **சூக்குமம்**
  **தூலநிலை விட்டுச்சூக்குமம் அடையும். நிகழ்ந்து அழிந்தாலும் சூக்குமமாய் அழியாது நிற்கும்.**

எதுவும் எக்காலத்தும் முற்றிலும் அழிவது இல்லை.

மனத்தால் செய்யும் வினை - மானதகன்மம்
வாயினால் நிகழும் வினை - வாசிககன்மம்
உடலால் செய்யும் வினை - காயிககன்மம்

நல்வினை, தீவினைகள், ஆகாமியமாகி, அவை சூக்குமமாய் நின்று 'சஞ்சிதம்' ஆகி, பின்னர் பயன்தரும் பொழுது பிராரர்த்தம் ஆகும்.

வினைகளின் மூவகைகள் .

சஞ்சிதம்

தொல்வினை, பழவினை, இருப்புவினை, தொகுப்பு வினை, வினைக்குவியல், அபூர்வம் என்ற பெயர்களை உடையது. இது சூக்குமகன்மம். இச்சஞ்சிதம், புத்தித் தத்துவத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு மாயையில் கட்டுப்பட்டு இருக்கும். ஒவ்வொரு பிறப்பிலும் செய்யும் ஆகாமிய வினைகள் அனைத்தும் அந்தந்தப் பிறப்பிலேயே பயனுக்கு வராது. பயனுக்கு வராமல் குவிந்துகிடக்கும் வினைக் குவியல் சஞ்சித வினைக் குவியல். இக்குவியலிலிருந்து இறைவன் ஒவ்வொரு பிறவியிலும் அனுபவிக்க வகுத்துக் கொடுப்பான். தூலகன்மம், தூலநிலை நீங்கிச் சூக்குமமாய் நிலைத்திருப்பது சஞ்சிதம்.

பிராரர்த்தம்

ஊழ்வினை, நுகர்வினை, விதி, ஊழ், நடப்புவினை என்று பெயர் பெறும். ஏன்றவினை, வல்வினை, என்றும் பெயர் பெறும். இது இறைவனால் விதிக்கப்படுவது. உயிர்கள் சஞ்சித கன்மத்தின் பயனை நுகர ஒரு பிறப்பில் அமையும் வினை. ஊழ் என்பது சஞ்சிதத்தில் இருந்து முகப்பது. முறையில்தான் வரும் என்பதில்லை. வன்மை மென்மைக்கேற்ப முன் பின்னாக வரும். இது அதி சூக்கும கன்மம் எனப்படும்.

**ஆகாமியம்**

எதிர்வினை. வருவினை. மெல்வினை என்ற பெயர் பெறும் ஆகாமியமே சஞ்சிதமாகிப் பின் பிராரர்த்தமாகும். இம்மூவகை வினைகளையும் ஓர் உவமையால் விளக்குவர். ஆகாமியம். நிலத்தில் இடும் விதை. பலன் தரும் வரை நிலத்தில் கிடப்பது, சஞ்சிதம். வித்து வளர்ந்து பலன் தருவது, பிராரர்த்தம்.

ஆகாமியம் இல்லாமல் பிராரர்த்தத்தை நுகர முழயாது. விருப்பு, வெறுப்பு இல்லா நிலையில் நிகழ்ந்தால் ஆகாமியமாகாது. இது ஸ்தூல கன்மம்.

வினையும். வினைப் பயனும் இறைவனால் சேர்க்கப்படுவது. பக்குவ ஆன்மாவை, ஆணவம் வலி குறைத்துத் தாக்காதவாறு செய்யும் நிலையில் கன்மமும் நீங்கும். குருவருளால் சஞ்சிதம் வறுத்த வித்து போல் ஆகும். ஞானத்தால், ஆகாமிய வினை ஏறாது தடை செய்யப்படும். பிராரர்த்தவினை சீவன் முத்தருக்கு உடலூழாய்க் கழியும்.

இவை பற்றி முத்திநிலை பற்றிக் கூறும் பொழுதும் ஒன்பதாந்தந்திரத்தில் திருமூலர் கூறுகிறார்.

மும்மலம் நீங்கி சிவபரம் பொருளாகச் சிறந்து விளங்கும் நிலையைத் திருமூலர்..

**சிவம் ஆகி மும்மல முக்குணம் செற்று**
**தவம் ஆன மும்முத்தி தத்துவத்து அயிக்கியத்**
**துவம் ஆகிய நெறி சோகம் என்போர்க்குச்**
**சிவமாம் அமலன் சிறந்தனன் தானெ**

என்று கூறுகிறார். [47]

மேலும்,

**சிவமான சிந்தையில் சீவன் சிதைய**
**பவமான மும்மலம் பாறிப்பறிய**
**நவமான அந்தத்தின் நற்சிவ போதந்**
**தவமா மவையாகித் தானல்லவாமே**

என்று பிறப்பிற்குக் காரணமாகிய மும்மலம் திருவருளால் அழிவதைத் திருமூலர் கூறுகிறார்.

**மாயை**

மாயாமலம் என்றும் உள்ளது. இது ஔிப் பொருளால் ஒன்றே. உருவம் அற்றது. உலகம் உண்டாக வித்தாக இருப்பது சடப்பொருள். எங்கும் வியாபித்தது, இறைவனுக்குப் பரிக்கிரக சத்தியாக உள்ளது.

உயிர்களுக்கு உடலாகவும், அகக் கருவியாகவும், உலகமாகவும், போகப் பொருளாகவும், விரியும் தன்மை உடையதாகவும் உள்ளது. ஆணவ மலத்தோடு கூடிய உயிர்களுக்கு மலமாக நின்று மயக்கம் தரும்.

வேண்டும் பொழுது உதவித் தொழிலுக்குக் காரணமாய் இருக்கும் இறைவனின் வைப்புச் சத்தியே பரிக்கிரகசக்தி. இது உயிர்களின் அறிவு இச்சைச் செயல்களை இயங்கச் செய்யும். ஆணவத்தொடு கூடித் துணை செய்வதால் மலமாயிற்று. மல, கன்மம் மாயையில் கலவாத நிலையில் அது சுத்த மாயையே. மாயை இரண்டு வகைப்படும்.

**மாயை**

| சுத்தமாயை | அசுத்த மாயை |
| --- | --- |
| (மல கன்மங்களோடு விரவாதபகுதி) | (மலகன்மங்களோடு விரவிய பகுதி) |
| மயக்கமின்றி உயிர்க்கு அறிவிப்பது | மயக்கி அறிவிப்பது |

பொருள் அடிப்படையில் மாயை ஒன்று என்றாலும், இரண்டு பொருள்களாகக் கருதப்படுகிறது.

சுத்த மாயா தத்துவங்கள் இறைவன் ஐந்தொழில் ஆற்றும் இடமாக உள்ளது. அவை, சகலருக்கு உடலாகவும் உலகாகவும் வருவதில்லை. அசுத்த மாயையே உடலாக உள்ளது.

மாயை பயன்படும் வகையில் உயிர்கள் மூன்று வகையாக இருப்பதால், உயிர்களின் பொருட்டு அமைந்த மாயையும் மூன்று வகையாக உள்ளது.

1. சுத்தமாயை - சுத்த பிரபஞ்சம்
2. அசுத்த மாயை - மிக்கிரப் பிரபஞ்சம்
3. பிரகிருதி மாயை - அசுத்தப் பிரபஞ்சம்

மாயா என்றால் மாய்வது, ஒடுங்குவது.

மா = மாய்வது. ஆ = தோன்றுவது.

தோன்றுவதும் ஒடுங்குவதுமாகிய இயல்பு.

உலகைத் தோற்றுவிக்க மாயை முதற்காரணம். இறைவனது ஆற்றலாகிய சக்தி துணைக் காரணம்.

இறைவன் - நிமித்த காரணம்

தன் அருளாகிய ஆற்றலைக் கொண்டு மாயையிலிருந்து உலகைத் தோற்றுவிக்கிறான் இறைவன்.

சுத்தமாயையில் தோன்றும் வாக்குகள் நான்கு வகை. இது காதால் கேட்கும் ஓசை அன்று. பொருள் உணர்வை உண்டாக்கும் ஆற்றல், இங்கு சொல் எனப்படுகிறது. இச்சொற்களால் உலகம், சொல் உலகம் அல்லது சப்தப் பிரபஞ்சம் எனப்படுகிறது.

## நால்வகை வாக்குகளின் இயல்புகள்

| சூக்குமை வாக்கு | பைசந்தி | மத்திமை | சூக்குமவைகாரி | தூலவைகரி |
|---|---|---|---|---|
| அழிவில்லாதது. சுத்தமாயாரூபம். இதன்காரியமே மற்ற வாக்குகள். மூலதாரத்தில் சுத்தவித்தைத் விளங்கும். சிவ தத்துவத்தால் செயல்படும். காரண சரீரம். துரிய நிலை. இது மொழியின் முதல் நிலை (நாதம், பரை) | பைசந்தி என்றால் விளங்குவது. சொல் ஓரளவு விளங்கும். சூக்குமையின் விரிந்த நிலை இது. மயில் முட்டையில் உள்ள நீருக்கு இது உவமை. தெளிவில்லாது இருப்பது. உந்திதானம் இதன் இடம். சத்தி தத்துவத்தால் செயல்படும். குண சரீரம் சுழுத்தி நிலை. | பைசந்தி விரிவடையும் போது தோன்றுவது. சொற்களின் வடிவு விளங்கும். கழுத்தில் உள்ள குரல் வளையில் சொல் தோன்றி நிற்கும். பைசந்திக்கும் வைகரிக்கும் வேறாய் விளங்குவது. சாதாக்கிய தத்துவம். சூக்கும சரீரம் சொப்பனநிலை | தன் செவிக்கும் கேட்பது சூக்குமவைகரி. கண்டதானம். மகேஸ்வர தத்துவம். வைகரி விகாரம் உடையது. வேறுபட்ட மொழியமைப்பு உடையது. எழுத்து வேறுபாடு இதில் தோன்றும். | பிறர் செவிக்கும் கேட்பது தூலவைகரி. தத்துவம் |

நான்கு வகை வாக்குகளும் மூன்று வகை உயிர்களுக்கு விடய ஞானம் உண்டாக்கும். இந்த ஞானம் பசு ஞானம். இந்த ஞானத்தை அடுத்துப் பதிஞானத்தால் வீடு கிட்டும். இந்த நால்வகை வாக்குகளும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியவை அல்ல. ஒவ்வொன்றும் தனித்தனியாக விருத்தியானது (மடக்கிய துணி கூடாரமாவது போன்று)

## மும்மலங்களுள் மாயையின் காரியங்கள் நான்கு

| தனு | கரணம் | புவனம் | போகம் |
|---|---|---|---|
| உயிர்களின் உடல்கள் | மனம் புத்தி அகங்காரம் சித்தம் | உலகம் அண்டம் (உயிர்கள் தங்குமிடம்) | உலகம் அண்டங்களில் உள்ள அனைத்துப் பொருள்களும் |

**உயிர்க்குள்ள சரீரங்கள் ஐந்து**

| காரண சரீரம் | கஞ்சுக சரீரம் | குண சரீரம் | சூக்கும சரீரம் | தூல சரீரம் |
|---|---|---|---|---|
| அசுத்தமாயா தத்துவத்தில் உள்ள மாயை உயிர்களின் ஏனயை தத்து வங்களுக்குக் காரணம். எனவே காரண சரீரம். ஆணவ மல மறைப்புக்கு உட்பட்ட ஆன்மாவுக்குச் சிறிது அறிவு தந்து மகிழ்ச்சி ஏற்படுத்தும். | காலம். நியதி. கலை. வித்தை அராகம் ஆகிய ஐந்தும் புருடன். இப்புருடன் உயிர்க்குச் சட்டை. எனவே கஞ்சுக சரீரம் ஆணவ மறைப்புக்கு உட்பட்ட ஆன்மாவின் அறிவிச்சைச் செயல்களை விளக்குவது | 24 தத்துவங்கள் உயிருக்குத் தோன்ற காரணமாக இருக்கும். மூலப் ப்ரகிருதியில் முக்குணம் வெளிப்படாமல் அடங்கி இருக்கும் குணத்தால் குண சரீரம். சித்தமாய் நின்று தொழில் படும் மனதில் வைத்து எண்ணப்படும் | மனம், புத்தி அகங்காரம் எனும் மூன்று அந்தக் காரணங்களும் ஓசை,நாற்றம் என்ற தன் மாத்திரைகள் ஐந்தும் ஆகிய எட்டுத் தத்துவங்களும் சூக்கும சரீரம். இது. புரியட்ட சரீரம். பிராண வாயுவில் செயல்படல் | பூதங்கள் ஐந்து கன்மேந்தியம் 5, ஞானேந்திரியம் 5, ஆகிய 15 தத்துவங்களோடு கூடிய சரீரம் தூல சரீரம். உணவால் நிலை பெறுகிறது |
| (ஆனந்த மய கோசம்) | (விஞ்ஞானனமய கொசம்) | (மனோமய கோசம் | (பிராணமய கோசம் | (அன்ன மய கோசம்) |

காரண, கஞ்சுக, குண சரீரங்கள் மூன்றும் பரசரீரம். இப்பரசரீரத்துள் வித்யா தத்துவங்கள் ஏழும் குணத்தத்துவமாகிய சித்தம் ஒன்றும் ஆக எட்டுத் தத்துவங்கள் உள. பிருதிவித் தத்துவத்துக்கு மேல் உள்ள தத்துவங்களிலும் பல புவனங்கள் உள்ளன. மாயா காரியங்கள் ஆகிய இவை அத்துவாக்கள் எனப்படும்.அத்துவாக்கள் (படிவழி) ஆறு. அவற்றுள் மந்திரம். பதம். வன்னம் என்பன சொல்லுகம். புவனம், தத்துவம், கலை என்பன பொருள் உலகம். இந்த ஆறு படிகளும், ஆன்மா மேலேறுவதற்கான கருவிகள். மந்திரம் என்பது சொற்றொடர், பதம் என்பது சொல், வன்னம் என்பது எழுத்து, புவனம் என்பது உயிர்கள் தங்குமிடம். தத்துவம் என்பது 36 தத்துவங்கள். கலை என்பது பஞ்ச கலைகள்.

பஞ்ச கலைகள் என்பது, சுத்த மாயை. அசுத்த மாயை, பிரகிருதி மாயை ஆகியவற்றில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் பொருள் விளங்கச் செய்வது.

இந்த ஐந்து கலைகளில் ஒவ்வொன்றிலும் உள்ள வியாபக முனைப்புகளின் வன்மை மென்மைகளுக்கு ஏற்ப அந்தந்த்

தத்துவங்கள் அவற்றின் தூல, சூக்கும இயல்புகளுக்கேற்ப அடங்கியுள்ளன.

இறைவனின் திருவருட்சக்தி ஐந்து கலைகளாக நின்று உயிர்களை முத்திக்குச் செலுத்தும்.

| | | |
|---|---|---|
| 1. நிவிர்த்தி கலை | - | பிரகிருதி மாயையில் உள்ள பிருதிவி (மண்) தத்துவம் மட்டும். |
| 2. பிரதிட்டா கலை | - | பிரகிருதி மாயையில் உள்ள மண் நீங்கலாக ஏனை 23 தத்துவங்கள். |
| 3. வித்தியா கலை | - | அசுத்த மாயா தத்துவமாம் வித்தி தத்துவத்தில் உள்ள ஏழு தத்துவங்கள்அடங்கும். |
| 4. சாந்தி கலை | - | சிவ தத்துவம் எனப்படும் சுத்த தத்துவத்தில் உள்ள சுத்த வித்தை. ஈசுவரம் சாதாக்கியம் என்ற மூன்றும் அடங்கும். |
| 5. சாந்தியதீத கலை | - | சக்தி, சிவம் என்னும் இரண்டு தத்துவங்களும் அடங்கும். |

ஆக 36 தத்துவங்களும் பஞ்ச கலைகளின் வியாபகத்துள் அடங்கும்.

உயிர்கள், பாசத்தின் நீங்க, அத்துவாக்களாகிய படிகளைப் படிப்படியாகக் கடந்து மேலேறிச் செல்ல வெண்டும்.

சொல்லுலகம் (3 வகை)
- மந்திரம் 11
- பதம் 81
- வன்னம் (எழுத்து) 51

பொருளுலகம் (2 வகை)
- புவனம் 224
- தத்துவம் 36

மந்திரம் முதலிய ஐந்தையும் தம்முள் அடக்கி நிற்கின்ற கலை என்பது சுத்த மாயையின் காரியம். அதனையும் சேர்த்து அத்துவாக்கள் ஆறு.

அத்துவா சோதனை என்பது கலா சோதனை எனப்படும். இந்தக் கலா சோதனையில், ஆன்மா பஞ்ச கலைகளையும் கடந்து மேல் போய்த் தூயதாகி இறைவனை அடையும். நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதகலை என்பவை ஒன்றன்

மேல் ஒன்றாக நின்று. கீழ்த் தொடங்கி, பிருதிவி முதலிய 36 தத்துவங்களைத் தம்முள் அடக்கும். முக்திக்காகச் செய்யும் நிருவாண தீக்கையில் ஆசாரியன் மாணவனுக்கு, அத்துவா சோ்தனை செய்து சஞ்சிதத்தைப் போக்கி ஞானம் அளிப்பார்.

மலங்கள் மூன்று. மாயையைக் காரண நிலையில் வைத்துத் தத்துவம் முதலிய காரியங்கள் மாயேயம் என்று வேறொரு மலம் போல் கூறுவர். பாசங்களின் வழி நின்று அதனைச் செலுத்தும் இறைவனது சத்தியையும் சேர்த்துப் பாசமாகக் கூறுவர். எனவே, மறைத்தல், அருளல் என்பனவற்றைச் சேர்த்துப் பாசங்கள் ஐந்து என்பர். முத்தியில் ஐந்தும் நீங்கும்.

தத்துவங்களின் கூறுகளும், செயல்களும் தாத்துவிகங்கள். தாத்துவிகங்களின் தொகை அறுபது. தத்துவங்கள் 36, ஆக தத்துவங்கள் 96 என்பர்.

| பிருதிவி கூறு 5 | அப்பு கூறு 5 | தேயு கூறு 5 | வாயு கூறு 10 | ஆகாயக் கூறு 10 |
|---|---|---|---|---|
| தசை<br>மயிர்<br>தோல்<br>எலும்பு<br>நரம்பு | சிறுநீர்<br>இரத்தம்<br>சிலேத்தமம்<br>வியர்வை<br>சுக்கிலம் | வெப்பம்<br>(பசி, இதயம்,<br>கண். உடம்பு,<br>தலை வெப்பம்) | தசவாயுக்கள்<br>உதானன்<br>பிராணன்<br>கபானன்<br>சமானன்<br>வியானன்<br>நாகன்<br>கூர்மன்<br>கிருகரன்<br>தேவதத்தன்<br>தனஞ்சயனன் | தசநாடிகள்<br>இடைகலை<br>பிங்கலை<br>சுழுமுனை<br>அத்தி<br>அலம்புடை<br>காந்தாரி<br>குகுதை<br>சிகுவை<br>சங்கினி<br>புருடன் |

இவற்றுடன்,

ஞானேந்திரியங்களின் கூறாகிய சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்தும்,

கன்மேந்திரிய விடயங்களாகிய வசனம், கமனம், தானம், விசர்க்கம் ஆனந்தம் என்ற ஐந்தும், அகங்காரத்தின் கூறாகிய தைசதம், வைகாரியம், பூதாதி என்ற மூன்றும், மனத்தின் கூறாகிய காமம், குரோதம், உலோபம், மோகம். மதம் என்ற ஐந்தும். குணத்தின் கூறாகிய சாத்துவிகம், இராசதம், தாமதம் என்ற மூன்றும், வாக்கின் கூறுகளாகிய சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற நான்கும் ஆகிய அறுபதும் தாத்துவிகங்கள்.

முப்பத்தாறு தத்துவங்களும் பஞ்ச கலைகளின் வியாபகத்துள் அடங்கும். ஒவ்வொரு கலைகளின் வியாபக முனைப்புகளின் வன்மை மென்மைகளுக்கு ஏற்ப அந்தந்தத் தத்துவங்கள், அவற்றின் தூல சூக்கும இயல்புகளுக்கு ஏற்ப அடங்கியுள்ளன. இறைவனின் திருவருட்சக்தி, ஐந்து கலைகளாக நின்று உயிர்களை முத்திக்கு அழைத்துச் செல்கின்றன.

சடமாய்க் கிடந்த கேவலநிலை உயிர்களுக்கு, இறைவன் தத்துவங்களைக் கொடுத்து உதவுகிறான்.

ஐந்து மலங்களும் நீங்காமல் திருவடிப் பேறு கிடைக்காது. எனவே, மலங்கள் நீங்க உயிர்கள் அதற்குரிய சாதனங்களைக் கைக் கொள்ள வெண்டும்.

**சாதனம் (வழி)**

முக்தி பெறும் வழிகளைக் கூறுவது சாதனம். ஆணவம், கன்மம், மாயை என்னும் தளைகளை விட்டு, உயிர்கள் இறையருளை உணர்தலாகிய மெய்யுணர்தலைப் பெற்றுப் பேரின்பப் பெருநிலையாம் முத்தியடைதலுக்கான வழி முறைகளே சாதன இயல் எனப்படும். பதி. பசு. பாசங்களின் தன்மைகளை மிக விரிவாகக் கூறியுள்ள திருமூலர், ஆயிரக்கணக்கான மந்திரங்களாகிய பாடல்களில் முத்திக்கான வழிகளாகிய சாதனங்களை விளக்குகிறார். ஒன்பது தந்திரங்களுள் ஆறு தந்திரங்களில் சாதனங்களாகிய முத்திக்கான வழிமுறைகளைக் கூறுகிறார். முதலில், அறஞ்செய்வான் திறம், அன்பு, இரக்கம் போன்ற அருள் நிலைகளையும், அடிப்படையான ஒழுக்க நிலைகளையும் கூறும் திருமூலர், குரு நிந்தை, சிவ நிந்தை செய்பவர் நரகிடை வீழ்வர் என்று கூறி நன்னெறியில் வழிப்படுத்துகிறார். பின் அட்டாங்கயோகம், அட்டமா சித்தி, சரீர சித்தி, மந்திரம், தந்திரம், யந்திர முறைகள், சரியை (சீலம்) கிரியை (நோன்பு) யோகம் (செறிவு) ஞானம் (மெய்யுணர்வு) சன்மார்க்கம் (காதல் நெறி) சகமார்க்கம் (தோழமை நெறி) சற்புத்திரமாக்கம் (மகன்மை நெறி) தாசமார்க்கம் (அடிமை நெறி) சாலோகம் (சிவனுலகம்) சாமீபம் (சிவன் அண்மை) சாரூபம் (சிவனுருவாதல்) சாயுச்சியம் (சிவனாதல்) சத்தி நிபாதம் (திருவருள் வீழ்ச்சி) புறச் சமய தூஷணம் (பிறநெறி நிந்தை) நிராகாரம் (அல்லொழுக்கம்) தவம். துறவு, அருளுடைமை, தவ வேடம், குரு பூசை, போசன விதி, இந்திரியம் அடக்கல், பக்தி, முத்தி, பிரணவ சமாதி, பஞ்சாக்கரம், கரும நிருவாணமாகிய செயலற்ற நிலை, போன்றவைகளைத் திருமந்திரத்தில் மிக விளக்கமாக எடுத்துக் கூறுகிறார். இச்சாதனங்கள் புறம் சார்ந்த சமயப் பண்பாடாக அமைகின்றன. ஏனெனில் முத்தியடைவதற்கான

முயற்சிக்கான இலக்கணம். கிரியை முறைகள், மந்திர நெறிகள் போன்றவை விதிகளாக அமைவதோடு, தூல முயற்சியாகவும் உள்ளதால், ஆன்ம உணர்வு பதிதல் என்ற அகவுணர்ச்சிகள் மட்டுமே அகம் சார்ந்த சமயப் பண்பாடாக இங்கு அமைகிறது. சமயம் என்றாலே உள்ளத்தில் கடவுள் நெறி பதிதல் என்பதே. சிந்தையைச் செலுத்தும் அகவழிபாட்டு உணர்வு ஒன்றலுக்கு கடவுள் நெறி சார்ந்த கொள்கைகள் புறப்பண்பாடாக அமைகின்றன.

**சரியை**

முத்தி பெற முதல் வழி சரியை என்பது. சுத்த சைவருக்கு மிகவும் உகந்த உறுதியான நெறி. உயிருக்குயிராய் இறைவன் கலந்து இருப்பதை உணரும் நெறி. சரியை என்பது சரீரமாகிய உடலால் வழிபடுவது. அதாவது, திருக்கோயிலை வலம் வருவது, திருக்கோயிலுக்குப் பூமாலை தொடுப்பது. தூய்மை செய்வது போன்றவை. இது புறத்துக்கும், அகத்துக்கும் உரியது. இறைவன், உள்ளத்துக்குள்ளேயே இருக்கின்றான் என்ற ஞான உணர்வைப் பெற அடிப்படையாக அமைவது. சரியையாகிய ஆலய வழிபாட்டு நெறி. நாடு நகரங்களில் உள்ள ஆலயங்களிலெல்லாம் அலைந்து திரிந்து இறைவனைப் பாடிப் பணிந்து தொண்டு செய்வது. இந்த வழிபாட்டால், ஒருமைப்பட்ட உள்ளத்தைப் பெறலாம். பின் அதனுள் இறைவனை உணரலாம் என்பதைத் திருமூலர்,

**நாடும் நகரமும் நற்றிரு கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்த பின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே** [49]

என்று கூறுகிறார்.

சரியை வழி நிற்போர், இறைவன் வாழும் உலகை அடைந்து அவன் அருகில் நிற்பர் என்பதை,

**சாலோகமாதி சரியாதியிற் பெறுஞ்**
**சாலோகஞ் சாமீபந்தங்கும் சரியையால்**
**மாலோகஞ் சேரில் வழியாகும் சாரூபம்**
**பரலோகம் இல்லாப் பரன் உருவாமே** [50]

என்ற மந்திரத்தால் உணரலாம்.

**கிரியை**

அகத்திலும். புறத்திலும், மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு செய்வதே கிரியை என்பது. அபிடேகம்,

அலங்காரம், நிவேதனம், தூபம், தீபம், பிரதட்சணம், நமஸ்காரம், தோத்திரம், பிரார்த்தனை போன்ற தொண்டுகளாகிய வழிபாட்டுக் கிரியைகள் கிரியையுள் அடங்கும். புறவழி பாட்டுடன் அகவழிபாடும் உடையது கிரியை என்பதை,

**கானுறு கோடிகடிகமழ் சந்தனம்**
**வானுறு மாமலரிட்டு வணங்கினும்**
**ஊனினை நீக்கி உணர்பவர்க்கல்லது**
**தேனமர் பூங்கழல் சேரவொண்ணாதே**

என்ற மந்திரத்தில் திருமூலர் கூறுகிறார். [51]

**யோகம்**

கூடுதல், ஒன்றாதல் என்னும் பொருளுடைய யோகம் என்பது, ஆன்மா, அறிவால் இறைவனொடு ஒன்றுதல் என்பதைக் குறிக்கிறது. யோகம் என்பது மனத்தினால் வழிபடுவது. மனதால் தியானிப்பது. இறைவனொடு ஒன்றிய உணர்வில் மனத்தைப் பழக்குதல். ஆன்மா, பேரான்மாவுடன் இணைவது. மூலாதாரத்தில் உள்ள குண்டலினியோடு பிராணனைச் சகஸ்ரதளத்திற்கு மேல் நாதாந்தத்தில் விளங்கும் இறையொளியில் பொருத்துவது யோகம்.

இறையுணர்வில் அழுந்தி உடல் நினைவற்று இருப்பது யோகம் என்பதை,

**நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றித்**
**தறி யிருந்தாற் போல் தம்மை யிருத்திச்**
**சொறி யினுந் தாக்கினுந் துண்ணென்று உணராக்**
**குறியறி வாளர்க்குக் கூடலுமாமே**

என்று விளக்குகிறார் திருமூலர். [52]

உலகப் பொருள்களின் மேல் மனம் முதலிய அந்தக் கரணங்கள் செல்லாமல் அகத்து நிறுத்தி அடக்கி இறைவனோடு ஒன்றச் செய்யும் யோக நிலை எளிதன்று. இதற்குப் பல முயற்சிகள் அடிப்படைத் தேவையாகின்றன. எனவே, யோகம் என்பது எட்டுக் கூறுகளாகப் பகுக்கப்படுகின்றது. அவை,

| | | |
|---|---|---|
| இயமம் (தீதகற்றல்) | - | தீயனவற்றைச் செய்யாதொழுகுதல் |
| நியமம் (நன்றாற்றல்) | - | நல்லனவற்றையே செய்தல் |
| ஆசனம் (இருக்கை) | - | யோகம் புரியுமுன் இருக்கும் ஆசனமுறை |
| பிரணாயாமம் (வளி நிலை) | - | பிராணனைக் கட்டுப்படுத்தல் |

பிரத்தியாகாரம் (தொகை நிலை) - புறத்தே செல்லும் மனத்தை நிலை பெறச் செய்தல்

தாரணை (பொறை நிலை) - உள்ளுக்கிழுத்த மனத்தை நிலை பெறச் செய்தல்

தியானம் (நீள நினைதல்) - இடைவிடாது நினைத்தல்

சமாதி (ஒன்றாதல்) - இறைவனும் உயிரும் ஒன்றி நிற்றல்

என்ற அகத்தவங்கள் எட்டு ஆம். இதனை.

**இயமம் நியமமே எண்ணிலா ஆதனம்**
**நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரஞ்**
**சயமிகு தாரணை தியானஞ் சமாதி**
**அயமுறும் அட்டாங்க மாவதுமாமே**

என்று கூறுகிறார் திருமூலர். [53]

அட்டாங்க யோகத்தில் இயமத்தை இடைவிடாது செய்ய வேண்டும். இயம நெறியில் நிற்பவர்கள் நீக்க வேண்டிய குற்றங்களாக.

**கொல்லான் பொய் கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்கமுடையான் நடுச் செய்ய**
**வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்**
**இல்லான் இயமத்திடை நின்றானே** [54]

என்பனவற்றைத் திருமூலர் கூறுகிறார்.

**நியம நெறியில் உள்ளவனின் பத்துச் செயல்களை,**
**தவம். செபம், சந்தோடம், ஆத்திகந் தானம்**
**சிவன் தன் விரதமே சித்தாந்தக் கேள்வி**
**மகஞ்சிவ பூசையொண் மதி சொல்லீர் ஐந்து**
**நிவம்பல செய்யின் நியமத் தானே** [55]

என்று கூறும் திருமூலர்,

**தூய்மை அருள் ஊண் சுருக்கம் பொறைசெவ்வை**
**வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை**
**காமங் களவு கொலையெனக் காண்பவை**
**நேமியீ ரைந்து நியமத்தனாமே** [56]

என்று பத்து நன்றாற்றும் பண்புகளை நியமத்தானாகிய அகத் தவத்தோனுக்குக் கூறுகிறார்.

இருக்கையாகப் பத்மாசனம் போன்ற இன்றியமையா ஆசனங்களைக் குறிப்பிடும். திருமூலர். ஏதாவதொரு

ஆசனத்திலிருந்து, பிராண செயம் பெற பிராணாயாமம் செய்ய வேண்டும் என்கிறார். பறவையை விட வேகமாகப் பிராணனின் வழி, சிரசை நோக்கிச் சென்றால் மகிழ்ச்சி ஏற்பட்டுச் சோம்பல் நீங்கும். சுறுசுறுப்பு உண்டாகும். பிராணனை இரேசக பூரக கும்பகம் செய்து தூய்மை செய்து உடம்பில் மாற்றம் ஏற்படுத்திக் காலனை வெல்லலாம் என்கிறார். புறத்தே மனத்தைச் செல்ல விடாமல் உள்ளே நிறுத்திப் பழகி இறைவனைத் தியானித்தால் இறவாத் தன்மை பெறலாம். தத்துவங்களை ஒடுக்கித் தற்பரத்தோடு தரித்து நிற்பது தாரணை.

தியானம் செய்யும் பொழுது நாட்டம் இரண்டினையும் மூக்கு நடுவில் கீழ்த்துவாரத்தின் பக்கம் செலுத்த சாம்பவி முத்திரையால் சிவனாகலாம் என்பதை,

**நாட்டம் இரண்டும் நடு மு:க்கில் வைத்திடில்**
**வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை**
**ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை**
**தேட்டமும் இல்லை சிவனவனாமே**

என்ற மந்திரத்தில் கூறுகிறார் திருமூலர். [57]

தியானத்தின் போது கண் பார்வையைப் புருவ நடுவில் செலுத்தும் யோகத்தால் தியானத்தில் உறைந்து நின்றால், தசவித நாதங்கள் நுண்மையாக 'விளங்கும். இறைவன் எல்லாவற்றோடும் நாதமாய்க் கலந்து இயக்குவதை உணரலாம்.

உயிரும் இறைவனும் ஒன்றும் சமாதி நிலையில், தகுதி வந்து பக்குவம் ஏற்படுவதால் சீவனின் உள்ளிருக்கும் சிவம் வெளிப்படுவான். மனம் அடங்கிச் சிரசின் மேல் சொரூப தரிசனம் செய்யலாம். சிவம், சத்தி, ஆத்மா என்ற மூன்றின் கலப்பே சமாதி.

சமாதியில் எண் சித்திகள் தாமே வந்து பொருந்தும் என்பதைத் திருமூலர்,.

***சமாதி செய்வார்க்குத் தகும் பல யோகம்***
***சமாதிகள் வேண்டாம் இறையுடன் ஏகில்***
***சமாதி தானில்லை தானவனாகில்***
***சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே*** [58]

என்று குறிப்பிடுகின்றார்.

இந்த அட்டாங்க யோகப் பேறுகள் அருளாற்றலால் தாமே விளைபவை. ஞானியர் இவற்றால் மயங்க மாட்டார்கள். இறைவனின் அருள் திறத்தை விளக்குவன சித்திகள் என்று தான் நினைப்பர்.

எண் பெரும் பேறு என்ற அட்டமா சித்திகளைத் திருமூலர்,. தனித் தலைப்பாக விளக்குகிறார். அவை.

| | | |
|---|---|---|
| அணிமா | - | அணுவைப் போல் சூக்குமமாதல் |
| மகிமா | - | மலை போல் பெரிதாதல் |
| கரிமா | - | கனமாதல் |
| இலகிமா | - | பஞ்சைப் போல் இலேசாதல் |
| பிராப்தி | - | எல்லாப் பொருளையும் தன்பால் தருவித்தல் |
| பிராகாமியம் | - | விருப்பம் போல் தடையின்றி எல்லா இன்பங்களையும் பெறுதல் |
| ஈசத்துவம் | - | தத்துவங்களை விருப்பப்படி நடத்துதல் |
| வசித்துவம் | - | தத்துவங்களில் கலந்து இருத்தல் என்பன. |

## ஞானம்

அகத்தில் யோகப் பயிற்சி செய்து, கிரியையைப் பற்றிய உருவத்தைக் கடந்த போது ஞானம் பற்றிய அருவம் விளங்கும். நவந்தரு பேதங்களையும் கடந்து அதற்கு மேல் விளங்கும். ஆத்ம சோதியைத் தரிசிக்கலாம். இவ்வாறு கண்ட ஞானியர் மும்மண்டலத்தையும் ஒத்துக் காண்பர்.

மேலும், உயிர் உடம்பில் உள்ள போதே உடம்பின் பயனாகிய ஞானத்தைப் பெறலாம். உடம்பு இறையுறையும் கோயில் என்பதால் பாதுகாக்க வேண்டும் என்பதை,

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே** [59]

**உடம்பினை முன்னம் இழுக் கென்று இருந்தேன்**
**உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று**
**உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே** [60]

என்று, 'காயசித்தி உபாயம்' என்ற தலைப்பில் திருமூலர் கூறுகிறார்.

முத்தியின் முதல்படியே சரியை, கிரியை, யோகம் என்பன.

- சிவ புண்ணியம்
  - அபுத்தி பூர்வ சிவபுண்ணியம் (அறியாமல். செய்யும் உணர்வின்றிச் சிவ புண்ணியம் செய்தல்)
  - புத்தி பூர்வ சிவபுண்ணியம் (சிவத் தொண்டாகக் கருதி. சரியை, கிரியை யோகங்களைச் செய்தல்)
    - சிறப்புச் சிவ புண்ணியம் (தீக்கை பெற்றுக் குரு அருளால் செய்வது)
    - பொதுச் சிவபுண்ணியம் (தமக்குத் தோன்றிய படிச் செய்வது)

மேலும், பயன் கருதிச் செய்யும் சிவபுண்ணியம். உபாயச் சிவ புண்ணியம் எனப்படும்.

இறைவனிடம் கொண்ட அன்பு மட்டுமே காரணமாகப் பயன் கருதாது செய்யும் சரியை முதலாயின உண்மைச் சிவ புண்ணியங்கள் எனப்படும்.

சரியை, கிரியை, யோகம் மூன்றும் ஞானத்தின் வளர்ச்சி நிலைகளே. இதனைத் தாயுமானவர்,.

**விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்புமலர் காய் கனி போல் அன்றோ பராபரமே** [61]

என்கிறார். அறிவு அனைத்தும் ஞானமாகாது. மெய்ப் பொருளாம் இறைவனை அறியும் அறிவே ஞானம். முக்திக்கு அழைத்துச் செல்ல ஞானத்தை விட மேலான வழி இல்லை என்பதைத் திருமூலர்.

**ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை**
**ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று**
**ஞானத்தின் மிக்கவை நன் முத்தி நல்காவாம்**
**ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே** [62]

என்று குறிப்பிடுகின்றார்.

ஞானிக்கு ஞானத்தில் ஞான முதலிய நான்கு நிலைகள் உள. அவை, கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நீங்காமல் நினைந்திருத்தலாகிய நிட்டைகூடல் என்ற ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்பன. இதனை,

**ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு**
**ஞானத்தின் ஞானமே நானெனது எண்ணாமல்**
**ஞானத்தில் யோகமெ நாதாந்த நல்லொளி**
**ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே** [63]

என்ற மந்திரம் குறிப்பிடுகிறது.

| | | |
|---|---|---|
| சரியையில் சரியை | - | திருக்கோயில் அலகிடல், மெழுகல் |
| சரியையில் கிரியை | - | சிவ வடிவை வழிபடல் |
| சரியையில் யோகம் | - | மூர்த்தியைத் தியானித்தல் |
| சரியையில் ஞானம் | - | தியானத்தால் மெய்யனுபவ உணர்வு பெறல் |
| கிரியையில் சரியை | - | பூசைப் பொருள் சேகரித்தல் |
| கிரியையில் கிரியை | - | உருவ, அருவுருவங்களுக்குச் செய்யும் பூசை |
| கிரியையில் யோகம் | - | அகத்தே பூசை செய்யும் அந்தர்யாகம் |
| கிரியையில் ஞானம் | - | அந்தர்யாகத்தால் ஏற்படும் அனுபவ உணர்வு |
| யோகத்தில் சரியை | - | இயமம், நியமம், பிராணாயாமம் பழகல் |
| யோகத்தில் கிரியை | - | பிரத்யாகாரம், தாரணை பழகல் |
| யோகத்தில் யோகம் | - | தியானம் செய்தல் |
| யோகத்தில் ஞானம் | - | சமாதி கூடல் |
| ஞானத்தில் சரியை | - | குருவிடம் சாத்திரப் பொருள் கேட்டல் |
| ஞானத்தில் கிரியை | - | அப்பொருளைச் சிந்தித்தல் |
| ஞானத்தில் யோகம் | - | அப்பொருளை ஐயமின்றித் தெளிதல் |
| ஞானத்தில் ஞானம் | - | சிவனை நீங்காமல் நினைந்து இருத்தல் |

மலபரிபாகம் ஏற்பட்டு அது வழியாகச் சரியை முதலிய நிலைகளும், இருவினை ஒப்பும் ஏற்பட சிவஞானம் கூடும்.

தவமும், ஞானமும் குருவருளால்தான் ஏற்படும்.

சரியை, கிரியை, யோகம் முதலிய மூன்றையும் தருபவர் கிரியாகுரு. ஞானத்தை உணர்த்துபவர் ஞானகுரு. கிரியா குரு, கிரியை, சரியை என்ற இரண்டை மட்டும் தருவார். சரியா குரு, சரியை ஒன்றை மட்டும் தர வல்லவர்.

சரியை முதலிய நான்கு நெறிகளில் நின்று, சிவமாகும் ஞானநிலையினை,

**பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்**
**சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்**
**உய்த்த நெறி யுற்று உணர்கின்ற ஞானத்தால்**
**சித்தங் குருவருளால் சிவமாகுமே** [64]

என்று குறிப்பிடுகிறார் திருமூலர்.

சரியை முதலிய நான்கால் பெறும் ஞானங்கள். வேதாந்த சித்தாந்தங்களின் முடிவுகளாகிய ஆறு விதமான முடிவுகளாகியவேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்ற ஆறந்தங்கள். ஆன்மா, சமாதியில் ஆறந்தங்களால் ஞானம் பெறும்.

ஞானத்தால் ஆன்மா, தன்னை அறிவது ஆத்மதரிசனம். பரையை அறிந்தால் சிவ தரிசனம்.

சன்மார்க்க நெறியாம் குருநெறி அல்லது ஒளி நெறி ஞானம் தரும் வழி. திருமூலர், நான்கு நெறி, நிலை, மார்க்கம் என்ற சாதனங்களைக் கூறுகிறார்.

இயமம், நியமம், ஆசனம் ஆகிய உடலோடு தொடர்புடைய யோகமும், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை என்னும் மனதோடு தொடர்புடைய யோகமும், தியானம், சமாதி என்னும் ஆன்மாவோடு தொடர்புடைய யோகமும் எல்லோருக்கும் ஒரே வகையாக, ஒரே நிலையில் ஏற்படாது.

அவரவர்கள் கைக்கொள்ளும் நெறி, நிலை, மார்க்கங்களுக்கேற்ப படிநிலைகளில் பக்குவம் ஏற்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| சரியை | - தாசமார்க்கம் | - சாலோகம் | -(தொண்டு நெறி) | - அப்பர் |
| கிரியை | - சற்புத்திரமார்க்கம் | - சாமீபம் | - (மகன்மை நெறி) | - சம்பந்தர் |
| யோகம் | - சகமார்க்கம் | - சாரூபம் | - (தோழமைநெறி) | - சுந்தரர் |
| ஞானம் | - சன்மார்க்கம் | - சாயுச்சியம் | - (குரு சீடன்நெறி) | - மாணிக்க வாசகர் |

**சாலோக நிலை என்பது இறை உலகத்தில் இருத்தல்**
**சாமீபம் என்பது இறைவனின் சமீபத்தில் இருத்தல்**
**சாரூபம் என்பது இறைவனைச் சார்ந்த உரு பெறல்**
**சாயுச்சியம் என்பது இறைவனோடு இரண்டறக் கலத்தல்**
**சாயுச்சியம் மட்டுமே பரமுத்தி மற்றவை பதமுத்தி.**

பாசங்களிலிருந்து நீங்கி அன்பினால் இறைவனைப் பற்றி அறிவினால்ஆராய்ச்சி செய்து பற்றினைத் துறந்தால் வினை நீக்கமும், இருள் நீக்கமும் உண்டாகும். இத்தகு துறவு நிலையிலும் ஞானத்தின் சூக்குமத்தைக் குருவின் வழி அறிந்து சிரசின் மேல் ஒளியை உணரலாம்.

மேலும். தன்னுள் மறைந்து இருக்கும் பொருளைக் காண, இடை விடாமல் இறைவனை எண்ணியிருக்கும் தவத்தைச் செய்து புறத்தே செல்லும் மனதை அகத்தே நிலை பெறச் செய்து பிறவி அறுக்கலாம். அகமுக ஆராய்ச்சி, பிறவி அறுக்கும் என்பதை.

**சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டு நீர்**
**மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்**
**பார்த்தவப் பார்வை பசுமரத்தாணிபோல்**
**ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே**

எனத் திருமூலர் குறிப்பிடுகிறார். [65]

புறநோக்கை விட்டு விட்டு அகநோக்கை ஆராய்ச்சி செய்வோர்க்குப் புறக் கிரியைகள் தேவையில்லை. தவமுயற்சி செய்வோர்க்கு, சரியை, கிரியைகளைச் சமய தீக்கை, விசேட தீக்கை வழி குரு உணர்த்துவார். தீட்சை என்ற வடசொல்லில் தீ = கெடுத்தல். க்ஷை = கொடுத்தல். பாசத்தைக் கெடுத்து மோட்சத்தைப் பெற, குருவிடம் பெறும் உபதேசம் என்பர்.

க்ஷா = நீக்குதல், தீ=தருதல், இருளை நீக்கி மெய்ஞ்ஞானம் தருவதே தீக்கை என்றும் கூறுவர். தீட்சைகளில் பல வகைகள் இருந்தாலும் இன்றியமையாத மூன்று தீட்சைகளைச் சிறப்பாகக் கூறுவர். அவை, சமய தீக்கை, விசேட தீக்கை, நிருவாண தீக்கை என மூவகை. சமய தீக்கையால் சரியையும், விசேட தீக்கையால் கிரியை, யோகம் என்பவையும் நிருவாண தீக்கையால் ஞானமும் கிடைக்கும் என்பர்.

**சமய தீக்கை**

சிவனின் சிறப்பை ஓரளவு உணரும் நிலையே, சத்தி நிபாதத்தின் முதல் நிலையாம் மந்ததரம் என்பது. இதில் திருவைந்தெழுத்து மந்திரமாகிய பஞ்சாக்கரத்தைத் தூலமாக உணர்ந்து ஓதல். ஆகமங்களை ஓதல், வேதத்தை ஓதல், சமய

ஒழுக்கங்களைக் கைக் கொள்ளல் போன்றவை சமய தீக்கைக்கு உரியது.

### விசேட தீக்கை

சமய தீக்கையால் ஆணவ மலம் மேலும் பரிபாகம் அடையும். அப்பொழுது கிரியைத் தொண்டில் ஈடுபாடு ஏற்படும். அகப் பூசை, புறப் பூசையோடு யோக முறையும் உணர்த்தப் பெறும். இதனால் தீவிர சத்தி நிபாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. கிரியா பாதத்தில் நிற்போர் 'புத்திரர்' என்றும், யோகத்தில் நிற்போர் 'யோகியர்' என்றும் பெயர் பெற்றனர்.

### நிருவாண தீக்கை

நிருவாண தீக்கை ஞானத்திற்கே உரியது. சமய, விசேட தீக்கைகளால் சரியை, கிரியை, யோகம் போன்றவை கைவரப் பெறும். இதனால் சத்தி நிபாதம் அதிதீவிரமாகும். அப்பொழுது இறையருளால் குரு, சீடனின் ஆறு அத்துவாக்களின் மலங்களைப் போக்குவார். அப்பொழுது திரோதான சத்தி, அருட் சத்தியாக மாறி, ஞானத்தை வழங்கும். இதில், பொருள்களின் இயல்பைப் பற்றி உள்ளவாறு அறிய பேரவா உண்டாகும். நான் யார்? உள்ளம், ஞானம், வந்தவர் போகும் வழி, இன்ப துன்பக் காரணம், துன்ப நீக்க வழி போன்றவற்றை அறிய முனைப்பு ஏற்படும்.

சமய, விசேட தீக்கைகளில் புற, அக உடம்புகள் மந்திரங்களால் தூய்மையடையும். நிருவாண தீக்கையில் அத்துவாக்கள் ஆறும் முறைப்படி ஒன்றில் ஒன்றை அடக்கி, அனைத்தையும் அடக்கி நிற்கும் நிலையில் அத்துவாக்களைப் பற்றியிருக்கும் கன்மங்கள் அழிக்கப்படும். முத்தி பஞ்சாக்கரம் உபதேசிக்கப்படும். மலபரிபாகத்தால் ஆணவம் மெலியும். பொருளியல்பின் உண்மை விளங்கும். தீவிர தர சத்தி நிபாதம் உடையோர்க்கே விசேட தீக்கை, உரியது. மற்றையோர்க்கு, உடம்பு நீங்கும் பொழுது, முத்தி கொடுக்கும் வகையில் செய்வர். இதனால் இது "அசத்தியோ நிர்வாணதை" என்று பெயர் பேறும். மலபரி பாகத்தால் பெறுவது "சத்தியோ நிர்வாணதை" எனப்படும்.

தீக்கை. தகுதிக்குத் தக்கப்படி செய்யப்படும். இதனால் அங்கி தீக்கை, அங்க தீக்கை என்று தீக்கை இருவகைப்படும். தீக்கை பெற்றோர், சமய நெறியில் ஒழுக்கத்தை மேற்கொள்ளுவது இன்றியமையாதது. அவ்வொழுக்கம், நித்தியம், நைமித்திகம். காமிகம் என்று மூன்று வகைப்படும்.

நித்தியம் — நாள்தோறும் மூன்று வேளை நீராடி, மந்திரம் ஓதல், ஆலய அடியார் வழிபாடு, அகப்பூசை,

புறப் பூசை செய்தல், உபதேசமொழி கேட்டல், சிந்தித்துத் தெளிதல் போன்றவை.

நைமித்திகம் - வாரம், திதி, நட்சத்திரம் என்பனவற்றுள் ஒன்று அல்லது பலவற்றால், சிறப்பாகப் பூசை செய்து விழா எடுத்தல்.

காமிகம் - பெற்ற பயனுக்கு ஏற்றவாறு சிறப்பு வழிபாடு செய்தல்.

யோகத்தில் நால்வகைத் தீட்சைகளையும், பயன்களையும் கூறும் திருமூலர்,

**சமையம் மலசுத்தித் தன் செயல் அற்றிடும்**
**அமையும் விசேடமும் அரன் மந்திர சுத்தி**
**சமைய நிருவாணங் கலா சுத்தியாகும்**
**அமைமன்னு ஞானமார்க்கம் அபிடேகம்** [66]

என்ற மந்திரத்தில், சமைய தீட்சையால் ஆன்மாவில் பதிந்து இருக்கும் மலக் குற்றங்களை அகற்றி ஆணவ மலத்தின் வலிமையைக் குறைக்க முடியும். விசேட தீட்சையால், மந்திரங்களின் ஆற்றலால் மல வலிவைக் குறைக்க முடியும். நிர்வாண தீட்சையால் கலைகளின் மலக் குற்றங்களை நீக்கி மேலேற்ற தகுதி கிடைக்கும். அபிடேக தீக்கையால் திருவருட்சக்தி பதியும் என்று கூறுகிறார். மேலும்,

**யோகச் சமயமே யோகம் பலவுன்னல்**
**யோக விசேடமே அட்டாங்க யோகமாம்**
**யோக நிர் வாணமே யுற்ற பரோதயம்**
**யோக அபிடேகமே ஒண் சித்தி யுற்றலே** [67]

என்று கூறி, யோக நெறியில், பல யோக நெறிகளைப் பற்றி எண்ணுதல் சமய தீட்சை என்றும், அட்டாங்க யோகத்தில் நிற்றல், யோகத்தில் விசேட தீட்சை என்றும், பரை தரிசனம் பெறுதல், யோகத்தில் நிருவாண தீட்சை என்றும், ஒளிமிக்க சித்திகளை அடைதல், யோகத்தில் அபிடேக தீட்சை என்றும் குறிப்பிடுகிறார் திருமூலர். திருவடி தீக்கை என்பது இருவகைப்படும்.

**திருவடி தீக்கை**

- தூலத் திருவடி பதித்தல்
- சூக்குமத் திருவடி பதித்தல்

திருவடிகளைச் சிரத்தில், இதயத்தில், புருவ மத்தியில், கண்களில் பதித்தல். திருமூலர், இதயம், கண், சிரம் என்று மூன்று இடங்களிலும் சிவகுருவாய் எழுந்தருளி வந்து இறைவன் திருவடி பதித்ததைக் கூறுகிறார்.

இதனை,

இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்
பதிவித்த பாதப் பராபரன் நந்தி
கதிவைத்த வாறும் மெய்காட்டிய வாறும்
விதி வைத்த வாறும் விளம்ப வொண்ணாதெ [68]

என்ற மந்திரம் குறிப்பிடுகிறது. மேலும் திருவடித் தீக்கை. திருநோக்கத் தீக்கையை.

**திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்**
**பெருவடி வைத்தந்த பேர் நந்தி தன்னைக்**
**குருவடி விற்கண்ட கோனை யெங் கோவைக்**
**கருவழி வாற்றிடக் கண்டு கொண்டேனே [69]**

என்ற மந்திரத்தில் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| குரு தன் கைகளால் சீடனைத் தொட்டு அருள்வது | - | ஸ்பரிசதீக்கை |
| குரு தன் அருட் பார்வையால் சீடனை நோக்கல் | - | நயன தீக்கை |
| குரு, தன் மனத்தால் சீடன் மனத்தைத் தூய்மையாக்கல் | - | மானச தீக்கை |
| குரு நல்ல உபதேசங்களை அருளித் தூய்மையாக்கல் | - | வாசக தீக்கை |
| குரு, சீடனுக்கு மந்திரங்களை உபதேசித்தல் | - | மந்திர தீக்கை |
| குரு, சீடனுக்கு மந்திரங்களோடு யோக முறைகளைக் கூறி இறைவனோடு ஒன்ற வைத்தல் | - | யோக தீக்கை |
| யாகத்தில் சீடனின் மலங்களை அழித்து அவனைத் தூய்மையாக்கல் | - | ஔத்திரி தீக்கை |

என்பன தீக்கை செய்யும் முறைகள் என்பர்.

சமய தீக்கையால். மூலமலமாம் ஆணவ மலம் சுத்தி ஆகும். செய்வினைகள், விசேட தீக்கையால் நீங்கும். அபிடேக தீக்கையால் சாந்தம் ஏற்படும் என்று திருமூலர் கூறுகிறார்.

மலபரிபாகம் உற்ற உயிர்களுக்குத் திருவருள் புரியும் சற்குருவாக வந்து இறைவன் திருவடி தீக்கை செய்து சிவம் ஆகிய தன்னுடைய வியாபகத்தை உணர்த்துவார். திருவடி தீக்கையால் உயிர்களின் அறியாமை நீங்கும் என்றும் கூறுகிறார். சமாதி நிலை கூடியவர்க்குக் கிரியை வேண்டாம்.

திருவடியின்பமாகிய அருளைப் பெற்ற பொழுது ஞானம் விளங்கும். இறையருள் பெற உண்மை அன்பே வேண்டும். பயனற்ற பழியுடைய அவவேடம் பூண்டு அகத்தில் அருளற்ற. பழிக்கத்தக்க உணர்வு இருந்தால் அது நீக்கத்தக்கது. உண்மையான அருளுடன், இந்திரிய வழி மயங்காது மனத்தை இறைவனின் திருவடியில் ஒடுக்குவதாகிய உண்மையான தவமுடையோரே சிவ வேடமாகிய தவவேடம் பூண்பதற்குத் தகுதியுடையோர் என்கிறார் திருமூலர். இவர்களே, ஞானம் ஒன்றைப் பெறுவதற்கான அருள் சாதனமாகத் திருநீறு போன்ற சிவச் சின்னங்களை அணிவதற்கு உரியவர்.

திருமூலர், ஐந்து இந்திரியங்களை அடக்கும் முறை என்ற தலைப்பில் ஐந்து இந்திரியங்களையும் அடக்கினால் உடம்பு அறிவற்ற சடமாகும். எனவே ஐந்தை அடக்காது, இயங்கச் செய்து சடத்தை வென்று அறிவினால் இறைவனை அடைய வேண்டும் என்கிறார். அறிவு, நாதாந்தத்தில் விந்து நாதங்களில் பொருந்தினால் இந்திரிய யானைகள் வசப்படும் என்கிறார் திருமூலர்.

**அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்**
**அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை**
**அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு**
**அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே** [70]

என்பது திருமந்திரம்.

உலக இன்பத்தில் திளைப்பவர், காமத்தை வெல்லாதவர், மந்திர சித்தி அடையாதவர், நன்மை தீமை அறியாதவர், அறிந்தும் அதன்படி நடக்காதவர் போன்றவர்கள், சன்மார்க்கம் அறியாத அசற்குரு என்கிறார் திருமூலர். அசற் குருவால் சீடரும் கெட்டு அழிவர் என்பதை,

**குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்**
**முரணும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்**
**குருடரும் வீழ்வர்கள் முன்பின் அறவே**
**குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே** [71]

என்று குறிப்பிடுகிறார்.

சற்குரு, சீடனின் வினைகளை நீக்கிப் பிறவி அறுக்க உதவுவார். மேலும் திருவடி தீட்சை செய்து சிவ கதி அடையச் செய்வார்.

### ஆறு ஆதாரம்

முத்திக்குரிய சாதனமாக, ஆறாதாரங்களிலும் தியானித்து மேற் சென்று ஒளியாம் பரம் பொருளின் அருளைப் பெறுவது உள்ளது. ஏழாந்தந்திரத்தில் முதலில் ஆறு ஆதாரங்கள் பற்றித் திருமூலர் கூறுகின்றார். அவை,

| | |
|---|---|
| மூலாதாரம் | - குண்டலினி சக்தி உள்ள இடம். நான்கு எழுத்துக்களை உடைய நான்கிதழ் தாமரை உள்ள இடம். நாற் கோண முக்கோணம் இதன் வடிவம். இதன் அதிபதி விநாயகர். குதத்திற்கு இரண்டு அங்குலத்திற்கு மேல் உள்ள இடம். |
| சுவாதிட்டானம் | - இதன் இடம் குறித்தானம். ஆறிதழ் சூழ்ந்த அறுகோண வடிவம். பிரம்மன் அதிபதி. |
| மணிபூரகம் | - பத்து இதழ் பத்து எழுத்துக்கள் உள்ளன. மகாரம் உள்ளது. இடம் நாபி. விஷ்ணு அதிபதி. சூரியனை ஆதாரமாகக் கொண்ட மூன்று விட்டங்களை உடையது. |
| அனாகதம் | - 12 எழுத்துக்களை உடைய 12 இதழ்கள் உடையது. இடம் இருதய கமலம். வடிவம் முக்கோணம். இதன் தெய்வம் உருத்திரன். |
| விசுத்தி | - 16 இதழ்களை உடைய 16 எழுத்துக்கள் உடையது. இடம் கழுத்து. மகேசுவரர் அதிபதி. |
| ஆக்ஞை | - இரண்டிதழ் தாமரை, இரண்டு எழுத்து உடையது. இடம் புருவநடு, சதாசிவன் அதிபர். |

இந்த ஆறு ஆதாரங்களையும் ஆதனமாகக் கொண்டு. 1000 இதழ்களை உடைய தாமரையில் பரமசிவன் எழுந்தருளி இருப்பர். பிரணவத்தில் அகரம் உந்தியிலும், உகரம் அநாகத்திலும், மகரம் தொண்டையிலும், விந்து ஆக்ஞையிலும் விளங்கும். சிரசில் நாதம்

அமையும். விசுத்தியாகிய கண்டத்தில் மகரம் நிலை பெறும். விசுத்திக்கு மேல் சென்று விந்து மண்டலம் அமைவதால் அகர கலைக்குரிய சூரியனே மேலே சென்று கலைகளையுடைய சந்திரனாவான். ஆக்ஞையில் சோதியாய் வெளிப்படும். சுவாதிட்டானதுக்குக் கீழ், மூலாதாரத்திற்கு மேல் சூரியன் வருவதை யோகியர் மட்டுமே உணர முடியும். நீருக்குரிய மணிப் பூரகத்துக்கும் தீயினுக்குரிய அநாகதத்துக்கும் இடையில் உதிக்கும் சூரியனின் ஒளிச் சக்தி ஆக்ஞையில் ஊடுருவிச் சென்று உடலுக்கு வெளியே சோதியாகும்.

அண்டத்தில் மேரு மலையைச் சுற்றிச் சூரியன் வருவது போல், உடம்பாகிய பிண்டம், மேருவாகிய சிரசை, உடலில் உள்ள சூரியன் வீணாத் தண்டின் வழி மேலேறி வலக்கண் பக்கம் வலம் வரல் போல் வெளிப்படும். இவ்வாறு தோன்றும் சூரியனை இடக்கண்ணால் ஈசான திக்கில் நிலை பெறச் செய்வதே சொருகிக் கிடத்தல். வலப்புறம் உதித்த சூரியனும் இடப்புறம் உதித்த சந்திரனும் சுற்றி சகஸ்ர தளத்தில் பொருந்தி சிவ ஒளி விளங்கும். ஆக, சூரிய சந்திரரைச் சேர்க்கும் வழி அறிந்தால் சிவமாகலாம். இருகலைகளும் ஊர்த்துவ சகஸ்ரதளத்தில் பொருந்துவதால் சிந்தை தெளிந்து சிவமாகலாம்.

மூலாதாரத்திலிருந்து ஏறி வந்த அக்கினியும் சந்திரனும் சேர்ந்து வலக்கண்புறம் சூரியன் உதித்தல். இச் சேர்க்கையால் இவ்வாறு உதித்த சூரியனும் அக்கினியும் சேர சந்திரன் உதிக்கும். இவை இரண்டும் சேர்ந்து சகஸ்ரதளத்தில் சூரியன், சந்திரன், சீவன் ஆகியவை மூலக் கனலாம் குண்டலினியுடன் ஒன்றானால் மதி மண்டலத்தின் ஆன்ம ஒளி உண்டாகும் என்பதைத் திருமூலர்,

**நாபிக் கண்ணாகி நயன நடுவினுந்**
**தூபியோடைந்துஞ் சுடர்விடு சோதியைத்**
**தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்**
**மூவருமாக வுணர்ந்திருந்தார்களே** [72]

என்று கூறுகிறார்.

மலமாகிய களிப்பினை அறுத்தருள சிவகுருவாய் தோன்றி ஆருயிர்களுக்குத் தண்ணளி செய்யைம் அறிவுப் பேரொளி இறைவன். குருவாக வந்து திருவைந்தெழுத்தை ஓதியருள்வான். இருள்சேர் இருவினைகளை எரி சேர்ந்த வித்துப்போல் அழிப்பான். திருவைந்தெழுத்தின் உருவேற்றத்தால், சுத்தத்துரியம் பிறந்து பாசப்பிணித் தொடக்குஅற்றுச் செத்திட்டிருக்கும் நிலையாகிய உலக வாசனையற்ற சிவயோக நிலைகிட்டும். இத்தகு சிவசித்தர், இம்மையில் சிவவுலகினைக்கண்டு, 36 தத்துவங்களையும் கடந்து

செருக்கறுத்தவாகி, அருள் முனைப்பு உற்றவர். யான் எனும் இருள் முனைப்பும், எனது எனும் மருள் முனைப்பும் அற்று இருப்பர். நெஞ்சத்துத் திருக்கூத்து ஆடும் இறைவன் திருவடியில் தேனுண்ட வண்டாய் இன்பம் நுகர்வர். இத்தகு நிலையில், திருத்தாளிணையாகிய திருவருளை உணர்வில் ஓவாது நாடி நிற்றலே உயிர்களின் பிறவிப்பயன் என்பதைக் கூறுகிறது திருமந்திரத்தின் முன்னுரையாக அமைந்துள்ள 'உபதேசம்' என்ற பகுதி.

சித்தத்தைச் சுத்தம் செய்யும் திருவைந்தெழுத்து, உள்முகமாக ஞானப் பொருளைச் சிந்தித்தால்பெறும் நிட்டை கூடல் பற்றியசூன்ய சம்பாஷணை, குறியீடாக, ஞானப் பொருள்களின் தத்துவங்களைக் கூறும் புராணங்களின் உட்பொருள் விளக்கங்கள், சக்கரபூசையால் அகத்தில் இறைவனைஉணரும் சக்கர அமைப்புகள், விந்து நாதத்தைச் சிரசில் உணர்ந்து இன்புறும் சிவநீர் பருகலாகிய அமுரி தாரணை, ஒளியாகப் புருவ மத்தியில் மெய்ப்பொருளை உணர்தலாகிய எட்டும் இரண்டும் ஒன்றல், இறைவனோடு பொருந்தியோா அடையும் எல்லையற்ற இன்பம், அணைந்தோர் தன்மை, முத்தி இன்பம், பொருளின் இயல்புகளை உள்ளவாறு உணரும் உணர்வு நிலையாகிய ஞானச் செய்திகளாகிய தசகாரியம் போன்றவை பற்றித் திருமூலர் பதிவு செய்துள்ள அகம் சார்ந்த சமயப் பண்பாட்டுவிளக்கங்களும்,

முத்திக்குரிய புற முயற்சிகளின் செயல்பாடுகள், முப்பொருள்களின் தன்மை, விளக்கங்கள், முத்தி அடைவதற்கான புறவழிபாட்டு முறைகள், ஆறு ஆதாரங்கள்பற்றிய விளக்கங்கள், தீக்கை முறைகள் போன்றவை பற்றித் திருமூலர் பதிவு செய்துள்ள புறம் சார்ந்த சமயப் பண்பாட்டு விளக்கங்களும், திருமந்திரத்தின் முன்னுரையாக அமைந்துள்ள உபதேசம் என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ள கருத்துகளை விரித்துரைக்கும் முறையில் அமைந்துள்ளன.

## குறிப்புகள்

1. திருமந்திரம், திருமூலர், ஞானலிங்கம்-1, பாடல் 1734 முதல் 1745 முடிய.
2. மேலது, படைப்பு (சர்வசிருஷ்டி), பாடல் 378.
3. மேலது, காப்பு (திதி), பாடல் 403.
4. மேலது, பாடல் 405.
5. மேலது, அழிப்பு, பாடல் 414.

6. மேலது, அருளல், பாடல் 426.
7. திருவருட்பயன், உமாபதிசிவம், பாடல் 50.
8. மேலது, கடவுள் வாழ்த்து - 1.
9. மேலது, அதோமுக தரிசனம், பாடல் 508.
10. மேலது, பாடல் 507.
11. மேலது, அண்டலிங்கம், பாடல் 1689.
12. மேலது, பாடல் 1688.
13. மேலது, பாடல் 1721 (சிவபதிப்புகளில் இப்பாடல் இல்லை)
14. மேலது, அண்டலிங்கம், பாடல் 1692.
15. மேலது, பிண்டலிங்கம், பாடல் 1699.
16. மேலது, பாடல் 1696.
17. மேலது, சதாசிவலிங்கம், பாடல் 1722.
18. மேலது, ஆத்மலிங்கம், பாடல் 1728.
19. மேலது, சிவலிங்கம், பாடல் 1745.
20. மேலது, சிவாதித்தன், பாடல் 1965.
21. மேலது, சிவகுரு தரிசனம், பாடல் 1559.
22. மேலது, ஞானகுரு தரிசனம், பாடல் 2609.
23. மேலது, மனவாதித்தன், பாடல் 1952.
24. மேலது, திருக்கூத்துத் தரிசனம், பாடல் 2675.
25. மேலது, பாடல் 2674.
26. மேலது, சிவானந்தக் கூத்து, பாடல் 2683.
27. மேலது, சுந்தரக்கூத்து, பாடல் 2687.
28. மேலது, பொற்றில்லைக்கூத்து, பாடல் 2712.
29. மேலது, அற்புதக் கூத்து, பாடல் 2732.
30. மேலது, பாடல் 2752.
31. மேலது, பாடல் 2753.
32. சிவஞானபோதம்-சூத்திரம்-7.
33. திருமந்திரம், மூவகைச் சீவவர்க்கம், பாடல் 476.
34. மேலது, பாடல் 477.
35. மேலது, பாடல் 479.
36. மேலது, பக்குவன், பாடல் 1668.
37. மேலது, அபக்குவன், பாடல் 1652.
38. மேலது, பாடல் 1658.
39. மேலது, அவத்தை பேதம், பாடல் 2119.
40. மேலது, பாடல் 2257.

41. உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன்-27.
42. மேலது, பாடல் 23.
43. மேலது, கருஉற்பத்தி, பாடல் 448.
44. மேலது, படைப்பு, பாடல் 396.
45. மேலது, பாடல் 385.
46. மேலது, அவத்தை பேதம், பாடல் 2151.
47. மேலது, மும்முத்தி, பாடல் 2437.
48. மேலது, நவாவத்தை, பாடல் 2499.
49. மேலது, சரியை, பாடல் 1418.
50. மேலது, சாலோகம், பாடல் 1481.
51. மேலது, கிரியை, பாடல் 1425.
52. மேலது, யோகம், பாடல் 1430.
53. மேலது, அட்டாங்கயோகம், பாடல் 534.
54. மேலது, இயமம், பாடல் 536.
55. மேலது, நியமம், படல் 539.
56. மேலது, நியமம், பாடல் 538.
57. மேலது, தியானம், பாடல் 584.
58. மேலது, சமாதி, பாடல் 611.
59. மேலது, காயசித்தி உபாயம், பாடல் 704.
60. மேலது, பாடல் 705.
61. தாயுமானவர், பராபரக்கண்ணி-157.
62. திருமந்திரம், ஞானம், பாடல் 1440.
63. மேலது, பாடல் 1447.
64. மேலது, கிரியை, பாடல் 1428.
65. மேலது, தவம், பாடல் 1604.
66. மேலது, சரியை, பாடல் 1423.
67. மேலது, யோகம், பாடல் 1439.
68. மேலது, திருவடிப்பேறு, பாடல் 1570.
69. மேலது, பாடல் 1571.
70. மேலது, ஐந்திந்திரியம் அடக்கும் முறைமை, பாடல் 1995.
71. மேலது, அசற்குருநெறி, பாடல் 2010.
72. மேலது, ஞானாதித்தன், பாடல் 1963.

# 6. திருமந்திரம் வெளிப்படுத்தும் பண்பாடுகளின் இன்றைய தேவை

சமய ஒழுகலாறுகளைப் புரிந்து, அதனைக் கைக்கொள்ளும் பக்குவம் பெற, மனம், மொழி, செயல்கள் பண்பட்டுத் தூய்மையும், ஒழுங்கும் பெறவேண்டும். அப்பொழுதுதான், தன்னை உணர்வதோடு இறைவனையும் உணர முடியும். எனவே, திருமூலர், தனிமனித பண்பாட்டு ஒழுகலாறுகளாகிய ஒழுக்கத்தையும் அதன் அடிப்படையில் பிறக்கும் அன்பும், அறனும் அருளும் பொருந்திய வாழ்வியல் நெறிகளையும் வலியுறுத்திய பின்பே இறையியல் செய்திகளைக் கூறுகிறார். தூய்மை செய்தவாகிய தீக்கை பெறுமுன் எவ்வாறு அகத் தூய்மையாம் ஆன்ம சுத்தி தேவைப்படுகிறதோ அதைப்போல் சமய நெறிகளை அறிந்து தெளிந்து பின்பற்ற பண்பாட்டுடன் கூடிய ஒழுக்க நெறிகள் இன்றியமையாத் தேவையாகின்றன. இந்நிலையில், திருமூலர், வாழ்வியலுக்கான அறங்கள், இறையியலுக்கான அறங்கள், சமுதாயத்துக்குத் தேவையான அறங்களைத் திருமந்திரத்தில் வெளிப்படுத்துகின்றார்.

## 1. தனிமனிதனுக்கானதேவை

இன்று அறிவியல் வளர்ச்சியில் அசுரவேகம் பெற்றுள்ள மனிதன், மனிதப் பண்பை மறந்து விட்டான். பெரியோர் முதல் குழந்தைகள் வரை அனைவரும் மேற்போக்காகப் பழகும் இயந்திர வாழ்க்கை பெருகிவிட்டது. ஊடகங்கள் பெருகி விட்டன. மனிதமனமும் பண்பாடும் நலிந்து அழிந்து வருகின்றன. பண்பாட்டை வளர்க்கும் நூல்களையும் சான்றோர்களையும் நாடும் பழக்கம் குறைந்து விட்டது. குறிப்பாக இளைஞர்களிடம் மிகவும் குறைந்து வருகிறது. நாகரிக வேகத்துக்கு எதிரியாக அறிவுரைகளை எண்ணி வெறுக்கின்றனர்.மனம் விரும்பியவாறு வாழ முடியாத கட்டுப்பாட்டை எதிர்க்கின்றனர். தீமைபெருகும் காலமாக உள்ளது. இன்று மனிதனிடம் சுயநலம் மிகுந்துவிட்டது. எளிமை வாழ்க்கையை வெறுத்து ஆடம்பரத்தை விரும்புகிறான். போட்டிப்போட்டுக் கொண்டு ஆடம்பர வாழ்வு வாழ்கிறான். நாளைய வருமானத்தை இன்றே செலவு செய்கின்றான். எந்த வழியிலாவதுபொருள்களைப் பெற்றுவிடவேண்டும் என்ற அவாவினால் அடுத்தவர்களைக் கெடுத்தல், சிறுபொருளுக்காகக் கொலையே செய்தல், பொய், போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது,

களவு, காமம், கள், போதை ஆகியவற்றில் சிக்குண்டு குறிக்கோளற்ற வாழ்க்கை வாழ்தல் போன்ற அவல நிலைக்குப் பலர் தள்ளப்படுகின்றனர். இதனால் விளையும் அவலச் செய்திகள் நாளும் வந்து கொண்டே இருக்கின்றன. பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளுடன் இயைந்து பழகி மனங்களைப் பண்படுத்த இயலாச் சூழல் இன்று உள்ளது. எனவே மனம் பண்பட, பண்பட்ட நூல்களை மனிதன் நாட வேண்டும். இயந்திரமாக மாறிய மனத்திற்கு மருந்தாகத் திருமூலர் கூறும் பண்பாட்டு ஒழுங்குகள் அமைந்துள்ளன.

இன்பத்தில் அளவுமுறை, தீங்கில்லா இன்பம், புலன்களைத் தன் வசமாக ஆளும் புலனடக்கம், ஆசைகளையும் அல்லல்களையும் பெருக்கா வாழ்வு, மனவலிமை, எளிமை, சிந்தையின் நிறைவு, பெற்ற உடம்பைப் பேணிக் காத்தல், மனம் போன போக்கில் வாழாமை, அறநெறியில் பற்று, அமைதிக்கு உரிய அன்பும், நீதியும் பெறல், வாழ்வின் அடிப்படைத் தேவையாகிய மனிதப் பண்பைப்பெறல், ஒன்றே கடவுள் எனல், உயிரே நான் என்று உணர்தல், யான், எனது எனும் செருக்கறுத்தல், அறிவால் ஆட்சி செலுத்தல், உயிர்கள் கடவுளின் கோயில்கள் என்று மதித்தல், நிலையாமையை உணர்ந்து மெய்யுணர்வு பெறல், உண்மையும் அன்பும் என்றும் எங்கும் நிலைக்கும் என்று நம்பல், சான்றோர்களின் வழி நடத்தல், சுற்றத்தார்க்கு இயன்ற அளவு உதவல், பிறருக்குத் தொண்டு செய்தல், தன்னலத்தைக் குறைத்தல், சத்துவ குணத்தை உயர்த்தல், உணவைக் கட்டுப்படுத்தல் போன்ற திருமூலரின் பண்பாட்டு நெறிமுறைகள் வாழ்வியலுக்கு இன்று பெரிதும் தேவையாக அமைகின்றன.

## 2. இறையியலுக்கான தேவை

இறையியல் சிந்தனையில் ஈடுபாடு கொண்டு கடவுள் நெறியைப் பின்பற்றி வாழ விரும்புகின்றவர்கள், ஓரளவு வாழ்வியலில் செம்மையான பண்பட்ட நெறியில் ஒழுகுபவராகவே இருப்பர். வாழ்வின் ஒழுங்கே, உடல் உள்ளத்தூய்மைக்கு வழிகோலும். இத்தூய வாழ்வு இறையியலின்பால் ஈர்ப்பை ஏற்படுத்தும். திருமந்திரம் இறையியலுக்கான வழிபாட்டு நெறிமுறைகளையும், முக்திக்குரிய கருவிகளையும், முப்பொருள் இயல்பையும், மெய்ப்பொருளை உணரத் தன்னையே உணர்தலையும், யோகநிலைகளையும், மந்திரங்களையும் வகைப்படுத்தித் தெளிவாகக் கூறுகின்றது. இறையியல் நெறியைப் பின்பற்றுவோர்க்குச் சமயக் கொள்கைகளின் விளக்கமாகத் திருமந்திரம் உள்ளது.

இறைவன் எல்லா உயிர்களினுள்ளும் கலந்து இருக்கின்றான். ஆனால் உயிர்கள், அவன் தன்னுள் உடனாய் இருப்பதை அறியாது இருக்கின்றன.

**உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை**
**உள்ளம் விட்டோடி நீங்கா ஒருவனை**
**உள்ளமும் தானும் உடனே இருக்கினும்**
**உள்ளம் அவனை உருவறியாதே** [1]

உள்ளத்துள்ளேயே இருந்தும் இறைவனை, உயிர் அறியாமைக்கு மறைப்புச் சக்தியே காரணம். இந்த மறைப்பு நீங்க அவனைத் துதித்துச் சிந்தை செய்தால் அவன் அருள் கிட்டும் என்று கற்றுக் கொடுக்கிறார் திருமூலர்.

**ஒளித்து வைத்து என்னுள் உற உணர்ந் தீசனை**
**வெளிப்பட்டு நின்றருள் செய்திடும் ஈண்டே**
**களிப்பொரும் காதன்மை என்னும் பெருமை**
**வெளிப்பட்டிறைஞ்சினும் வேட்சியும் ஆமே** [2]

வணங்கினால், உள்ளத்தில் மறைந்திருந்தவன் வெளிப்பட்டு, வேட்கையை நிறைவேற்றுவான்.

இந்தக்காலத்தில், அவசர அவசரமாக ஓடி உழைக்கும் நிலையில் யோகநிலையில் இருந்து ஞானம் பெறல், தலங்கள் தோறும் சென்று சரியை, கிரியை தொண்டுகளைச் செய்தல் என்பது எல்லோருக்கும் இயலாது. எனவே, எல்லோரும் ஆறாதாரங்களின் வழி மூலாக்கினியை ஏற்றிச் சகஸ்ர ஒளியைக் காணுங்கள்என்று திருமூலர் கூறவில்லை. இயலாதவர்களுக்கும் ஏற்றவகையில் சில நெறிகளைக் கூறி உய்வுபெறவழி கூறுகிறார்.

தீயனவற்றைச் செய்யாதொழுகுதலாகிய 'இயமம்' என்ற நெறியில் நிற்பவர்களுக்கும் திருமாலைக் காளையாகக் கொண்ட சிவன் அருளுவான் என்பதை,

**போதுகந்தேறும்புரி சடையான் அடி**
**யாதுகந்தார் அமராபதிக்கே செல்வர்**
**ஏதுகந்தான் இவன் என்றருள் செய்திடும்**
**மாதுகந்தாடிடும் மால் விடையோனே** [3]

என்று குறிப்பிடுகிறார். இதே போல் நல்லனவற்றையே செய்தலை அறமாகக்கொண்ட நியமத்தாரும் முனிவர்கள் எதிர் கொண்டழைத்துச் சிறப்புச் செய்ய சிவபதம் சேர்வர் என்றும் திருமூலர் கூறுகிறார்.

**பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன் புகழ்**
**கற்றிருந் தாங்கே கருதும் அவர்கட்கு**

**முற்றெழுந்தாங்கே முனிவர் எதிர் வரத்**
**தெற்றும் சிவபதம் சேர்தலும் ஆமே** [4]

மேலும், அன்புடன் விளக்கேற்றித் தீபம் காட்டி வழிபட்டால் முத்தி கிட்டும் என்பதை,

**அன்புடனே நின்று அமுதமும் ஏற்றியே**
**பொன்செய் விளக்கும் புகைதீபம் திசைதொறும்**
**துன்பம் அகற்றித் தொழுவோர் நினையுங்கால்**
**இன்புடனேவந்தெய்திடும் முத்தியே** [5]

என்று திருமூலர் குறிப்பிடுகிறார். உடம்பை வருத்தி யோகம், யாகம் செய்யாமலேயே, உண்மை அன்பால் சிந்தையை இறைவன்பால் செலுத்தினால் அந்த உண்மையான உள்ளம் ஒன்றிய வழிபாட்டால் இறையருள் கிட்டும் என்கிறார்.

மேலும், திருமூலர்,

**உயிர்க் குயிராய் நிற்றல் ஒண்ஞானப் பூசை**
**உயிர்க் கெளி நோக்கல் மகாயோகப் பூசை**
**உயிர்ப் பெறும் ஆவாகனம் புறப்பூசை**
**செயின் கடை நேசம் சிவபூசை ஆமே** [6]

என்று, இறைவன்உள்ளுக்குள் உயிருக்குள்உயிராய் இருக்கின்றான் என்பதை அறிந்து, உள்ளே நோக்கி உணர்ந்து, அன்புடன்வழிபடுவதே சரியை, கிரியை, யோகம் ஞானம் என்ற நெறியின் வழிபட்டதாகும். உள்ளத்தால் ஒன்றி, உள்ளத்தில் உணர்ந்து அகத்தால் ஒருமுகப்படுத்திச் சிந்தையைச் செலுத்துவதே சிறந்த வழிபாடாகும் என்கிறார். ஆனால், இவ்வாறு செய்வதில் சிந்தையில் தெளிவுவேண்டும். தெளிவில்லை என்றால் பயனற்றசெயலாகிவிடும். என்பதை,

**தெளிவறியாதார் சிவனை யறியார்**
**தெளிவறியாதாா சிவனு மாகார்**
**தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்**
**தெளிவறி யாதாவர் தீரார் பிறப்பே** [7]

என்று குறிப்பிடுகிறார்.

மேலும் எளிதான தீபம் ஏற்றி, அன்புடன் திருக்கோயில் தொண்டு செய்து வணங்குதலாகிய தாசமார்க்கத்தில் நின்றாலும் இறைவனை அடையலாம்.

**எளிஅனல் தீபம் இடல் மலர் கொய்தல்**
**அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்**

**பளிமணி பற்றல் பல்மஞ்சனம் ஆதி**
**தளிதொழில் செய்வது தான் தாசமார்க்கம்** [8]

மலரும் நீரும் கொண்டு இறைவனை வழிபட்டால் அருள்புரிவான். இந்த எளிய முறையை மேற்கொள்ள வேண்டும் என்பதை,

**புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண்டருள் புரியா நிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம் இறை ஈசனை**
**நண்ணறி யாமல் நழுவுகின்றாரே** [9]

என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

மனமே கோயில். உடம்பே மூலட்டானம். வாய், கோபுரவாசல். ஆன்மாவே சிவலிங்கம். புலன்கள் விளக்குகள் என்பதை உணர வேண்டும்.

**உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பாலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காள மணிவிளக்கே** [10]

உள்ளத்திலே பூசை செய்யுமளவு உள்ளத்தூய்மை இருந்தால், வழிபாடு எளிமையாகும்.

மேலும் அடியார்க்கு உதவுவதே ஆண்டவனுக்கு உதவுவது என்பதை,

**படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக்கோயில் நம்பர்க்கொன்றீயில்**
**படமாடக் கோயில் பகவற்கதாமே** [11]

என்று திருமூலர் கூறுகிறார். மேலும், ஞானியர்க்கு உணவு அளிப்பது சிறந்த அறம் என்பதை,

**அகரம் ஆயிரம்ஆரியர்க் கீயில் என்**
**சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்**
**பகரும் ஞானி பகல் ஊண் பலத்துக்கு**
**நிகரிலை என்பது நிச்சயம் தானே** [12]

என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு, எளிய வழிபாட்டு முறைகளையும் திருமூலர் குறிப்பிடுகின்றார். அதாவது, நம்கையில் எதுவும் இல்லை. முதலும் முடிவும் இறைவன் கையில் உள்ளது என்பதை உணர்ந்து தெளிந்து அவன்பால் சிந்தையைச் செலுத்தி அருள் பெறுங்கள் என்ற நிலையில் சரியை, கிரியை போன்ற நெறிகளையும், உள்ளமே

கோயில். உள்ளத்துள் இருப்பவனை உணர்ந்து தெளியவேண்டும் என்பதையும் கூறுகிறார்.

அரியதவ, யோகங்களால் இன்றைய சமுதாயத்தினர் அனைவரும் வழிபாடு செய்ய இயலாது. மேலும் அனைவரும் பக்குவம் வாய்க்கப் பெற்றோர் அல்லர். எனவே, திருமூலர் நெறிகளில், அவரவர்க்கு ஏற்ற நெறியில் நின்று இறையருள் பெறும் நிலையும் உள்ளது.

### 3. சமுதாயத்துக்கான தேவை

தம்மைத் தாமே திருத்திக் கொள்ளத் தயங்கும் மக்கள். நாட்டிற்கு நாடு சண்டை. அமைதியின்மையைத் தூண்டல். ஆயுத வாணிகம், போதைப்பொருள் கடத்தல். மதத்தின் பெயரால் வன்முறையைத் தூண்டல். வளரும் நாடுகளை ஏமாற்றியும், ஒடுக்கியும் வைத்து ஆளநினைக்கும் அதிகாரப்போக்கு. தவறுகளை நியாயப்படுத்தல். தன்முனைப்பால் அழிவைத்தேடல். ஆன்மீகத் தேடலுக்கு வழிகாட்டும் உண்மைச் சமயவாதிகள் இல்லாமை. போலித்துறவு. சமயவாதிகளும் சந்தர்ப்பவாதிகளாக மாறிவரல். தொலை நோக்குப் பார்வை இன்மை. மனிதர்களின் உயிர்களுக்கு மதிப்பில்லாமல் கூட்டங்கூட்டமாகக் கொன்று அழித்தல். இயற்கைச் சீற்றத்தாலும், போராலும் உருவாக்கப்படும் அகதிகளின் அவலம். பட்டினிச் சாவுகள். அணு ஆயுதப்போர். நாட்டு ஆக்கிரமிப்புகள். வாணிபச் சுரண்டல். சுதந்திரப் பறிப்பு. வறுமையில் வெறிச்செயல். உள்நாட்டுக் கலவரங்கள் போன்ற எண்ணற்ற இழிநிலைகளுக்கிடையே இன்று உலகில் மனிதன் உயிர் வாழ்கிறான்.

அறிவியலில் வியக்கதக்க வளர்ச்சியும், விரல் நுனியால் விண் வெளியை அளத்தலும், செயற்கைக் கோள்களின் செயற்கரிய செயலும் மனிதனைப் பல துறைகளில் உயர்த்தி இருந்தாலும், மனிதனின் மனம் இன்றும் விரிவடையா நிலையால் பல அவலங்கள் உருவெடுத்துள்ளன. அறிவு விரிவடைந்தால் மட்டும் போதாது. ஆன்ம நேயத்தால் மனம் விரிவடையவேண்டும். இதற்கு மருந்தாகத் திருமூலரின் அன்புநெறியும், எல்லோரும் குலத்தாலும் சாதியாலும் சமம் என்ற சமத்துவ நெறியும், அடியாரில் ஆண்டவனைக் காண்பதும் அமைந்துள்ளன.

திருமூலர் கூறும் அடிப்படையான ஒழுக்கத்தோடு கூடிய பண்பாட்டால் சமுதாயம் பக்குவப்பட்டால் மனிதனை மனிதன் மதிக்கும் பழக்கம் உருவாகும்.

அடிப்படை நற்பண்புகளே வளர்ந்து பக்குப்பட்டு நாளடைவில் இன்னலற்ற இன்பம் கூறும் சமுதாயத்தைப் படைக்க

முடியும். இப்பண்பட்ட நிலை சமுதாயத்தின் எல்லா வகையான அவலங்களையும் களைய உதவ வேண்டும். மனிதனைச் சூழ்ந்துள்ள சுற்றுப்புறத்தையும் தூய்மையாக்கும் பண்பினையும் மக்கள் மனதில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## திருமந்திரத்தில் சுற்றுச் சூழலின் அமைப்பும் அழகும்

சுற்றுச் சூழல் என்பது, மனிதனைச்சுற்றி உள்ள நிலம், நீர், காற்று, வானவெளி, சூரியமண்டலம், தாவரங்கள், பறவைகள், விலங்குகள், மனிதனின் வாழ்க்கை நிலை, ஒழுக்கம், கலை, கல்வி, கலாச்சாரம், தொழில், சமுதாய அமைப்பு, சமயம், அரசியல், பொருளாதாரம், சட்டம், சுகாதாரம், மருத்துவ அமைப்புகளை உள்ளடக்கியது.

இவ்வாறே, மனிதனின் வாழ்க்கையும் மூன்று கூறுகளை உள்ளடக்கியது. அவை,

1. சுற்றுப்புறத்தால் அமையும் வாழ்க்கைப் பகுதி.
2. உடம்பால் அமையும் வாழ்க்கைப் பகுதி
3. மனத்தால் அமையும் வாழ்க்கைப் பகுதி என்பன.

சுற்றுச் சுழலையும்,

1. இயற்கையைச் சார்ந்த சூழல் (நிலம், நீர், காற்று, ஆகாயம், சூரியமண்டலம் போன்றவை)
2. உயிரினங்களைச் சார்ந்த சூழல் (மனிதன், விலங்கு, தாவரங்கள், வைரஸ், பாக்டீரியா, போ. நுண்ணுயிர்கள் போன்றவை)
3. சமூகத்தைச் சார்ந்த சூழல் (மக்கள், கலாச்சாரம், சமயம், அரசியல், பொருளாதாரம் போன்றவை)

என மூன்றாகப் பகுக்கலாம். சுற்றுப் புறம் பெரிது. மனித சக்தியை விட காற்று, மழை, புயல், வெள்ளம், எரிமலை, பூகம்பம், சுனாமி, காட்டுத்தீ போன்ற இயற்கைக் கூறுகளின் சீற்றச் சக்தி பெரிது. மேலும், நோய்க்கிருமி, சாதி மத கட்சிப்பூசல், மூட நம்பிக்கை போன்றவற்றிலிருந்தும் உலகைத் திருத்துவது அரிது.

உடம்பைப் பாதுகாப்பதும் ஓரளவுதான் மனிதனுடைய கையில் உள்ளது. உணவு, நல்ல பழக்கம், உடற்பயிற்சி, புலனடக்கம், தக்க மருத்துவம், போன்றவற்றால் ஓரளவு பாதுகாக்கலாம். இயற்கையின் தட்ப வெட்பம், தூசி, புகை, நச்சுநீர், காற்று, நோய்க்கிருமி, கருவில் வளரும்போது பாதிப்பு போன்றவற்றிற்கு உட்பட்டது உடம்பு. எனவே, அடயோகத்தால் மட்டும் முக்தியோ, வேறுபயனோ கிடைக்காது அறிவால் முயல வேண்டும். உடம்பை

மட்டும் வருத்திப் பயனில்லை. ஞானமே சிறந்தது என்று திருமூலர் வலியுறுத்துகிறார்.

ஆனால் மனதைத் திருத்தினால் முழு வெற்றிபெற முடியும். மிகச் சிலரே இதைச்செய்கின்றனர். விடாமுயற்சியுடன் மனதை விரும்பியபடி வைக்கலாம். சோம்பலற்ற நம்பிக்கையுடைய, ஒழுக்கமிக்க, தியாகம் உடைய தன்னலமற்ற, தூயமனமாக ஆக்க முடியும்.

பெரும்பாலானோர், உலகத்தையும், சுற்றுப்புறத்தையும் திருத்துவதில் பெரும்பங்கு முயற்சி செய்கிறார்கள். உடம்பைத் திருத்துவதில் சிறுமுயற்சியே செய்கிறார்கள். மனதைத் திருத்துவதற்கு முயற்சி செய்வதில்லை. இது தலைகீழானநிலை. இது சரி இல்லை.

மனம் பண்பட வழி என்ன? நம் முன்னோர் வரலாறு, அவர்களின் அறிவுரைகள், மனதைப் பண்படுத்தும். செம்மையாக இருக்கவே மன வலிமை வேண்டும். அன்றாடப் பயிற்சியும், படிப்படியான வளர்ச்சியும் பெறலாம். ஒவ்வொரு தனிமனிதனின் மனமும் தூய்மையானால், சுற்றுப்புறம் தானாகத் தூய்மை பெறும். இம்மனத் தூய்மையால், சீவகரணங்கள் சிவகரணங்களாக மாறிப் பக்குவப்பட்டு இயற்கை, சிவமாகத் தோன்றுவது இயல்பு. சிவனது ஆணையால், இயற்கைப் பொருளாகிய மாயையில் இருந்து தோன்றிய ஆக்கப் பொருளே உலகம் என்கிறது சைவசித்தாந்தம். சிவனது ஆணையே உலக இயற்கைப் பொருள். இயற்கை என்று தனிப்பொருள் இல்லை என்பது சாத்திரம்.

இன்றுள்ள மக்கள் பெருக்கம் அன்று இல்லை. தொழிற் சாலை, வாகனங்கள் அனல் மின்சாரம், காடு எரிப்பு, அணு உலை, அணு ஆயுத சோதனை, எரிமலை, காட்டுத்தீ, அமிலமழை, நிலத்தடி நீர்மாசு, வீட்டு உபயோகப் பொருள்களாகிய குளிர்சாதனப் பொருள்களின் க்ளோரோ ப்ளோரோ கார்பன், மக்காத குப்பை, மின்காந்த அலைகளின் தாக்கம் போன்றவை அன்று அதிகம் இல்லை. இன்றுள்ள காற்று, நீர், நிலம், உணவு, ஒலி போன்றவற்றின் மாசுகள் அன்று இல்லை. ஓசோனின் பாதிப்பால் சூரிய ஒளிக்கதிரின் ஊடுருவல் வேகம் பூமியின்மேல் அதிகம் உள்ளதால் ஆர்ட்டிகா, அண்டார்ட்டிக்காவில் உள்ள பனிப்பாறை உருகி கடல் மட்டம் அதிகமாகிறது.

இதனால், விளைநிலப் பாதிப்பு, நிலப்பிளவு, மழையின்மை, பருவநிலை மாற்றம், கடும் வறட்சி, கடும் பஞ்சம் கொடிய நோய் போன்றவை ஏற்படும் நிலை உருவாகும்.

எனவேதான் நம் முன்னோர், பருவம் தவறா மழை, மாதம் மும்மாரி மழையை அரசனோடும், மக்களின் ஒழுக்கத்தோடும், இறைவனோடும் தொடர்புபடுத்தினர்.

தமிழர், இயற்கையோடு இயைந்து உறவாடும் வாழ்வு வாழ்ந்தனர். நாரை, அலை, மேகம் போன்றவற்றைத் தூது அனுப்பினர். மரம், செடி, கொடிகளையும் மகளாக, உடன் பிறந்தாராக வளர்த்தனர். ஒழுக்கத்தையும் திணை, நிலம் என்ற இயற்கைப் பொருள்களின் அடிப்படையில் வகுத்தனர். உள்ளுறை, இறைச்சி என்ற செய்யுள்மறைபொருள்களையும் இயற்கைப் பொருள்களின் வருணனை அடிப்படையில் அமைத்தனர். இயற்கை வருணனைகளை இலக்கிய விளக்க உத்தியாகவும், குறியீடுகளாகவும், மறைபொருள் கூற்றாகவும் இறைவனோடு தொடர்புபடுத்தியும், சித்தாந்தவிளக்கங்களைக் கூறுவதற்காகவும் அமைத்தனர்.

சைவம் என்பது சிவத்தோடு தொடர்பு உடையது என்கிறார் திருமூலர். 'சி' என்பது செம்மை. கடந்து நிற்கும் இயல்பு. 'வ' என்பது கலந்து நிற்கும் இயல்பு. இறைவன் கலந்தும், கடந்தும் நிற்கும் நிலையில் அனைத்தினுள்ளும் ஒன்றாய், வேறாய், உடனாய் இருப்பவன்.

சித்தாந்தம் என்பது செம்பொருள் துணிவு. அடிப்படை ஆதாரங்களைக் கொண்டு ஆராய்ந்த முடிந்த முடிவு. சைவ சமயத்தின் அடிப்படைப் பொருள்களான பதி, பசு, பாசம் என்ற மூன்றனைப் பற்றிய முடிந்த முடிபான கருத்துக்களைக் கூறுவது சைவ சித்தாந்தம். இச் சித்தாந்தக் கருத்துகள் திருமந்திரத்தில் பரவிக் கிடக்கின்றன.

கி.பி. 1147 முதல் கி.பி. 1313 முடிய உள்ள காலங்களில் தோன்றிய 14 மெய்கண்ட சாத்திரங்களுக்கும் அடிப்படை ஆதார நூல் திருமந்திரமே. சைவ சமயத் தத்துவங்களை விளக்கிச் சமயத்தைப் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டு கி.பி. 575 முதல் 800 முடிய உள்ள காலங்களில் தோன்றிய தோத்திர நூல்களிலும் திருமந்திரக் கருத்துகள் விரவிக் கிடக்கின்றன.

அக்காலத்தில் இன்றுபோல் சுற்றுச் சூழலில் அதிகம் பாதிப்பு இல்லை. மக்கள் தொகைப் பெருக்கம் இன்றுள்ளது போல் அன்று இல்லை. இயற்கை வளங்களும் சீரழிக்கப்படவில்லை. ஆயினும், தொலை நோக்குச் சிந்தனையில், இயற்கையையும், சுற்றுச் சூழலையும் பாதுகாத்துப் பேணும் உணர்வைப் பெற்றிருந்தனர்.

இயற்கை என்பது பஞ்ச பூதங்களின் சேர்க்கை. எனவே, இறைவன்பூதங்களில் மட்டுமன்றி எல்லா அணுக்களிலும் ஒன்றாய், வேறாய், உடனாய் இருப்பவன் என்று வலியுறுத்தினர்.

திருமூலர், இக்கருத்தைப் பரவலாகப் பல இடங்களில், திருமந்திரத்தில் வலியுறுத்திச் செல்கிறார். சான்றாகச் சிலவற்றைக் கூறலாம்.

தீ, ஞாயிறு, திங்கள், நிலம், புனல் அனல், காற்று, வானம் ஆகிய எட்டும் சிவன் உறையும் திருமேனிகள். இத் திருமேனிகளைத் தன்னுள் தாங்கியுள்ள எல்லா உயிர்களையும்ஆறு ஆதாரங்களிலிருந்து தொழில் படுத்துகிறான் என்பதைத் திருமூலர்,

**தெய்வச் சுடரங்கி ஞாயிறுந் திங்களும்**
**வையம் புனல் அனல் மாருதம் வானகம்**
**சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயிர்**
**ஐவர்க்கு இடம் இடை ஆறங்கமாமே**

என்ற மந்திரத்தில் குறிப்பிடுகிறார்.[13]

**எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி**
**எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்**
**எங்கும் சிவமாயிருத்தலால் எங்கெங்கும்**
**தங்கும் சிவனருள் தன்விளையாட்டதே**[14]

என்ற மந்திரத்தில், உலகெலாம் சிவனின் திருக்கூத்தே என்று விளக்குகிறார்.

**பூதாண்ட பேதாண்ட போகாண்ட யோகாண்ட**
**மூதாண்ட முத்தாண்ட மோகாண்ட தேகாண்ட**
**தாகாண்டம் ஐங்கருமத்து ஆண்ட தற்பரத்து**
**ஏகந்தமாம் பிரமாண்டத்த என்பவே**[15]

என்ற மந்திரத்தில் ஐம்பெரும் பூதங்களால் ஆகிய பூதாண்டமும், அவற்றில் பல்வேறுபட்ட கலப்பால் ஆகிய பேதாண்டமும், இருவினைக்கேற்ப இன்பதுன்பங்களை நுகரும் நுகர்வாண்டமாகிய போகாண்டமும், யோகிகள் பயன் துயக்கும் யோகண்டமும், இவை அனைத்திற்கும் மேலாக நிற்கும் மூதாண்டமும், திருவடிப் பேற்றின் சிறப்பினை அருளும் முத்தாண்டமும், ஆசையுள்ள உயிர்கள் உடல் விட்டு நீங்காப் பெருவிழைவின்பயன் துய்க்கும் மோகாண்டமும், பூத உடலோடு வாழும் தேகாண்டமும், நுகர்வில் மிகவேட்கை உடையோர் வாழும் தாகாண்டமும் ஆகிய ஒன்பது அண்டங்களையும் ஐந்தொழிலால் ஆண்டருளுபவன் சிவன் என்பதை விளக்குகிறார் திருமூலர்.

மேலும், அண்டங்களின் தத்துவமும், அணுவின் தத்துவமும் தில்லைத் திருநடனத்தத்துவத்தில் அம்பலவாணனின் ஆனந்தக் கூத்தில் வைத்து விளக்கியுள்ளார் திருமூலர்.

அனைத்துப் பொருள்களிலும் இறைவனைக் கண்டு அவற்றைப் பேணும் உணர்வை அறிவுறுத்தும் வண்ணம் திருமந்திரத்தில் பலமந்திரங்கள் அமைந்துள்ளன.

**எளியனல் தீபமிடல் மலர் கொய்தல்**
**அளிதின் மெழுகல் அது தூர்த்தல வாழ்த்தல்**
**பளிமணி பற்றல் பல் மஞ்சன மாதி**
**தளிதொழில் செய்வதுதான் தாசமார்க்கம்** [16]

என்ற மந்திரத்தில் கோயில் திருத்தொண்டு உணர்த்தப் படுகின்றது. உழவாரப்பணி செய்து கோவிலையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைக்கஅறிவுறுத்தப்படுகின்றது. கா வளர்த்தல், குளங்களைத் தூய்மை செய்து ஆழப்படுத்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல் போன்ற தொண்டு வலியுறுத்தப்படுகின்றது. எல்லோராலும், சமயத்தத்துவங்களை உணர்தலும், கடைப்பிடித்தலும் முடியாது. பக்குவநிலைக்கு ஏற்பவே அறிதல், புரிதல், கற்றல், தெரிதல் என்பவற்றோடு மெய்யுணர்தல் என்பதும் நிகழும். இது, ஒரு நூலைப் படித்தலுக்கும், இறையனுபவத்தைப் பெறுவதற்கும் பொருந்தும். மெய்யுணர்வு நூல்களைப் பெரியவர்களிடமோ, குருவிடமோ கேட்ட பின்பு உடனே எல்லோருக்கும் ஞானம் வந்துவிடாது. படிப்படியாகத்தான் பெற முடியும். இது, பக்குவ நிலைக்கு ஏற்ப மாறுபடும். நவில் தொறும் நூல்நயம் போல், படிக்கப்படிக்கப் புதுப்புதுப் பொருள் விளங்கும். இறைவனும் உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப ஆட் கொள்வான். இதனைத் திருமூலர்,

**வல்வகையானும் மனையிலும் மன்றிலும்**
**பல்வகையானும் பயிற்றிப் பதஞ்செயும்**
**கொல்லையில் நின்று குதிகொள்ளும் கூத்தனுக்கு**
**எல்லை இல்லாத லயம் உண்டாமே** [17]

என்கிறார்.

மேலும், எல்லோராலும் மந்திரங்கள் தந்திரங்கள், சக்கர வழிபாடு, தவம், பத்திமுறை போன்றவற்றைப் புரிந்து செயல்பட இயலாது. இவ்வாறு இயலாதவர்கள், புரியாதவர்கள் எல்லோராலும் முடிந்த தனிமனித ஒழுக்கத்தைப் பின்பற்றினால் அதுவே, படிப்படியாக எல்லாவித நிலைக்கும் இட்டுச் செல்லும். எனவேதான், திருமூலர் முதல் தந்திரம் முழுமையும் தனிமனித ஒழுக்கங்களையும், நிலையாமையையும் கூறுகிறார். இவற்றை முதலில் பொறுமையாகக் கடைப்பிடித்தால், அட்டாங்க யோகத்தைப் படிப்படியாகப் பயிலமுடியும். அதன்பின், சிந்திக்க சிந்திக்க மெய்ப்பொருளை உணரும் தெளிவு வரும். பின், நிட்டை கூடலாகிய முத்திநிலை ஏற்படும் என்பதை விளக்கும் நிலையில் தந்திரஅமைப்புகள் உள.

## குறிப்புகள்

1. திருமூலர், திருமந்திரம்-417,. மறைப்பு.
2. திருமூலர், திருமந்திரம்-423,. மறைப்பு.
3. திருமூலர் திருமந்திரம், 612, அட்டாங்கயோகப்பேறு.
4. திருமூலர், திருமந்திரம்-613, நியமம்.
5. திருமூலர், திருமந்திரம்-981, அருச்சனை.
6. திருமூலர், திருமந்திரம்-1417, சரியை.
7. திருமூலர், திருமந்திரம்-1453, சன்மார்க்கம்.
8. திருமூலர், திருமந்திரம்-1470, தாசமார்க்கம்.
9. திருமூலர், திருமந்திரம்-1717, சிவபூசை.
10. திருமூலர், திருமந்திரம்-1792, சிவபூசை.
11. திருமூலர், திருமந்திரம்-1821, மகேசுவர பூசை.
12. திருமூலர், திருமந்திரம்-1824, மகேசுவர பூசை.
13. திருமூலர், திருமந்திரம்-1967, சிவாதித்தன்.
14. திருமூலர், திருமந்திரம்-2674, திருக்கூத்துத் தரிசனம்.
15. திருமூலர், திருமந்திரம்-2682, சிவானந்தக் கூத்து.
16. திருமூலர், திருமந்திரம்-1475, தாசமார்க்கம்.
17. திருமூலர், திருமந்திரம்-524, பொறையுடைமை.

# முடிவுரை

திருமந்திரம், சமயம் சார்ந்த நூல். சாதாரண வழிபாடுகளைக் கூறுவதாக அமையாமல் வேத ஆகாமங்கள் கூறும் தத்துவங்களின் அடிப்படையில், பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை, அருளுரு நிலை, உண்மைப் பொருளை அறியும் நெறியாகிய சாதனங்கள், திருவருள் வயப்பட்ட உயிர்களின் நிலை, பேரின்பம் பெற்று இன்புறும் உயிர்களின்நிலை, திருவருளில் அழுந்தி நிற்கும் அணைந்தோர் தன்மை, முத்தி நிலைகள் ஆகியவற்றை நுட்பமாகக் கூறும் நூல் திருமந்திரம். இந்நிலையில் இந்நூல், யோகியர், ஞானியர், சித்துநிலைகள், மந்திரம், யந்திரம், தந்திரம், புராணம் போன்றவைகளைத்தான் கூறமுடியும். பண்பாட்டைப் பற்றிக் கூறமுடியுமா என்ற எண்ணம் எழலாம்.

எந்த ஒரு நிகழ்வுக்கோ, பொருளுக்கோ, அல்லது கலை, சமயம், அரசியல், பொருளாதாரம், கல்வி போன்ற அமைப்புகளுக்கோ ஒழுங்கும், முறையும், அளவும் இன்றியமையாத் தேவையாகின்றன.

வளர்ந்துவரும் அனைத்திற்கும் பண்பட்ட ஒழுங்குமுறை இருந்தால்தான் அது நிலைத்துச் சிறக்க முடியும். ஒழுங்கு, வரன்முறை, பண்பட்ட அமைவு வாழ்க்கையின் எல்லா நிலைகளுக்கும் தேவை. இதில் குறைபாடு ஏற்படும் பொழுது இந்த நாகரிகம் கூட இல்லையா? என்ற வினா எழும்பும். சான்றாக, பெரியவர்களுக்கு உரிய மதிப்பு கொடுக்காமல் சென்றால் அடிப்படையான பண்பாடுகூட தெரியவில்லையா என்பர்.

எனவே ஒழுங்குமுறையை நாகரிகம், பண்பாடு என்று குறிப்பிடும் பழக்கம் உள்ளது என்பதை அறியலாம். இது தனிமனித ஒழுக்கத்தால் வளர்க்கப்படுகிறது.

இதே போன்று, சமய நெறிகளிலும், செயல்களிலும் பண்பட்ட ஒழுங்குமுறையும், பண்பாடும், பண்பாட்டின் வளர்ச்சியால் பெற்ற நாகரிகமும் தேவை. நாகரிகம் என்பதில் பண்பாட்டோடு கூடிய உலகத்தோடு ஒட்ட ஒழுகலையும், அன்போடு கூடிய பிறர் மனதைப் புண்படுத்தாமையும் அடங்கும்.

பண்பட்ட, ஒழுங்கு முறையோடு கூடிய சமய நெறிகளின் மனம், மொழி, செயல்களின்அடிப்படையிலான வளர்ச்சி முறைகளை தத்துவ நுட்பத்தோடும், அறிவியல் நோக்குடனும் திருமந்திரத்தில் திருமூலர் விளக்கியுள்ள பாங்கு வியந்து போற்றுவதற்கு உரியது.

ஒருமனிதன், சமயம் சார்ந்த இறையியல் கொள்கையில் பண்பட்ட பற்றுதலையும், பயிற்சியையும் பெற்று ஞானம் அடைவதற்கான அடிப்படைத் தேவைகளையும், படிப்படியான வளர்ச்சி முறைக்கான நெறிமுறைகளையும் கட்டுக்கோப்புடன் நெறிப்படுத்திக் கொடுத்துள்ளார் திருமூலர்.

எந்த ஒரு அமைப்பிற்கோ, இயக்கத்துக்கோ கொள்கைக்கோ நிலைத்த உண்மைக்குட்பட்ட நிலைப்பாடு வேண்டுமென்றால் அதில் மனிதம் மதிக்கப்படவேண்டும். போற்றப்பட வேண்டும். மனித நேயத்தை அடிநாதமாக, உயிர் மூச்சாகக் கொண்டால்தான் எதுவும் தழைக்க, செழிக்க, நிலைக்க முடியும்.

திருமந்திரம், பொறி புலன்களின் ஒழுக்கம், மனம், சிந்தை, செயல்களின் ஒழுக்கம், இவற்றின் அடிப்படையில் அனைத்து மனிதர்களை மட்டுமன்றி, அனைத்து உயிர்களையும் சமமக நினைத்துத் தன்னைப் போல் பிறரையும் நினைத்து அன்பு காட்டும் ஒழுக்கம் ஆகியவற்றை உயிர்நாடியாகக் கொண்டது. எனவே, திருமந்திரம், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று உலகுக்கு உணர்த்தியது.

**ஒன்றே குலம் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி இல்லை நும் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர் நினைந்துய்மினே** [1]

குலம் ஒன்றே, தெய்வமும் ஒன்றே, என்று கூறியதோடு நல்லதையே நினையுங்கள் மனித நேயத்திற்கே அழிவில்லை. மனித நேயம் தழைப்பதோடு இவ்வையகமே தழைக்க வேண்டுமென்றால் அங்கு அன்பெனும் நன்னீர் பாய்ச்சப்பட வேண்டும். எனவே, அன்பே ஆண்டவன் என்கின்றார் திருமூலர். அன்பு நெறியே கடவுள் நெறி என்று அகிலத்திற்கு அறிவித்தார்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவதாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்**
**அன்பேசிவமாய் அமர்ந்திருந்தாரே** [2]

அன்பால், உலக உயிர்கள்அனைத்தையும் ஆண்டவனாகக் காணும் மனப்பக்குவத்தைப்பெற அறிவுறுத்தி அறிவித்தவர் திருமூலர். அதோடு யான் பெற்ற இன்பம் இவ்வுலகும் பெற வேண்டும் என்ற தன்னலமற்ற, பொது நலத்தைக் கற்றுக் கொடுத்தவர் திருமூலர்.

**யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடில்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே** [3]

இப்பரந்த உள்ளத்தால் பக்குவமும், பயனும் தானாக வரும்.

அன்பால் கனியும் அருளைக் கண்ணாகக் கொண்டவர்கள் இறைவனை உள்ளும் புறமும் உணரலாம். அருட்கண் இல்லையென்றால் அகக்கண்மட்டுமல்லாது புறக்கண்ணும் பொருளற்றதாகிச் சூரியனும் புலப்படாது இருளாகும் என்பதை,

**அருள்கண் இலாதார்க் கரும் பொருள் தோன்றா**
**அருள்கண் உளோர்க்கெதிர் தோன்றும் அரனே**
**இருள் கண்ணி னோர்க்கங்கு இரவியும் தோன்றா**
**தெருள்கண்ணி னோர்க் கெங்கும் சீர்ஒளி ஆமே** [4]

என்ற மந்திரத்தில் குறிப்பிடுகிறார் திருமூலர். ஒருவன், தன்னுடைய செயல்களால் தானே தனக்கு நண்பனாகவும், பகைவனாகவும், தனக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்குக் காரணமாகவும் ஆகிறான். தனக்குத் தலைவன் தானே என்பதனை,

**தானே தனக்குப் பகைவனும் நட்டானும்**
**தானே தனக்கு மறுமையும் இம்மையும்**
**தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்**
**தானே தனக்குத் தலைவனும் ஆமே** [5]

என்ற மந்திரத்தால் அறியலாம். எனவே, மனதை எந்த அளவுக்கு நல்வழியில் செலுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செலுத்தி அருளுடன் செயல்பட்டால் ஆணவமலக்கல் பிளந்து இறைவொளியை உணரலாம் என்கிறார் திருமூலர்.

**வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்**
**செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை**
**அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்**
**கல்லும் பிளந்து கடுவெளி ஆமே** [6]

மனதை நல்வழியில் செலுத்த சினத்தை அழிக்க வேண்டும். இதற்கு முதலில் தன்னை அறியவேண்டும். தான் யார்? தன் உடம்பு எவ்வாறானது? அதை இயக்குபவன் யார்? உடம்புக்கும் உயிருக்கும்

உள்ள தொடர்பு என்ன? தான் பிறவிக்கு வந்ததன் குறிக்கோள் என்ன? எது மெய்ப்பொருள் என்பதனை உணரத் தன்னை உணர வேண்டும்.

**முன்னைப் பிறவியில் செய்த முதுதவம்**
**பின்னைப் பிறவியில் பெற்றால் அறியலாம்**
**தன்னைஅறிவதறிவாம் அஃதன்றிப்**
**பின்னை அறிவது பேய் அறிவாகுமே** [7]

தனனை அறியாமல் தேவையில்லாப் பிறவற்றை அறிய முற்படுவது பழுதான பேயறிவு என்கிறார்.

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையேஅர்ச்சிக்கத் தான்இருந்தானே** [8]

தன்னை அறிந்தால் அழிவில்லை. தன்னை யறிந்தாலே மெய்ப்பொருளை உணர முடியும்.

திருமூலர், ஊனை உருக்கி உள்ளொளி பெருக்க புலன்களைச் சுருக்கி வதைக்க அறிவுறுத்தவில்லை. புலன்களை வதைத்தால் அறிவும் மழுங்கி மந்தமாகும். எனவே அடயோகம் முதலியவற்றாலும், நோன்புகளாலும் உடம்பை வருத்திச் சுருக்காதுஅவை ஆற்றலோடு இருக்கும் பொழுதே அறிவால் இறைவனை உணர வேண்டும். அறிவே அறிவை அறியும் என்பதை,

**அறிவுக் கழிவில்லை ஆக்கமும் இல்லை**
**அறிவிக் கறிவல்ல தாதாரம் இல்லை**
**அறிவே அறிவை அறிகின்ற தென்றிட்டு**
**அறைகின்றனமறை ஈறுகள் தாமே** [9]

என்ற மந்திரத்தால் அறியலாம்.

அறிவே இறைவன். அறிவுடையார் நெஞ்சமே ஆண்டவன் அமரும் கோயில்.

**அறிவுடையார் நெஞ்சகல் இடம் ஆவ**
**தறிவுடையார் நெஞ்சருந்தவம் ஆவ**
**தறிவுடையார் நெஞ்சா டாதிப் பிரானும்**
**அறிவுடையார் நெஞ்சத் தங்கு நின்றானே** [10]

புலன்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து தன் ஏவல் கேட்கும்படிச் செய்யும் அறிவைப் பெறவேண்டும்.

**எல்லாம் அறியும் அறிவுதனை விட்டு**
**எல்லாம் அறிந்தும் இலாபம் அங்கில்லை**

எல்லாம் அறிந்த அறிவினை நான் என்னில்
எல்லாம் அறிந்த இறைஎனல் ஆமே [11]

அறிவால் மெய்ப்பொருளை உணர்வதே உண்மை அறிவு. அகக் கண்ணால் அவனைப் பார்ப்பதே எல்லையற்ற இன்பம் நல்கும்.

முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம் [12]

இவ்வாறு, அடிப்படையான பண்புகளைக் கூறி ஆண்டவனை அறியுமாறு கூறும் திருமூலர், திருமந்திரத்தின் தொடக்கத்தில், முதல் தந்திரத்தில் தனிமனித ஒழுக்கங்களே அடிப்படைத் தேவையாக இறைநெறிக்கு அமைந்துள்ளமையை விளக்குகிறார். பின் படிப்படியான வழிபாட்டு நெறிகளையும், பயனாகிய முத்தி நிலைகளையும் கூறிச் செல்கிறார்.

இவ்வரிய சமயக் களஞ்சியத்தைப் பண்பாட்டின் அடிப்படையில் பகுத்துப் பார்க்கின்ற பொழுது, பண்பாடே சமய நெறிகளின் அடிப்படையாக அமைவதை உணரலாம். பண்பாடாகிய தனிமனித ஒழுக்கமில்லை என்றால் வழிபாட்டு நெறிகளையும், சமயக் கொள்கைகளையும் கைக்கொள்ளவோ, பின்பற்றவோ, பரப்பவோ முடியாது. எனவே, பண்பாட்டடிப்படையில் திருமந்திரத்தை நோக்குவது இன்றியமையாததாகின்றது. இது தவிர, பல கோணங்களில் ஆழ்ந்து ஆராயும் அளவிற்கு இதில் பல அரிய கருத்துகள் தத்துவ உட்பொருள்களாகவும், வெளிப்படையாகவும் நிறைந்து கிடக்கின்றன. அவைகளைக் கீழ்க்காணும் தலைப்புகளில் ஆழ்ந்து ஆராய்ந்தால் பல அரிய செய்திகளை உணரமுடியும். உணர்த்த முடியும்.

1. திருமந்திரம் உணர்த்தும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள்.
2. திருமூலரின் சித்தர் நிலை.
3. திருமந்திரம் சுட்டும் ஞானியர்.
4. திருமந்திரத்தில் தத்துவ நோக்கு.
5. திருமந்திரத்தில் பதிநிலை.
6. திருமந்திரத்தில் பசுநிலை
7. திருமந்திரத்தில் பாசநிலை
8. திருமந்திரத்தில் சாதன இயல்
9. திருமந்திரத்தில் பயனியல்
10. சூன்ய சம்பாஷணை மறைபொருள் கூற்றா?

11. திருமந்திரத்தில் சுற்றுச் சூழல் சிந்தனை.
12. திருமந்திரம் சுட்டும் அடியார் நிலை
13. திருமந்திரம் சுட்டும் உடல் இயல்பு.
14. திருமந்திரத்தில் தசகாரிய அமைப்பு.
15. திருமந்திரத்தில் தத்துவம் சார்ந்த உவமைகள்
16. சைவ சித்தாந்தக் குறியீட்டுச்சொற்கள் பற்றிய ஆய்வு.
17. திருமந்திரம் வலியுறுத்தும் துறவு.
18. திருமந்திரத்தில் மனிதநேயம்
19. திருமந்திரத்தில் குருவருள்
20. திருமந்திரத்தில் திருமூலர் உணர்த்தும் புராணங்களின் உட்பொருள் விளக்கம்.
21. திருமூலரின் யந்திர தந்திர மந்திர விளக்கங்கள் பற்றிய ஆய்வு
22. திருமூலர், உலகத்தோடு ஒட்ட ஒழுகலை எவ்வாறு வலியுறுத்துகிறார்?
23. திருமூலர் வலியுறுத்தும் தனிமனித ஒழுக்கம்.
24. இறையியலுக்கு அடிப்படை, அன்பும் அறனும் என்பதை திருமந்திரத்தின் வழி ஆராய்க.
25. திருமூலர் வலியுறுத்தும் சன்மார்க்கம்
26. திருமந்திரம் உணர்த்தும் திருக்கூத்தின் வியாபகம்.
27. திருமந்திரம் உணர்த்தும் திருவடி.
28. திருமூலர் கூறும் தேகசித்தி
29. பஞ்சாக்கர வியாபகம் குறித்த திருமூலர் கருத்து
30. திருமந்திரத்தில் சமாதி நிலையும் அந்நிலை சார்ந்த அனுபவமும்
31. மெய்கண்ட சாத்திரங்களுக்கு முதன்நூல் திருமந்திரம்
32. ஊழை வெல்ல உபாயம் கூறும் திருமூலர்
33. திருவள்ளுவரும் திருமூலரும் ஒப்பீட்டாய்வு
34. திருமூலரும் அட்டாங்க யோகமும்
35. அறிவியல் பார்வையில் திருமந்திரம்
36. சமுதாயப் பார்வையில் திருமந்திரம்
37. திருமூலரின் இறையியல் கொள்கைகள்
38. திருமூலர் சித்தரா?
39. திருமந்திரத்தில் நால்வர் நெறி
40. பெரிய புராணத்தில் திருமந்திரச் சிந்தனைகள்

41. திருமந்திரத்தில், மறைபொருள் கூற்றின் வழி மெய்ப்பொருள்

42. திருமந்திரத்தில் முப்பாழ்

43. இலிங்கங்களும் திருமந்திரமும்

44. திருமந்திரத்தில் சிற்றம்பலம்

அறம், தத்துவம், சமயம்,தோத்திரம், சாத்திரம், மந்திரம், யந்திரம், தந்திரம் போன்ற வாழ்வியல், இறையியல் தொடர்பான பண்பட்ட வரையறைகளைக் கூறி, அகம் சார்ந்த பண்பாட்டினையும், புறம் சார்ந்த நாகரிகத்தினையும், சமய ஒழுக்கங்களையும் படிப்படியாக விளக்கி, உயிர்களின் இலக்காகிய பிறவியிலிருந்து விடுதலை பெறும் வீடுபேறாகிய ஒளிநிலைக்கான வழிமுறைகளை விளக்கும் திருமூலர்,

- வாழ்க்கையைப் பண்படுத்தும் இன்றியமையா அறங்கள்
- பதியாகிய இறைவனது இயல்பு, சிறப்பு, கருணை
- அவனுடைய கருணையை நுட்பமாக விளக்கும் புராணங்களின் உட்பொருள்
- முப்பொருள் இயல்பு
- பதியை அடையும் யோக நெறிகள்
- கிரியை முறையில் சக்கரங்களை வைத்து வழிபடும் முறைகள்
- சமயபேதங்கள்
- சிவனே குருவாக வருவான் என்றும், குருநெறியின் சிறப்பும் குறித்த விளக்கங்கள்
- வேத ஆகமங்களில் கூறப்பட்ட பதி, பசு, பாசந் தொடர்பான செய்திகள்
- ஆறாதாரங்களில் இறைவனை ஒருமுகப்படுத்திச் சிந்தித்து மேல் சென்று ஒன்றல்
- உலகமே அண்டலிங்கம். மனித உடல் பிண்டலிங்கம் ஆத்மா ஆத்ம லிங்கம் என்ற விளக்கம்.
- நிராதாரத்தில் விளங்கும் சோதியை உணர்ந்து கலத்தல்
- தீக்கை முறைகள். ஒளிவடிவில் இறைவனை வழிபடும் குருபூசை
- அடியார் பெருமை. பிட்சா விதி
- முத்திரைகளால் மனஓட்டத்தையும், பிராண ஓட்டத்தையும் நெறிப்படுத்தல்
- ஞானம் பெற்றோரின் மோனநிலை
- மூலக்கனலை எழுப்பிவிந்து செயம் பெறல்
- பக்குவத்துக் கேற்ப உயிர்பெறும் நிலைகள்
- ஆறந்தங்களால் ஞானம் பெறல்

- தொன்மையானவை பதி, பசு, பாசம் எனல்
- பாசம் நீங்க சிவம் விளங்கும்
- ஆத்மா, தன்னையே உணர்ந்து நிற்கும் தொம்பதம் பராசக்தியுடன் பரன் கலந்த அசிபதம். பரனின் பதமாகிய தத்பதம் பற்றிய விளக்கம்
- அக்கினி, சூரிய, சந்திர கண்டங்களைக் கடந்து சீவன், துரியாதீத நிலையில் தன் செயலற்றுச் சிவானந்தம் பெறும் முத்திநிலை.
- பேச்சற்ற பேரானந்தம் சுழுமுனைவழி சிரசைச் சென்று உணர்வு அடைதல்
- அது நீ ஆகிறாய் என்ற மகாவாக்கியத்தின்படிச் சீவன் சிவனாதல்
- சத்திய ஞானானந்தம் பெற்றுச் சிவரூபமாதல். இதுவே எல்லையற்ற மாட்சி.
- ஆன்மா, சிவனைப்போல் வியாபகமாக விளங்கல் என்ற முறையில் கருத்துகளை விளக்கிச் செல்கிறார். இம்முறையானது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்ற படிநிலைகளில் அமைந்த தசகாரிய அமைப்பில் விளக்கப்பட்டுள்ளதை அறியலாம். மேலும் முப்பொருள்களின் தடத்த இலக்கணமாகிய பொது இயல்புகளையும் முப்பொருள்களின் சொரூப இலக்கணமாகிய சிறப்பு இயல்புகளையும், படிப்படியான அமைப்பு முறைகளில் விளக்கிச் செல்லும் அமைப்பிலும் திருமந்திரம் அமைந்துள்ளது.

## குறிப்புகள்

1. திருமூலர், திருமந்திரம்-2066 ( இதோபதேசம்)
2. மேலது, 257 (அன்புடைமை)
3. மேலது, 147 (தற்சிறப்புப் பாயிரம்)
4. மேலது, 1777 (திருவருள் வைப்பு)
5. மேலது, 2188 (அவத்தைபேதம்)
6. மேலது, 2264 (அவத்தைபேதம்)
7. மேலது, 2279 (அவத்தைபேதம்)
8. மேலது, 2315 (அறிவுதயம்)
9. மேலது, 2318 (அறிவுதயம்)
10. மேலது, 2323 (அறிவுதயம்)
11. மேலது, 2551 (வாய்மை)
12. மேலது, 2904 (மோனசமாதி)

## பயன்படுத்திய நூல்கள்


1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி க்ரியா வெளியீடு, 2008.
2. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, நான்கு பாகங்கள், வைத்தியலிங்கன்,செ. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.
3. 'தமிழ் மந்திரம்', பாலூர் கண்ணப்ப முதலியார்.
4. திருமந்திரம், திருமூலர், ப.இராமநாதபிள்ளை உரை, கழகப்பதிப்பு,1942
5. திருமந்திரம், திருமூலர், ஜி.வரதராஜன்உரை, பழனியப்பா பிரதர்ஸ், 2002.
6. திருமூலரும் வள்ளலாரும், ஊரன் அடிகள் சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், 2005.
7. திருக்குறள், கழக வெளியீடு.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 280.00 |
| மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள் | 40.00 |
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்று காதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| இந்தியச் சூழலில்மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம் | 60.00 |
| பழந்தமிழ் அறிவியல் | 45.00 |
| நீறணி பவளக்குன்றம் | 35.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1 | 100.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2 | 100.00 |
| நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்) | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்-ஒருசமூகவியல் பார்வை | 30.00 |
| இந்தி நாடகப் பனுவல் (ஆடி மாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்கு | 40.00 |

---

**646 பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் 70.00**